## இந்நூலில்...

கணவன் மனைவி இருவருக்குமான உறவுகள், பரிமாறவேண்டிய உரிமைகள், ஆற்றவேண்டிய கடமைகள் இறைவழியிலும் மனோதத்துவ ரீதியிலும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது. பெற்றோர், மனைவி, பிள்ளைகள், உடன்பிறந்தோர், நண்பர்கள் என விரிந்து பரந்திருக்கும் உறவுகளை உள்ளடக்கியதே வாழ்க்கை. கணவன் மனைவி என்ற ஒப்பந்த வளையத்திற்குள் நுழைந்ததும் மனம் மாறி உறவுகளைத் துண்டித்து வாழும் தம்பதிகளும் உள்ளனர்.

இவர்கள் ஏன் மனம் மாறுகிறார்கள்? மாறவேண்டிய மனநிலை எது என்பதை இந்நூல் விளக்குகிறது. கடமைகளைச் செய்வதிலும், உரிமைகளைப் பரிமாறுவதிலும் விரிசல் வராமல் வாழ இந்நூல் வழிகாட்டும்.

ஓர் ஆண், தன் தாயிக்கும் தாரத்திற்குமிடையில் தராசாய் இருக்க வேண்டும்; உறவுகளுக்கிடையில் ஒரு தலைப்பட்சம் கூடாது.

குடும்ப நிர்வாகத்தில் சரியாக இருப்பவரே சமூகம், தேசம், சர்வதேசம் என எல்லா நிர்வாகத்தையும் எதிர்கொள்வார். எனவே, தம்பதியர் உறவுகளோடு ஒன்றி, குடும்பத்திலும், சமூகத்திலும் சிறந்தோங்கி, இறைவனுக்குப் பொருத்தமாக வாழ்ந்து, ஈருலகிலும் வெற்றிபெற வேண்டுமென்ற தலையாய நோக்கத்தை இந்நூல் நிறைவு செய்யும்!


ISLAMIC PUBLICATIONS IPRC RESEARCH CENTRE

**IPRC - ISLAMIC PUBLICATIONS & RESEARCH CENTRE**
New Majestic Guest House, Near Cinipriya Complex & Anna Bus Stand,
19. Vinayagamoorthi St, Sathamangalam, Madurai. 625020. India.
Phone: 0452-2527421, 0452-4354541, Mobile: 93440-96221, 93644-14441
E-mail: iprcindia2000@gmail.com


# கணவன் மனைவி

## விரிந்து பரவும் உறவு



**Dr. M.M. அப்துல் காதிர் உமரீ**

*வெளியீட்டு எண்: 7*

# கணவன் மனைவி

## விரிந்து பரவும் உறவு

ஆசிரியர்

மவ்லவீ. **Dr. M.M.** அப்துல் காதிர் உமரீ

திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பாளர் **IPRC**

வெளியீடு:

**IPRC**

**இஸ்லாமியப் பதிப்பகம்**
**மற்றும் ஆய்வு மையம்**

**ISLAMIC PUBLICATIONS & RESEARCH CENTRE**

## KANAVAN MANAIVI KALANTHAAIVU BOOK DETAILS


- Author:
  **MOULAVI, DR. M.M. ABDUL KADIR UMARI**
- Pages:
  **144**
- Price:
  **INR 70/-**
- First Edition: Dhul Qaadha 1437 Hijri - August 2016 AD
- Copies
  2000
- Type Setting and Designed by:
  **SAFA GRAPHICS** - Madurai - 625020.
  Mobile: 0452-4354541, 93440-96221.
  E-mail: safagrafix@gmail.com
- Published by:
  **IPRC - ISLAMIC PUBLICATIONS & RESEARCH CENTRE**
  New Majestic Guest House,
  Near Cinipriya Complex & Anna Bus Stand,
  19. Vinayagamoorthi St, Sathamangalam,
  Madurai. 625020. India.
  Phone: +91-452-2527421, 4354541,
  Mobile: +91-93440-96221, 93644-14441
  E-mail: iprcindia2000@gmail.com
- Sole Distributor:
  **SAJIDHA BOOK CENTRE**
  248. Thambuchetty Street,
  Mannadi, Chennai- 600001
  Phone: +91-44-25224821 Mobile: +91-9840977758



**ஆசிரியர்**

மவ்லவீ. **Dr. M.M. அப்துல் காதிர் உமரீ**
திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பாளர்
இஸ்லாமியப் பதிப்பகம் மற்றும் ஆய்வு மையம், இந்தியா.



**© IPRC - ISLAMIC PUBLICATIONS & RESEARCH CENTRE**
*All rights reserved for IPRC and Author only. No part of this publication may be reproduced or transmitted in any form or any information storage or retrieval system, without permission and written order from The Author or IPRC.*




بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

*அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்....*

## பதிப்புரை

அன்பு வாசகர்களே! அஸ்ஸலாமு அலைக்கும்! இறையருளால் இந்நூல் ***IPRC*** யின் 7 வது வெளியீடாகும். அல்ஹம்து லில்லாஹ்!

கணவன் மனைவி உறவாடல், உரையாடல், உரிமைப் பரிமாற்றம், கடமைகளை நிறைவேற்றுதல், இரு தரப்பு உறவுகளை மேம் படுத்துதல், கஷ்டமான சூழல்களிலும் காயமின்றி வாழ்க்கையைக் கழித்தல், மகிழ்ச்சியாகவும் மனநிறைவோடும் வாழ்தல் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் இந்நூலில் குர்ஆன் சுன்னா அடிப்படையில் பேசப்பட்டுள்ளன. தம்பதியர் இந்நூலின் மூலம் மகிழ்ச்சியான வாழ்க்கையில் அடி எடுத்து வைக்கலாம் என நம்புகிறோம்.

தகுந்த ஆதாரங்களுடனும், மனோ தத்துவ அடிப்படையிலும் எளிய நடையில் இந்நூல் தொகுத்தளிக்கப்பட்டுள்ளது. பல குடும்பங்களின் பிரச்னைகளுக்கான காரணங்களை அனுபவ ரீதியில் அறிந்து, அவற்றைக் களைந்திடும் வழிமுறைகள் சொல்லப் பட்டுள்ளன. ஆணாதிக்கச் சிந்தனையை அகற்றும் வகையிலும், பொய்யான பெண்ணிய வாதத்தை இனங்காட்டும் வகையிலும் கருத்துக்களை எடுத்து வைத்து அவரவருக்கு உரிய உரிமைகள் கடமைகள் குறித்து விளக்கப்பட்டுள்ளது.

தாம்பத்ய வாழ்க்கையில் புதிதாகத் தடம் பதிக்கும் தம்பதியருக்கும், வாழ்க்கையே பிரச்னையாகக் கொண்டுள்ள தம்பதியருக்கும், கூட்டுக் குடும்பத்தில் வாழும் தம்பதியருக்கும் அறிவுரை மற்றும் ஆலோசனைகளை உள்ளடக்கியதாக இந்நூல் அமைந்துள்ளது.

கணவன் மனைவி உறவில் விரிசல் ஏற்படுவதைத் தடுப்பதோடு, இம்மையிலும் மறுமையிலும் வெற்றியுடன் வாழ்வதற்குப் பயனுள்ளதாய் இந்நூல் அமையும் என நம்புகிறோம்.

இந்நூலின் ஆசிரியர், **Dr. மவ்லவீ M.M. அப்துல் காதிர் உமரீ** திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பாளர் மற்றும் பன்னூலாசிரியர் என்பதை அறிவீர்கள். அவரின் அரிய பணிகளில் இந்நூலும் ஒன்று. அவருக்கு எம் உளமார்ந்த நன்றி. மக்களுக்கு பயனுள்ள ஆய்வுகள், தொகுப்புகள் மற்றும் தமிழாக்கங்களை எங்கள் நிறுவனம் தொடர்ந்து அளித்து வருவதற்காக இறைவனைப் பிரார்த்திக்குமாறு வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

அன்புடன்

*29.10.1437 ஹிஜ்ரி*
*(02.08.2016 கி.பி)*

***Dr. A. சையது அலீ ஃபாத்திமா***
பொறுப்பாளர், IPRC

## முன்னுரை

புகழனைத்தும் ஏக இறைவனுக்கே! அவனே நம்மைப்படைத்தான். ஆண் பெண் துணையோடு குடும்பமாக அவனே நம்மை வாழச் செய்தான். வாழும் கலையையும் ***(Art of living)*** அவனே நமக்குக் கற்றுக் கொடுத்தான். அவன் வழியில் நாம் வாழ்வதற்கு அவன்தான் நமக்கு அருள் புரிய வேண்டும்!

நம் நாட்டு ஊடகங்களின் புள்ளிவிவரப்படி சமீப காலத்தில் பல தம்பதியர் விவாகரத்துப் பெற்று பிரிந்து வாழ்கின்றனர். விவாகரத்திற்காக காத்திருப்போர் பட்டியலும் நீள்கிறது.

சென்னை உயர் நீதி மன்றத்தில் குடும்பநல நீதிமன்றங்கள் நான்கு, மதுரை உயர் நீதிமன்றத்தில் குடும்ப நல நீதிமன்றம் ஒன்று என உயர்நீதிமன்றக் குடும்பநல நீதிமன்றங்கள் மொத்தம் ஐந்து செயல்பட்டு வருகின்றன. இவற்றிலும், ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ள சிவில் நீதிமன்றங்களிலும் நாள்தோறும் விவாகரத்து வழக்குகள் ஏராளமாகப் பதிவாகின்றன.

1980-களில் ஒரு நீதி மன்றத்திற்கு 20 முதல் 30 விவாகரத்து வழக்குகளே வந்தன. இன்றோ ஒவ்வொரு நீதி மன்றத்திலும் நாள் ஒன்றுக்கு 10 வழக்குகள் என்ற அளவுக்கு நிலைமை கைமீறிப் போய்க் கொண்டிருக்கிறது.

கடந்த 2009 முதல் 2012க்குள் விவாகரத்து வழக்குகளின் எண்ணிக்கை சென்னையில் மட்டும் இரு மடங்காம். 2008-ல் விவாகரத்துப் பெற்ற ஆண்கள் 2% என்றும், விவாகரத்துப் பெற்ற பெண்கள் 3% என்றும் பதிவாகி உள்ளது. 2011-ல் விவாகரத்துப் பெற்ற ஆண்கள் 4% என்றும், விவாகரத்துப் பெற்ற பெண்கள் 6% என்றும் அதிகரித்துள்ளது.

மும்பை, டெல்லி, லக்னோ, சென்னை உள்ளிட்ட பெருநகரங்களில் விவாகரத்து வழக்குகளின் பெருக்கம் அதிர்ச்சி அளிக்கின்றன. 1990-களில் ஆண்டு ஒன்றுக்கு ஓராயிரம் வழக்குகள் பதிவாகின. 2000 ஆண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு ஒன்பதாயிரம் என அவை உயர்ந்துள்ளன. இதில் 25 வயது முதல் 35 வயதிற்கு உட்பட்டவர்கள் 75% என்றும், திருமணம் செய்து மூன்று ஆண்டுகளுக்குள் விவாகரத்துக்கு விண்ணப்பித்து காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 86% என்றும் புள்ளிவிபரம் கூறுகிறது.



டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழின் (05.04.2012) புள்ளி விவரப்படி நம் நாட்டில் தற்போது விவாகரத்து நிலவரம்: தமிழ்நாடு 8.8%, கர்நாடகா 8.2%, கேரளா 8.2%, ஆந்திரா 8.2%, ஒரிசா 7.2%, இமாச்சல் பிரதேஸ் 7.1%, மஹாரஷ்ட்ரா 7% என பதிவாகியுள்ளது. இதில் தமிழ்நாடு முன்னிலை வகிப்பது குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் சமுதாயத்திலும் சமீப காலத்தில் விவாகரத்து வழக்குகள் அதிகரித்து வருகின்றன. நீதி மன்றங்கள் தவிர்த்து அமைப்புகள், பஞ்சாயத்துகள் மற்றும் ஜமாஅத்துகள் மூலமும் விவாகரத்து வழக்குகள் வந்து கொண்டிருக்கின்றன. இவை தம்பதிகளின் சரியான புரிதல் இன்மையைக் காட்டுகின்றன.

இந்நிலை நீடித்தால் நம் நாட்டில் குடும்ப அமைப்பே புதைக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. பெற்றோரின் பிரிவில் மனநோயாளிகளாக வளரும் பிள்ளைகளின் எதிர்காலம் பெரும் கேள்விக்குறியாய் உள்ளது. காதலித்து கைப்பிடித்தவர்களும்கூட, கைப்பிடித்த வேகத்தில் கையைக் கழுவியும் விடுகின்றனர். மனச்சிதைவு மணமுறிவை ஏற்படுத்தி வருகிறது. பிரச்னைகள் குறித்து பேசிக்கொண்டே இருப்பதைவிட அவற்றின் எழுவாயைக் கண்டறிந்து அதன் ஆணிவேரை அறுக்க வேண்டும்.

எனவே, இம்முயற்சியில், தங்கள் கைகளில் தவழும் **'கணவன் மனைவி விரிந்து பரவும் உறவு'** என்னும் இந்நூலை என் பங்களிப் பாகத் தொகுத்தளிக்கிறேன். தம்பதிகளுக்கு இடையில் இது ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்தி வாழ்வை வளமாக்கும் என நம்புகிறேன்.

திருமண நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் மக்களுக்கு இந்நூலை அன்பளிப்புச் செய்து, குடும்பங்களில் சிறந்த ஒரு மாற்றத்திற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்குமாறு வாசக அன்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நவீனமயமான இன்றையச் சூழலில், ஆசைகள் அதிகம் இருந்தாலும் குடும்ப வாழ்க்கையில் அன்பு நிறைந்திருக்க வேண்டும். அதுவே வாழ்க்கையில் அமைதியைத் தரும். இதற்கு எத்தனையோ வாழ்க்கை முறை இருந்தாலும், மனிதனுக்கு இறைவன் வகுத்தளித்துள்ள வாழ்க்கை முறைதான் சரியானதும், முறையானதுமாய் இருக்க முடியும். **என் வழி உன் வழி, என் மதம் உன் மதம், என் கடவுள் உன் கடவுள்** என்ற விவாதங்களைத் தவிர்த்து, அனைவருக்கும் பொதுவான ஒரே இறைவன் வகுத்தளித்துள்ள வழியில் நம் பிரச்னைகளுக்கு முற்றுப்புள்ளியிட வேண்டும். இம்மன நிலைக்கு

*மனிதர்கள் அனைவரும் வந்துவிடுங்கால் வாழ்க்கையில் எந்தப் பிரச்னைக்கும் இடமிருக்காது.*

*இந்நூலை வெளியிட்டுள்ள **IPRC** நிறுவனத்திற்கும், இப்பணிக்குத் துணையாய் இருந்த அனைவருக்கும், குறிப்பாக பலவிஷயங்களை எம்முடன் விவாதித்து, பெண்கள் தரப்பு நியாயங்களையும், குடும்பங்களில் பெண்கள் சந்திக்கும் பிரச்னைகளையும் தெரிவித்து என் எழுத்திற்குத் துணைநின்று, அச்சமைப்பையும் சீர் செய்து கொடுத்த எம் மனைவிக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக எம்மை இப்பணியில் ஈடுபடுத்தி வரும் வல்ல இறைவனுக்கும் என் நன்றியைத் தெரிவிக்கிறேன். எம் இம்மை, மறுமை வாழ்க்கை வசந்தமாய் இருப்பதற்கு இறைவனைப் பிரார்த்திக்க வாசக அன்பர்களை வேண்டுகிறேன்.*

*அன்புடன்*

**மவ்லவீ Dr. எம்.எம். அப்துல் காதிர் உமரீ**
*திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பாளர்*
**தொடர்புக்கு:**
*தொலைபேசி: 9344096221*
*வாட்ஸ்அப்: 9364414441*
*மின்னஞ்சல்: **akumari1970@gmail.com***
*மதுரை*
*29.10.1437 ஹிஜ்ரி (02.08.2016)*

*******



# பொருளடக்கம்...


| | |
|---|---|
| கணவன் மனைவி விரிந்து பரவும் உறவு | 9 |
| கணவன் மனைவி | 10 |
| பிரச்னையின்றி வாழ்வேது? | 11 |
| மகிழ்ச்சியின் இருப்பிடம் | 16 |
| நடுநிலையே நன்று | 19 |
| இன்முகத்துடன் இருங்கள்! | 20 |
| நன்றாக நடங்கள்; நடத்துங்கள்! | 22 |
| இடராய் இருக்காதீர்! | 24 |
| தேவையை நிறைவேற்றுங்கள்! | 26 |
| சிறுசிறு தவறுகளைப் பொருட்படுத்தாதீர்! | 28 |
| நிர்ப்பந்திக்காதீர்! | 30 |
| ரசனைக்கு மதிப்புக் கொடுங்கள்! | 31 |
| துணைக்குக் காவலனாய் இருங்கள்! | 31 |
| வெற்றிக்குத் துணை நில்லுங்கள்! | 33 |
| இறைவணக்கத்தில் ஆர்வமூட்டுங்கள்! | 34 |
| வேலை வேலையாய் இருக்கட்டும்! | 34 |
| பகிர்ந்து பணியாற்றுங்கள்! | 36 |
| 24 மணி நேரப்பணியாள் | 37 |
| திட்டமிடுங்கள்! | 40 |
| உரிமைகளை மறுக்காதீர்! | 40 |
| தமக்குப்போகவே தர்மம்! | 43 |
| இயன்றதில்தான் வாக்குறுதி | 45 |
| வறுமையைக் கண்டு பயந்துவிடாதீர்! | 46 |
| சொத்தில் தன்னிச்சையான முடிவு | 48 |
| கருமித்தனம் வேண்டாம் | 49 |
| பொறுப்பில் பொறுப்பாய் இருங்கள்! | 49 |
| வீட்டிற்கு வெளியில் | 50 |
| நேரந் தவறாமை | 51 |
| நீங்கள் நீங்களாய் இருங்கள்! | 52 |
| துணையுடன் விளையாடுங்கள்! | 53 |
| உள்ளங்களை இணைக்கும் சாவி | 54 |
| இவற்றிற்குத் தாழிடுங்கள்! | 56 |
| உறவுக்கு அழைத்தால் உடன்படுங்கள்! | 58 |
| நல்லசந்ததிக்காகப் பிரார்த்தியுங்கள்! | 59 |
| உங்கள் குழந்தைகளை நல்லவர்களாக... | 64 |
| சுத்தமாய் இருந்து மகிழுங்கள்! | 66 |
| அலங்கரிக்க அவகாசம் அளியுங்கள்! | 68 |

| | |
|---|---|
| குழம்பாதீர்! குழப்பாதீர்!! | 69 |
| ஆலோசனையை உள்வாங்குங்கள்! | 73 |
| பேசுங்கள்! பேசுவதையும் கேளுங்கள்!! | 74 |
| மன்னியுங்கள்! மன்னிப்பு கேளுங்கள்!! | 76 |
| மகிழ்ச்சி நதி | 78 |
| நிகழ்கால நிஜத்தில் வாழுங்கள்! | 80 |
| ஒப்பிட்டால் உருப்படாது | 81 |
| ஒளிவு மறைவு ஏன்? | 82 |
| உடல் நலமே மன நலம்! | 83 |
| உங்கள் துணையுடன் உல்லாசமாய் இருங்கள்! | 85 |
| உறவைக் காத்துக் கொள்ளுங்கள்! | 85 |
| துணையின் திருப்திக்காக | 100 |
| பிறந்த வீட்டு உபதேசம் | 101 |
| மனித நேயம் வேண்டும் | 103 |
| உங்கள் அன்பிற்கு உரியவர்கள் | 104 |
| அன்பிற்கு ஏது விலை? | 106 |
| வாழ்க்கையின் அடித்தளம் | 107 |
| அன்பிற்குமுண்டோ அடைக்குந் தாழ் | 109 |
| வீண்பேச்சு வேண்டாம் | 111 |
| தகாத வார்த்தைக்குத் தாழிடுங்கள்! | 112 |
| கொடிது கொடிது சந்தேகம் கொடிது | 114 |
| சந்தேகத்திற்கு வழிவகுக்காதீர்! | 115 |
| துணை குறித்து பிறரிடம்... | 117 |
| உங்களுக்குத் தேவை ஒரு மாற்றம் | 117 |
| ஈர்ப்பும் இயல்புதான் | 119 |
| முழுமையடைதல் | 122 |
| எது சுதந்திரம்? எது நாகரிகம்? | 126 |
| அந்நியருடன் தனித்து | 127 |
| புகுந்த வீட்டு உறவுகள் | 128 |
| மலர்ந்த முகத்துடன்... | 129 |
| பகிர்ந்து வாழுங்கள் | 131 |
| இறைவன் விதித்தது விதித்ததுதான் | 132 |
| பொருட்படுத்தாதீர்! | 134 |
| பக்குவம் பயன் தரும் | 135 |
| ஊதினால் உப்பிவிடும் | 136 |
| இழப்பிற்கு உள்ளாகும்போது... | 138 |
| மரணமும் ஒரு சோதனைதான் | 139 |
| கணவருக்காக துக்கம்; எச்சரிக்கை! | 141 |



# கணவன் மனைவி விரிந்து பரவும் உறவு

*வாழத்தெரிந்தவர்கள் சிலர்; வாழத்தெரியாதவர்கள் பலர். வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் அதைத் திரும்பப் பெறமுடியுமா என ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் துக்கத்தில் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். உலகம் ஒரு விசித்திரமான கல்லூரி. இங்கே பாடம் சொல்லிக் கொடுத்துத் தேர்வு வைப்பதில்லை. தேர்வு வைத்த பிறகே பாடம் கற்பிக்கப்படுகிறது.*

*வாழும் கலையை ஒரு மனிதன் சக மனிதனுக்கு எப்படி குறைவின்றி உருவாக்கித் தரமுடியும்? நீங்கள் தயாரித்துள்ள ஓர் இயந்திரத்தில் ஏதேனும் பிரச்னைகள் ஏற்படும்போது, உங்களால் மட்டுமே அதை முழுமையாகச் சரிசெய்ய முடியும். அது குறித்த ஞானம் பிறருக்கு முழுமையாய் இருக்கவே முடியாது. இதுதான் எதார்த்தம்.*

*உங்களைப் படைத்த இறைவனால் மட்டுமே உங்களுக்கு முழுமையான தீர்வைத் தரும் சட்டங்களை அளிக்க முடியும். அச்சட்டங்களே வாழ்க்கைக் கலையாகும். அதில்தான் குறைவற்ற நிறைவான வாழ்க்கை முறை அமைந்துள்ளது. அந்தக் கலையை நீங்கள் கற்றுக் கொண்டால் வாழ்வின் தொடக்கமும் முடிவும் வசந்தமாய் இருக்கும்.*

*இறைவன் கொடுத்துள்ள வாழும் கலையை* ***(Art of living)*** *நீங்கள் கற்றுக் கொண்டு உங்கள் வாழ்க்கையை சுவர்க்கமாய் ஆக்கிக் கொள்ளுங்கள்! மனம்போன போக்கில் வாழ்ந்து அதைக் குழப்ப மானதாகவோ, நரகம் போலோ ஆக்கிக் கொள்ளாதீர்! உங்கள் வாழ்க்கை வீட்டுக்கும் நாட்டுக்கும் பயன் தரவேண்டும்.*

*மனிதன் படைக்கப்பட்டு உலகிற்கு வந்த ஆரம்ப காலத்தில் மக்கள் அனைவரும் இறைவனுக்குக் கட்டுப்பட்டவர்களாகவும், ஒரே சமுதாயமாகவும் இருந்தார்கள். பின்னர், கொஞ்சம் கொஞ்சமாக வாழ்க்கைத் தடுமாற்றத்தில் சிக்கித் தவித்தார்கள்; பாவங்கள் செய்யத் தொடங்கினர்; இறைவனை மறுத்து, இறைவனுக்கு இணை கற்பிக்கத் தொடங்கினார்கள்.*

*இப்படி தாங்கள் செல்லும் திசையை அறியாமல் வாழ்ந்த மக்களுக்கு ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அவர்களுக்கான கொள்கையும், கோட்பாடுகளையும், சட்டங்களையும், வாழும் கலையையும் வேதமாக இறைவன் கொடுத்து வந்தான். அதன் படி வாழ்ந்து வழிகாட்டுவதற்கு மனிதர்களிலிருந்தே தன் தூதர்களையும் அனுப்பிவந்தான். அவர்கள் மனிதர்களுக்கு*

வாழ்ந்து வழிகாட்டினார்கள். மனிதர்கள் சும்மா இருந்தார்களா என்றால் இல்லை. இறைவனால் கொடுக்கப்பட்ட வேதங்களில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டே வந்தார்கள்.

இறைவனால் வழங்கப்பட்ட பல வேதங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இறைவன் கொடுத்ததற்கு நேர்மாற்றமாக மனிதக் கரங்கள் வேதங்களை மாற்றின. எதற்கும் ஒரு முடிவு உண்டு. எனவே, மாற்றியமைக்க முடியாத வகையில் தன் இறுதி வேதத்தை இறைவன் மனிதர்களுக்காக அளித்தான். அந்த வேதம் திருக்குர்ஆன் ஆகும். இறைவனின் அந்த இறுதி வேதப்படி வாழ்ந்து வழிகாட்டுவதற்கு அனுப்பப்பட்ட இறைவனின் இறுதித் தூதர் முஹம்மத்(ஸல்) ஆவார்கள்.

ஒவ்வொரு மனிதனும் இதன்படி தன் வாழ்க்கையை அமைத்து உலக வாழ்க்கையிலும் மரணத்திற்குப் பின்னுள்ள மறுமை வாழ்க்கையிலும் வெற்றி பெறுவதையே வாழ்க்கையின் இலட்சியமாகக் கொள்ளவேண்டும்.

நமக்கு மிகவும் நெருக்கத்தில் உள்ள ***(Updated)*** விஷயங்களைத்தான் நாம் எடுத்துக் கொள்வோம். மிகவும் பிந்திய ***(Outdated)*** விஷயங்களை நாம் எடுத்துக் கொள்வதில்லை. அவ்வாறே, வேதங்களில் நமக்கு நெருக்கமாக உள்ள இறுதி வேதத்தையே வாழ்வின் வழிகாட்டியாக நாம் எடுத்துக் கொள்ளவேண்டும். பிந்தைய ***(Outdated)*** மற்றும் சீர்குலைக்கப்பட்ட எதையும் நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது.

இறுதி வேதமான திருக்குர்ஆன் மற்றும் அதன்படி வாழ்ந்த இறைத் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கை முறையே மனித வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு பிரச்னைக்கும் சரியான தீர்வைத் தந்து வருகின்றன. அந்த இறைவழிகாட்டுதலை நீங்களும் பெற்று, தடைகளைத் தாண்டி உங்கள் குடும்ப வாழ்க்கையில் வெற்றிக் கொடி நாட்டுங்கள்; மறுமை வாழ்விலும் வெற்றிபெறுவீர்கள்.

## கணவன் மனைவி

நாம் இருவரும் கணவன் மனைவி; நம்மில் ஒருவர் மற்றவரின் பாதுகாவலர்; நாம் இருவரும் இணைந்து இல்லறம் கண்டு, பிள்ளைகள் பெற்று மகிழ்ச்சியாகவும் பொறுப்புடனும் வாழ்வோம் என்ற ஒப்பந்தத்தில் கணவன் மனைவி என்ற உறவோடு நீங்கள் இணைந்துள்ளீர்கள். நல்லதொரு துணையை உங்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்த இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள்!



நீங்கள் நன்றி செலுத்தினால், உங்களுக்கு நிச்சயமாக நான் (அருளை) அதிகமாக்குவேன்; மாறுசெய்தால் நிச்சயமாக என் வேதனை மிகக்கடுமையானது" என உங்கள் இரட்சகன் அறிவித்ததையும் (நினைவுகூருங்கள்). **திருக்குர்ஆன் 14:7**

உங்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிக் கடல் பொங்க வேண்டும்; மகிழ்ச்சியில் உங்கள் மனம் துள்ளவேண்டும். இதற்காக நீங்கள் என்ன செய்துள்ளீர்கள்? என்ன செய்யலாம்? யோசியுங்கள்! இதற்கு மிகச் சரியான தீர்வை இஸ்லாம் தருகிறது. உங்கள் கவனத்தை அதன் பக்கம் சற்று திருப்புங்கள்!

## பிரச்னையின்றி வாழ்வேது?

நீங்களும் உங்கள் துணையும் முதலில் ஒன்றை நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். பிரச்னையின்றி உங்கள் வாழ்க்கை இருக்காது. ஆனால், உங்கள் வாழ்க்கை முழுவதும் பிரச்னையாகவே இருக்கக் கூடாது. நீங்கள் வாழ்வதற்குத்தான் தயாராகிறீர்களே தவிர, வாழ்வதில்லையே!

வாழ்க்கையில் எந்த ஒரு பிரச்னையையும் சந்திக்காமலேயே நீங்கள் பயணம் செய்தால், உங்கள் பயணம் தவறான பாதையில்கூட இருக்கலாம்.

**இறைவன் கூறுகிறான்:**

உங்களுக்கு முன்சென்றவர்களுக்கு ஏற்பட்ட சோதனைகள் உங்களுக்கு வராமலேயே சுவர்க்கத்தை அடையலாம் என எண்ணுகிறீர்களா? அவர்களை வறுமையும், துன்பங்களும் பீடித்தன. "அல்லாஹ்வின் உதவி எப்போது வரும்?" எனத் தூதரும், அவரோடு நம்பிக்கை கொண்டவர்களும் கேட்கும் அளவுக்கு அவர்கள் அலைக்கழிக்கப்பட்டனர். நிச்சயமாக அல்லாஹ்வின் உதவி அண்மையிலேயே இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள்!
**திருக்குர்ஆன் 2:214**

வெள்ளம் பாய்ந்தும் வரும், புரண்டும் வரும்; வாழ்க்கை ஓடத்தில் செல்லும் நீங்கள் வளைந்து கொடுங்கள். உங்களை அது மிதக்க வைக்கும். ஓடத்தை கவிழ்த்திவிடாதீர்! மூழ்கிப்போவீர். இது போன்றுதான் பிரச்னைகளும் அவை உங்களை நோக்கி வரும் போது அவற்றுக்குத் தக்கவாறு உங்களை நீங்கள் மாற்றிக் கொள்ளுங்கள். ஆனால், இறைவரம்புகளை மீறிவிடாதீர்! அது ஓடத்தைக் கவிழ்ப்பதாகும். பிரச்னைகளில் மூழ்கிவிடுவீர்.

எல்லா நேரங்களிலும் உங்களால் சரியான முடிவை எடுக்க முடியாது. மனம் ஒரு குரங்கைப் போன்றது; குரங்குகள் மரத்தில் கிளைக்குக்கிளைத் தாவிக் கொண்டே இருப்பது போல உங்கள் மனம் அவ்வப்போது மாறிக்கொண்டுதான் இருக்கும்; அதை ஒருநிலைப்படுத்துங்கள். நீங்களும் உங்கள் துணையும் ஓடத்தின் இரண்டு துடுப்புகளாய் இருங்கள்; வாகனத்தின் இரண்டு சக்கரங்களாய் இருங்கள்! வாழ்க்கை சீராகச் செல்லும்.

உலகில் எல்லாமே சிலகாலம் மட்டும்தான்; எதிர்பார்ப்பைக் குறைத்துக் கொள்ளுங்கள்; ஏமாற்றம் பெரிதாய் இருக்காது. முதலில் உங்களை நீங்கள் நம்புங்கள்! எதிலும் சிந்தித்துச் செயல்படுங்கள்! கொந்தளிக்காதீர்! இவ்வுலகில் வாழ்வது ஒரு முறைதான். அதை முழுக்க முழுக்க பயனுள்ளதாய் ஆக்கிக் கொள்ளுங்கள்!

உங்கள் மனதை ஓட்டைக் குடிசையாக வைக்காதீர்! புயலையும் எதிர்கொள்ளும் இரும்புக் கோட்டையாய் ஆக்குங்கள். இடர்களை அஞ்சாமல், அவற்றை எதிர்கொள்ளுங்கள்! முன்னேறுவீர்கள்.

எந்த விஷயமானாலும் சரி, உங்களிடம் நம்பிக்கையுடன் முயற்சியும் இருக்க வேண்டும். உங்களுக்கு அறிவு இருந்தால் மட்டும் போதாது, ஆற்றலும், அவற்றைப் பயன்படுத்தும் முயற்சியும் இருக்க வேண்டும். உங்கள் துயரத்திற்கு ஒரே மாற்று மருந்து சாதனைதான்; சாதித்துக் காட்டுங்கள். நீங்கள் வளரும் வரை அல்ல; உங்களை வெறுத்தவர்கள் உங்களை பாராட்டும் வரை நீங்கள் வாழ்க்கையில் ஜெயித்துக் கொண்டே இருங்கள்!

வாழ்க்கையின் சில சந்தர்ப்பங்களில்தான் பிறரிடம் உங்களுக்குள்ள இடம் என்னவென்று தெரியவரும். ஆனால், காலம் கடந்து இதை நீங்கள் தெரிந்து கொள்வதால் என்ன பலன் இருக்க முடியும்? எனவே, உங்களுக்கான இடத்தை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

**இறைவன் கூறுகிறான்:**

*...எந்த ஒரு சமுதாயமும் தன்னிடமுள்ளதை மாற்றிக் கொள்ளாத வரை, அவர்களுக்கு வழங்கிய கொடைகளை அல்லாஹ் மாற்றுவதில்லை...* **திருக்குர்ஆன் 8:53**

உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியையும் பயனுள்ளதாய் ஆக்குங்கள். காலத்தைக் ''கொல்லாதீர்! காலம் உங்களைக் கொன்றுவிடும்.''



"என்னை ரசித்துக் கொண்டே செல்லுங்கள்! நான் உங்களிடம் திரும்பவும் வரமாட்டேன்'' என்கிறது வாழ்க்கை. ''என்னை முறையாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்! எனக்கு ஈடு இந்த உலகில் எதுவும் கிடையாது" என்கிறது காலம்.

**இறைவன் கூறுகிறான்:**

*...குறிப்பிட்ட காலம் வரை (மட்டுமே இவ்வுலகில்) தங்குமிடமும், அனுபவிக்கும் பொருள்களும் உங்களுக்காக உள்ளன...*
**திருக்குர்ஆன் 2:36**

குறிப்பிட்ட அந்தக் காலத்திற்குள் நீங்கள் உங்களுக்காக, உங்கள் குடும்பத்திற்காக, மனித சமூகத்திற்காக மற்றும் மறுமை வாழ்க்கைக்காக என்னென்ன செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானியுங்கள்!

உயிருள்ளவரை உழைத்து வாழுங்கள். உழைப்பின் மேல் உழைப்பு உயிர் வாழத் துணை நிற்கும். நீங்கள் உழைக்காமல் ஓய்வை மட்டும் அனுபவித்தால் அது ஓய்வே அல்ல! நீங்கள் செய்ய வேண்டியது இன்னதுதான் என்பதை அறிந்திருந்தும், அதைச் செய்யாதிருப்பது கோழைத்தனம்.

வேர்வைத் துளியும், கண்ணீர் துளியும் உப்பாய் இருக்கலாம்; ஆனால், மறந்துவிடாதீர்! அவைதான் உங்கள் வாழ்க்கையையே மாற்றி அமைக்கும். உங்களிடம் இருக்கும் தவறுகளையும் குறைகளையும் இனங்கண்டு தூக்கி எறியுங்கள். வாழ்க்கையில் ஏற்படும் தோல்விகளுக்கான காரணத்தைக் கண்டறியுங்கள். நீங்கள் எங்கே விழுந்தீர் என்பதை மட்டும் பார்க்காதீர்! எப்படி விழுந்தீர் என்பதையும் பாருங்கள்!

வாழ்க்கையில் வீழ்வதை தவறு என நினைப்பதை விட மண்ணில் விழும் விதையாய் இருங்கள். இன்று உயர்ந்து நிற்கும் மரங்களும் ஒரு நாள் மண்ணில் உதிர்ந்து கிடந்த விதைகளே.

நீங்களோ உங்கள் துணையோ இன்று ஒரு விஷயத்தில் தோல்வியுற்றால், அதுதான் இறுதியானது என நினைக்காதீர்! உங்களின் விடாமுயற்சி ஒரு காலத்தில் உங்களை மரம் போல உயர்த்தலாம். நல்லவற்றில் நிலைத்திருங்கள். சூழல்களை நல்ல விதத்தில் சாதகமாய் ஆக்கி முன்னேறுங்கள்.

எதிலும் அவசரப்படாதீர்! நிதானமாய் இருங்கள். அவசரம், உங்களை மட்டுமல்ல, உங்கள் அலுவலையும் கொல்லும். எதிலும் சோம்பேறியாய் இருக்காதீர்! இரண்டு முற்களும் இல்லாத

கடிகாரம் நின்றாலும் ஓடினாலும் பயனில்லை; இதுதான் சோம்பேறியின் உதாரணம்.

**இறைவன் கூறுகிறான்:**

நன்மைக்காகப் பிரார்த்திப்பது போல் மனிதன் தீமைக்காகவும் பிரார்த்திக்கிறான். மனிதன் அவசரக்காரனாய் இருக்கிறான்.
**திருக்குர்ஆன் 17:11**

பதற்றமோ, அவசர புத்தியோ வேண்டாம்; அது உங்களைத் தடுமாறச் செய்துவிடும். என்னால் சாதிக்க முடியவில்லையே என புலம்பாதீர்! செயல்கள் மூலம் எதையும் சாதித்துக் காட்டுங்கள். நீங்கள் சொல்லிக் கொண் டிருப்பதை யாரும் நம்பாமல் இருக்கலாம். ஆனால், நீங்கள் செய்து காட்டுவதை நம்பித்தான் ஆகவேண்டும்.

**இறைவன் கூறுகிறான்:**

இறைநம்பிக்கையாளர்களே! நீங்கள் செய்யாததை ஏன் கூறு கிறீர்கள்? நீங்கள் செய்யாததை நீங்கள் கூறுவது அல்லாஹ்விடம் வெறுப்பால் பெரிதாய் (பாவமாய்) உள்ளது.
**திருக்குர்ஆன் 61:2,3**

வாழ்க்கையில் எழுந்து நடங்கள்; இமய மலையும் உங்களுக்கு வழிகொடுக்கும். நீங்கள் உறங்கிக் கிடந்தால் சிலந்திப் பூச்சியும்கூட உங்களை சிறைபிடித்துவிட்டு, அது சிம்மாசனம் ஏறிவிடும்.

அவசரப்படக் கூடாது என்ற உடன் நாளை பார்க்கலாம் என்பது நான்கு மாதங்களும் ஆகிவிடலாம்; அன்று சோம்பினால் ஆறு மாதங்களும் ஆகிவிடலாம். காலம் தாழ்த்தாதீர்! அது உங்களையே நீங்கள் தாழ்த்துவதாகும்; காலதாமதம் பல தீய விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

காலம் பொன் போன்றது ***(Time is Gold)*** என்பது பொருத்தமற்ற சொல். காரணம், உலகில் ஈடு கொடுக்க முடியாதது காலம் மட்டும்தான். நீங்கள் எதை இழந்தாலும் ஏதாவது ஒரு வழியில் அதை அல்லது அதைப் போன்றதைத் தேடிப் பெற்றுவிடலாம். ஆனால், ஒரு நொடிப் பொழுதை நீங்கள் இழந்தாலும், இழந்தது இழந்ததுதான். அதை உங்களால் திரும்ப பெறவே முடியாது.

அதிகமான கல்வித் தேட்டம், கடின உழைப்பு, பிறரிடம் கை ஏந்தாமை உங்கள் வெற்றிக்கு வழிவகுக்கும். உங்கள் வெற்றிக்கு விளம்பரமே தேவையில்லை. அது தடைகளைத் தகர்த்து



தானாகவே வெளிப்படும்; உங்களுக்கு ஏற்படும் தோல்விக்கான காரணங்களைத் தேடுங்கள்; காரணிகளாக யாரையும், எதையும் கூறாதீர்!

**இறைவன் கூறுகிறான்:**

உங்களின் கைகள் சம்பாதித்தவற்றினாலேயே தீங்கு உங்களை அடைகிறது. **திருக்குர்ஆன் 42:30**

வெற்றிக்கு வித்திடுங்கள்; கடும் முயற்சிகளை மேற்கொள்ளுங்கள். முயற்சியே செய்யாமல் பலனை மட்டும் எதிர்பார்க்காதீர்! நான் என் வாழ்நாளில் ஒரு பிழையும் செய்யவில்லை என நீங்கள் நினைப்பதே பிழைதான்; மட்டுமல்ல நீங்கள் எதையும் முயன்று பார்க்கவில்லை என்றும் பொருள். வெற்றி என்பது ஒவ்வொரு முறையும் நம்பர் ஒன் என்பது அல்ல. முன்பு செய்ததைவிடச் சிறப்பாகச் செய்வதே வெற்றி. எட்டிப் பிடிக்கும் தூரத்தில் வெற்றி இல்லை என்றாலும், அதை விட்டுவிடும் எண்ணத்தில் இருக்காதீர்!

வாய்ப்புகள் உங்களைத் தேடிவருவதில்லை. நீங்கள்தான் அவற்றைத் தேடிப் போகவேண்டும். உலகில் உங்களுக்கென்று பெரிய களம் இருக்கிறது; அந்தக் களம் எங்கே இருக்கிறது என்பதை நீங்கள்தான் தேடிப்பார்க்க வேண்டும்.

கணவன் மனைவி ஆகிய உங்கள் இருவரிடமும் இப்பண்புகள் இருந்தால் எல்லாம் ஜெயமே! வாழ்க்கைப் படிகளில் வெற்றிப் பயணத்தைத் தொடர்வீர்கள்.

உங்கள் வாழ்க்கையில் திருமணம் ஒரு திருப்புமுனையாய் அமைந் துள்ளது. அதில் நீங்கள் முறையாகப் பயன்பெற வேண்டும். நீங்கள் இருவரும் இறைவனுக்கு நம்பிக்கை உள்ளவர்கள்; பொறுப்பான தம்பதிகள்; இறைவன் உங்களுக்கு அளித்துள்ள வாழ்க்கை நெறிப் படி வாழ்வதற்கு முன்வாருங்கள். நீங்கள்தான் வெல்வீர்கள்.

**இறைவன் கூறுகிறான்:**

தைரியத்தை இழக்காதீர்! கவலைப்படாதீர்! இறைநம்பிக்கை யாளர்களாய் இருப்பின், நீங்களே வெல்வீர். **திருக்குர்ஆன் 3:139**

நீங்கள் குடும்ப வாழ்க்கையில் வெற்றிபெற்றால் சமூகம், தேசம் மற்றும் சர்வதேச வாழ்க்கையிலும் வெற்றி பெறுவீர்கள்.

நிர்வாகத்தை உங்களின் குடும்பத்திலிருந்து தொடங்குங்கள். குடும்பத்தைச் சீராக நிர்வகியுங்கள். அப்போதுதான் எந்த நிர்வாகத்தையும் உங்களால் சீராக நடத்த முடியும். உங்கள்

கட்டுப்பாட்டில் உள்ள ஒரு குடும்பத்தைக்கூட உங்களால் நிர்வகிக்க முடியவில்லை என்றால் பிறரை எவ்வாறு நிர்வகிப்பீர்கள்?

“நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்” என்பர். உங்கள் குடும்பமும் ஒரு பல்கலைக் கழகமாகவே இருக்க வேண்டும். குடும்பம் என்னும் பல்கலைக் கழகத்தில் நீங்கள் பயிலும் அனுபவக் கல்வி பிறருக்கும் வழிகாட்டவேண்டும்.

இக்கட்டான சூழ்நிலையிலும் கூட தயக்கம் இன்றி தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் எடுத்த முடிவு சரியானதாய் இருந்தால் அதில் உறுதியாய் இருங்கள். எடுத்த முடிவுகளை காரணமின்றி மாற்றிக் கொண்டிருக்காதீர்; அதுவும் பிரச்னைக்கு வழிவகுக்கும். பிரச்னைக்கான வாசலை நீங்கள் திறந்துவிடாதீர்!

## மகிழ்ச்சியின் இருப்பிடம்

“ச்சே என்னடா வாழ்க்கை இது? நிம்மதியே இல்லை” என அலட்டிக் கொள்ளாதீர்! எதிலும் மனம் தளராதீர்! நேற்றைய அசாத்தியம் இன்றைய சாத்தியம்; இன்றைய அசாத்தியம் நாளைய சாத்தியம் தொடர்ந்து முயலுங்கள் வெல்வீர்கள்!

**இறைவன் கூறுகிறான்:**

இறைநம்பிக்கையாளர்களே! பொறுமையுடன் இருங்கள்! சகித்துக் கொள்ளுங்கள்! ஒருவருக்கொருவர் வலுப்படுத்திக் கொள்ளுங்கள்! ஏக இறைவனை அஞ்சுங்கள்! வெற்றியடைவீர்கள்!

**திருக்குர்ஆன் 3:200**

மகிழ்ச்சி என்பது நீங்கள் வாங்கும் பொருட்களில் இல்லை. உங்கள் மனமே மகிழ்ச்சியின் ஊற்றுக்கண். உங்கள் மனதைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் உங்களிடமே உள்ளது. உங்களுக்கு நீங்கள் தான் அமைதியையும், நிம்மதியையும் தரமுடியும். இதை பிறரிடம் ஏன் எதிர் பார்க்கிறீர்கள்?

உங்கள் வாழ்க்கை ஆனந்தமாய் இருக்க வேண்டுமா வேண்டாமா என்பதை நீங்கள்தான் முடிவு செய்யவேண்டும். வாழ்க்கை என்னும் ஓடத்தில் உங்கள் துணையுடன் ஓடிக் கொண்டிருக்கும் நீங்கள் குழப்பமின்றி மனதைத் தெளிவாகவும், தூய்மையாகவும் வைத்துக் கொள்ளுங்கள். ஓடம் நன்றாக ஓடிக் கொண்டே இருக்கும்.



**இறைவன் கூறுகிறான்:**

மனதைத் தூய்மையாக்கிக் கொண்டவர் நிச்சயமாக வெற்றியடைந்துவிட்டார். **திருக்குர்ஆன் 91:9**

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“...எச்சரிக்கை! உடலில் ஒரு சதைத் துண்டு உள்ளது. அது சீரடைந்து விட்டால் உடல் முழுவதும் சீரடைந்துவிடும். அது சீர் குலைந்து விட்டால் உடல் முழுவதும் சீர்குலைந்துவிடும். அறிந்து கொள்ளுங்கள். அதுதான் இதயம்!”

**அறிவித்தவர்: நுஃமான் இப்னு பஷீர்(ரலி), நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 52**

மனதைச் சுத்தமாக வைத்திருங்கள்! உறுதியாக வெல்வீர்கள்! உளத்தூய்மைக்கு இறைவனின் துணையும் வேண்டும். எனவே, இறைவனைப் பிரார்த்தித்து வாருங்கள்!

இறைத்தூதர் யூசுஃப்(அலை) கூறியதை இறைவன் நினைவு படுத்துகிறான்.

**இறைவன் கூறுகிறான்:**

“என் மனதைப் பாவத்தை விட்டும் நானாகத் தூய்மைப்படுத்த வில்லை; என் இரட்சகன் அருள்புரிந்தால் தவிர. மனம் தீமையைத் தூண்டக் கூடியதாகவே இருக்கிறது...” **திருக்குர்ஆன் 12:53**

ஆனந்தம் என்பது அதிர்ஷ்டமல்ல; நீங்கள் எடுக்கும் முடிவின் விளைவு என்பதில் தெளிவாய் இருங்கள்!

கடந்த வாழ்க்கையில் நல்லவற்றை உள்வாங்குங்கள்! நீங்கள் செய்த குறைகளும், குற்றங்களும் உங்கள் மனதில் நிழலிட்டால் அதற்காக வருந்துங்கள்! இறைவனிடம் மன்னிப்புக் கேளுங்கள்! திருந்துங்கள்! அதே சோகத்தில் இருக்காதீர்!

**இறைவன் கூறுகிறான்:**

...பாவங்களை விட்டு மீள்பவர்களையே அல்லாஹ் நேசிக்கிறான்; தூய்மையாய் இருப்போரையும் நேசிக்கிறான்...

**திருக்குர்ஆன் 2:222**

துன்பங்களை மறந்து வாழுங்கள்; துன்பங்கள் கற்பித்த பாடங்களை மறக்காதீர்! உங்கள் குற்றங்களையும் குறைகளையும் பிறரிடம் நீங்களாக முந்திக் கொண்டு கூறாதீர்! உங்களை நீங்களே திருத்திக் கொண்டால், நீங்கள்தான் பெரும் சீர்திருத்தவாதி.

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

*"மக்களின் குறைகளை விட்டுவிட்டுத் தம் குறைகளைக் காண்பவருக்கு 'தூபா' எனும் நிழல் தரும் மரம் (சுவர்க்கத்தில்) உண்டு."*

**அறிவித்தவர்: அனஸ்(ரலி) நூல்: பஸ்ஸார்**

*நீங்கள் செய்த தவறுகளை நீங்கள்தான் திருத்திக் கொள்ள வேண்டும். அதற்கு பிறரிடம் பரிகாரம் தேடுவது எந்தவகையிலும் நியாயமாய் இருக்காது.*

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

*என் சமுதாயத்தில் மறைவில் தாம் செய்த பாவங்களைத் தாமே பகிரங்கப்படுத்துவோர் தவிர அனைவரும் மன்னிக்கப்படுவர்.*

*ஒருவர் இரவில் ஒரு பாவம் செய்துவிடுகிறார்; காலையானதும் அல்லாஹ் அவனுடைய அப்பாவத்தை (பிறருக்குத் தெரியாமல்) மறைத்துவிடுகிறான். ஆனால், "இன்னாரே! நேற்று இரவு நான் இன்னின்ன பாவங்களைச் செய்தேன்" என ஒருவன் தானாக முன்வந்து கூறுவது பகிரங்கப்படுத்துவதில் அடங்கும்...*

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி) நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, 6069**

*கவலை இல்லாத ஆணோ பெண்ணோ இருக்கவே முடியாது. கவலையை வாழ்க்கையில் ஓர் அம்சமாகப் பாருங்கள்! கால வெள்ளத்தில் கவலைகள் கரைந்துவிடும்; இது இறைவனின் அருள்.*

*இந்த உலகில் ஒரே நிலையில் யாரும் இருக்கவே முடியாது. கடலுக்குள் இருப்பவர்கள் கரை சேர்வதும், கரையில் இருப்பவர்கள் திடீரென கடலில் மூழ்கிப்போவதும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. மாற்றமே நிலையானது; அதை உள்வாங்கப் பழகிக் கொள்ளுங்கள்!*

*செல்வம் என்பதற்கு அரபு மொழியில் 'மால்' என்பர். இதன் பொருள் சுற்றிவருவதாகும். தமிழ் செல்வம் என்ற வார்த்தை ஓரிடத்தில் தங்காமல் சென்றுகொண்டு இருப்பதைக் குறிக்கும். தங்கம் என்பதற்கு அரபு மொழியில் 'தஹப்' என்பர். இதன் பொருள் செல்லுதல் என்பதாகும். தமிழில் தங்கம் என்பது ஓரிடத்தில் தங்காமல் சென்று கொண்டே இருப்பதைக் குறிக்கும்.*

*நோக்கங்களின்படியே செயல்கள் அமைகின்றன; நோக்கங்கள் மாறும்போது செயல்களும், அதன் வெளிப்பாடுகளும் மாற்றம் பெற்றே தீரும்.*



**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

*"எண்ணங்களைப் பொறுத்தே செயல்கள் அமைகின்றன. ஒவ்வொருவருக்கும் அவரவர் எண்ணியதே கிடைக்கிறது. ஒருவரின் புலம்பெயர்தல் - ஹிஜ்ரத் உலகத்தைக் நோக்கமாகக் கொண்டிருந்தால், அவர் அதையே அடைவார். ஒரு பெண்ணை நோக்கமாகக் கொண்டிருந்தால் அவளை மணப்பார். எனவே, ஒருவரின் புலம் பெயர்தல் எதை நோக்கமாகக் கொண்டதோ அதுவாகவே அமையும்..."*

**அறிவித்தவர்: உமர் இப்னு அல் கத்தாப்(ரலி),**
**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 1**

*மனதில் உறுதியும், இறைவனின் துணையும் இருந்தால், எதையும் வெல்வீர்கள். பாறைகளைக் கூட உடைத்தெறிந்துவிடும் ஆற்றல் கொண்டதுதான் உங்கள் உள்ளம்.*

**இறைவன் கூறுகிறான்:**

*நிச்சயமாக கடினத்துடன் இலகுவும் இருக்கிறது; நிச்சயமாக கடினத்துடன் இலகுவும் இருக்கிறது.* **திருக்குர்ஆன் 94:5**

*இறைவனைத் தவிர யாருக்கும் அஞ்சாதீர்! உங்கள் துணையிடம் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் வாழுங்கள். வாழ்க்கையில் எதையும் எதிர்கொள்ளும் துணிச்சலை வளர்த்துக் கொள்ளுங்கள். இந்தத் துணிச்சலை உங்கள் துணைக்கும் ஊட்டிவாருங்கள்!*

*எந்த நிலையிலும் உங்கள் பிரச்னைகளையும் துக்கத்தையும் பிறருக்கு முன்பு முகத்தில் நிழலிடச் செய்யாதீர்! புன்னகை பூத்த முகத்துடன் இருப்பதை வழமையாக்கிக் கொள்ளுங்கள்.*

*தினமும் காலையில் இறைநினைவுடனும், மலர்ந்த முகத்துடனும் ஒருவரையொருவர் முகமன் கூறியவாறு உங்கள் துணையைச் சந்தியுங்கள்! இன்றைய நாள் உங்கள் இருவருக்கும் இறைவழியில் பயனுள்ளதாய் அமைய வேண்டும் என விரும்புங்கள்! அதற்கான வழிகளைத் தேடுங்கள்.*

## நடுநிலையே நன்று

*வாழ்க்கையில் நடுநிலையை மேற்கொள்ளுங்கள்! நடுநிலைதான் நல்ல பலனைத் தரும். உங்கள் துணையுடன் வாழ்க்கையை இறுக்கமாகக் கழிக்காதீர்! ரொம்ப நளினமாகவும் இருக்காதீர்!*

**இறைவன் கூறுகிறான்.**

*...நாம் உங்களை நடுநிலையான சமுதாயமாய் ஆக்கியுள்ளோம்...*
**திருக்குர்ஆன் 2:143**

*சில பண்புகள் ஆழமான உறவையும் பாதிக்கக்கூடும்.* ***"நாங்க ரெண்டு பேரும் ரொம்பவே நெருக்கம்"*** *என பெருமை பேசாதீர்! ஏனெனில், சிலநேரங்களில் அளவுக்கதிகமான இந்த நெருக்கம்கூட உங்கள் உறவை பாதிக்கலாம். "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்பர்.*

*உங்கள் வாழ்க்கையில் எதுவுமே அளவுக்கு அதிகமானால், ஒரு கட்டத்தில் வெறுப்புத் தட்டலாம். உங்கள் மனசுக்குள் சிறகடிக்கும் பட்டாம்பூச்சி ஓய்வைத் தேடி ஓடிவிடும். ஒரு காலத்தில் இதயத்திற்கு இதமாய் இருந்ததெல்லாம் இப்போது கசக்க ஆரம்பிக்கலாம்.*

*அளவுகடந்த அன்பு உங்களை விலகவும் விடாது; நெருங்கவும் விடாது. என்னதான் உயர் ரக உணவாய் இருந்தாலும் வயிறு புடைக்கச் சாப்பிட்டால் வாந்திதான் வரும். அதாவது உடல் அதை ஏற்றுக் கொள்ளாது. வெளியில் தள்ளத்தான் பார்க்கும். எதுவுமே அளவுடன் இருப்பதே நன்று. தங்க ஊசியாய் இருந்தாலும், ஊசி ஊசிதான்; அது குத்தாது என நினைப்பது மடத்தனம்.*

**"எங்கே போனாலும், என்ன செய்தாலும் எங்கள் இருவரையும் பிரிக்கவே முடியாது?"** *என வீரவசனம் பேசாதீர்! இப்படியே இருந்தால் காலப்போக்கில் உங்களால் சுயமாக யோசிக்கக்கூட முடியாமல் போகலாம்.*

## இன்முகத்துடன் இருங்கள்!

*எப்போதும் முகத்தைக் கடுகடுப்பாக வைத்திருக்காதீர்! மௌன மாகவும், இறுக்கமாகவும் வாழாதீர்! சிரித்த முகத்துடன் இருங்கள்! உங்கள் துணையைச் சிரித்த முகத்துடன் பாருங்கள்! சிரித்த முகத்துடன் பார்க்குமாறு நடந்து கொள்ளுங்கள்! நீங்கள் சிரித்தால் உங்கள் முகம் உங்கள் துணைக்குப் பிடிக்கும்; உங்கள் துணையை நீங்கள் சிரிக்கவையுங்கள்! உங்களை இன்னும் அதிகமாக உங்கள் துணைக்குப் பிடித்துவிடும்.*

*உங்கள் வாழ்க்கைத் துணையிடமிருந்து ஏதேனும் நகைச்சுவையைச் செவியுற்றால் சிரியுங்கள்! நீங்களும் சிரிப்பூட்டுங்கள்! உங்கள் துணை சிரிப்பதைப் பார்த்து ரசியுங்கள்! "வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்" என்பர். ஆம்! நீங்கள் சிரித்த முகத்துடன் இருந்தால் காலம் செல்லச்செல்ல உங்களிடம் இருக்கும் மனநோய் உட்பட எல்லா நோய்களும் போய்விடும்; உடலும் உள்ளமும் ஆரோக்கியம் பெறும்.*



**ஜரீர் இப்னு அப்தில்லாஹ்(ரலி) அறிவித்தார்:**

*நபி(ஸல்) சிரித்த முகத்துடனே தவிர, என்னைப் பார்த்ததில்லை.*
**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 3822**

*ஒருவரைப் பார்க்கும் போதெல்லாம், புன்னகை; இப்படி இருப்பது பிறருக்காக மட்டும் அல்ல; உங்களுக்காகவும்தான். இப்படி இருந்தால் நோயே வராது என மருத்துவ ஆய்வு கூறுகிறது.*

*சிரித்த முகத்துடன் நீங்கள் ஒருவரைச் சந்திப்பதும் தர்மம் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்!*

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

*"நற்செயல்களில் எதையுமே இழிவாகக் கருதாதீர்! உம் சகோதரரைச் சிரித்த முகத்துடன் நீர் சந்தித்தால் அதுவும் நற்செயலே!"*
**அறிவித்தவர்: அபூதர்(ரலி), நூல்: ஸஹீஹ் முஸ்லிம்**

**ஆயிஷா(ரலி) அறிவித்தார்:**

*ஒருவர் இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் வீட்டுக்குள் வர அனுமதி கேட்டார். அவரைக் கண்ட இறைத்தூதர்(ஸல்),*

*"அக்கூட்டத்தாரிலேயே இவர் மிகத் தீயவர்" எனக் கூறினார்கள்.*

*அவர் வந்து அமர்ந்தார். அவரிடம் இறைத்தூதர்(ஸல்) மலர்ந்த முகத்துடன் இதமாக நடந்து கொண்டார்கள். அவர் சென்றதும்,*

*"இறைத்தூதர் அவர்களே! அவரைக் கண்டதும் தாங்கள் இவ்வாறு இவ்வாறு கூறினீர்கள். பிறகு அவரிடம் மலர்ந்த முகத்துடன் இதமாக நடந்து கொண்டீர்களே" என நான் கேட்டேன்.*

*"ஆயிஷாவே! நான் கடுமையாக நடந்து கொண்டதை நீ எப்போதாவது கண்டுள்ளாயா? ஒருவரின் தீங்கை அஞ்சும் மக்கள், அவரிடம் இயல்பாக நடக்காமல் இருந்தால் மறுமை நாளில் அல்லாஹ்விடம் தரத்தில் மிகவும் மோசமானவர்களாய் ஆகிவிடுவார்கள்" எனக் கூறினார்கள்.* **நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 6032**

*எதிரியைக் கூட சிரித்த முகத்துடன் எதிர் சொள்ளுங்கள்! உங்கள் வாழ்க்கைத் துணை உங்கள் எதிரியைவிட மோசமானவரா என்ன!*

உங்கள் துணையிடம் நீங்கள் மூஞ்சியைக் காட்டிக் கொண்டே இருக்கலாமா? சிந்தியுங்கள்!

உங்கள் துணை வெளியில் செல்லும்போது சிரித்தமுகத்துடன் அன்பாக ஒரு முத்தம் கொடுத்து அனுப்புங்கள். வீட்டிற்குள் உங்கள் துணை வரும்போதும் சிரித்தமுகத்துடன் அன்பாக ஒரு முத்தம் கொடுங்கள். வாழ்க்கை மகிழ்ச்சியாகவே இருக்கும்.

## நன்றாக நடங்கள்; நடத்துங்கள்!

நீங்கள் நடப்பதும், பிறரை நடத்துவதும் நன்றாய் இருப்பின் இதமாய் இருக்கும் உங்கள் வாழ்க்கை. உங்கள் துணையுடன் நன்றாக நடந்து கொள்ளுங்கள்.

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“பெண்களை நல்லவிதமாக நடத்துங்கள். ஏனெனில், **பெண் விலா எலும்பிலிருந்து படைக்கப்பட்டவள்.** மேலும், விலா எலும்பிலேயே அதன் மேற்பகுதி மிகக் கோணலானதாகும். நீர் அதை பலவந்தமாக நேராக்க முயன்றால் உடைத்துவிடுவீர். அதை அப்படியே விட்டுவிட்டால் அது கோணலாகவே இருந்துவிடும்...”
**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி) நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, 3331**

உங்கள் துணை ஒரு தவறு செய்துவிட்டால் அதைக் குத்திக் காட்டிக் கொண்டே இருக்காதீர்! அது தவறு என்பதை உணரச் செய்யுங்கள்! மீண்டும் மீண்டும் அதே தவறைச் செய்தால், உணரும் வரை உணர்த்திக் கொண்டே இருங்கள்!

உங்கள் வாழ்க்கைத் துணையிடம் நீங்கள் காணும் தவறுகளை நான்கு பேரின் முன்னிலையில் வைத்துக் கண்டிக்காதீர்! நான்கு பேர் என்பது வெளியில் இருக்கும் நபர்கள் மட்டும் என நினைக் காதீர்! உங்கள் வீட்டிலேயே உங்கள் பெற்றோர், சகோதரர், சகோதரி அல்லது மற்ற உறவுக்காரர் இருக்கும்போது அவர்களின் முன்னிலையில் உங்கள் துணையைக் கண்டிக்காதீர்! நீங்கள் இருவரும் தனித்திருக்கும்போது உங்கள் துணையைக் கண்டியுங் கள்! தனிமையில் தவறுகளை உணர்த்துவதே தக்க பலனளிக்கும்.

நீங்கள் திட்டுவது உங்கள் துணைக்கு பெரிய வலியை ஏற்படுத்தாது; ஆனால், பிறர் முன்பாகத் திட்டுவதுதான் மரண வேதனையாய் இருக்கும். கடும்கோபத்திலும் உங்கள் துணையிடம் தீய வார்த்தை பேசாமல் இருப்பதில் உங்கள் ஆளுமை இருக்கிறது.



உங்களுக்கு மானம், மரியாதை, வெட்கம் இருப்பது போலவே உங்கள் துணைக்கும் இருப்பதை மறந்துவிடாதீர்! வசைபாடாமல் அழகிய வார்த்தைகளால் அறிவுரை கூறுங்கள்! அது உங்களுக்கு ‘பாஸிடிவ்’ ஆக அமையும். வசைபாடல் எப்போதுமே ‘நெகடிவ்’ ஆகத்தான் அமையும்.

கோபத்தை வார்த்தைகளில் மட்டும் வைத்துக் கொள்ளுங்கள்! மனதில் வைத்துக் கொள்ளாதீர்! அன்பை வார்த்தைகளில் மட்டும் வெளிக்காட்டாதீர்! மனதில் வைத்து, செயல்களிலும் காட்டுங்கள்!

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“... உம் மனைவியை முகத்தில் அடிக்காதே! அவளைத் திட்டாதே! அவளை வீட்டில் - தனிமையில் தவிர அவளைக் கண்டிக்காதே!”
**நூல்கள்: அஹ்மத், அபூ தாவூத், நஸயீ, இப்னு மாஜா.**

உங்கள் துணையை அடிப்பது அச்சுறுத்தலுக்காகத்தானே தவிர தண்டிப்பதற்காக அல்ல. அண்ணன் தம்பியை அச்சுறுத்துவதற்காக அடிப்பதைப்போல, பெற்றோர் தம் பிள்ளைகளை அச்சுறுத்து வதற்காக அடிப்பதைப் போல, உங்கள் துணையின் மீது நீங்கள் கொண்டிருக்கும் அன்பினால் உங்கள் துணையின் குற்றச் செயலை மாற்றியமைப்பதற்காக பெயருக்கு அடிக்கலாமே தவிர அடிமையை அடிப்பதுபோல அடிக்காதீர்!

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

...“உங்களில் ஒருவர் தம் மனைவியை, அடிமையை அடிப்பது போல் அடிக்க முற்படுகிறார். பின்னர் அவரே அந்நாளின் இறுதியில் - இரவில் அவளுடன் உறவு கொள்ள நேரலாம். இது முறையா?...”
**அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு ஸம்ஆ,**
**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 4942**

நீங்கள் நல்லவரா அல்லது கெட்டவரா என சான்று அளிப்பவர் உங்கள் மனைவிதான். அந்தச் சான்றிதழே ஏற்புடையது என இஸ்லாம் கூறுகிறது. நீங்கள் நல்லவர், வல்லவர் என வெளியில் நற்சான்று பெறுவதற்கு முன், உங்கள் துணையிடம் நற்சான்று பெற்று இம்மையிலும் மறுமையிலும் உயருங்கள்!

உங்கள் எண்ணங்களும், செயல்களும் சிறந்தோங்கி உங்கள் துணையிடம் நற்சான்று பெறுவதும், உங்கள் துணைக்கு நீங்கள் நற்சான்று அளிப்பவருமாய் இருங்கள். நீங்களும் உங்கள் துணையும்

உங்கள் குறைகள் குறித்து சுயபரிசோதனை செய்து திருத்திக் கொள்ளுங்கள்! இல்லையேல், பிறரின் நகைப்பிற்கு உள்ளாவீர்கள்!

ஒரு பிரச்னைக்குப் பிறகு நீங்கள் இருவரும் இணையும்போது பழைய பிரச்னைகளை மீண்டும் எழுப்பாதீர். அது குறித்துப் பேசக்கூட வேண்டாம். அதுதான் இணக்கத்திற்கு வழிவகுக்கும்.

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“அழகிய குணமுள்ளவரே இறைநம்பிக்கையாளர்களில் முழுமை பெற்றவர். **உங்கள் மனைவியிடம் சிறந்தவரே, உங்களில் சிறந்தவர்.**”

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: திர்மிதீ**

“வேறு என்ன செய்வது? கழுதைக்கு வாழ்க்கைப்பட்டால், முன்னால் போனால் கடிக்கும்; பின்னால் வந்தால் உதைக்கும்” என்ற நிர்ப்பந்தத்தில் உங்களுடன் உங்கள் துணை வாழக்கூடாது. உள்ளார்ந்த அன்புடனும், மகிழ்ச்சியுடனும் வாழவேண்டும்.

## இடராய் இருக்காதீர்!

நீங்கள் உங்கள் துணைக்கு இடராய் இருக்காதீர்! ஆணுக்கு பெண் சோதனையாகவும், பெண்ணுக்கு ஆண் சோதனையாகவும் இருக்கிறார்கள். இதில் பெண்தான் ஆணை வசீகரிக்கும் தன்மைப் பெற்றிருக்கிறாள். எனவேதான், பெண், ஆணுக்கு பெரும் சோதனை. ஆனால், இறையச்சம் உள்ள பெண்கள் யாருக்கும் இடராய் இருக்க மாட்டார்கள்.

எகிப்து நாட்டு உயர்குடிபெண்கள் இறைத்தூதர் யூசுஃப்(அலை) அவர்களை அடைய நினைத்ததும், அதற்காக சூழ்ச்சிகள் செய்ததும் ஒரு சோதனைதான். பெண்களின் அழகில் ஓர் ஆண் மயங்கி அவர்களை அடைய நினைப்பதும் சோதனைதான். பெண்களை அடைவதற்கு இறைநம்பிக்கையாளனுக்கு முன்பாக அனுமதிக்கப் பட்ட, தடுக்கப்பட்ட என இரண்டு வழிகள் உள்ளன. அனுமதிக்கப் பட்ட வழியில்தான் அவன் பெண்களை அடைகிறானா? அல்லது தடுக்கப்பட்ட வழியைத் தேடுகிறானா என்பதுதான் சோதனை.

எதிர்பாராத அன்பும், இணையில்லா சந்தோஷமும் உங்கள் துணையிடம் கிடைக்கும். அவ்வாறே, உணர முடியாத வலியும் உங்கள் துணையிடம் கிடைக்கும். இரண்டுமே சோதனைதான்.

நன்மையான காரியங்கள் செய்வதிலோ, வணக்க வழிபாடுகளிலோ, வாழ்க்கை முன்னேற்றத்திலோ ஒருவர் மற்றவருக்கு இடராய் இல்லாமல் துணைக்குத் துணையாய் நில்லுங்கள். உங்கள் துணையின் இம்மை மறுமை வெற்றிக்கு நீங்கள் துணை நிற்பது எவ்வளவு மகிழ்ச்சியான செயல். அந்த இன்பத்தை அனுபவித்துப் பாருங்கள்!



உங்கள் துணையின் திருப்திக்காக இறைவரம்புகளை மீறிவிடாதீர்! உங்கள் துணையின் திருப்திக்காக இறைவன் விதித்துள்ள கடமைகளை மறந்துவிடாதீர்! இதுவும் உங்கள் துணையின் மூலம் உங்களுக்கு ஏற்படும் சோதனைதான்.

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“ஆண்களுக்குப் பெண்களைவிட அதிகமாய் இடர் அளிக்கும் எந்தச் சோதனையையும் எனக்குப் பிறகு நான்விட்டுச் செல்லவில்லை.”

**அறிவித்தவர்: உஸாமா இப்னு ஸைத்(ரலி)**

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 5096**

பெண்களைக் காணும் ஆண்களின் கண்கள் அவளை மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும்; தொடர்பு கொள்ள இதயம் துடிக்கும்; சந்தர்ப்பம் கிடைத்தால் சகலத்தையும் செய்யத் தூண்டும். இதுதான் சோதனை.

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“விபசாரத்தில் மனிதனுக்கு உள்ள பங்கை இறைவன் விதித்து விட்டான்; மனிதன் அதை அடைந்தே தீருவான். தவறான பார்வை கண் செய்யும் விபசாரமாகும்; உணர்ச்சியைத் தூண்டும் உரையாடல் நாவு செய்யும் விபசாரமாகும்; மனம் அதை நாடுகிறது; இவை அனைத்தையும் மர்ம உறுப்புதான் மெய்யாக்கும்; அல்லது பொய்யாக்கும்.”

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 6243**

இதை முறியடிப்பவன்தான் இறைநம்பிக்கையாளன். ஆனால், இறைவனின் உதவி இல்லாமல் இதை முறியடிக்கவே முடியாது.

**இறைவன் கூறுகிறான்:**

அவளோ அவரை விரும்பினாள்; தம் இரட்சகனின் ஆதாரத்தை அவர் (அப்போது) கண்டிராவிட்டால், அவரும் விரும்பி (தவறிழைத்து) இருப்பார். இவ்வாறு நாம் அவரை விட்டுத் தீமையையும், மானக்கேடான செயல்களையும் திருப்பிவிட்டோம். நம் தூய அடியார்களில் ஒருவராய் அவர் இருந்தார்.

**திருக்குர்ஆன் 12:24**

பெண்கள் பெரும் சோதனை என்பதில் இறைத்தூதர் யூசுஃப் (அலை) அவர்களுக்கே இந்தக் கதி என்றால் மற்றவர்களின் நிலையைச் சொல்லவா வேண்டும். எனவேதான், இறைவா! பெண்களின் சோதனையைவிட்டும் நான் உன்னிடம் காவல் தேடுகிறேன் என இறைத்தூதர்(ஸல்) பிரார்த்தித்து வந்தார்கள்.

பெண் ஆணுக்கு இடர் என்ற உடன் தாழ்வு மனப்பான்மைக்குச் சென்றுவிடாதீர்! உங்களுக்கென்று தனிப்பட்ட பல சிறப்புகள் உள்ளன. அவை ஆண்களிடம் கிடையாது. நீங்கள் பெண்ணாய்ப் பிறந்தது இறைவனின் அருள். இறைவன் உங்கள் மூலம் நிகழ்த்தும் அற்புதங்களை ஆண்கள் மூலம் நிகழ்த்துவதில்லை. இதுதான் உங்களின் தனிச் சிறப்பு. குழந்தைகளைப் பெற்றெடுக்கும் ஆற்றல் எவ்வளவு பெரிய அருள்; இதற்கு இணையாய் இவ்வுலகத்தில் என்ன இருக்க முடியும்? இதை ஓர் ஆண் செய்து காட்டமுடியுமா?

பெண்ணின் உள்ளம் ஒரு கடல்; அதில்தான் இரக்கம், தியாகம், கற்பு, அன்பு ஆகிய முத்துக்கள் பொதிந்துள்ளன. ஆண்களின் உள்ளமும் கடல் என்றாலும், அதில் இவைபோன்ற முத்துக்கள் குறைவுதான்.

## தேவையை நிறைவேற்றுங்கள்!

உங்கள் துணையின் உடல் மற்றும் மன ரீதியான தேவைகளை அறிந்து அவற்றைப் பூர்த்தி செய்யுங்கள்! உங்கள் துணையைக் கவனிப்பதில் குறைவைத்துவிடாதீர்! தேவைக்குக் கிடைக்காத அன்பும் உதவியும் அதன் பின்னர் ஆயிரம் ஆண்டுகள் தொடர்ந்து வந்தாலும் அர்த்தமற்றதே.

உங்கள் கணவரின் கண்களிலும் மனதிலும் நீங்களே நிறைந்திருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அவரை உங்கள் இதயத்தில் அன்பாகப் பூட்டி வையுங்கள்.

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“ஒருவர் தன் மனைவியைப் படுக்கைக்கு அழைத்து, அவள் அதை மறுத்துவிடுகிறாள்; அதன் விளைவாக கணவர் இரவைக் கோபத்துடன் கழிக்கிறார் என்றால், விடியும் வரை வானவர்கள் அப்பெண்ணைச் சபித்துக் கொண்டே இருப்பார்கள்”
**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 3237**

இறைவனுக்கு அடுத்தபடியாக நீங்கள் உங்கள் கணவருக்கு கட்டுப்படும் நிலையில்தான் இருக்கிறீர்கள். எனவே, எக்காரியத்தையும் உங்கள் கணவரின் அனுமதியுடன் அரங்கேற்றுங்கள். தன்னிச்சையான முடிவுக்குச் செல்லாதீர்.



**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“ஒரு மனிதரை இன்னொரு மனிதருக்கு ஸஜ்தா - சாஷ்டாங்கம் செய்வதற்கு நான் கட்டளையிடுவதாய் இருந்தால், மனைவி தன் கணவனுக்கு ஸஜ்தா - சாஷ்டாங்கம் செய்யுமாறு நான் கட்டளை இட்டிருப்பேன்.” **அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: திர்மிதீ**

“கணவனே கண்கண்ட தெய்வம்” என்பார்களே, அது போல இங்கு கணவனின் காலில் விழுந்து வணங்குங்கள் எனக் கட்டளையிடப் படவில்லை. இறைவன் மற்றும் இறைத்தூதருக்கு அடுத்தபடியாக உங்கள் கணவருக்குத்தான் நீங்கள் கட்டுப்படவேண்டும் என்றே கூறப்பட்டுள்ளது.

இறைவனுக்குச் செய்யவேண்டிய கடமையான காரியங்களைத் தவிர உபரியான காரியங்களுக்கு கணவரின் அனுமதியைப் பெறுங்கள்.

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“தன் கணவர் உள்ளூரில் இருக்க, அவரின் அனுமதியின்றி ஒரு பெண் உபரியான நோன்பு நோற்கவேண்டாம். ஒரு பெண் தன் கணவரின் அனுமதியின்றி யாரையும் அவரின் இல்லத்திற்குள் அனுமதிக்க வேண்டாம். கணவர் கட்டளையிடாமலேயே ஒரு பெண் தன் கணவரின் பொருளில் தர்மம் செய்தால் அதன் பலனில் பாதி அந்தக் கணவருக்கும் கிடைக்கும்.”
**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 5195**

நீங்கள் சுவர்க்கம் செல்வதற்கு உங்கள் கணவனின் பொருத்தம் வேண்டும்; கணவனின் திருப்தியை நாடுங்கள்!

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“ஒரு பெண் மீது அவளின் கணவன் திருப்தியாய் இருக்கும் நிலையில் அவள் இறந்துவிட்டால் அவள் சுவர்க்கம் சென்றுவிட்டாள்.”
**அறிவித்தவர்: உம்மு ஸலமா(ரலி), நூல்: திர்மிதீ**

உபரியான வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவது இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காகத்தான். பெண்களைப் பொறுத்தவரை கணவனின் தேவைகளைப் பூர்த்தி செய்வது உபரியான வணக்க

வழிபாடுகளில் ஈடுபடுதைவிடவும் மேலானது என்றே இறைத்தூதர் (ஸல்) பணித்துள்ளார்கள்.

உங்கள் துணை சுவர்க்கம் புகுவதற்கு உங்கள் திருப்தி எப்படி முக்கியமோ, அதேபோல நீங்கள் நல்லவர் என்பதற்கு உங்கள் துணைதான் உங்களுக்கு சான்று அளிக்க வேண்டும் என்பதை மனதில் கொள்ளுங்கள்! கடமைகளைச் செய்வதிலும், உரிமைப் பரிமாற்றமும் சீராய் இருந்தால் சிறப்பாக வாழலாம்.

## சிறுசிறு தவறுகளைப் பொருட்படுத்தாதீர்!

உங்கள் துணையிடம் சிறிய தவறுகள் இருக்கத்தான் செய்யும். என் மனைவி முழுக்க முழுக்க நபித்தோழியர்கள் போலவே இருக்க வேண்டும் என பிடிவாதமாய் இருக்காதீர்! சிறுசிறு தவறுகளைப் பொருட்படுத்தாதீர்! சிறுசிறு தவறுகளைக் கண்டு கொள்ளாது விட்டுவிடுங்கள் என்றால், அவர்கள் தவறிலேயே நீடிக்கட்டும் என்பதல்ல. பட்டும் படாமல் கண்டும் காணாமல் அறிவுரை கூறுங்கள்! தவறுக்குப் பரிகாரம் தண்டனை பெற்றே ஆகவேண்டும் என்ற மனநிலையிலேயே இருக்காதீர். மன்னிக்கும் மற்றும் மறக்கும் மனப்பக்குவத்திற்கு வாருங்கள்.

என் துணை முழுக்க முழுக்க நபி(ஸல்) அவர்களைப் போன்றோ, அபூ பக்ர், உமர்(ரலி) அவர்களைப் போன்றோ அல்லது அன்னை கதீஜா, அன்னை ஆயிஷா, அன்னை ஃபாத்திமா(ரலி) போன்றோ இருக்க வேண்டும் என கற்பனையில் வாழாதீர்! மனிதர்கள் என்றாலே அவர்களிடம் தவறுகள் நிகழத்தான் செய்யும் என்ற எதார்த்தத்தைப் புரிந்து வாழுங்கள். கனவுலகில் வாழாதீர்!

### இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:

“ஆதமின் மக்களில் ஒவ்வொருவரும் தவறு செய்யக் கூடியவர்களே! தம் பாவங்களுக்காக மனம் வருந்தி திருந்துபவர்களே அவர்களில் சிறந்தவர்கள்.”

**அறிவித்தவர்: அனஸ்(ரலி) நூல்: திர்மிதீ மற்றும் இப்னு மாஜா**

தவறே செய்யாதிருப்பதற்கு நீங்கள் இருவரும் வானவர்கள் அல்ல. நாம் அனைவரும் மனிதப் பிறவிதான் என்பதை அறியுங்கள்!

தண்டிப்பதற்கு ஆயிரம் காரணங்கள் இருந்தாலும், மன்னிப்பதற்கும் மறப்பதற்கும் அன்பு ஒன்றே போதுமல்லவா?

உங்கள் துணையின் மீது நீங்கள் என்னதான் காதல் கொண்டிருந் தாலும், உறவு முறியாமல் பேணிக் காப்பது கத்தி மேல் நடக்கும் வித்தைதான். கொஞ்சம் பிசகினாலும், உங்கள் கதி அதோகதிதான். ஒவ்வொரு பிரச்னையின் போதும் வாழ்க்கையில் நீங்கள் போட்ட எல்லாக் கோட்டையும் அழித்துவிட்டு மறுபடியும் முதலிலிருந்து வாழ்க்கையைத் தொடங்க முடியாது. உங்கள் துணையிடம் நீங்கள் நடந்து கொள்வதை வைத்தே நல்ல உறவின் தொடக்கமும் முடிவும் அமைகிறது.



ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ்வதுதான் வாழ்க்கை, என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்! “விட்டுக் கொடுத்தார் கெட்டதில்லை” என்பர். வெளியில் நீங்கள் பலரிடம் விட்டுக் கொடுத்து வாழும்போது உங்கள் துணையிடம் ஏன் சில விஷயங்களை விட்டுக் கொடுத்து வாழக்கூடாது?

### அனஸ் இப்னு மாலிக்(ரலி) அறிவித்தார்:

இறைத்தூதர்(ஸல்) ஒருநாள் தம் துணைவியரில் ஒருவரிடம் இருந்தார்கள். (நாங்களும் அவர்களுடன் இருந்தோம்) அப்போது, அவர்களுக்காக அவர்களின் இன்னொரு மனைவி ஒரு தட்டில் உணவுப் பண்டம் கொடுத்து அனுப்பினார். எந்த மனைவி வீட்டில் இறைத்தூதர்(ஸல்) தங்கியிருந்தார்களோ, அந்த மனைவி உணவுத் தட்டு கொண்டுவந்த பணிப்பெண்ணின் கையைத் தட்டிவிட்டார். அந்தத் தட்டு கீழே விழுந்து உடைந்துவிட்டது.

இறைத்தூதர்(ஸல்) கோபப்படவில்லை. உடைந்த அத்தட்டின் துண்டுகளை ஒன்று சேர்த்தார்கள். தட்டிலிருந்த உணவைவும் அதிலேயே ஒன்று சேர்த்தார்கள். அங்கிருந்த தோழர்களிடம், **“உங்கள் அன்னை ரோஷப்பட்டுவிட்டார்”** எனக் கூறினார்கள். பின்பு அப்பணிப் பெண்ணை (அங்கேயே) நிறுத்தினார்கள். தாம் அப்போது தங்கி இருந்த மனைவியிடம் மற்றொரு தட்டைக் கொண்டுவரப் பணித்தார்கள். உடைபட்ட தட்டுக்கு பதிலாக நல்ல தட்டைக் கொடுத்து அனுப்பினார்கள். உடைந்த தட்டை உடைத்த மனைவியின் வீட்டிலேயே வைத்துவிட்டார்கள்.

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 2481, 5225**

இவ்விடத்தில் நாமாய் இருந்தால், “என் நண்பர்கள் முன்னிலையில் என்னை அசிங்கப்படுத்திவிட்டாய்” என ஓர் அறை அறைந்துவிட்டுத் தான் மறு வேலை பார்த்திருப்போம். சிரித்த முகத்துடன் **“என் மனைவி ரோஷப்பட்டு விட்டாள் அவ்வளவுதான்”** எனக் கூறியிருப்போமா?

அசுத்தங்களில் மோசமானது கோபமும்தான். கோபம் ஓர் அமிலம் போன்றது; அது எறியப்படும் இடத்தைவிட இருக்கும்

இடத்தைத்தான் அதிகம் நாசப்படுத்தும். நீங்கள் யார் மீது கோபப்படுகிறீர்களோ அவர்களுக்கு ஏற்படும் பாதிப்பைவிட உங்களுக்குத்தான் பாதிப்பு அதிகம். இதுதான் மருத்துவ ஆய்வு; தெரிந்து கொள்ளுங்கள். கோபம் ஒரு கொடிய ஆயுதம்; நொடிப் பொழுது கோபம் மகிழ்ச்சியான பல இதயங்களை உடைத் தெறிந்துவிடும். எனவேதான்,

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

*“படைப்புகளை படைப்பதற்கு முன்பு,‘என் கருணை என் கோபத்தை முந்திவிட்டது’ என்ற ஒரு விதியை அல்லாஹ் தனக்குத்தானே விதித்துக் கொண்டான். அவ்விதி அவனுடைய அரியணைக்கு மேலேயே எழுதப்பட்டுள்ளது”*

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி) நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 7554**

## நிர்ப்பந்திக்காதீர்!

உங்கள் துணையாய் இருந்தாலும், நிர்ப்பந்திக்காமல் எது நல்லது எது கெட்டது என்பதை நிதானமாகப் பேசிப் புரியவையுங்கள்!

உங்கள் துணைக்கு நீங்கள் பாரமாகவோ, உங்கள் துணைக்குப் நீங்கள் பாரமாகவோ ஆகிவிடக்கூடாது. ஒவ்வொருவருக்கும் தனித்தனியான ஒரு வட்டம் இருக்கிறது. அந்த வட்டத்திலிருந்து யாரும் விலகிச்செல்ல முடியாது! அவரவருக்குரிய உரிமைகள் கடமைகளை மீறி எதையும் செய்ய யாரையும் நிர்ப்பந்திக்குக் கூடாது.

**இறைவன் கூறுகிறான்:**

மார்க்கத்தில் நிர்ப்பந்தமில்லை. வழிகேட்டிலிருந்து நேர்வழி மிகத் தெளிவாகியது. எனவே, வழிகெடுப்பவற்றை நிராகரித்து அல்லாஹ்வை நம்புபவர் அறுந்துவிடாத வலுவான கயிற்றைப் பற்றிக் கொண்டார். அல்லாஹ் செவியுறுபவன் நன்கறிபவன்.

**திருக்குர்ஆன்2:256**

பந்தை நீருக்குள் நீங்கள் எவ்வளவு அமுக்கினாலும், அழுத்தம் குறைந்ததும் அது திமிறிக் கொண்டு வெளியில் வந்துவிடும். அணுவை அழுத்த அழுத்த அதன் திறன் அதிகரிக்கும். நிர்ப்பந்தம் என்றும் நீடிக்காது என்பதே இயற்கை.

உங்கள் மனநிலையை பிறரிடம் கடத்த முயலாதீர்! இதை எல்லோரும் சகித்துக் கொள்ள மாட்டார்கள். முடிந்தவரை அல்ல; எதிர்மறையான எண்ணங்களை முற்றாகத் தவிருங்கள்.



என்ன பிரச்னையாக இருந்தாலும் அதை நான் என் துணையிடமே ஒப்படைக்கிறேன் என நழுவாதீர்! மனிதச் சக்திக்கு மேல் யாரும் எதையும் சாதிக்க முடியாது.

என்னை யாரும் நிர்ப்பந்திக்க முடியாது என்பதால், சட்டென ஒருவிதக் கோபம், திடீரென ஒருவகைக் கவலை, எதிர்பாரா மகிழ்ச்சி, திடீர் சிரிப்பு, திடீர் அழுகை என மனதை மாற்றிக்கொண்டே இருக் காதீர்! நீங்கள் இப்படியே இருந்தால் உங்களால் யாருடனும் சேர்ந்து வாழமுடியாது.

## ரசனைக்கு மதிப்புக் கொடுங்கள்!

ஒருவர் மற்றவரின் ரசனையை மதியுங்கள்! ஒருவர் மீது ஒருவர் ஆதிக்கம் செலுத்தாதீர்! எனக்குப் பிடித்ததே என் துணைக்கும் பிடிக்க வேண்டும் என பிடிவாதமாய் இருக்காதீர்! ஒருவர் மற்றவரின் ரசனையை மதித்து வாழ்வது அன்பின் அடையாளம்; மனிதநேயத்தின் வெளிப்பாடு. ஆதிக்கத்தால் யாரையும் வெல்ல முடியாது. அப்படியே ஒருவரை நீங்கள் வென்றாலும் அது நிலைக்காது. அன்பால் ஒருவரை வெல்வதே நிலைத்திருக்கும்.

சில நேரங்களில் உங்கள் துணையின் செயல்பாடுகள் உங்களை எரிச்சல் படுத்துவதுபோல இருக்கலாம்; மதிக்காதது போலவும் இருக்கலாம். அவ்வாறு நடப்பது தவறு என்பதைப் பக்குவமாகப் புரியவையுங்கள்! உங்கள் துணை செய்யும் மற்ற நல்ல காரியங்களை மனதிற்கொண்டு சிறிய தவறுகளைப் பொருட்படுத்தாதீர்!

உங்கள் துணையின் ஒரு குணம் உங்களுக்கு பிடிக்காமல் இருக்கும்; ஆனால், இன்னொரு குணம் உங்களுக்குப் பிடித்திருக்கும். பிடித்த குணத்தைக் கொண்டு பிடிக்காத குணத்தைப் புறந்தள்ளுங்கள்!

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“இறைநம்பிக்கையாளர் ஒருவர் இறைநம்பிக்கையுள்ள தன் மனைவியை வெறுக்க வேண்டாம். அவளிடம் ஒரு குணத்தை வெறுத்தால், மற்றொரு குணத்தின் மூலம் அவளிடம் அவர் திருப்தியுறுவார்.”

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: ஸஹீஹ் முஸ்லிம்**

## துணைக்குக் காவலனாய் இருங்கள்!

உங்கள் துணைக்கு நீங்கள் தகுந்த காவலராய் இருங்கள்! அவருக்கு நீங்களே சரியான பாதுகாலர் என்ற உறுதியைக் கொடுங்கள்!

“போனா போகுதுன்னு தாண்டி உன்னோடு வாழுறேன்” என்ற எண்ணங்களைத் தவிருங்கள்! உங்கள் துணை எப்படி இருந்தால் என்ன? என்ன ஆனாலென்ன என இருக்காதீர்! நீங்கள் வெளியூர் சென்றால் உங்கள் துணைக்கு தக்க பாதுகாப்பை உறுதிபடுத்தி விட்டுச் செல்லுங்கள்! அநாதையைப்போல் விட்டுச் செல்லாதீர்! தனிக் குடித்தனத்தில்தான் பாதுகாப்புப் பிரச்னை எழும். கூட்டுக் குடும்பத்தில் பாதுகாப்புப் பிரச்னை வரப்போவதில்லை.

**ஸஅத் இப்னு அபீ வக்காஸ்(ரலி) அறிவித்தார்:**

“இறைத்தூதர்(ஸல்) தபூக் போருக்குப் புறப்பட்டார்கள். அலீ(ரலி) அவர்களை பிரதிநிதியாக நியமித்தார்கள்.

அப்போது, “குழந்தைகளையும் பெண்களையும் கவனித்துக் கொள்வதற்கு என்னை விட்டுச்செல்கிறீர்களா?” என அலீ(ரலி) கேட்டார்.

“மூஸாவிடம் ஹாரூன் இருந்த அந்தஸ்தில் என்னிடம் நீங்கள் இருப்பதை விரும்பவில்லையா? ஆயினும், எனக்குப் பிறகு நபியாக எவருமில்லை” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 4416**

போர்க் கவசத்தைப்போல உங்கள் துணைக்கு நீங்கள் பாதுகாப்பாய் இருங்கள்! உங்கள் துணைக்கு நீங்கள் ஆடையாய் இருங்கள்! உங்கள் துணையையும் உங்களுக்கு ஆடையாக்கிக் கொள்ளுங்கள்!

**இறைவன் கூறுகிறான்:**

உங்கள் துணைவியர் உங்களுக்கு ஆடை, உங்கள் துணைவியருக்கு நீங்கள் ஆடை.... **திருக்குர்ஆன் 2:187**

உங்கள் உடலுக்கு உடை எவ்வளவு முக்கியமோ அது போலத்தான் உங்கள் துணை உங்களுக்கும் நீங்கள் உங்கள் துணைக்கும் முக்கியம். “ஆடையில்லா மனிதன் அரைமனிதன்” என்பர். அப்படியானால் மனைவி இல்லா ஆண் அரை மனிதன்; கணவன் இல்லா பெண் அரை மனுஷி என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்! நீங்கள் துணையுடன் வாழ்ந்தாலே முழுமையானவர். உங்கள் துணை உங்களுக்கு ஆடை என்பது மிகமிக ஆழமான கருத்தைக் கொண்டுள்ளது.

ஆடை உங்களுக்கு அழகு சேர்க்கிறது; உங்கள் துணை உங்களுக்கு அழகு சேர்க்க வேண்டும். நீங்களும் உங்கள் துணைக்கு அழகு சேர்க்க வேண்டும். ஆடை உங்கள் மானம் காக்கிறது; நீங்கள் உங்கள் துணையின் மானம் காக்கவேண்டும். மழை, காற்று, குளிர்,



வெயில், தூசு முதலியவற்றால் ஏற்படும் பாதிப்பிலிருந்து உங்களை ஆடை பாதுகாக்கிறது.

உங்கள் துணைக்கு ஏற்படும் அனைத்துத் தீங்கிலிருந்தும் பாதுகாப்பு அளிப்பவராய் நீங்கள் இருங்கள்! போர்க்கவசமும் ஒரு வகை ஆடை தான்; நீங்கள் உங்கள் துணைக்கு போர்க் கவசமாய் இருங்கள்! உங்கள் துணை மீது பிறர் குறை கூறுவதைத் தடுக்கும், தாங்கிக் கொள்ளும், நிவாரணம் அளிக்கும் பக்குவத்தில் இருங்கள்!

வேலியே வெள்ளாமையை மேய்வதுபோல உங்கள் துணைக்கு நீங்களே அச்சுறுத்தலாகவோ, ஆபத்தாகவோ இருக்காதீர்! ஒருவர் மற்றவருக்கு துணைக்குத் துணையாய் இருந்தால் மட்டுமே வாழ்க்கைப் பயணம் இன்பமாய் இருக்கும்.

## வெற்றிக்குத் துணை நில்லுங்கள்!

உங்கள் துணையின் வெற்றிக்குத் துணை நில்லுங்கள்! துணையின் சாதனைகளைப் பாராட்டுங்கள்! **“நீ என்னத்த செஞ்சாலும் பொம்பள பொம்பளதான்டி”** எனக் கூறி மட்டுப்படுத்தாதீர்! உங்கள் துணை ஒன்றில் சாதிப்பதற்கு ஆர்வமூட்டுங்கள்! ஆறுதல் கூறுங்கள்! ஊக்கப்படுத்துங்கள்!

நல்ல வார்த்தைகள் கூறுவதை வழமையாக்கிக் கொள்ளுங்கள்! “உன்னால் முடியாது” என ‘நெகடிவ்’ ஆக பேசாதீர்! “நீ வெல்வாய்! நீயும் வெல்வாய்!! நீயே வெல்வாய்!!!” என ‘பாஸிடிவ்’ ஆக பேசுங்கள்!

உலக வாழ்க்கையின் வெற்றியை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளாதீர்! மறுமை வாழ்க்கையின் வெற்றிக்கு முதலில் வித்திடுங்கள்! நரகம் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்; எச்சரித்தும் வாருங்கள்! சுவர்க்கம் குறித்து நற்செய்தி கூறி வாருங்கள்!

**இறைவன் கூறுகிறான்:**

இறைநம்பிக்கையாளர்களே! உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் நரகநெருப்பை விட்டுக் காப்பாற்றுங்கள். அதன் எரிபொருள் மனிதர்களும், கற்களுமாய் இருக்கிறது.

**திருக்குர்ஆன் 66:6**

உங்கள் கணவரின் சாதனைகளைப் பாராட்டுங்கள். அவரின் பணிகளில் அவர் வெற்றி பெற நீங்களும் துணையாய் இருங்கள்.

தனக்கு இருப்பது மட்டுமே இலட்சியம் என எண்ணிக் கொண்டு உங்கள் துணையின் ஆசைகளை அலட்சியப்படுத்திவிடாதீர்!

உங்கள் துணையின் ஆசைகளுக்கும் மதிப்பளியுங்கள்! உங்கள் முன்னேற்றத்திற்கு உங்கள் துணையும் உதவவேண்டும்; உங்கள் துணையின் முன்னேற்றத்திற்கு நீங்களும் உதவவேண்டும். இதுதான் வாழ்க்கை.

**“எல்லாம் எனக்குத் தெரியும்”** என்பது ஒரு நோய். **“எல்லாமே எனக்கு மட்டும்தான் தெரியும்”** என்பது கொடிய நோய். இந்த இரண்டு நோயுமே உங்களிடம் இருக்கக்கூடாது.

## இறைவணக்கத்தில் ஆர்வமூட்டுங்கள்!

இறைவனை வணங்குவதற்கு உங்கள் துணையைத் தூண்டிக் கொண்டே இருங்கள்! இரவு நேரங்களில் இறைவனக்கத்தில் அதிகமாக நீங்களும் ஈடுபடுங்கள்; உங்கள் துணையையும் ஈடுபடச் செய்யுங்கள்!

இரவு நேரத்தில் அமைதியாக தனிமையில் அமர்ந்து இறைவனிடம் கேட்கும்போது உள்ளத்தில் தனிப்பட்ட மகிழ்ச்சி மற்றும் நிம்மதி ஏற்படுகிறது. நிம்மதியை வெளியில் தேடாமல் உங்களைப் படைத்த இறைவனிடம் தேடுங்கள் உறுதியாகக் கிடைத்துவிடும்.

**உம்மு ஸலமா(ரலி) கூறினார்கள்:**

ஓர் இரவில் தூக்கத்திலிருந்து இறைத்தூதர்(ஸல்) எழுந்தார்கள்.

“அல்லாஹ் தூயவன்! இந்த இரவிலே எத்தனை சோதனைகள் இறக்கப்பட்டிருக்கின்றன. திறந்து விடப்பட்ட அருட்கொடைகள் என்னென்ன?” எனக் கூறினார்கள்.

பிறகு, உறங்கிக் கொண்டிருந்த தம் மனைவியரை இறை வணக்கத் திற்காக தூக்கத்தைவிட்டும் எழுப்புங்கள்! ஏனெனில், இவ்வுலகில் ஆடை அணிந்தவர்களாய் இருக்கும், எத்தனையோ பெண்கள் மறுமையில் நிர்வாணமாய் இருப்பார்கள்” எனக் கூறினார்கள்.
**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 115**

இரவு நேரங்களில் இறைவனை வணங்கி, அவனிடம் கோரப்படும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுகின்றன.

## வேலை வேலையாய் இருக்கட்டும்!

வேலை, வேலை என குடும்பத்தில் மகிழ்ச்சியைத் தொலைத்து விடாதீர்! வேலை முக்கியம்தான்; ஆனால், வாழ்க்கை என்பது வேலை மட்டுமல்ல. ஓரிடத்தில் வேலை பார்த்தால் அங்கு வாங்கும்



ஊதியத்திற்கு குறைவின்றி வேலை பாருங்கள்! அதைக் காரணம் காட்டி குடும்பத்தில் குறைவைத்து விடாதீர்!

நீங்கள் செய்துவரும் வேலை குடும்பத்திலிருந்து உங்களைப் பிரிக்கும் வேலையாய் இருந்தால் முடிந்தளவு அதிவிரைவில் அதை மாற்றி அமைத்துக் கொள்ளுங்கள்! உங்கள் மனைவி மக்களுக்காகத்தான் வேலையே தவிர வேலைக்காக உங்கள் மனைவி மக்கள் இல்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்!

ஒரு நாட்டையே நிர்வகித்து வந்த இறைத்தூதர்(ஸல்) பணிச் சுமைகளுக்கிடையில் தம் துணைகளுக்காகவும், பிள்ளைகளுக் காவும் நேரத்தை ஒதுக்கி, அன்பாய் இருந்தார்கள். தம் துணைகளின் வேலைகளில் தாமும் பங்களித்தார்கள். தம் பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளுடன் விளையாண்டு வந்தார்கள். உங்கள் பணிச் சுமைகளுக்கிடையில் உங்களால் உங்கள் துணை மற்றும் உங்கள் பிள்ளைகளுக்காக நேரம் ஒதுக்கி அன்பாய் ஏன் இருக்க முடியாது?

உங்கள் பிள்ளைகளை உங்கள் துணை தன் வயிற்றில் சுமந்து, தன் உதிரத்தையே உணவாக அளிக்கும்போது தந்தையாகிய நீங்கள் அவர்களை உங்கள் நெஞ்சிலும். தோலிலும் கூடவா சுமக்க மாட்டீர்கள்?

**அஸ்வத்(ரஹ்) அறிவித்தார்:**

“இறைத்தூதர்(ஸல்) தங்களின் வீட்டில் என்ன செய்வார்கள்?” என ஆயிஷா(ரலி) அவர்களிடம் நான் கேட்டேன்.

“தம் குடும்பத்திற்கு வீட்டு வேலைகளில் ஒத்துழைத்து வந்தார்கள்; தொழுகை நேரம் வந்தால் தொழுகைக்காக வெளியேறுவார்கள்” என ஆயிஷா(ரலி) கூறினார். **நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 676**

**அபூ ஹுரைரா(ரலி) கூறினார்கள்:**

இறைத்தூதர்(ஸல்) ஒரு பகல் நேரத்தில் புறப்பட்டார்கள். அவர்கள் என்னுடன் பேசவில்லை. நானும் அவர்களுடன் பேசவில்லை. ‘பனூ கைனுகா’ கடைவீதிக்கு அவர்கள் வந்ததும் ஃபாத்திமா(ரலி) அவர்களின்விட்டுத் திண்ணையில் அமர்ந்தார்கள்.

“இங்கே அந்தப் பொடியன் இருக்கிறானா?” எனக் கேட்டார்கள்.

ஃபாத்திமா(ரலி) தம் மகனுக்கு நறுமண மாலையை அணிவித்துக் கொண்டிருக்கிறார் என்றோ, தம் மகனைக் குளிப்பாட்டிக் கொண்டிருக்கிறார் என நான் நினைக்கும் அளவிற்கான நேரம்

வரை அவர் தம் மகனைத் தாமதப்படுத்தினார். பின்னர் ஃபாத்திமா (ரலி) அவர்களின் மகன் ஹஸன்(ரலி) ஓடிவந்தார். உடனே, இறைத் தூதர்(ஸல்) அவரைக் கட்டியணைத்து முத்தமிட்டு, "இறைவா! இவனை நேசிப்பாயாக! இவனை நேசிப்போரையும் நேசிப்பாயாக!" எனக் கூறினார்கள். **நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, 2122**

**அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்:**

தம் பேரக்குழந்தை ஹஸன் இப்னு அலீயை இறைத்தூதர்(ஸல்) முத்தமிட்டார்கள். அவர்களுக்கு அருகில் அமர்ந்திருந்த அக்ரவு இப்னு ஹாபிஸ் அத்தமீமீ(ரலி), "எனக்குப் பத்துக் குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவரைக்கூட நான் முத்தமிட்ட தில்லை" எனக் கூறினார். இறைத்தூதர்(ஸல்) அவரை ஏறெடுத்துப் பார்த்துவிட்டு, "அன்பு காட்டாதவர் அன்பு காட்டப்படமாட்டார்" எனக் கூறினார்கள். **நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, 5997**

## பகிர்ந்து பணியாற்றுங்கள்!

உங்கள் துணையிடம் சில வேலை வாங்கவேண்டியது இருந்தால் கௌரவம் பார்க்காமல் வேலையைக் கொடுங்கள்! இக்கட்டான நேரங்களில் உங்கள் துணைவியின் வேலையை நீங்களும் பகிர்ந்து கொள்ளுங்கள்!

வீட்டு வேலைகளில் உங்கள் மனைவியுடன் ஒத்துழையுங்கள்! உங்கள் துணைக்கு முடியாத நிலையில் ஒரு நாள் நீங்கள் சமைத்துப் போட்டால் அது உங்கள் கௌரவக் குறைச்சல் எனத் தவறாக எண்ணாதீர்! வீட்டை அலங்கரிக்கும்போது உங்கள் துணைக்கு உதவியாய் இருங்கள்!

உங்கள் பணியில் சிலவற்றை உங்கள் துணையால் உங்களைவிட நேர்த்தியாகச் செய்யமுடியும் என்றால் அதைப் பெருமையாகக் கருதுங்கள்! உங்கள் துணை அதில் ஒத்துழைத்தால் அப்பணியை உங்கள் துணையிடம் கொடுத்து வேலையை முடிக்கப்பாருங்கள்! "என்னடி நீ என்ன பெரிய இவளா?" என்ற குறுகிய எண்ணத்தைத் தவிருங்கள்! வெளியில், "இவர் அப்படிப் பேசுவார்; அவர் இப்படி பேசுவார்'' என மனதைக் குழப்பாதீர். பேசுவோர் ஆயிரம் பேசுவார்கள். ஆனால், அவர்களால் உங்கள் துணையைப்போல் அன்பைத் தரவே முடியாது.



## 24 மணி நேரப்பணியாள்

"நான் மட்டும்தான் வேலைக்குப் போறேன்; என் பொண்டாட்டி வீட்டுல சும்மாவேதான் இருக்கா!'' என புலம்பாதீர்! நீங்கள் சொல்வதில் எந்த அளவிற்கு உண்மை இருக்கிறது என்பதை நீங்கள் அளிக்கும் பதிலிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

இப்போது உங்களிடம் சில கேள்விகள்.

**எம் கேள்வி:** நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள்?

**உங்கள் பதில்:** ஒரு தனியார் நிறுவனத்தில் மேல் அதிகாரியாக அல்லது ....... வேலை செய்றேன்.

**எம் கேள்வி:** உங்கள் மனைவி?

**உங்கள் பதில்:** அவள் வேலயெல்லாம் ஒன்னும் பார்க்கல; சும்மாவேதான் வீட்ல இருக்கா.

**எம் கேள்வி:** உங்கள் வீட்டின் காலை உணவை சமைப்பது யார்?

**உங்கள் பதில்:** என் பொண்டாட்டிதான்; அவளுக்குத்தான் வேறு வேலயே இல்லையே.

**எம் கேள்வி:** உங்கள் மனைவி காலையில் எத்தனை மணிக்கு எழுவார்?

**உங்கள் பதில்:** காலை 5 மணிக்கு; வீட்டையெல்லாம் கூட்டித் துடைச்சு சுத்தம் செய்யனுமே. சும்மா இருக்றவளுக்கு இதவிட வேறென்னதான்...?

**எம் கேள்வி:** உங்கள் குழந்தைகளை குளிக்க வைத்து, ஆடைகள் அணிவித்து பள்ளிக்கு அழைத்துச் செல்வது யார்?

**உங்கள் பதில்:** இதெல்லாம் அவதாங்க செய்வா.

**எம் கேள்வி:** மார்க்கெட்டுக்குப் போவது, துணி துவைப்பது, பாத்திரங்களைத் துலக்குவது, மதிய உணவு சமைப்பது போன்ற வேலைகளை எல்லாம் செய்வது யார்?

**உங்கள் பதில்:** இதென்னாங்க கேள்வி? வெட்டியாய் இருப்பது என் பொண்டாட்டிதான; அப்போ அவதான இதெல்லாம் செய்யனும்?

**எம் கேள்வி:** ஓ... அப்படியா...? சரி, மாலை வீடு திரும்பியதும் நீங்கள் என்ன செய்வீர்கள்?

**உங்கள் பதில்:** அந்தக் கொடுமைய ஏன் சார் கேட்கிறீங்கள்! நாள் முழுக்க ஆபீஸில கடுமையான வேல செய்றதால மிகவும் களைப்பா இருக்கும். வீட்டுக்கு வந்தா ரெஸ்ட்தான்.

**எம் கேள்வி:** மாலை நேர சிற்றுண்டி, இரவுச் சாப்பாடு இதையெல்லாம் யார் சமைக்கிறார்?

**உங்கள் பதில்:** உன் பொண்டாட்டி என்ன செய்யிறா என்ன செய்யிறான்னு சும்மா கேள்வியா கேட்காதீங்க! இரவு உணவு சமைப்பா, குழந்தைகளுக்கு சாப்பாடு ஊட்டுவா பிறகு எனக்கு சாப்பாடு கொடுப்பா. அவ்வளவுதான். அதுக்கப்புறம் அவ சாப்பிட்டுவா; பிறகு தூங்குவா. அதிலும் அன்றைக்கு எங்க ரெண்டு பேருக்கும் ஏதாவது ..... இருந்தா தூங்க இன்னும் கொஞ்ச நேரமாயிடும்.

**எம் கேள்வி:** ம்... அப்படியானால் காலை 5 மணிக்கு எழுந்தது முதல் இரவு படுக்கும் வரை ஓயாத வேலை உங்கள் மனைவிக்குத் தான்னு சொல்லுங்க? அய்யோ பாவம்.

**உங்கள் பதில்:** வந்துங்க.... !!!

**எம் கேள்வி:** உண்மையா, இல்லையான்னு மட்டும் சொல்லுங்க!

**உங்கள் பதில்:** ம்... சரிதான்.

"என் பொண்டாட்டிக்கு ஒரு வேலையுமில்ல; சும்மாதான் இருக்கா" என்ற தவறான சிந்தனைதான் பல ஆண்களிடமும் உள்ளது. இப்படி கொடூரமான சிந்தனை உங்களிடம் இருக்க வேண்டாம் நண்பா!

காலை எழுந்தது முதல் இரவு தூங்கும் வரை வேலை வேலை வேலை என ஓடிக்கொண்டே இருக்கிறார் உங்கள் துணை. இரவு படுக்கைக்குப் போனால் மட்டும்தான் ஓய்வு. அப்போதும்கூட நீங்கள் இன்புற நினைத்தால் தூக்கத்தை இன்னும் தள்ளிப்போட்டுத்தான் ஆகனும். கடும் உழைப்பாளியான உங்கள் துணையைப் பார்த்து, வீட்டுல சும்மாவேதானே இருக்கா என இளக்காரமாகப் பேசுவது அநியாயம் இல்லையா? உங்கள் துணையின் உழைப்பை மதிக்க வேண்டாமா? யோசியுங்கள்!

உங்கள் துணை செய்யும் இந்த வேலைகளுக்குப் பணியாட்களை நியமித்தால் இன்றைய பொருதாரச் சூழலில் எப்படியும் சம்பளமாக சுமார் 20,000/- ரூபாய் வரைகூட கொடுக்க வேண்டும். ஆனால், உங்கள் துணை பார்ப்பதுபோல அந்த வேலையில் அவர்களுக்கு ஈடுபாடோ, ஆர்வமோ சுத்தமோ இருக்கும் என்று சொல்ல முடியாது.



ஹலோ சிஸ்டர்ஸ்! நான் குறிப்பிட்டுள்ள இதைச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டு உங்கள் கணவரிடம் சம்பளம் கேட்டுவிடாதீர்! இது வெறும் ஒப்பீடுதான்.

நீங்கள் ஏதும் வேலை செய்கிறீர்களா அல்லது வீட்டில் சும்மா யிருக்கிறீர்களா? என ஒரு பெண்ணிடம் கேட்ட கேள்விக்கு அவர் அளித்த பதிலை இங்கு பதிவு செய்கிறேன்!

என்னது? சும்மா இருக்கேனா! யாருங்க சொன்னது? பெண்கள் தான் 24 மணி நேரப் பணியாளுங்க என்பது உங்களுக்குத் தெரியுமா?

நான் ஒரு மகளாக, நான் ஒரு மனைவியாக, நான் ஒரு மருமகளாக, நான் ஒரு தாயாக, நான் ஒரு சமையல்காரியாக, நான் ஒரு வேலைக்காரியாக, நான் ஒரு டியூசன் ஆசிரியையாக, நான் ஒரு செவிலியாக, நான் ஓர் ஆயாவாக, நான் ஒரு காவல்காரியாக, நான் ஓர் ஆலோசகராக, வீட்டில் இருக்கும் எல்லோருக்கும் நான் ஓர் அலாரமாய் இருக்கிறேன். எனக்கு விடுமுறையே கிடையாது. எனக்கு உடம்புக்கு சரியில்லை என்றாலும் விடுமுறை எடுக்க முடியாது. இரவும் பகலுமாக வேலை செய்யும் நிர்ப்பந்தத்தில் நான் வாழ்கிறேன்.

எங்கள் பெண்பால் இனத்தைப் பொறுத்தவரையில் நிம்மதியான தூக்கம் என்பது இரண்டு தூக்கம்தான். குழந்தைப் பருவத்தில் நாங்கள் தூங்கும் தூக்கம் ஒன்றும், நிரந்தரமாகத் தூங்கும் மற்றொன்றும்தான்.

ஆம், இதற்கிடையில் கணவருக்காகத் தூக்கத்தை இழக்கிறோம். அடுத்து, நாங்கள் பெற்ற பிள்ளைகளுக்காக தூக்கத்தை இழக்கிறோம். கவலையிலும் தூக்கத்தை இழக்கிறோம். ஒரு ஆணோ பெண்ணோ எட்டு மணி நேரம் தூங்கினால்தான் நோயின்றி வாழமுடியும் என்பது மருத்துவ ஆய்வு. ஆனால், நாங்கள் நிம்மதியாய் எட்டு மணி நேரம் என்றைக்குத்தான் தூங்கினோம்? ஐந்து மணி நேரம் தூங்குவதே அரிது.

ஆனால், ஒரு நாளின் சில மணி நேரங்கள் மட்டும் வேலை பார்த்து விட்டு அதற்கு சம்பளமும் வாங்கிக் கொள்பவர்கள் பெண்களைப் பார்த்து கேட்கும் கேள்வி, "வீட்டுல சும்மாதான் இருக்கிறயாமே?" என்றுதான். எங்களைப் பார்த்து இப்படி கேட்பவர்களிடம் நான்

கேட்கும் ஒரே கேள்வி உண்மையிலேயே உங்கள் நெஞ்சில் கொஞ்சமாவது ஈரம் இருக்கிறதா என்பதுதான்.

## திட்டமிடுங்கள்!

மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு, திட்டமிடுங்கள்; இது மிகவும் அவசியம். இருவரும் இல்லறத்தில் ஈடுபடுவதற்குக்கூட திட்டமிட்டு, நேரம் ஒதுக்கிச் செயல்படுங்கள்! அதன் பலன் நன்றாகவே இருக்கும். நடப்பது நடக்கட்டும் இறைவன் பார்த்துக் கொள்வான் என அசட்டையாய் இருக்காதீர்.

நீங்கள் செலவிடும் பொருளாதாரத்தையும், நேரத்தையும் எதற்காக, எப்படி, எங்கே, எவ்வளவு செலவிடுகிறீர்கள் எனப் பாருங்கள்! வரவுக்கேற்ற செலவிற்கு 'பட்ஜட்' போடுங்கள்! பட்ஜட்டா? ஆ... எனப் பயந்துவிடாதீர்! சிக்கனம் என்பது செலவைச் சுருக்குவது அல்ல; உபயோகமாகச் செலவிடுவதே சிக்கனம். சம்பாதித்தல் குண்டூசியை வைத்து பள்ளம் தோண்டுவதைப் போன்றது; செலவிடுதல் குண்டூசியால் பலூனை உடைப்பதைப் போன்றது. எனவே, கவனமாய் இருங்கள்!

இறைநம்பிக்கையாளர்களைப் பொருத்தவரையில் கணக்கு இல்லாமல் வாழ்க்கை இல்லை. சரியாகக் கணக்குப் பார்த்து வாழ்ந்தால்தான் ஜகாத்தைக் கூட முறையாகச் செலுத்தவோ, வாங்கவோ முடியும்.

நபி(ஸல்) தம் வருமானத்தைக் கணக்கிட்டு தம் மனைவியருக்கு இடையில் பங்கிட்டுக் கொடுத்து வந்தார்கள். அவர்கள் தம் வாழ்க்கையில் ஒவ்வொன்றிலும் கணக்குப் பார்த்தே வாழ்ந்தார்கள்.

அனுமதிக்கப்பட்ட முறையில் பொருள் ஈட்டுவதற்குச் சரியான முறையில் திட்டமிடுங்கள். தவறான வழியில் பொருள் ஈட்டுவதைத் தவிருங்கள்!

பொருளாதாரத்தைச் சரியான வழியில் செலவிடுவதற்குத் திட்டமிடுங்கள். உங்கள் துணையுடன் இல்லறத்தை நன்றாக நடத்துவதற்குத் திட்டமிடுங்கள். உங்கள் துணை மற்றும் பிள்ளைகளுடன் சுற்றுலா ***(Tour)*** செல்வதற்குத் திட்டமிடுங்கள்.

## உரிமைகளை மறுக்காதீர்!

ஒருவரின் திறமையை மற்றவர் ஊக்கப்படுத்துங்கள்! ஒருவர் கவலையில் மற்றவர் பங்கெடுங்கள்! ஒருவரின் குறையை மற்றவர்



பொறுத்துக் கொள்ளுங்கள்! ஒருவரின் தவறை மற்றவர் மறைத்துக் கொள்ளுங்கள்; ஒருவரின் குற்றத்தை மற்றவர் மன்னித்து வாழுங்கள்! ஒருவரின் துன்பத்தில் மற்றவர் பங்கெடுங்கள்! ஒருவரின் முயற்சியில் மற்றவர் ஒத்துழையுங்கள்! ஒருவரின் கோபத்தில் மற்றவர் அமைதி காத்து வாருங்கள்! ஒருவரின் சுதந்திரத்திற்கு மற்றவர் அங்கீகாரம் கொடுங்கள்! ஒருவர் மற்றவரின் உரிமைகளை மீறாதீர். இதுவே இனிதான வாழ்க்கை.

இஸ்லாமில், ஹுகூகுல்லாஹ், ஹுகூகுல் இபாத் என இரண்டு வகை உரிமைகள் உள்ளன.

**ஹுகூகுல்லாஹ்** என்பது இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான உரிமைகள் கடமைகள் தொடர்பானது. தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் போன்ற கடமையான காரியங்கள் இதற்கு உதாரணங்கள். இதில் மனிதன் குறைவைத்துவிட்டால் இறைவன் நாடினால் அவனை மன்னித்துவிடுவான். இது மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையிலானது. இந்த வகைச் சட்டங்கள் குர்ஆன் மற்றும் சுன்னாவில் நான்கில் ஒரு பங்கே உள்ளன.

**ஹுகூகுல் இபாத்** என்பது மனிதனுக்கும், சமூகத்திற்கும் இடையிலான கடமைகள் உரிமைகள் தொடர்பானது. இதில் பாதிக்கப்பட்டவர், பாதிப்பு ஏற்படுத்தியவரை மன்னிக்காத வரை இறைவன் அவரை மன்னிக்கவே மாட்டான். இந்த வகைச் சட்டங்கள் குர்ஆன் சுன்னாவில் நான்கில் மூன்று பங்குகளாய் உள்ளன. சுருங்கச் சொன்னால் இஸ்லாமில், இறையியல் சார்ந்த விஷயங்கள் கால் பங்கும், சமூகம் சார்ந்த விஷயங்கள் முக்கால் பங்குமாய் உள்ளன.

எச்சரிக்கை! நீங்கள் உங்கள் துணையின் உரிமைகளையும் கடமைகளையும் முறையாகப் பேணி வரவேண்டும். இல்லையென்றால் ஹுகூகுல் இபாதில் குறைவைத்த குற்றத்திற்கு ஆளாக நேரிடும்.

ஹுகூகுல்லாஹ்வில் மட்டும்தான் இறைவன் மனிதனைக் கண்காணிக்கிறான் என அசட்டையாக ய்ருந்துவிடாதீர்! ஹுகூகுல் இபாதிலும் இறைவன் மனிதனைக் கண்காணித்தே வருகிறான். மனிதனை இறைவன் ஒவ்வொரு செயலிலும் கண்காணித்தே வருகிறான்.

### இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:

"...இறைவனை நீர் காண்பதைப் போலவே அவனுக்குக் நீர் கட்டுப்படுவதும். அவனை நீர் காணாவிட்டாலும் அவன் உன்னைப் பார்த்துக்

கொண்டுதான் இருக்கிறான் என வாழ்வதும் இஹ்ஸான் எனப்படும்..."

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, 50**

உங்கள் மனைவிக்கு உணவு, உடை, இருப்பிடம், பாதுகாப்பு அளித்துவருவது உங்கள் கடமையாகும். இதில் குறை வைக்காதீர்! உங்கள் மனைவியின் சொத்தை நீங்கள் அனுபவிக்க ஆசைப் படாதீர்! உங்கள் மனைவியாக முன்வந்து தன் பொருளை உங்களுக்குக் கொடுத்தால் அதை நீங்கள் வாங்கிக் கொள்வதில் குற்றமில்லை. பலவந்தமாகவோ, நிர்ப்பந்தமாகவோ எதையும் எடுக்க நினைக்காதீர்! கொடுத்து வாழ்பவனே ஆண்மகன்.

### இறைவன் கூறுகிறான்:

ஆண்கள், தங்களின் செல்வங்களிலிருந்து பெண்களுக்கு செல விட்டுவருவதால், அவர்களே பெண்களை நிர்வகிப்பவர்கள்![1] சிலரை விடச் சிலரை அல்லாஹ் மேன்மையாய் ஆக்கியுள்ளான்...

**திருக்குர்ஆன் 4:34**

நிர்வகிப்பது என்றால் ஆதிக்கம் செலுத்துவது அல்ல; மாறாக, நீங்கள் நிர்வாகி என்றால் நீங்கள்தான் செலவிட வேண்டும் என்பதை இறைவன் தெளிவுபடுத்திவிட்டான். உங்கள் மனைவிக்கு நீங்கள் ஏதேனும் கொடுத்தால் போதும் என்ற கருத்தும் இங்கு இல்லை. உங்கள் தேவைக்கு நீங்கள் எவ்வாறு, எவ்வளவு செலவு செய்கிறீர்களோ அதேபோல உங்கள் மனைவியின் தேவைக்கு ஏற்றவாறு நீங்கள் செலவிட வேண்டும்.

### இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:

"நீ உண்ணும்போது அவளையும் உண்ணச் செய்! நீ உடுத்தும்போது

1. இந்த வசனத்தில் ''அர்ரிஜாலு கவ்வாமூன்'' எனும் வார்த்தையை இறைவன் பயன்படுத்தியுள்ளான். இதன் பொருள் அதிகாரி, அரசர், எஜமான் என்பது அல்ல. 'கவ்வாம்' என்பதற்கு ஒரு பணிக்கு பொறுப்பாளராக நியமிக்கப்படுதல் என்று பொருள்.

இது, மனைவி தன் கணவனுக்கு அடிமைப்பெண் என்றோ, பணிப்பெண் என்றோ பொருள் தராது. கணவன் மனைவி இருவருக்கும் இடையிலான உறவு அமீர்-மாமூர் (ஆட்சியாளர்-குடிமக்கள்) ஹாகிம்-மஹ்கூம் (நிர்வகிப்பவர்-நிர்வகிக்கப்படுபவர்) போன்ற உறவே உள்ளது.

அமீர் என்பவர் அரியணையில் அமர்ந்து கட்டளையை மட்டும் பிறப்பிப்பவர் என்ற கருத்து இஸ்லாமில் இல்லை. இறைத்தூதர்(ஸல்) அவர்களின் அறிவுரைப்படி சமூகத்தின் தலைவர் மக்களின் ஊழியர் ஆவார். இந்த அடிப்படையில், 'கவ்வாம்' என்பது மனைவியின் தேவைகளைப் பூர்த்தி செய்து பாதுகாத்துவரும் பொறுப்பாளர் என்றே பொருள் கொள்ள வேண்டும்.



அவளையும் உடுத்தச்செய்! அவள் முகத்தில் அடிக்காதே! அவளைத் திட்டாதே! வீட்டில் - தனிமையில் தவிர அவளைக் கண்டிக்காதே!"

**நூல்கள்: அஹ்மத், அபூ தாவூத் மற்றும் நஸாயீ**

நீங்கள் உண்பது போல தரமான உணவை உங்கள் மனைவிக்குக் கொடுங்கள்! உங்களுக்கு வெளியில் பிரியாணி; உங்கள் மனைவிக்கு வீட்டில் கஞ்சி என்ற நிலையில் வாழாதீர்!

வெளியிலிருந்து வீட்டிற்குள் வந்தால் உங்கள் துணையுடன் சேர்ந்து சாப்பிடுவதை வழமையாக்குங்கள்; சாப்பிடும்போதே உங்கள் துணைக்குக் கொஞ்சம் ஊட்டிவிடுங்கள். வாய்ப்பில்லா விட்டால் நீங்கள் சாப்பிட்டதில் கொஞ்சம் மீதம் வைத்து உங்கள் துணைக்குக் கொடுங்கள். (நல்லதை எல்லாம் நீங்கள் சாப்பிட்டுவிட்டு கழித்துக் கட்டியதைக் கொடுப்பதல்ல; சரிசமமாய்க் கொடுப்பது.) இதுபோன்ற செயல்கள் அன்பு நிறைந்திருப்பதற்கு அடையாளம். உங்கள் துணையிடம் நீங்கள் அதிகாரியாகவே இருக்காதீர்! நல்ல காதலனாய் இருங்கள்; வாழ்க்கையின் சுவையை அடைவீர்கள்.

நீங்கள் அணிவது போல நல்ல தரமான ஆடையை உங்கள் மனைவிக்கும் வாங்கிக் கொடுங்கள்! நீங்கள் மிடுக்காகவும், உங்கள் மனைவி கிழிந்த ஆடையுடனும் வாழும் நிலைவேண்டாம்.

### அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அறிவித்தார்:

"கைபரிலிருந்து தமக்கு வந்த வருமானத்தில் தம் மனைவியருக்கு எண்பது வஸக்கு[2]கள் பேரீச்சம் பழமும் இருபது வஸக்குகள் வாற்கோதுமையும் இறைத்தூதர்(ஸல்) அளித்து வந்தார்கள்."

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 2328**

உங்கள் துணையை நீங்கள் அன்பாகவும், கண்ணியமாகவும், கவலை இல்லாமலும் வைத்திருப்பதை உங்கள் துணையின் ஆடை, அலங்காரம் மற்றும் முகப்பொழிவுதான் வெளிப்படுத்தும். இதை, "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பர்.

## தமக்குப்போகவே தர்மம்!

உங்கள் மனைவி மக்களுக்குப் போக மீதமுள்ளவற்றில் தர்மம் செய்யுங்கள்! தேவையுள்ளவர்களாய் அவர்கள் இருக்கும் நிலையில் பிறருக்குத் தர்மம் செய்வது உங்கள் கடமை அல்ல! நீங்கள் உங்கள்

2. வஸக்கு என்ற அளவை சுமார் 60 கிலோ எடையைக் குறிக்கும்.

குடும்பத்திற்கு முறையாகச் செலவிட்டு வருவதும் தர்மம்தான் என்பதையும், அதற்குரிய கூலி கிடைக்கும் என்பதையும் அறியுங்கள்!

தேவையுடையவர்கள் உங்கள் வீட்டிலிருக்க "தர்மத்தின் தலைவன் கொடை வள்ளள்" என்ற பெயரை வெளியில் பெறுவதால் என்ன புண்ணியம்? தேவைகள் நிறைவேறாமல் ஏங்கும் நிலையில் உங்கள் துணையையும் உங்கள் பிள்ளைகளையும் விட்டுவிடாதீர்! அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தது போக எஞ்சியதில் தர்மம் செய்யுங்கள்.

**ஸஅத் இப்னு அபீ வக்காஸ்(ரலி) அறிவித்தார்:**

இறுதி ஹஜ்ஜில் கடும் நோயினால் நான் பாதிக்கப்பட்டிருந்தேன். என்னை நலம் விசாரிக்க வரும் வழக்கம் இறைத்தூதர்(ஸல்) அவர்களுக்கு இருந்தது. ஒருமுறை அவர்கள் வந்திருந்தபோது,

"இறைத்தூதர் அவர்களே! நான் மரணத் தருவாயை அடைந்து விட்டேன். நான் செல்வந்தன்; எனக்கு ஒரு மகளைத் தவிர வேறு வாரிசு இல்லை. எனவே, என்னுடைய பொருளில் மூன்றில் இரண்டு பங்கை நான் தர்மம் செய்து விடட்டுமா?" எனக் கேட்டேன்.

"வேண்டாம்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

"பாதியைக் கொடுக்கட்டுமா?" என நான் கேட்டேன்.

"வேண்டாம்; மூன்றில் ஒரு பங்கை வேண்டுமானால் தர்மம் செய்து விடு. அதுவும்கூட அதிகம்தான். ஏனெனில், உம் வாரிசுகளை மக்களிடம் கையேந்தும் ஏழைகளாய் நீ விட்டுச் செல்வதைவிட, பிறரிடம் தேவையற்றவர்களாய் விட்டுச் செல்வதே சிறந்தது. இறைவனின் பொருத்தத்தை எதிர் பார்த்து நீ செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் நீ நன்மை கொடுக்கப்படுவாய். **உம் மனைவியின் வாயில் நீ ஊட்டுகிற ஒரு கவள உணவுக்கும் கூட உனக்கு நன்மை உண்டு" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்...**

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 1295**

**அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்:**

"தர்மம் செய்யுங்கள்!" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

ஒருவர் எழுந்து, "இறைத்தூதர் அவர்களே! என்னிடம் ஒரு தீனார் உள்ளது" எனக் கூறினார்.

"அதை உன் பிள்ளைகளுக்குச் செலவிடு" என இறைத் தூதர்(ஸல்) கூறினார்கள்.

"என்னிடம் மற்றொன்றும் உள்ளது" என அவர் கூறினார்.

"நீ அதை உன் மனைவிக்குச் செலவிடு!" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

"என்னிடம் மற்றொன்றும் உள்ளது" என அவர் கூறினார்.

"நீ அதை உன் ஊழியர்களுக்குச் செலவிடு" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

"என்னிடம் இன்னொன்றும் உள்ளதே" என அவர் கூறினார்.

"அது குறித்து நீயே தீர்மானித்துக்கொள்!" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள். **நூல்: அபூ தாவூத் 1691, நஸாயீ, ஹாகிம்**

ஒருவர் முதலில் தன்னுடைய பொருளாதாரத்தை தனக்கும், தன் பிள்ளைகளுக்கும், தன் மனைவிக்கும் செலவிட்டு வரவேண்டும். அதற்கு மேல் அதிகமாய் இருந்தால் தர்மம் செய்ய வேண்டும் என்பதை இந்த நபிமொழி உணர்த்துகிறது.

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

"மேலிருக்கும் கை கீழிருக்கும் கையைவிடச் சிறந்தது. மனிதன், தன் மனைவிக்கு முதலில் அளிக்கட்டும். ஏனெனில் 'எனக்கு உணவு கொடு! இல்லையேல், என்னை விவாகரத்துச் செய்துவிடு!' எனப் பெண் கோருகிறாள்."

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: தாரகுத்னீ**

மேலிருக்கும் கை என்பது பிறருக்குக் கொடுத்து வாழ்வதையும், கீழிருக்கும் கை என்பது பிறரிடம் வாங்கி வாழ்வதையும் குறிக்கிறது. இறைநம்பிக்கையாளன் கொடுத்து வாழும் வழக்கத்துடனே இருக்க வேண்டும். இதுவே சிறந்த செயல்.

## இயன்றதில்தான் வாக்குறுதி

உங்களால் இயலாத வாக்குறுதியை உங்கள் துணையிடம் அளிக்காதீர்! உங்கள் துணை உங்களை கட்டாயப்படுத்தினாலும் உங்களுக்கு இயன்றதில் மட்டுமே வாக்குறுதி அளியுங்கள்! உங்கள் துணைக்கு நீங்கள் அளிக்கும் வாக்குறுதியை நிறைவேற்றுங்கள்! "வாக்காவது பாக்காவது; வேலையப்பாருடி" என அதிகாரம் பேசி அடக்காதீர்!

உங்கள் வாக்குறுதியை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டால், அதற்கான காரணத்தைத் தெளிவாக எடுத்துரைத்து பொறுத் திருக்கச் செய்யுங்கள்! நீங்கள் உங்கள் வாக்குறுதியை நிறை

வேற்றுவதற்கு மிகத் தகுதியானவர் உங்கள் மனைவி என்பதை அறியுங்கள்! என் மனைவிதானே வாக்குறுதியை நிறைவேற்றினால் என்ன, நிறைவேற்றாவிட்டால் என்ன என அசட்டையாய் இருக்காதீர்!

**இறைவன் கூறுகிறான்:**

*தங்களிடம் பொறுப்பு வைக்கப்பட்டதையும், தங்களின் வாக்குறுதி களையும் பேணுபவர்களே இறைநம்பிக்கையாளர்கள்.*

**திருக்குர்ஆன் 23:8**

## வறுமையைக் கண்டு பயந்துவிடாதீர்!

வறுமையும், செழிப்பும் இறைவனின் சோதனை என்பதை அறியுங்கள்! வறுமை மட்டும்தான் இறைவனின் சோதனை என நினைக்காதீர்! இறைவன் உங்களைச் சோதிக்க நாடினால் கொடுத்தும் சோதிக்கலாம்; தடுத்தும் சோதிக்கலாம். வாழ்க்கை ஒரு சோதனைக் களம்தானே? சோதனையை வெல்பவர்களே இறைநம்பிக்கையாளர்கள். நீங்கள் சோதனைகளைச் சாதித்து வெல்லுங்கள்!

வாழ்க்கையில் வறுமையே வரக்கூடாது என நினைக்காதீர்! வீரனைப் போரில்தான் அடையாளம் காணமுடியும். உங்கள் தோழன் தோழியை கஷ்டத்தில்தான் அடையாளம் காணமுடியும். வறுமையில்தான் உங்கள் துணையை அடையாளம் காணமுடியும். உங்கள் கணவர் ஏதேனும் கடன் வாங்கினால் அதை இழிவாகக் கருதாதீர்!

இறைத்தூதர்(ஸல்) அவர்களே கடன் வாங்கி வாழ்ந்துள்ளார்கள் என்றால் உங்கள் துணை கடன் வாங்கியதில் என்ன தவறு இருக்கும் என்பதை யோசியுங்கள்.

**அனஸ்(ரலி) அறிவித்தார்:**

*“...இறைத்தூதர்(ஸல்) தங்களின் கவசத்தை மதீனாவில் உள்ள ஒரு யூதரிடம் அடமானமாக வைத்து அவரிடமிருந்து தம் குடும்பத் தாருக்காகத் தீட்டப்படாத கோதுமையை வாங்கியிருந்தார்கள். ‘முஹம்மதின் குடும்பத்தாரிடம் தீட்டிய கோதுமையிலும், பிற தானியத்திலும் ஒரு ஸாவு[3] என்னும் அளவு (இரண்டு கைகளையும் இணைத்து நான்கு முறை அள்ளும் அளவு) நிரந்தரமாய் இருந்த தில்லை.” அந்நேரத்தில் அவர்களுக்கு ஒன்பது மனைவியர் இருந்தனர்.”*

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 2069**

இறைத்தூதர்(ஸல்) கடன் வாங்கியும் வாழ்ந்தார்கள் என்றதும், அவர்கள் ஏழை என நினைத்துவிடாதீர். உண்மையில் அவர்கள் பெரும் செல்வந்தரே. இருப்பினும் அவர்கள் எளிமையாக வாழ்ந்து காட்டினார்கள். தம்மிடம் செல்வம் வந்தால் உடனே அதை சமூகத்திற்காகச் செலவிட்டுவிடுவார்கள். இன்றைய செல்வந்தர்கள் போல பணத்திற்கு மேல் பணம், பல இலட்சம் கோடி என சேமித்து வைப்பதை அவர்கள் விரும்பியதில்லை.

**அபூ தர்(ரலி) அறிவித்தார்:**

*‘அபூ தர்ரே! உஹது மலையை நீர் பார்த்திருக்கிறீரா?’ என இறைத் தூதர்(ஸல்) என்னிடம் கேட்டார்கள்.*

*தம் வேலை ஏதோ ஒன்றுக்காக இறைத்தூதர்(ஸல்) என்னை அங்கு அனுப்பப்போகிறார்கள் என எண்ணி பகல் முடிய இன்னம் எவ்வளவு நேரம் உள்ளது என அறிந்து கொள்வதற்காக சூரியனைப் பார்த்துவிட்டு. “ஆம்” என்றேன். ஆனால்,*

*“உஹது மலை அளவுக்குத் தங்கம் என்னிடம் இருந்து அதில் மூன்று தீனார்களைத் தவிர வேறு எதையும் செலவிடாமல் வைத்திருப்பதை நான் விரும்புவதில்லை” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

*ஆனால், மக்களோ, இதை அறியாதவர்களாய் இருக்கிறார்கள். இவர்கள் உலக ஆதாயங்களையே சேகரிக்கிறார்கள்...*

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 1407, 1408**

கடன் வாங்குவதும் கொடுப்பதும் வாழ்க்கையில் சகஜம். எவ்வளவு பெரிய பணக்காரனும் ஒரு கட்டத்தில் கடன் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். இதுதான் பொருளாதாரச் சுழற்சி. கடன் வாங்கிவிட்டு அதில் மோசடிதான் கூடாது. உங்கள் துணை மோசடி செய்தால் கண்டியுங்கள்! உங்கள் துணை வட்டி செலுத்தினாலும், வாங்கினாலும், அதற்குத் துணை நின்றாலும் அதைக் கடுமையாகக் கண்டியுங்கள்!

**இறைவன் கூறுகிறான்:**

*...நன்மையிலும், பயபக்தியிலும் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளுங்கள். பாவத்திலும், பகைமையிலும் ஒருவருக்கொருவர்*

3. இரண்டு கைகளையும் சேர்த்து வைத்து அள்ளும் ஓர் அளவை முத் என்றும் நான்கு முத்து அளவுகள் சேர்ந்தால் ஒரு ஸாவு என்றும் அரபுகள் கணக்கிட்டுவந்தனர்.

*உதவாதீர்! ஏக இறைவனை அஞ்சுங்கள். நிச்சயமாக ஏக இறைவன் கடுமையாகத் தண்டிப்பவன்.* **திருக்குர்ஆன் 5:2**

## சொத்தில் தன்னிச்சையான முடிவு

*உங்கள் கணவரின் அனுமதியில்லாமல் உங்கள் சொத்தில் தன்னிச்சையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாதீர்! உங்கள் கணவரின் ஆலோசனையுடன் எதையும் செய்யுங்கள்!*

### இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:

*"கணவனின் அனுமதி இல்லாமல் ஒரு பெண் அன்பளிப்பு எதுவும் செய்யக் கூடாது." அதாவது, "கணவர் தன் மனைவியின் பொறுப்பை ஏற்றிருக்கும்போது பெண் தன் சொத்தில் தன்னிச்சையாக எடுக்கும் எந்த நடவடிக்கையும் ஏற்றுக் கொள்ளப்படாது."*

**நூல்: அபூ தாவூத்**

*"என் சொத்து; என் முடிவு; இதில் நான் யாரைக் கேக்கனும்" என்ற எண்ணம் வேண்டாம். கணவரின் சொத்தையும் பாதுகாத்து வாருங்கள்! அதுவும் உங்கள் கடமைதான்.*

### இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:

*"தன் வீட்டு உணவை வீணடிக்காமல் செலவிடும் பெண்ணுக்கு அதைச் செலவிட்ட அளவுக்கு நன்மை உண்டு. அதைச் சம்பாதித் அவளின் கணவருக்கும் நன்மையுண்டு..."*

**அறிவித்தவர்: ஆயிஷா(ரலி)**
**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஸஹீஹ் முஸ்லிம்**

*வீண் செலவைத் தவிருங்கள்! தேவையில்லாமல் எதற்கும் விலை கொடுக்காதீர்!*

### இறைவன் கூறுகிறான்:

*...வீண்விரயம் செய்யாதீர்! வீண்விரயம் செய்பவர்களை இறைவன் நேசிப்பதே இல்லை.* **திருக்குர்ஆன்6:141, 7:31**

*உறவினர்களுக்கும், ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும், (உரிய) உரிமையைக் கொடுப்பீராக. (எதையும்) வீண்விரையம் செய்யாதீர்! நிச்சயமாக வீண்விரய செய்வோர் ஷைத்தான்களின் சகோதரர்கள். ஷைத்தானோ தன் இரட்சகனுக்கு நன்றி கெட்டவன்.*

**திருக்குர்ஆன் 17:26**



## கருமித்தனம் வேண்டாம்

*உங்கள் துணைக்கும், பிள்ளைகளுக்கும் செலவிடுவதில் கஞ்சனாய் இருக்காதீர்! அவர்களின் தேவை என்ன என்பதை அவ்வப்போது கேட்டுவாருங்கள்; தேவைகளை அறிந்து செலவிடுங்கள். பணம் தேவைப்பட்டால் தேவைக்குக் கையில் கொடுங்கள்.*

### ஆயிஷா(ரலி) அறிவித்தார்:

*இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் ஹிந்த் பின்த்து உத்பா(ரலி) வந்து, "இறைத்தூதர் அவர்களே! என் கணவர் அபூ சுஃப்யான் மிகவும் கருமியாய் இருக்கிறார். அவரின் பணத்திலிருந்து அவருக்குத் தெரியாமல் எடுத்து எங்கள் குழந்தைகளுக்கு உணவு அளிப்பதால் என் மீது குற்றம் ஏதும் உண்டா?' எனக் கேட்டார்.*

*"நியாயமான அளவிற்கு உன் கணவனின் செல்வத்தை எடுத்து அவர்களுக்கு உணவளிப்பதால் உங்கள் மீது குற்றமேதுமில்லை" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 2460**

*உங்களின் நியாயமான தேவையை உங்கள் கணவர் நிறைவேற்றாத போது அத்தியாவசியச் செலவுக்கு மட்டும் அவரின் பொருளில் அவருக்குத் தெரியாமல் நீங்கள் எடுக்கலாம். ஆனால், இதையே ஆதாரமாக வைத்துக கொண்டு நீங்கள் உங்கள் இஷ்டத்திற்குப் புகுந்து விளையாடி விடாதீர்! அதாவது, உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் உணவு, மருத்துவம், போன்ற அத்தியாவசியத் தேவைக்கு மட்டும்தான் பொருளாதாரம் தேவையே தவிர, ஆடம்பர வாழ்க்கைக்கும் உங்கள் விருப்பத்திற்கு செலவிடுதற்கும் அல்ல.*

## பொறுப்பில் பொறுப்பாய் இருங்கள்!

*பொறுப்பு என்பது உங்கள் துணைக்கு மட்டும்தான் உண்டு. உங்களுக்கு இல்லை என நினைக்காதீர்! மனிதராகப் பிறந்த அனைவருக்கும் பொறுப்பிருக்கிறது. பொறுப்பற்றோர் யாருமிலர்.*

### இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:

*''உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளரே! உங்களில் ஒவ்வொருவரும் தம் பொறுப்பு குறித்து விசாரிக்கப்படுவீர்.*

*தலைவர் - ஆட்சியாளர் பொறுப்பாளியாவார். அவர் தம் குடிமக்கள் குறித்து விசாரிக்கப்படுவார்.*

ஓர் ஆண் தன் குடும்பத்துக்குப் பொறுப்பாளி. தன் பொறுப்பு குறித்து அவனும் விசாரிக்கப்படுவான்.

ஒரு பெண் தன் கணவனின் வீட்டுக்குப் பொறுப்பாளி. அவளும் தன் பொறுப்பு குறித்து விசாரிக்கப்படுவாள்.

ஓர் ஊழியன் தன் முதலாளியின் செல்வத்துக்குப் பொறுப்பாளி. அவனும் தன் பொறுப்பு குறித்து விசாரிக்கப்படுவான்."

"ஓர் ஆண் மகன் தன் தந்தையின் செல்வத்துக்குப் பொறுப்பாளி."

**அறிவித்தவர்: யூனுஸ், நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 893**

உங்கள் பொறுப்புகளை நீங்கள் உணர்ந்து செயல்படுங்கள்! ஒவ்வொருவரும் தன் பொறுப்பை உணர்ந்து செயல்பட்டால் பிரச்னைக்கு வழியே இருக்காது. ஒட்டடைக் குச்சி ஓய்வு எடுத்தால் சிலந்திப் பூச்சி சிம்மாசனம் ஏறிவிடுமாம். பொறுப்பை மறந்தால், நம்பிக்கையின்மை, நாணயமின்மை போன்ற இழப்புகளால் இழிவுக்குள்ளாவீர்கள்.

## வீட்டிற்கு வெளியில்

நீங்கள் வெளியில் செல்ல விரும்பினால் உங்கள் கணவரிடம் அதற்கு அனுமதி பெறுங்கள்! உங்கள் கணவருக்கு நீங்கள் ஆற்ற வேண்டிய கடமைகளை விட்டுவிட்டு வெளியில் சுற்றித்திரியாதீர்! தக்க காரணமின்றி உங்கள் வீட்டைவிட்டு வெளியே செல்லாதீர்! தக்க காரணத்திற்காக உங்கள் துணை வெளியில் செல்வதைத் தடுக்காதீர்! அவ்வாறே நீங்கள் வெளியில் சென்றால் உங்கள் துணையிடம் தெரிவித்துவிட்டுச் செல்லுங்கள்! திடீர் திடீர் என காணாமல் போவதும், பின்னர் திடீரென தோன்றுவதுமாய் இருக்காதீர்! ஆணாதிக்கச் சிந்தனையில் வாழாதீர்!

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

"உங்களின் மனைவியர் இறைஇல்லத்திற்கு (தொழுகைக்காக) செல்ல அனுமதி கேட்டால் அதை மறுக்காதீர்!"

**அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி)**
**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 873**

வெளியில் உங்களுக்கு ஒரு தேவை இல்லாதபோது நீங்கள் ஏன் வெளியில் செல்லவேண்டும்? அப்படிச் சென்றுதான் என்ன ஆகப்போகிறது என்பதை நிதானமாக யோசியுங்கள்!



உங்கள் துணையை வீட்டுக் கைதியாக வைக்காதீர்! கண்ணியம் மற்றும் தக்க பாதுகாப்புடன் வெளியில் போய்வர அனுமதியுங்கள். சில நேரங்களில் அவர்களை நீங்களும் அழைத்துச் செல்லுங்கள்.

**ஆயிஷா(ரலி) அறிவித்தார்:**

ஒரு பெருநாளின்போது சூடான் நாட்டவர்கள் போர்க் கருவிகளையும் கேடயங்களையும் வைத்து விளையாடினார்கள். அந்நிகழ்ச்சியை நான் காணும் ஆசையில் இருந்தேன்; இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் நான் கேட்டேன்.

"நீ பார்க்க ஆசைப்படுகிறாயா?" என அவர்கள் கேட்டார்கள்.

நான், "ஆம்" என்றேன்.

என்னை அவர்கள் தமக்குப் பின்புறமாக என் கன்னம் அவர்களின் கன்னத்தில் படுமாறு நிற்க வைத்து, "மக்களே! விளையாட்டைத் தொடருங்கள்" எனக் கூறினார்கள்.

நான் பார்த்துச் சலித்தபோது, "உனக்குப் போதுமா?" எனக் கேட்டார்கள்.

நான், "ஆம்" என்றேன்.

"சரி, உள்ளே போ!" எனக் கூறினார்கள்.

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 950**

## நேரந் தவறாமை

நேரந் தவறாமை வாழ்க்கையில் மிகமிக முக்கியம். இஸ்லாமிய வழிகாட்டுதல் நேரந் தவறாமையை வலியுறுத்துகிறது. இறைவன் விதித்துள்ள கடமைகளை அதற்குரிய நேரத்தில் செய்தாகவேண்டும். நேரந் தவறிச் செய்தால் அவை அங்கீகரிக்கப்படுவதில்லை.

ஃபஜ்ர் தொழுகையை லுஹரிலும், லுஹர் தொழுகையை இஷாவிலும் தொழுதால் அது அங்கீகரிக்கப்படாது.

நோன்பு கடமையான மாதம் ரமளான் மாதம்தான். அதை துல் ஹஜ் மாதத்தில் மாற்றிக் கொள்ளமுடியாது.

நோன்புப் பொருநாள் தொழுகை ஷவ்வால் மாதம் முதல் தேதியில்தான் தொழ வேண்டும். அதை இரண்டாம் மூன்றாம் தேதிகளில் தொழுதால் அங்கீகரிக்கப்படாது.

ஃபித்ரா தர்மத்தை பெருநாள் தொழுவதற்கு முன்னரே கொடுத்து விட வேண்டும். தொழுகைக்காகப் புறப்பட்டப் பின்னர் கொடுத்தால்கூட அது ஃபித்ராவாக அங்கீகரிக்கப்படாது.

நேரந் தவறாமைக்கு இஸ்லாம் வகுத்துள்ள இவைபோன்ற உதாரணங்கள் ஏராளமாய் உள்ளன.

காலந்தவறி ஒரு காரியத்தை நீங்கள் செய்தால் பல இழப்புகளுக்கு உள்ளாவீர்! கணவன் மனைவிக்கு இடையில் நேரந் தவறாமை கடைபிடிப்பதில் மாற்றுக்கருத்து கொள்ளாதீர்! தவிர்க்கமுடியாத சில காரணங்களால் உங்கள் துணை நேரந் தவறும் பட்சத்தில் அதை நீங்கள் பொறுத்தே ஆகவேண்டும்.

இது ஒரு சிறு விஷயம்தான்; இதைப் புறந்தள்ளுங்கள்! இதையே ஒரு பிரச்னையாக்கி பிளவுக்கு வழிவகுக்காதீர்!

சோற்றில் உப்பில்லை என்பதற்காககூட சண்டை போட்டு, விவாக ரத்து வரை சென்றவர்களும் உள்ளனர் என்பதை மனதில் வையுங்கள்! சண்டைக்குப் பின் சமாதானம் என்பதைவிட, சண்டையே இல்லா நிதானம்தான் குடும்பத்துக்கு அழகு.

நீங்கள் உங்கள் துணையுடன் இராப்பகலாக சண்டையிட்டுக் கொண்டே இருந்தால் உங்கள் குடும்ப வாழ்க்கை சீரழிந்துவிடும்; அதன் தாக்கம் உங்கள் பிள்ளைகளின் மீதும் ஏற்படும். இப்படிப்பட்ட சூழலில் அமையும் சமூகம் சிறப்பாய் இருக்காது.

## நீங்கள் நீங்களாய் இருங்கள்!

எந்த நிலையிலும் நீங்கள் நீங்களாகவே இருங்கள்! ஆணாதிக்கமோ பெண்ணாதிக்கமோ உங்களுக்கு வேண்டாம்! போலியான பெண்ணிய வாதமும் வேண்டாம்.

தவறுகள் நிகழ்வது எதார்த்தம்; ஆனால், தவறிலேயே தொடர்வது தடம் புரளுதல் ஆகும். உங்கள் துணை அவ்வாறு தடுமாறும்போது அதை சுட்டிக்காட்டுங்கள்! எடுத்ததற்கெல்லாம் **அட்வைஸ்** என்ற நிலைக்குப் போய்விடாதீர்! கட்டாயப்படுத்தி எதையும் புகுத்தாதீர்! இதனால் மனதில் எந்த மாற்றமும் வரப்போவதில்லை. நிதானத்தைக் கையாளுங்கள்!

ஆதிக்கத்தால் வெல்லமுடியாத எதையும் அன்பு மற்றும் அரவணைப்பால் வெல்ல முடியும். ஒருவருக்கொருவர் அன்பு பரிமாற்றம் மற்றும் அரவணைப்பில் இருங்கள்! ஆதிக்கம் என்ற வார்த்தையை உங்கள் வாழ்க்கை அகராதியிலிருந்து தூக்கி எறிந்துவிடுங்கள்!

நீங்கள் நீங்களாய் இருங்கள்! உங்கள் துணை உங்களுக்கு அடிமை இல்லை! அவர்களை அவர்களாய் இருக்கவிடுங்கள்! உங்கள்



துணை வாழ்க்கையில் திசைமாறுவதை நீங்கள் அறிந்தால் சரியாக வழிகாட்டுங்கள்! நீங்கள், நிர்வகிக்கும் பொறுப்பாளர்கள்தாம் என்பதை மறந்துவிட்டு உங்கள் துணையின் மீது ஆதிக்கம் செலுத்தாதீர்!

## துணையுடன் விளையாடுங்கள்!

உங்கள் துணையுடன் விளையாடுவதை வழமையாகக் கொள்ளுங்கள்! இதை சின்னப்பிள்ளைத் தனம் என நினைக்காதீர்! அது உங்களை அன்பு நிறைந்த வாழ்க்கைக்கு அழைத்துச் செல்லும்.

**ஆயிஷா(ரலி) அறிவித்தார்:**

நான் பொம்மைகள் வைத்து விளையாடுவேன். எனக்குச் சில தோழியர் இருந்தனர். அவர்களும் என்னுடன் விளையாடிக் கொண்டு இருப்பார்கள். இறைத்தூதர்(ஸல்) வீட்டுக்குள் நுழைந்தால் அவர்களைக் கண்டதும் என் தோழியர் திரைக்குள் மறைந்து கொள்வார்கள். அப்போது, நான் விளையாடுவதற்காக என் தோழியரை இறைத்தூதர்(ஸல்) என்னிடம் அனுப்பி வைப்பார்கள். என் தோழிகள் என்னுடன் விளையாடுவார்கள்.

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 6130**

உங்கள் துணை பொம்மையை வைத்து விளையாடிக் கொண்டிருந்தால் “இவளென்ன இன்னும் சின்னப் பிள்ளையாவே இருக்கிறாள்” என்றுதானே நினைப்பீர்கள். சில நேரங்களில் அது உங்களுக்கு வெறுப்பைக்கூட ஏற்படுத்திவிடலாமல்லவா? ஆனால், இறைத்தூதர் (ஸல்) தம் துணைகளுடன் அன்பிலும், அவர்களிடம் ஆலோசனை பெறுவதிலும் முன்மாதிரியாய் இருந்தார்கள். ஏன், உடல் நிலை சரியில்லாத தம் கடைசிக் காலத்தில்கூட மற்ற மனைவியரின் அனுமதியுடன் அன்னை ஆயிஷா(ரலி) அவர்களுடன்தான் இருந்தார்கள்.

**ஆயிஷா(ரலி) அறிவித்தார்:**

நாங்கள் இறைத்தூதர்(ஸல்) அவர்களுடன் ஒரு பயணம் சென்றோம்; ஓர் இடத்தில் இறங்கினோம். ஓட்டப் பந்தயத்திற்கு என்னை இறைத்தூதர்(ஸல்) அழைத்தார்கள். நான் அவர்களை முந்திவிட்டேன்; அவர்கள் பிந்திவிட்டார்கள். அதன் பின்னர், இன்னொரு பயணத்தில் இறைத்தூதர்(ஸல்) அவர்களுடன் நான் சென்றேன்; ஓர் இடத்தில் இறங்கினோம். அன்றும் ஓட்டப் பந்தயத்திற்கு என்னை அழைத்தார்கள். அன்று அவர்கள் என்னை முந்தி

விட்டார்கள். பின்பு, என் உள்ளங்கையில் அடித்து, “அதற்கு இது சரியாகிவிட்டது” எனக் கூறினார்கள்.

**நூல்: முஸன்னஃப் இப்னு அபீ ஷைபா**

நபி(ஸல்) அவர்களும் அவர்களின் துணைவி ஆயிஷா(ரழி) அவர்களும் ஓடிப்பிடித்து விளையாண்டார்கள். இதைச் சின்னப் பிள்ளைத்தனமாக நபி(ஸல்) நினைக்கவில்லை. நீங்களும் உங்கள் மனைவியுடன் விளையாடி மகிழுங்கள்! ஓடிப்பிடித்துத்தான் விளையாட வேண்டும் என்பது அல்ல; அனுமதிக்கப்பட்ட, உங்களுக்கு விருப்பமான விளையாட்டுகளை உங்கள் துணையுடன் சேர்ந்து விளையாடுங்கள்!

## உள்ளங்களை இணைக்கும் சாவி

குடும்ப வாழ்வின் சுவையை அறியாதோர், “மோகம் முப்பது, ஆசை அறுபது” என்பர். இது மாதிரியான வாக்கியங்களை மனதில் போட்டுக் கொண்டு திருமணமாகி இரண்டு மூன்று மாதங்கள் ஆகிவிட்டால், எல்லாம் முடிந்துவிட்டதாக எண்ணாதீர்!

உங்கள் துணையுடன் மோகம் முப்பொழுதுமாய் ஆசை அன்றாடமாய் வைத்துக் கொள்ளுங்கள்! திருமணம் ஆன புதிதில் எவ்வாறு அன்பாகவும் நெறுக்கமாகவும் இருந்தீரோ அவ்வாறே எப்போதும் இருங்கள்! இறைவரம்புகளுக்கு உட்பட்டு செய்வதை விரும்பிச் செய்யுங்கள்!

உங்கள் துணையுடன் தாம்பத்யம் என்பது குடும்ப வாழ்க்கையின் சாவி; எக்காரணம் கொண்டும் அதைத் தொலைத்துவிடாதீர்!

தாம்பத்யம் இரண்டு உள்ளங்களை இணைத்திடும் அழகிய சங்கிலி. உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதுபோல இரகசிய ஆசைகளையும் பகிர்ந்து கொள்ளுங்கள்! உங்கள் துணையிடம் உங்கள் எண்ணங் களை வெளிப்படையாகச் சொல்லுங்கள்! உங்கள் துணையின் எண்ணங்களையும் கண்டறியுங்கள்! உங்கள் துணையிடம் தவிர ரகசிய சிநேகிதம் உங்களுக்கு எங்குமே கிடைக்காது.

ஆணுக்கு தன் துணையிடம் சில ஆசைகளும், பெண்ணுக்கு தன் துணையிடம் சில ஆசைகள், எதிர்பார்ப்புகள், கனவுகள் இருப்பது இயல்பு. நீங்களாக தேவையற்ற கட்டுப்பாடுகளைப் போட்டுக் கொள்ளாதீர்! மனம் விட்டுப்பேசுங்கள்; விருப்பங்களை வெளிக் காட்டுங்கள்! செயல்பாடுகளில் வெறுப்புக் காட்டாமல் செய்வதை விரும்பிச் செய்யுங்கள்! உள்ளம் மகிழ்ச்சியில் துள்ளும்.



உங்கள் துணையிடம் உங்கள் இதயம் சொல்ல நினைக்கும் ஆசைகளை உங்கள் இதழ்கள் மறைத்துவிட்டால் உங்கள் இல்லறம் தோற்று விடும். உங்கள் இதழ்கள் அசைய ஆரம்பித்துவிட்டால் இல்லறம் இனிக்கும். மௌனம் சம்மதம் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், பேசுவதைவிட மௌனத்திற்கு ஆயிரம் அர்த்தம் கொடுக்கும் உலகம் இது. எனவே, பேச வேண்டியதை நியாயமாக, நிதானமாக, தெளிவாக, நேரடியாகப் பேசிவிடுங்கள். இது உங்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றும்; தவறான புரிதலுக்கும் முற்றுப் புள்ளியிடும்.

**இறைவன் கூறுகிறான்:**

உங்களின் மனைவியர் உங்களின் விளைநிலங்கள். எனவே, உங்கள் விருப்பப்படி உங்கள் விளைநிலங்களுக்குச் செல்லுங்கள்.

**திருக்குர்ஆன் 2:223**

கணவன் மனைவி இருவரும் தங்கள் உணர்வுகளையும், இல்லற இரகசிய ஆசைகளையும் பகிர்ந்து கொள்வதில் தாராளமாய் இருக்க வேண்டும் என்பதுதான் இவ்வாறு இலக்கியநயமாகக் கூறப்பட்டுள்ளது.

அன்புக்காக நீங்கள் தேடிய உறவுதான் உங்கள் துணை; பின்னர் உங்கள் அன்பு ஏன் இடம் பெயரவேண்டும்? என் துணை என்னுடன் அன்பாய் இல்லை என நீங்கள் ஏன் நினைக்கிறீர்?

கடலுக்கு நிலவைப் பிடிக்காமல் போய்விடுமா என்ன? அதற்குப் பிடிக்கவில்லை என்றால் ஆயிரமாயிரம் அலைக் கைகளை நீட்டி முழுமதியைத் தாவிப்பிடிப்பதற்குத் தவிப்பதேன்?

வானத்திற்குப் பூமியைப் பிடிக்காமல் போய்விடுமா என்ன? அதற்குப் பிடிக்கவில்லை என்றால், இரவெல்லாம் ஆயிரமாயிரம் விண்மீன்களால் கண் இமைக்காமல் பூமியை உற்றுப் பார்த்துக் கொண்டே இருப்பதேன்?

மேகத்திற்கு மின்னலை பிடிக்காமல் போய்விடுமா என்ன? அப்படி பிடிக்கவில்லை என்றால் தன்னைப் பிளந்து கொண்டு மெகாவாட் கணக்கில் பாய்ந்தோடும் மின்னலை இறுகத் தழுவி மார்போடு அணைத்துக் கொள்வதேன்?

உங்கள் துணையை உங்களுக்கு எப்படி பிடிக்காமல் போகும்? உங்கள் துணைக்கு உங்களை எப்படி பிடிக்காமல் போகும்? உங்கள் துணையின் கரடுமுரடான செயல்களையும் குறைகளையும் புறந்தள்ளுங்கள்! உங்கள் துணையிடம் வெளிப்படும் அன்பை

*மட்டும் பாருங்கள்! அந்த அன்பினால் உங்கள் துணையை இதயத்தோடு இறுக்கிக் கொள்ளுங்கள். காலம் கனியக்கனிய உங்கள் துணையும் கனியும் நேரம் வரும். கனிந்துவிட்டால் தித்திப்பைத் தவிர வேறு என்ன இருக்க முடியும்?*

*பனித்துளி பார்ப்பதற்கு மிகமிகச் சிறியதுதான்; ஆனால், சூரியனையே அது தனக்குள் வைத்துக் கொள்கிறது அல்லவா! அதன் அன்பில் நெகிழ்ந்த சூரியன் சும்மாவா இருக்கிறது! தன் வெப்பத்தால் அதை இளக்கி தன்னுள் ஆக்கிக் கொள்கிறது அல்லவா? பனித்துளிக்கும் சூரியனுக்கும் உள்ள இந்த அன்புப் பரிமாற்றம் தினமும் நடந்து கொண்டுதானே இருக்கிறது. உங்கள் துணையுடன் அன்பிலும், இதயத்தை இணைப்பதிலும் இடைவிடாது போட்டி போடுங்கள்!*

**இறைவன் கூறுகிறான்:**

*முஹம்மத் இறைவனின் தூதர். அவருடன் இருப்பவர்கள் இறை மறுப்பாளர்களிடம் கண்டிப்பானவர்கள்.[4] தங்களுக்கிடையே அன்பு மிக்கவர்கள். குனிந்தவர்களாகவும் சிரம் பணிந்தவர்களாகவும், அல்லாஹ்விடமிருந்து அருளையும், (அவன்) பொருத்தத்தையும் விரும்பி வேண்டுபவர்களாகவும் அவர்களை நீர் காண்பீர்.*

**திருக்குர்ஆன் 48:29**

## இவற்றிற்குத் தாழிடுங்கள்!

*கோபம், எரிச்சல், பழிவாங்குதல், குரோதம், விரோதம், போன்ற ஷைத்தானியச் சிந்தனை **(Energy Destructors)** படுக்கை அறைக்குள் கண்டிப்பாக வரக்கூடாது! உங்கள் மனதைக் காயப்படுத்தியவர் காயப்பட்டே ஆக வேண்டும் என நீங்கள் விரும்புவது உங்களின் பக்குவமின்மையாகும். அதிலும், உங்கள் துணைக்கே நீங்கள் இவ்வாறு விரும்புவது மனிதத் தன்மையற்ற நிலையாகும். இதில் மிகவும் கவனமாய் இருங்கள்! கதவை தாழிடுவதற்கு முன்னபே இவற்றிற்குத் தாழிடுங்கள்! இதற்கு ஒரு சரியான வழி என்ன தெரியுமா?*

---

4. இறைமறுப்பாளர்களிடம் கண்டிப்பானவர்கள் என்றால், முஸ்லிம்கள் அவர்களை வெறுப்பவர்கள் என்றோ, தனித்து வாழ்பவர்கள் என்றோ இதற்கு பொருள் அல்ல.

இது கொள்கை சார்ந்த விஷயமாகும். அதாவது, படைத்தவனை விட்டுவிட்டு படைப்பினங்களை வணங்குவதையோ, கடவுள் இல்லை எனக் கூறுவதையோ முஸ்லிம்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் எனப் பொருள்படும். ஏனெனில், முஸ்லிம் என்றால் யார் என்பதற்கு, தன் நாவாலும், கையாலும் மக்களுக்கு நன்மை செய்பவரே முஸ்லிம் என இறைத்தூதர்(ஸல்) பதில் கூறியுள்ளார்கள்.



*தூங்குவதற்கு முன் உளூச் செய்து கொள்ளுங்கள்! இதனால், மனதில் அமைதியும், உடலில் புத்துணர்வும் ஏற்படும்.*

**பராவு இப்னு ஆஸிஃப்(ரலி) அறிவித்தார்:**

*“நீ உன்னுடைய படுக்கைக்குச் செல்லும்போது தொழுகைக்குச் செய்வது போல் உளூச் செய்துகொள். பின்னர் உன் வலக்கைப் பக்கமாகச் சாய்ந்து படுத்துக்கொள். பின்னர்,*

**اللَّهُمَّ أَسْلَمْتُ وَجْهِي إِلَيْكَ وَفَوَّضْتُ أَمْرِي إِلَيْكَ وَأَلْجَأْتُ ظَهْرِي إِلَيْكَ رَغْبَةً وَرَهْبَةً إِلَيْكَ لاَ مَلْجَأَ وَلاَ مَنْجَا مِنْكَ إِلاَّ إِلَيْكَ اللَّهُمَّ آمَنْتُ بِكِتَابِكَ الَّذِي أَنْزَلْتَ وَبِنَبِيِّكَ الَّذِي أَرْسَلْتَ**

**அல்லாஹும்ம அஸ்லம்த்து வஜ்ஹீ இலைக்க. வ கவ்வள்த்து அம்ரீ இலைக்க. வ அல்ஜஃத்து ளஹ்ரீ இலைக்க. ரக்பதன் இலைக்க. லா மல்ஜஅ வலா மன்ஜா மின்க்க இல்லா இலைக்க. அல்லாஹும்ம ஆமன்த்து பிகிதாபிக்கல்லதீ அன்ஸல்த்த வ நபிய்யிக்கல்லதீ அர்ஸல்த்த.**

*“யா அல்லாஹ்! நான் என் முகத்தை உன்னிடம் ஒப்படைத்துவிட்டேன்; என்னுடைய காரியங்களை உன்னிடம் விட்டுவிட்டேன்; என் முதுகை உன் பக்கம் சாய்த்துவிட்டேன். உன்னுடைய ஆதரவை எதிர் பார்த்தவனாகவும், உன்னைப் பயந்தவனாகவும் நான் இதைச் செய்கிறேன். உன்னைவிட்டுத் தப்பிச் செல்லவும், உன்னைவிட்டு ஒதுங்கிவிடவும் உன் பக்கமே தவிர வேறு இடம் இல்லை.”*

*“யா அல்லாஹ்! நீ இறக்கிய உன் வேதத்தை நான் நம்பினேன். நீ அனுப்பிய உன் நபியையும் நம்பினேன்” எனப் பிரார்த்தித்துக் கொள். அந்த இரவில் நீ இறந்துவிட்டால் நீ தூய்மையானவனாய் ஆகிவிடுகிறாய். இப்பிரார்த்தனையை இரவின் உன் கடைசிப் பேச்சாக ஆக்கிக்கொள்” என என்னிடம் இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்*

*நான் இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் இந்தப் பிரார்த்தனையைத் திரும்ப ஓதிக்காண்பித்தேன். அப்போது ‘நீ அனுப்பிய உன் நபியையும் நம்பினேன் என்பதற்குப் பதிலாக உன் **ரஸூலையும்***

நம்பினேன் எனன் கூறினேன். உடனே, இறைத்தூதர்(ஸல்) 'இல்லை, நீ அனுப்பிய **உன் நபியை நம்பினேன்** என்று கூறு!' என எனக்குத் திருத்திக் கொடுத்தார்கள்." **நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 247**

**அபூ ஸலமா(ரஹ்) அறிவித்தார்:**

"குளிப்புக் கடமையாய் இருந்த நிலையில் இறைத்தூதர்(ஸல்) தூங்கியிருக்கிறார்களா?" என ஆயிஷா(ரலி) அவர்களிடம் நான் கேட்டேன்.

"ஆம்! ஆனால், உளூச் செய்து கொள்வார்கள்' என ஆயிஷா(ரலி) கூறினார்." **நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 286**

குளிப்புக் கடமையானால்தான் உளூச் செய்யவேண்டும் என்பதல்ல. பொதுவாகவே புத்துணர்வு பெறுவதற்கு உளூச் செய்து கொள்ளலாம். இந்த அடிப்படையில் உளூச் செய்து கொள்ளுங்கள்.

## உறவுக்கு அழைத்தால் உடன்படுங்கள்!

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

"ஒருவர் தன் மனைவியைப் படுக்கைக்கு அழைத்து, அவள் தன் கணவனுக்கு உடன்பட மறுக்கிறாள். அதன் விளைவாக கணவர் இரவைக் கோபத்துடன் கழிக்கிறார் என்றால் காலை விடியும் வரை வானவர்கள் அப்பெண்ணைச் சபித்துக் கொண்டே இருப்பார்கள்."
**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, 3237**

குடும்பத்தில் ஏற்படும் பிரச்னைகளை, தாம்பத்திய உறவில் பிரதி பலிக்காதீர்! ஆயிரம் பிரச்னைகள் இருந்தாலும் இல்லற சுகத்தில் அவை கரைந்துபோகும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்!

இல்லற சுகத்தில் இருவரும் திருப்தியுற வேண்டும்; என் வயிறு நிறைந்தால் போதும் என இருந்துவிடாதீர்! உங்கள் மனைவியின் உணர்ச்சியைத் தனிக்காமலேயே நீங்கள் இருந்து வந்தால் அதற்காக நீங்களும் இறைவனிடம் பதில் சொல்லியாக வேண்டும் என்பதை மறந்துவிடாதீர்! ஒருவருக்கு மட்டும் சுகம் கிடைப்பது இல்லறம் அல்ல; இருவரும் இன்புறுவதே இல்லறம்.

உங்கள் துணைக்கு கோடி கொடுப்பதைவிட குடும்ப வாழ்க்கையில் உச்சகட்ட சுகம் கொடுப்பதையே உங்கள் துணை விரும்புகிறாள் என்பதே உண்மை. முன்னதாகவோ பின்னரோ இல்லறத்தில்



இருவரும் சம சுகம் அடைவதே முழுமையானது. இல்லற சுகம் சரியாய் இருந்தால் மனநோய்கூட வராது.

நீங்கள் மட்டும் சுகத்தை அடைந்து கொண்டு, உங்கள் துணையைத் தவிக்கவிட்டுவிடாதீர்! இப்படி இருக்கும் குடும்பத்தில் மகிழ்ச்சியே இருக்காது. இதனால், உங்கள் துணை வழிகெடுல், அல்லது மனநோய்க்கு ஆளாகுதல், அல்லது உங்களைவிட்டுப் பிரிந்து செல்லுதல் போன்ற தீயநிகழ்வுகளுக்கு மிக அதிக வாய்ப்புள்ளது.

## நல்லசந்ததிக்காபப் பிரார்த்தியுங்கள்!

உங்கள் இருவருக்கும் நல்ல சந்ததிகள் வேண்டுமல்லவா? உங்கள் திருமணத்தின் முக்கியமான நோக்கங்களில் இதுவும் ஒன்று. குழந்தைப் பாக்கியம், இறைவன் கொடுப்பது. அது உங்கள் இருவரில் யார் கையிலும் இல்லை.

உங்களுக்கு குழந்தை பிறப்பதில் காலதாமதம் ஏற்பட்டால் கலங்கிவிடாதீர்! தெளிவாகச் சொல்வதென்றால் திருமணம் ஆன உடனே குழந்தை பெற்றுக்கொள்வோம் என்பதைவிட, கொஞ்சக் காலம் இருவரும் இல்லறத்தில் மகிழ்ச்சியாய் இருந்து பின்னர் குழந்தைகள் பெற்றுக் கொள்ளலாம். இதில் ஒன்றும் தவறில்லை. மார்க்கம் இதைத் தடுக்கவுமில்லை.

இல்லற சுகத்தை நீங்கள் இருவரும் முழுமையாகப்பெறும் காலமாக உங்களுக்கு அது இருக்கலாம்.

வீட்டில் சில பெரியவர்கள் திருமணம் ஆனவுடன் குழந்தையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் குறியாய் இருப்பார்கள். அவர்களின் எதிர்ப்பார்ப்பையும் மதிக்க வேண்டும். எனவே, அவர்களுக்கு நிதானமாகப் புரிய வையுங்கள்.

நீங்கள் குழந்தைக்கு முயன்றும் குழந்தை பிறக்கவில்லையா? அதற்கான காரணத்தைக் கண்டறியுங்கள். அவசரப்பட்டு ஒருவருக் கொருவர் வார்த்தைகளைக் கொட்டிவிடாதீர்! ஒருவருக்கொருவர் ஆறுதலான வார்த்தைகளைக் கூறிக் கொள்ளுங்கள். சிகிச்சை தேவைப்பட்டால் அதையும் மேற்கொள்ளுங்கள்.

எல்லாவற்றையும்விட குழந்தைப் பாக்கியத்திற்கு உங்கள் இறைவனைப் பிரார்த்தியுங்கள்! திருக்குர்ஆன் காட்டும் வழிமுறையும் இதுதான். இறைத்தூதர்கள் தம் முதிய வயதுத் துணையுடன் முதிய வயதிலும் குழந்தைப் பெற்றிருக்கிறார்கள்.

இந்தப் பருவத்தில்தான் குழந்தை பிறக்கும் என்பது நம் கண்டு பிடிப்பு. எந்தப் பருவத்திலும் எந்த நிலையிலும் குழந்தையைக் கொடுப்பது இறைவனின் பொறுப்பு.

**இறைவன் கூறுகிறான்:**

رَبِّ هَبْ لِي مِنْ لَدُنْكَ ذُرِّيَّةً طَيِّبَةً إِنَّكَ سَمِيعُ الدُّعَاءِ

**ரப்பீ ஹப்லீ மின்ல துன்க்க துர்ரிய்யத்தன் தய்யிபத்தன் இன்னக்க ஸமீவுத் துஆ**

*“இறைவா! உன்னிடமிருந்து பரிசுத்தமான ஒரு சந்ததியை எனக்கு அருள்வாயாக! நீயே பிரார்த்தனையைச் செவியுறுபவன்” என ஜகரிய்யா பிரார்த்தித்தார்.* **திருக்குர்ஆன் 3:38**

*ஜகரிய்யா(அலை) அவர்களின் பிரார்த்தனையை இறைவன் அங்கீகரித்து அவருக்கு வாரிசுக்கான நற்செய்தியை அறிவித்தான். அவருக்கு பெருத்த ஆச்சரியம்; ஏன் தெரியுமா? தள்ளாத வயதிலும் எனக்குக் குழந்தையா என்றுதான்.*

**இறைவன் கூறுகிறான்:**

*உம் இரட்சகன், தன் அடியார் ஜகரிய்யாவுக்கு வழங்கிய அருளை நினைவு கூர்வதாகும்.*

*அவர் தம் இரட்சகனிடம் தாழ்ந்த குரலில் பிரார்த்தித்தபோது,*

*“என் இரட்சகனே! நிச்சயமாக என் எலும்புகள் பலவீனமடைந்து விட்டன.*

*என் தலையும் நரையால் (வெண்மையாய்) இலங்குகிறது. என் இரட்சகனே! உன்னிடம் பிரார்த்தித்து நான் பாக்கியம் இல்லாத வனாய் ஆகிவிடவில்லை” என (அவர்) கூறினார்.*

*“எனக்குப் பின்னர் உறவினர்களைக் குறித்து அஞ்சவும் செய்கிறேன். என் மனைவியோ மலடாகிவிட்டாள். எனவே, நீ உன் புறத்தில் இருந்து எனக்கு ஒரு வாரிசை அளிப்பாயாக!”*

*“அவர் எனக்கு வாரிசாகவும் இருப்பார், யஃகூபின் சந்ததியினருக்கு வாரிசாகவும் இருப்பார். என் இரட்சகனே! பொருந்திக் கொள்ளப் பட்டவராகவும் அவரை ஆக்கி வைப்பாயாக!” (என்றும் பிரார்த் தித்தார்).*



*“ஜகரிய்யாவே! யஹ்யா எனும் பெயரின் ஒரு புதல்வனைக் குறித்து உமக்கு நற்செய்தி கூறுகிறோம். இதற்கு முன் இப்பெயர் பெற்றவரை நாம் படைக்கவில்லை” (என இறைவன் கூறினான்).*

*“என் இரட்சகனே! என் மனைவியோ மலடாகவும், நானோ முதுமையின் தள்ளாத பருவத்தை அடைந்திருக்கும் நிலையில் எனக்கு எவ்வாறு ஒரு மகன் உண்டாவான்?” எனக் கேட்டார்.*

*“அவ்வாறே (நடக்கும்) எனக் கூறினான். இது எனக்கு மிகவும் சுலபமானதே! முன்னர் நீர் எந்த ஒரு பொருளாகவும் இல்லாதிருந்த நிலையில் நானே உம்மைப் படைத்தேன்” என இரட்சகன் கூறினான்.*

*“என் இரட்சகனே! நீ எனக்கு ஓர் அத்தாட்சியை ஏற்படுத்துவாயாக” என வேண்டினார். “நீர் நலமாய் இருக்கும் நிலையிலேயே மூன்று நாள்கள் நீர் மக்களுடன் பேசமுடியாமல் இருப்பீர். அதுவே உமக்கு அத்தாட்சி” என (இறைவன்) கூறினான்.*

*எனவே, அவர் தொழும் இடத்தைவிட்டு வெளியே தம் சமூகத் தாரிடம் வந்தார். பின்னர் அவர்களிடம் (பேச முடியாத நிலையில்) “காலையிலும், மாலையிலும் (இறைவனைத்) துதியுங்கள்” என சைகையால் உணர்த்தினார்.* **திருக்குர்ஆன் 19:2-11**

رَبِّ هَبْ لِي مِنَ الصَّالِحِينَ

**ரப்பீ ஹப்லீ மனிஸ் ஸாலிஹீன்**

*“என் இரட்சகனே! நீ எனக்கு சிறந்தவர்களிலிருந்து ஒரு மகனைத் தந்தருள்வாயாக!” என இப்ராஹீம் பிரார்த்தித்தார்.*

**திருக்குர்ஆன் 37:100**

*அவர்களின் பிரார்த்தனையை இறைவன் அங்கீகரித்தான். முதுமை யடைந்த நிலையிலும் முதலில் இஸ்மாயீல்(அலை) அவர்களையும், இரண்டாவது இஸ்ஹாக் (அலை) அவர்களையும் வாரிசாகக் கொடுத்தான்.*

**இறைவன் கூறுகிறான்:**

*இப்ராஹீமின் கண்ணியம் மிக்க விருந்தினரின் செய்தி உமக்கு வந்ததா? அவர்கள், அவரிடம் நுழைந்தபோது,*

*“அமைதி நிலவட்டுமாக!” எனக் கூறினார்கள்.*

*“அமைதி நிலவட்டுமாக!” என அவரும் கூறினார்.*

*“இவர்கள் அறிமுகமில்லாச் சமூகத்தார்?” (இவர்கள் யாராய் இருப்பர்?” என யோசித்தார்.) எனினும், அவர் தம் குடும்பத்தாரிடம் விரைந்து, ஒரு கொழுத்த காளைக் கன்றை (சமைத்து அவர்களுக்கு விருந்தாக) கொண்டு வந்தார்.*

*அதை அவர்களின் முன்வைத்தார். (அவர்கள் அதை உண்ண வில்லை.)*

*“உண்ணமாட்டீர்களா!” எனக் கேட்டார்.*

*அவருக்கு இவர்களைக் குறித்து அச்சம் ஏற்பட்டது.*

*“அஞ்சாதீர்!” என அவர்கள் கூறினார்கள். அவருக்கு அறிவுமிக்க புதல்வருக்கான நற்செய்தியும் கூறினார்கள்.*

*இதைக் கேட்ட அவரின் மனைவி சப்தமிட்டவராய் எதிரில் வந்து, தம் முகத்தில் அடித்துக்கொண்டு, “நான் மலட்டுக் கிழவியாயிற்றே! (எனக்கு குழந்தை எவ்வாறு) எனக் கேட்டார்.*

*“இவ்வாறே உம் இரட்சகன் கூறினான். அவனே ஞானம் மிக்கவன்; நன்கறிந்தவன்” என அவர்கள் கூறினர்.* ***திருக்குர்ஆன் 51:24-30***

*இப்ராஹீம்(அலை) அவர்களின் மனைவியர் ஸாரா(அலை) மற்றும் ஹாஜிரா(அலை) அவர்களுக்கு அவர்களின் தள்ளாத வயதில்தான் இறைவன் குழந்தைப் பாக்கியத்தைக் கொடுத்தான் என்பது வியப்பான அத்தாட்சியல்லவா! எனவே, இறைவனிடம் கேளுங்கள்! அவன் எப்போது வேண்டுமானாலும் உங்களுக்கு வாரிசைக் கொடுப்பான்.[5]*

*சான் பிள்ளையானலும் ஆண்பிள்ளைதான் வேண்டும் என இருக்காதீர்! ஆண் பெண் இரண்டுமே இறைவன் கொடுப்பதுதான். இரண்டில் எதைக் கொடுத்தாலும் நன்றி செலுத்துங்கள்!*

---

5. பெர்லின்: 13 குழந்தைகளை பெற்றெடுத்த 65 வயது கொண்ட ஜெர்மன் தாய் ஒருவர் மீண்டும் நான்கு குழந்தைகளுக்கு தாயாக உள்ளார். அனிகிரிட்ரவுனிக் என்ற 65 வயதுப் பெண் ஒருவர் ஜெர்மனியில் ஆங்கில ஆசிரியராக பணி புரிந்து வருகிறார். இவருக்கு ஏற்கனவே 13 குழந்தைகள் உள்ளனர். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் கடைசி குழந்தையாக பெண் குழந்தையை பெற்றெடுத்தார். அப்பெண் குழந்தையின் விருப்பத்திற்கிணங்க மீண்டும் கர்ப்பமானார். தற்போது அவர் நான்கு குழந்தைகளை வயிற்றில் சுமந்து வருகிறார். இச்சம்பவம் ஜெர்மனி நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. காண்க:! தினமலர் 13/04/2015



***இறைவன் கூறுகிறான்:***

*வானங்கள் மற்றும் பூமியின் அதிகாரம் அல்லாஹ்வுக்கே உரியது. அவன், தான் விரும்புவதைப் படைக்கிறான்; தான் விரும்புவோருக்குப் பெண் மக்களை அளிக்கிறான்; மற்றும் தான் விரும்புவோருக்கு ஆண் மக்களை அளிக்கிறான். அல்லது அவர்களுக்கு அவன் ஆண் மக்களையும், பெண் மக்களையும் சேர்த்தும் அளிக்கிறான். தான் விரும்பியோரை மலடாகவும் ஆக்குகிறான். அவனே நன்கறிந்தவன்; ஆற்றல் மிக்கவன்.* ***திருக்குர்ஆன் 42:49,50***

*பெண் குழந்தைகளை இறைமறுப்பாளர்கள் மட்டுமே வெறுப்பார்கள்; இறைநம்பிக்கையாளர்கள் வெறுக்கவே மாட்டார்கள்.*

***இறைவன் கூறுகிறான்:***

*அவர்களில் ஒருவனுக்குப் பெண் குழந்தை குறித்த நற்செய்தி கூறப்பட்டால், கோபத்தை அடக்கி விழுங்கிய நிலையில் அவனுடைய முகம் கறுத்துவிடுகிறது. எதன் மூலம் நற்செய்தி கூறப்பட்டானோ அந்தக் கெடுதிக்காக சமூகத்தாரை விட்டும் ஒளிந்து கொள்கிறான். அதை இழிவோடு வைத்துக்கொள்வதா அல்லது அதை (உயிரோடு) மண்ணில் புதைப்பதா? (குழம்புகிறான்). அவர்கள் தீர்மானிப்பது மிகக்கெட்டது என்பதை அறிந்து கொள்ளுங்கள்!*
***திருக்குர்ஆன் 16:58, 59***

*நீங்கள் உங்கள் துணையுடன் இல்லறத்தில் ஈடுபடும் போதெல்லாம் இறைவனைப் பிரார்த்தியுங்கள்.*

**اللّٰهُمَّ جَنِّبْنِي الشَّيْطَانَ وَجَنِّبِ الشَّيْطَانَ مَا رَزَقْتَنَا**

***“பிஸ்மில்லாஹி; அல்லாஹும்ம ஜன்னிப்னிஷ் ஷைத்தான் வ ஜன்னிபிஷ் ஷைத்தான் மா ரஸக்த்தனா”***

*பொருள்: அல்லாஹ்வின் பெயரால்! இறைவா! என்னை விட்டு ஷைத்தானை விலக்கிவைப்பாயாக! எனக்கு நீ வழங்கும் குழந்தைச் செல்வத்தைவிட்டும் ஷைத்தானை விலக்கிவைப்பாயாக!’*

***இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:***

*“இவ்வாறு பிரார்த்தித்தப் பிறகு பிறக்கும் அக்குழந்தைக்கு ஒருபோதும் ஷைத்தான் தீங்கிழைப்பதில்லை.”*
***அறிவித்தவர்: இப்னு அப்பாஸ்(ரலி), நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 5165***

*பிறக்கும் குழந்தைகள் நல்லவர்களாகவும், இறைவழியில் நடப்ப வர்களாகவும் இருக்கவேண்டும் என்ற உணர்வுடன் இருங்கள்! இதற்காகவும் இறைவனைப் பிரார்த்தித்து வாருங்கள்!*

*உங்கள் துணைக்காகவும் இறைவனைப் பிரார்த்தியுங்கள்; உங்கள் சந்ததிகளுக்காகவும் இறைவனைப் பிரார்த்தியுங்கள்.*

**رَبَّنَا هَبْ لَنَا مِنْ أَزْوَاجِنَـــا وَذُرِّيَّاتِنَـــا قُـــرَّةَ أَعْيُـــنٍ**
**وَاجْعَلْنَـــا لِلْمُتَّقِـــينَ إِمَامًـــا**

***ரப்பனா ஹப்லனா மின் அஸ்(Z)வாஜினா வ துர்ரிய்யாத்தினா குர்ரத்த அயுனிவ் வஜஅல்னா லில் முத்தகீன இமாமா.***

*“எங்கள் இரட்சகனே! எங்களின் மனைவியரிடமும், எங்கள் சந்ததியரிடமும் இருந்து எங்களுக்குக் கண் குளிர்ச்சியை அளிப் பாயாக! இன்னும், பயபக்தியுடையவர்களுக்கு எங்களை வழி காட்டியாய் ஆக்கியருள்வாயாக!” என (இறைநம்பிக்கையாளர்கள்) பிரார்த்திப்பார்கள்.* ***திருக்குர்ஆன் 25:74***

## உங்கள் குழந்தைகளை நல்லவர்களாக...

*நல்லமுறையில் பிள்ளைகளைப் பெற்றெடுப்பதைப் போல், அவர்களை நன்றாக வளர்க்க வேண்டும். அதுதான் மிகமிக முக்கியமானது. அதற்கும் முறையாகத் திட்டமிடுங்கள்! உங்கள் குழந்தைகளுக்கு என்ன கல்வி கொடுக்கிறீர்களோ இல்லையோ, வாழ்க்கைக் கல்வியை நன்றாகக் கொடுக்கத் தவறாதீர்!*

*உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் கண்ணாடியாய் இருங்கள்! அவர் களையும் உங்களுக்குக் கண்ணாடியாய் ஆக்கிக் கொள்ளுங்கள்! அவர்களின் விமர்சனங்களையும் உள்வாங்குங்கள்!*

*உங்கள் பிள்ளைகள் உங்களுக்கு இவ்வுலகிலும், மரணத்திற்குப் பிறகும் உதவவேண்டும். அவர்களை நீங்கள் இறைவழியில் நல்லவர்களாக வளர்த்தால் மட்டுமே இது சாத்தியம்.*

### இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:

*மனிதன் இறந்துவிட்டால் அவனுடைய மூன்று செயல்கள் தவிர்த்து மற்றனைத்தும் தடுக்கப்பட்டுவிடுகின்றன. 1. நிலையான*



*தர்மம் 2. பயன்தரக்கூடிய கல்வி 3. அவனுக்காகப் பிரார்த்திக்கும் நல்ல பிள்ளை.*

***அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: ஸஹீஹ் முஸ்லிம் 3358***

### இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:

*கண்ணியமும் மகத்துவமும் மிக்க அல்லாஹ் தன் அடியானுக்கு சுவர்க்கத்தில் தரத்தை உயர்த்துவான். “இறைவா இது எனக்கு எப்படி கிடைத்தது?” என அந்த அடியான் கேட்பான். “உன் குழந்தை உனக் காகப் பாவமன்னிப்புக் கோரியதால்” என இறைவன் கூறுவான்.*

***அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: அஹமத் 10202***

*உங்கள் சந்ததிகளுக்கு முதலில் இஸ்லாமைத் தெளிவாகக் கற்றுக் கொடுங்கள்! இறைவனுக்கு இணைவைக்கவே கூடாது என்பதைத் தெளிவாகப் போதித்து வாருங்கள்! இறைத்தூதர்கள் தம் சந்ததி களுக்கு உபதேசித்த முறையை திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது.*

### இறைவன் கூறுகிறான்:

*இப்ராஹீமின் இரட்சகன் “வழிபடு!” என அவரிடம் கூறியபோது, “அகிலங்களின் இரட்சகனுக்கு முற்றிலும் நான் வழிபட்டேன்” என அவர் கூறினார்.*

*இதையே இப்ராஹீம் தம் சந்ததிகளுக்கும் உபதேசித்தார். யஃகூபும் (இவ்வாறே செய்தார்). என் மக்களே! உங்களுக்காக இந்த (இஸ்லாம்) மார்க்கத்தை அல்லாஹ் தேர்ந்தெடுத்துள்ளான். நீங்கள் வழிபட்ட வர்களாக (முஸ்லிம்களாக) அன்றி மரணிக்காதீர்கள் (என்றும் கூறினார்).*

*யஃகூபை மரணம் நெருங்கியபோது, (வேதக்காரர்களே!) நீங்கள் சாட்சிகளாய் இருந்தீர்களா? அப்போது அவர் தம் மக்களிடம், “எனக்குப் பின்னர் நீங்கள் எதை வணங்குவீர்கள்?” எனக் கேட்டார்.*

*“தங்களின் இரட்சகனும், தங்களின் மூதாதையர்களான இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக் ஆகியோரின் இறைவனும் ஆகிய ஒரே இறைவனையே வணங்குவோம். அவனுக்கே வழிபட்டவர்களாய் (முஸ்லிம்களாய்) இருப்போம்!” எனக் கூறினார்கள்.*

***திருக்குர்ஆன் 2:131-133***

*அறிஞர் லுக்மான்(அலை) தம் மகனுக்குக் கொடுத்த அறிவுரை கூறினார்.*

**இறைவன் கூறுகிறான்:**

*“என் அருமை மகனே! நீ அல்லாஹ்வுக்கு இணைவைக்காதே! இணைவைத்தல்தான் பெரும் அக்கிரமம் ஆகும்” என லுக்மான் தம் மகனிடம் கூறியதையும் நினைவுபடுத்துவீராக!*

**திருக்குர்ஆன் 31:13**

**இறைவன் கூறினான்:**

*“என்னருமை மகனே! (நன்மையோ, தீமையோ) அது ஒரு கடுகின் வித்தளவு எடையுள்ளதாயினும், அது கற்பாறைக்குள் இருப்பினும், அல்லது வானங்களில் இருப்பினும், அல்லது பூமிக்குள்ளே இருப்பினும் நிச்சயமாக அல்லாஹ் அதையும் (வெளியில்) கொண்டுவந்துவிடுவான். அல்லாஹ்வே நுண்ணறிவாளன்; நன்கறிபவன்” என (லுக்மான்) கூறினார்.*

*“என்னருமை மகனே! தொழுகையை நிலைநிறுத்து! நன்மையை ஏவி, தீமையைவிட்டும் (மனிதர்களை) தடுப்பாயாக! உனக்கு ஏற்படும் கஷ்டங்களைப் பொறுத்துக்கொள்! இவைதாம் வீரமிக்க செயல்களில் உள்ளவை.*

*“உன் முகத்தை மனிதர்களைவிட்டும் (பெருமையாக) திருப்பாதே! பூமியில் பெருமையாகவும் நடக்காதே! கர்வம் கொண்டு ஆணவம் கொள்வோரை அல்லாஹ் நேசிக்கவே மாட்டான்.*

*“உன் நடையில் நடுநிலையை மேற்கொள்! உன் குரலையும் தாழ்த்திக் கொள்! குரல்களில் வெறுக்கத்தக்கது கழுதையின் குரல்தான்.*

**திருக்குர்ஆன் 31:16-19**

## சுத்தமாய் இருந்து மகிழுங்கள்!

*உங்கள் துணையின் ரசனைக்கு ஏற்றவாறு உங்களை நீங்கள் அமைத்துக் கொள்ளுங்கள்! எப்போதும் சோம்பலாக இருக்காதீர்! அது உங்களை பல வகையிலும் பாதிக்கும். உங்கள் துணையின் அன்பில்கூட அது விரிசலை ஏற்படுத்திவிடலாம்.*

*புத்துணர்வுடன் இருங்கள்; அது உங்களை சுறுசுறுப்பாய் வைத்திருக்கும்; அது உங்கள் துணையிடம் அதிக அன்பைப் பெற்றுத் தரும்.*

*நன்றாகக் குளித்துக் கொள்ளுங்கள். உடலில் கெட்டவாடை வராமல் பார்த்துக் கொள்ளுங்கள்! வாயில் துர்நாற்றம் வராமல் பார்த்துக் கொள்ளுங்கள்! தனிமையில் அமர்ந்து மூக்கை நன்றாக சுத்தம் செய்துகொள்ளுங்கள்! பிறரின் முன்னிலையில் வாயிலோ, மூக்கிலோ விரலைவிட்டு வேடிக்கை காட்டாதீர்!*



*மறைவான இடங்களில் உள்ள முடிகளை அவ்வப்போது அகற்றி விடுங்கள்! சந்தனம் போன்ற நறுமணப் பொருட்களை மறைவான இடங்களில் பயன்படுத்துங்கள்! கை கால் நகங்களை அவ்வப்போது வெட்டி விரல்களை சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்!*

*தலை பறட்டையாகவும் சுருட்டையாகவும் இல்லாமல் அதை நன்றாக வாரிக்கொள்ளுங்கள். வீட்டிற்குள் இருக்கும்போது உங்கள் கணவருக்காக பூச்சூடிக் கொள்ளுங்கள். கண்களுக்கு சுர்மா இட்டுக் கொள்ளுங்கள். உடலில் நறுமனம் பூசிக் கொள்ளுங்கள்.*

*அழுக்கான, நிறம் மங்கிய, உங்கள் துணை வெறுக்கும் நிறமுள்ள ஆடைகளை முற்றிலுமாகத் தவிருங்கள். நேர்த்தியான ஆடை அணியுங்கள்! சுகாதாரத்தோடு இருந்து மகிழுங்கள்! உங்கள் துணைக்குப் பிடித்த ஆடைகளை அணியுங்கள். உங்கள் துணை வெறுக்கும் ஆடைகளைத் தவிருங்கள்.*

*படுக்கை அறையில் அணிவதற்காக உங்கள் துணைக்குப் பிடித்த பிரத்யேக ஆடைகளைத் தேர்வு செய்யுங்கள். அந்த ஆடைகளை படுக்கை அறையில் உங்கள் துணை விரும்பும்போது அணியுங்கள்!*

*மலஜலம் கழித்துவிட்டோ, குளித்துவிட்டோ வந்தால், மறைவிடங்களில் ஈரத்தைத் துடைக்காமல் விட்டுவிட்டால், துர்நாற்றம் உண்டாகும். சில நேரங்களில் அரிப்பு, புண் ஏற்படும். இது இல்லறத்திற்கு இடையூறாய் இருக்கும். இது சில நோய்களைக் கூட உண்டாக்கி விடும் அபாயமும் உள்ளது.*

*உங்கள் படுக்கை அறையையும், குளிலறையையும் ரொம்ப ரொம்ப சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்! உங்கள் மறைவிடங்களைத் துடைப்பதற்கு தனியாக ஒரு டவல் அல்லது துணியை குளிப்பறையில் வையுங்கள். முகம் துடைப்பதற்குப் பயன்படுத்தும் டவல்களில் வாடையில்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்!*

*வீட்டில் ஆங்காங்கே துணியும் பேப்பருமாய் சிதறிக்கிடக்காமல் ஒவ்வொரு பொருளையும் அதற்குரிய இருப்பிடத்தில் வையுங்கள்! இப்படி நல்ல நிலையில் உங்கள் துணை உங்களிடம் வந்தால் மகிழ்ச்சி தானாகவே வெளிப்படும். மகிழ்ச்சி மட்டுமல்ல நோய் தொற்று இல்லாமலும் வாழ்வீர்கள்.*

*சுத்தம் சுகம் தரும்; சுத்தமாய் இருப்பதைத்தான் இறைவன் விரும்புகிறான். சுத்தம் இறைநம்பிக்கையின் வெளிப்பாடு.*

**இறைவன் கூறுகிறான்:**

*...பாவங்களை விட்டு மீள்பவர்களை அல்லாஹ் உறுதியாக நேசிக்கிறான்; தூய்மையாய் இருப்போரையும் நேசிக்கிறான்.*

**திருக்குர்ஆன் 2:222**

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

*"சுத்தம் இறைநம்பிக்கையின் ஒரு பகுதியாகும்"*

*உங்களுக்கு இறைவன் கொடுத்துள்ள முடியில் தலையை நன்றாக வாரிக்கொள்ளுங்கள்! சவுரிமுடியைப் பயன்படுத்தாதீர்!*

**இப்னு உமர்(ரலி) அறிவித்தார்:**

*சவுரிமுடி வைத்துவிடும் பெண்களையும், சவுரிமுடி வைத்துக் கொள்ளும் பெண்களையும், பச்சை குத்தும் பெண்களையும், பச்சை குத்திக் கொள்ளும் பெண்களையும் இறைத்தூதர்(ஸல்) சபித்துள்ளார்கள்.* **நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, முஸ்லிம்**

## அலங்கரிக்க அவகாசம் அளியுங்கள்!

நீங்கள் வெளியூர் சென்றுவந்தால் உங்கள் துணையின் முன்பாக திடீரென போய் நிற்காதீர்! உங்களுக்காக உங்கள் துணை தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்வதற்கு அவகாசம் அளியுங்கள்! இன்றைய சூழலில் பிரச்னை இல்லை. தகவல் தொடர்பு ரொம்பவே உச்சத்தில் இருக்கிறது. எப்போது, எந்த நிமிடத்தில் நீங்கள் உங்கள் துணைக்கு முன்பாக நிற்பீர்கள் என்பதை முன் கூட்டியே தெரிவித்துவிடலாம். எனவே, உங்கள் வருகையை உங்கள் துணைக்கு கொஞ்சம் முன் கூட்டியே தெரிவித்துவிடுங்கள்!

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

*"உங்களில், நீண்ட நாள்கள் கழித்து ஊருக்குத் திரும்புவர் இரவு நேரத்தில் திடீரெனத் தம் வீட்டாரிடம் செல்ல வேண்டாம்."*

**அறிவித்தவர்: ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்(ரலி)**
**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, 5244**

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

*"நீ இரவில் ஊருக்குள் நுழைந்த கையோடு உன் மனைவியிடம் செல்லாதீர்! பிரிந்திருக்கும் பெண் சவரக்கத்தியைப் பயன்படுத்தி தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளும் வரையிலும், தலைவிரிக் கோலமாயிருக்கும் பெண் தலைவாரிக் கொள்ளும் வரையிலும் பொறுமையாய் இரு!"...*



**அறிவித்தவர்: ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்(ரலி)**
**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 5246**

பொதுவாக பெண்கள், தன் கணவன் ஊரில் இல்லாத நாள்களில் தன்னை அலங்கரித்துக் கொள்வதில்லை. இது ஒரு நல்ல பண்பு தான். அழகும் அலங்காரம் தன் துணைக்காகத் தானே தவிர, பிறருக்காக அல்ல. வெளியூர் சென்று திடீரெனத் திரும்பும் போது தன் துணையை பெருத்த அலங்காரத்தில் காணும் கணவன் மனதில் சந்தேகம்கூட வரலாம். அதுவே வேர்விட்டு மரமாகி குடும்பத்தில் பெரும் புயலை ஏற்படுத்தியும் விடலாம்.

நீண்ட பயணத்திலிருந்து திரும்புகிறவர் இரவில் திடீரென தன் வீட்டினுள் நுழைய வேண்டாம். வீடு திரும்பிய அவர் தம் வீட்டார் மீது துரோகக் குற்றச்சாட்டை வைக்கவும், குற்றங் குறைகளைக் கண்டு பிடிக்கவும் வாய்ப்பு நேர்ந்திடும் என்ற அச்சமே இதற்குக் காரணம் என இமாம் புகாரீ(ரஹ்) கருத்துக் கூறியுள்ளார்.

எனவே, வெளியூர் சென்று திரும்பும்போது நீங்கள் வீட்டிற்கு வருவதை உங்கள் துணைக்குத் தெரிவியுங்கள்.

## குழம்பாதீர்! குழப்பாதீர்!!

மனித வாழ்க்கையில் ஏதாவது ஒரு சூழலில் குழப்பம் ஏற்படுவது இயல்புதான். ஆனால், தெளிவே இல்லாமல் குழப்பத்திலேயே வாழ்க்கையைக் கழிக்காதீர்! இப்படி ஒரு நிலை நீடித்தால் குடும்பத்தில் உங்களால் நிம்மதியாய் இருக்க முடியாது. எனவே, கண்டிப்பாகக் குழப்பம் உங்கள் வாழ்க்கையிலிருந்து அகற்றப்பட வேண்டும். குழப்பத்திலிருந்து தெளிவடையும் வழியைத் தேடுங்கள்.

அதிகப்படியான தகவல்கள் அல்லது கவலைகள் பொதுவாக குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. இது எதார்த்தமாக ஏற்படும் குழப்பம்தான். இந்த வகைக் குழப்பத்தை சரிசெய்துவிடலாம். நீங்களே முன்வந்து குழப்பத்தை ஏற்படுத்தும் நபராய் இருக்காதீர்! இது ஆபத்தானது. இந்த மனநிலை உங்களிடம் இருந்தால் நீங்களாகத் திருந்தாமல் உங்களைத் திருத்த முடியாது. இதைத்தான் திருக்குர்ஆன் கண்டிக்கிறது.

"பூமியில் குழப்பம் விளைவிக்காதீர்" என நயவஞ்சகர்களிடம் கூறப்பட்டால், "நாங்களே சீர்திருத்தவாதிகள்" என்கிறார்கள்.

அறிந்து கொள்ளுங்கள்! உண்மையில் அவர்கள் குழப்பவாதிகளே. ஆனால், அவர்கள் அதை உணரமாட்டார்கள்.

**திருக்குர்ஆன் 2:11,12**

குழப்பம் விளைவித்தல் பெரும் பாவமாய் இருக்கிறது எனக் குர்ஆன் கூறுகிறது.

...குழப்பம் உண்டாக்குவது கொலையினும் கொடியது...

**திருக்குர்ஆன் 2:191**

உங்கள் துணைக்கு மட்டுமல்ல; உங்கள் வாழ்க்கையில் யாருக்குமே குழப்பத்தை ஏற்படுத்தாதீர்! இது பெரும் பாவம். இதை விட்டு விலகியே இருங்கள். குழப்பமான சூழலில் உங்கள் துணை இருந்தால் தெளிவை ஏற்படுத்துங்கள். நன்மைக்கு வழிகாட்டுங்கள்.

பொதுவாக உங்களுக்குள் ஏற்படும் குழப்பம் நான்கு வகையில்தான் இருக்கும். ஒன்று அது அழகு சார்ந்ததாய் இருக்கலாம். அல்லது பொருளாதாரம் சார்ந்ததாவோ, உறவுகள் சார்ந்ததாகவோ, சமூகம் சார்ந்ததாகவோ இருக்கலாம்.

குழப்பங்களிலிருந்து மீள்வதும் அல்லது அதிலேயே நீங்கள் வீழ்ந்துகிடப்பதும் அவற்றை நீங்கள் கையாளும் விதத்தில்தான் உள்ளது. முடிவெடுப்பதில் தெளிவாய் இருங்கள்; எடுத்த முடிவில் உறுதியாய் இருங்கள்.

ஆய்வுகளின்படிப் பார்த்தால் ஆண்களைவிட பெண்களே பெரும் குழப்பத்திற்கு ஆளாகிறார்கள். உங்களுக்கு ஒரு விஷயத்தில் குழப்பம் ஏற்பட்டால், அது என்ன? ஏன்? எப்படி? எதற்கு? எங்கே? எப்போது போன்ற கேள்விகளை எழுப்புங்கள்.

இந்தக் கேள்விகளைப் பேப்பரில் எழுதிக் கொள்ளுங்கள். நீங்கள் எழுதிய கேள்விகளுக்கு மிகமிக நேர்மையான அடிப்படையில் பதில்களை எழுதுங்கள். நீங்கள் எழுதியுள்ள கேள்விகளையும் அதற்கான பதில்களையும் பொறுமையாகப் படியுங்கள்! மறுபடியும் படியுங்கள்!! மீண்டும் படியுங்கள்!!!

ஒவ்வொரு முறைப் படிக்கும்போதும் உங்களுக்கு ஒரு தெளிவு ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். ஒரு கட்டத்தில் நீங்கள் தெளிவான நிலைக்கு வந்துவிடுவீர்கள். தெளிவான நிலைக்கு நீங்கள் வந்து விட்டால் அதை நோக்கி நகர்ந்து செல்லுங்கள்.



நல்ல குறிக்கோளை நோக்கியே நகருங்கள்; உங்களுக்குப் பின் வருவோருக்கு அது படிப்பினையுள்ள வரலாறாக அமையும். அதுதான் உங்கள் வாழ்க்கையில் நீங்கள் தேடிய வெற்றி.

உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் குழப்பத்தில் நீங்களே கேள்வியை எழுப்பி, அதற்கான விடையயும் அறிந்து தெளிவடைவதே நல்ல நிலை.

இது குழப்பம்தான் என்பதை தெளிவாக நீங்கள் அறிந்து கொண்டால், அதைப் புறந்தள்ளுங்கள்; இது ஒரு பாதுகாப்பான நிலை.

உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் குழப்பத்தை உங்களுக்கு மிகவும் நம்பகமானவரிடம் பகிர்ந்து அதற்குத் தீர்வைக் காணுங்கள். இது இயலாத இறுதிக்கட்ட நிலை. ஆனால், இதில் நீங்கள் மிகவும் கவனமாய் இருக்க வேண்டும்; பகிர்கிறேன் என்ற பெயரில் பலரிடமும் பறைசாற்றிவிடாதீர்! அது உங்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடும்.

மேற்குறிப்பிட்ட எல்லாவற்றையும் விட சிறந்த வழி ஒன்று உண்டு. அதுதான் உங்களுக்கு மிகச் சரியானதாய் இருக்கும்.

குழப்பம் ஷைத்தானிடமிருந்து வருவதாகும். தெளிவு இறைவன் உங்களுக்கு ஏற்படுத்துவதாகும். குழப்பமான நேரங்களில் இறைவனின் உதவியை நாடுங்கள். நிச்சயமாக உங்களுக்கு அவன் தெளிவை ஏற்படுத்துவான். 'இஸ்திகாரா' தொழுங்கள்.

'இஸ்திகாரா' என்றால் நல்லதைத் தேர்வு செய்வதற்காகப் பிரார்த்தித்தல் என்று பொருள்.

இஸ்திகார தொழும் முறை மற்றும் அதற்காக பிரார்த்தனை இங்கு தரப்படுகிறது; அதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

***ஜாபிர்(ரலி) அறிவித்தார்:***

*இறைத்தூதர்(ஸல்) எங்களுக்கு ஒவ்வொரு விஷயத்திலும் நல்லதைத் தேர்வு செய்வதற்காகப் பிரார்த்திக்கும் முறையை -இஸ்திகாராவை திருக்குர்ஆன் அத்தியாயங்களைக் கற்றுக் கொடுப்பதைப் போல கற்றுக் கொடுத்து வந்தார்கள்.*

*நீங்கள் ஒன்றைச் செய்ய நினைத்தால் கூடுதலான இரண்டு ரக்அத்கள் (உபரித் தொழுகை - நஃபில்) தொழுது கொள்ளுங்கள். பிறகு அல்லாஹ்விடம்,*

اللَّهُمَّ إِنِّي أَسْتَخِيرُكَ بِعِلْمِكَ وَأَسْتَقْدِرُكَ
بِقُدْرَتِكَ وَأَسْأَلُكَ مِنْ فَضْلِكَ الْعَظِيمِ فَإِنَّكَ
تَقْدِرُ وَلاَ أَقْدِرُ وَتَعْلَمُ وَلاَ أَعْلَمُ وَأَنْتَ عَلاَّمُ
الْغُيُوبِ اللَّهُمَّ إِنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هَذَا الأَمْرَ خَيْرٌ لِي
فِي دِينِي وَمَعَاشِي وَعَاقِبَةِ أَمْرِي أَوْ قَالَ فِي عَاجِلِ
أَمْرِي وَآجِلِهِ فَاقْدُرْهُ لِي وَإِنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هَذَا الأَمْرَ
شَرٌّ لِي فِي دِينِي وَمَعَاشِي وَعَاقِبَةِ أَمْرِي أَوْ قَالَ فِي
عَاجِلِ أَمْرِي وَآجِلِهِ فَاصْرِفْهُ عَنِّي وَاصْرِفْنِي عَنْهُ
وَاقْدُرْ لِي الْخَيْرَ حَيْثُ كَانَ ثُمَّ رَضِّنِي بِهِ

***அல்லாஹுˆம்ம இன்னீ அஸ்தகீருக்க பி இல்மிக்க, வ அஸ்தக்திருக்க பி குத்ரதிக்க, வ அஸ்அலுக்க மின் ஃபள்லிகல் அழீம், ஃப இன்னக்க தக்திரு வலா அக்திரு, வ தஃலமு, வலா அஃலமு, வஅன்த்த அல்லாமுல் ஃகுயூப். அல்லாஹுˆம்ம இன் குன்த்த தஃலமு அன்ன ஹாதல் அம்ர் --- கைருன் லீ ஃபீ தீனீ, வ மஆஷீ, வஆக்கிபத்தி அம்ரீ... ...ஃபக்துர்ஹுˆ லீ, வயஸ்ஸிர்ஹுˆ லீ, ஸுˆம்ம, பாரிக் லீ ஃபீஹி, வ இன் குன்த்த தஃலமு அன்ன ஹாதல் அம்ர ஷர்ருன் லீ ஃபீ தீனீ, வமஆஷீ வ ஆக்கிபதி அம்ரீ. ஃபஸ்ரிஃப்ஹுˆ அன்னீ, வஸ்ரிஃப்னீ அன்ஹுˆ, வக்துர் லியல் கைர ஹைஸுˆ கான ஸுˆம்ம ரள்ளினீ பிஹி.***

*பொருள்: இறைவா! உன் அறிவைக் கொண்டு உன்னிடம் நான் கேட்கிறேன்; உன் ஆற்றலைக் கொண்டு எனக்கு ஆற்றல் அளிக்க உன்னை வேண்டுகிறேன்; உன் மகத்தான பேரருளிலிருந்து உன்னிடம் நான் கேட்கிறேன். ஏனெனில், நீயே (ஒவ்வொன்றிலும்) ஆற்றல் பெறுகிறாய்; நான் எந்த ஆற்றலையும் பெற்றிருக்க வில்லை; நீயே (ஒவ்வொன்றையும்) நன்றாய் அறிகிறாய்; நான் எதையும் அறிந்திருக்கவில்லை; நீயே மறைவானவற்றை நன்றாய்*



*அறிந்தவன்; --- யா அல்லாஹ்! இக்காரியம் என் மார்க்கம், என் வாழ்க்கை, என் காரியத்தின் விளைவு ஆகியவற்றில் எனக்குச் சிறந்ததுதான் என நீ அறிந்தால், எனக்கு அதை ஏற்படுத்திக் கொடு; எனக்கு அதை எளிதாக்கியும் கொடு, பின்னர் எனக்கு அதில் அபிவிருத்தியையும் கொடு!*

*இக்காரியம் என் மார்க்கம், என் வாழ்க்கை, என் காரியத்தின் விளைவு ஆகியவற்றில் எனக்குத் தீமையானது என நீ அறிந்தால், என்னை விட்டும் அதைத் திருப்பிவிடு! என்னையும் அதை விட்டுத் திருப்பிவிடு!*

*இன்னும் நன்மை, அது எங்கிருப்பினும் எனக்கு ஏற்படுத்தித் தருவாயாக! பின்னர் அதையே என்னைப் பொருந்திக் கொள்ளச் செய்வாயாக!*

*எனப் பிரார்த்தித்து, "உங்கள் தேவை இன்னதெனக் குறிப்பிடுங்கள்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 6382***

ஒரு விஷயத்தில் உங்களுக்குக் குழப்பம் ஏற்பட்டிருந்தால் நீங்கள் தான் இஸ்திகாரா தொழுது அதில் தெளிவை ஏற்படுத்தும்படி, இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும். முடிவையும் நீங்கள்தான் எடுக்க வேண்டும். "எனக்கு ஏற்பட்டிருக்கும் குழப்பத்திற்காக நீ இஸ்திகாரா தொழு; முடிவை நான் எடுக்கிறேன்" என நீங்கள் யாரிடமும் முறையிட முடியாது. ஆம்; உங்கள் குழப்பம் அகன்று தெளிவடைய இறைவனைப் பிரார்த்திக்குமாறு உங்கள் துணையிடம் கேளுங்கள்.

## ஆலோசனையை உள்வாங்குங்கள்!

உங்கள் துணையின் உணர்வுகளுக்கும் முக்கியத்துவம் கொடுங்கள்! முடிவுகள் எடுக்கும்போது உங்கள் துணையுடன் கலந்து ஆலோசியுங்கள்! உங்களில் ஒருவர் மற்றவருக்கு முக்கியத்துவம் கொடுப்பது வாழ்க்கையில் ஆரோக்கியத்தை அளிக்கும்.

...ஹுˆதைபிய்யா உடன்படிக்கையின்போது இறைத்தூதர்(ஸல்) ஒப்பந்தப் பத்திரத்தை எழுதி முடித்த பின்பு தம் தோழர்களை நோக்கி, 'எழுந்து சென்று குர்பானி கொடுத்துவிட்டு தலைமுடி களைந்து கொள்ளுங்கள்'' என உத்தரவிட்டார்கள். ஆனால், அவர்களில் ஒருவர்கூட எழுந்திருக்கவில்லை. இறைத்தூதர்(ஸல்) மும்முறை கூறினார்கள். இருந்தும், அவர்களில் எவரும் எழுந்திருக்கவில்லை.

இறைத்தூதர்(ஸல்) தம் மனைவி உம்மு ஸலமா(ரலி) அவர்களிடம் சென்று மக்களிடமிருந்து தாம் சந்தித்த அதிருப்தியைச் சொன்னார்கள்.

“இறைத்தூதர் அவர்களே! தியாகப் பிராணியை அறுத்து விட்டுத் தலைமுடி களைந்து கொள்ள வேண்டும் என்பதை விரும்புகிறீர்களா? குர்பானி ஒட்டகங்களை நீங்கள் அறுத்துவிட்டு உங்கள் நாவிதரை அழைத்து, அவர் உங்கள் முடியைக் களைந்திடும் வரை அவர்களில் எவருடனும் ஒரு வார்த்தையும் பேசாதீர்” என உம்மு ஸலமா(ரலி) கூறினார்

இறைத்தூதர்(ஸல்) சென்று ஒட்டகங்களை குர்பானி கொடுத்து விட்டு, தம் நாவிதரை அழைத்துத் தலைமுடியைக் களைந்தார்கள். அதுவரை அவர்களில் எவரிடமும் இறைத்தூதர்(ஸல்) பேச வில்லை. இவற்றைக் கண்டவுடன் நபித்தோழர்களும் எழுந்து சென்று தியாகப் பிராணிகளை அறுத்து, ஒருவர் மற்றவரின் தலைமுடியைக் களையத் தொடங்கினர். ஒருவர் மற்றவரை நெரிசலால் சாகடித்து விடுவார்களோ எனும் அளவிற்குப் போட்டி போட்டுக் கொண்டு (தியாகப் பிராணிகளை அறுக்கவும் முடிகளைக் களையவும்) சென்றனர்.

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 2732**

உங்கள் துணை நல்ல ஆலோசனைகளை உங்களுக்குக் கொடுத்தால் அவற்றை ஏற்றுக் கொள்ளுங்கள்! “எனக்கே யோசன சொல்றியோ? நீ என்னடி சொல்றது? உன் வேல என்னவோ அத மட்டும் பாருடி!” போன்ற வசனங்களைப் பேசிவிடாதீர்!

உங்களைவிடச் சிறந்த இறைத்தூதர்(ஸல்) அவர்களே, தம் மனைவியிடம் ஆலோசனை கேட்டார்கள். அவர்கள் கூறிய ஆலோசனையை ஏற்றும் நடந்தார்கள்; அவர்களுக்கு அதில் சரியான தீர்வும் கிடைத்தது. இறைத்தூதர்(ஸல்) அவர்களைவிட நீங்கள் மேலானவரா? யோசியுங்கள்!

## பேசுங்கள்! பேசுவதையும் கேளுங்கள்!!

உங்கள் துணையிடம் பழைய சோகக் கதைகளைக் கிளறி மன வருத்தத்தை ஏற்படுத்தாதீர்! மகிழ்ச்சியான விஷயங்களை மனம் விட்டுப்பேசி ஆரோக்கிய வாழ்விற்கு அழைத்துச் செல்லுங்கள்!

எடுத்ததற்கெல்லாம் கோபமாகப் போசாதீர்! குடும்பத்தை இழந்துவிடுவீர். வேகமாகப் பேசாதீர்! அர்த்தத்தை இழந்து



விடுவீர். வீண் பேச்சு பேசாதீர்! வேலையை இழந்துவிடுவீர். அதிகமாகப் பேசாதீர்! அமைதியை இழந்துவிடுவீர். ஆணவமாகப் பேசாதீர்! அன்பை இழந்துவிடுவீர். எதையும் சிந்தித்து நிதானமாகப் பேசுங்கள்; சிறப்பாக வாழ்வீர்.

நாக்கு தீ போன்றது; அது ஆக்கவும் செய்யும், அழிக்கவும் செய்யும்; அதைக் கவனமாகப் பயன்படுத்துங்கள்.

உங்கள் துணையிடம் நீங்கள் மட்டும் பேசிக்கொண்டே இருக்க அவர் உம்... கொட்டவுமாய் இருக்காதீர்! உங்கள் துணை பேசுவதையும் ரசித்துக் கேளுங்கள்! சொல்வதை வேண்டா வெறுப்பாகக் கேட்காதீர்! உங்கள் துணை நல்ல விஷயங்கள் பேசினால் அவற்றை உள்வாங்குங்கள்!

அறிவு ஓர் இடத்தில் மட்டும் குவிந்து கிடப்பதில்லை; அது பரவலாக்கப்பட்டுள்ளது. உங்கள் துணையிடம் உங்களுக்குத் தெரியாத விஷயங்கள் இருக்கலாம்; நீங்கள் சிந்திக்காத கோணத்தில் உங்கள் துணை சிந்திக்கலாம். பொறுமையோடும், நம்பிக்கையோடும் செவியுறும் திறன் உங்களுக்கு நல்ல கல்வியைப் பெற்றுத் தரும்.

“இறைத்தூதர்(ஸல்) அவர்களின் மனைவி ஆயிஷா(ரலி) தமக்குத் தெரியாத ஒரு செய்தியைக் கேட்டால் அதை நன்றாகப் புரிந்து கொள்ளும் வரை மீண்டும் மீண்டும் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள்.

### இப்னு அபீ முலைக்கா(ரஹ்) அறிவித்தார்:

“மறுமையில் விசாரிக்கப்பட்டவர் தண்டிக்கப்படுவார்” என ஒருமறை இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

இதைச் செவியுற்ற ஆயிஷா(ரலி), “மிக எளிதான விசாரணையாகவே விசாரிக்கப்படுவார்’ என அல்லாஹ் (திருக்குர்ஆன் 84:08) கூறவில்லையா?” எனக் கேட்டார்.

“அது ஒருவர் செய்த செயல்களை அவருக்கு எடுத்துக் காட்டுவ தாகும். எனினும், துருவித்துருவி விசாரிக்கப்படுபவன் அழிந்து விடுவான்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 103**

குடும்ப வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் நன்றாகப் பேசி விஷயங்களைப் பரிமாறிக் கொள்வதில்தான் ஆனந்தம் இருக்கிறது.

நீங்கள் மட்டும்தான் அறிவாளி உங்கள் துணைக்கு ஒன்றுமே தெரியாது என இருப்பது உங்கள் இருவரின் நெருக்கத்தைக் குறைத்துவிடும். ஓடத்தின் இரண்டு துடுப்புகளில் எதையும் குறைவாகக் கருத முடியாது.

## மன்னியுங்கள்! மன்னிப்பு கேளுங்கள்!!

உங்கள் துணைக்கு மன்னிப்பு அளிப்பதையும், உங்கள் துணையிடம் மன்னிப்புக் கேட்பதையும் சகஜமாக எடுத்துக் கொள்ளுங்கள்! நான் மன்னிப்புக் கேட்பதா என்ற ஈகோவில் இருக்காதீர்! ஈகோ வாழ்க்கையை அழித்துவிடும். உங்கள் துணையை மன்னித்து விட்டதாகக் கூறிவிட்டு பின்பு மறுபடியும் உங்கள் துணை முன்பு செய்த தவறைச் சுட்டிக் கொண்டே இருக்காதீர்! உங்கள் துணையை மறக்காமல் நினைத்துக் கொண்டே இருப்பது மட்டும் அன்பு அல்ல. உங்கள் துணையின் தவறுகளை மன்னித்தும், மறந்தும், வெறுப்பின்றி வாழ்வதே முழுமையான அன்பு.

ஒருவர் கோபமாய் இருந்தால் மற்றவர் அமைதியாய் இருக்க வேண்டும்; அதுதான் குடும்பத்திற்கு அழகு. சண்டைக்கு சண்டை; வார்த்தைக்கு வார்த்தை என பதிலடி கொடுப்பதில் மட்டும் குறியாய் இருந்தால் குடும்பத்தின் கதி அதோகதிதான். உங்கள் துணையை நீங்கள் உதறிக் கொண்டே இருந்தால் அவளின் கண்ணீர் துளிகள் தீர்ந்து விடும்; உணர்வுகள் உறைந்துவிடும்; இதயம் இறுகிவிடும். இதே நிலை நீடித்தால் அன்புப் பரிமாற்றம் மறைந்துவிடும்.

உங்கள் இருவருக்கு இடையில் பிரிவை உண்டாக்குவதில் உங்களைச் சுற்றியுள்ள ஷைத்தான்களால் சதிவேலைகள் நடந்து கொண்டே இருக்கின்றன. இப்லீஸின் படைகள் இப்பணியை அயராது செய்து வருகின்றனர். அந்த ஜின் இன ஷைத்தான்கள் உங்கள் இருவருக்கும் இடையில் ஊசலாட்டத்தையும், மனக் கசப்பையும் உண்டாக்கி சிறிய பிரச்னையைக்கூட பெரிதாகச் சித்தரித்து பிரிவினையை ஏற்படுத்திவிடுகின்றன. சில நேரங்களில் சில தம்பதியர் தலாக் - விவகாரத்து வரைகூட போய்விடுகிறார்கள். எனவே, எச்சரிக்கையாய் இருங்கள்!

### இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:

“இப்லீஸ், தன் அரியணையை (கடல்) நீருக்கு மேல் அமைக்கிறான். பிறகு தன் படைகளை மக்களிடம் அனுப்புகிறான். அவர்களில் மிகப்பெரும் குழப்பத்தை ஏற்படுத்துகிறவனே இப்லீஸிடம் மிகவும் நெருக்கத்தைப் பெறுகிறான். அவனிடம் அவர்களில் (ஷைத்தான்களில்) ஒருவன் வந்து,

“நான் இன்னின்னவாறு செய்தேன்” எனக் கூறுவான்.

“நீ எதையும் (பெரிதாக) செய்யவில்லை” என இப்லீஸ் கூறுவான்.

பிறகு அவர்களில் மற்றொருவன் வந்து, “நான் ஒரு மனிதனுக்கும் அவனுடைய மனைவிக்கும் இடையே பிரிவை ஏற்படுத்தாமல் நான் விட்டுவைக்கவில்லை” எனக் கூறுவான்.

இப்லீஸ் அவனை தன்னருகில் அழைத்து, “நீ தான் சரியான காரியத்தைச் செய்துள்ளாய்” எனப் பாராட்டுவான்.

**அறிவித்தவர்: ஜாபிர்(ரலி), நூல்: ஸஹீஹ் முஸ்லிம் 5419**

நீங்கள் படுக்கைக்கு வந்துவிட்டால், அன்று உங்களால் யாரேனும் காயப்பட்டுள்ளாரா என்பதை நினைவு கூருங்கள்! காயப்பட்ட வரிடம் மன்னிப்புக் கோரத் தயங்காதீர்! கணவன் மனைவிக் கிடையில் காயம் ஏற்பட்டிருந்தால் ஒரு சாரி (Sorry) சொல்வதில் உங்கள் சுயமரியாதை போய்விடுமா என்ன!

நீங்கள் இருவரும் பிரிந்து, உங்கள் பிள்ளைகளையும் தவிக்கவிட்டு வேடிக்கை பார்ப்பதைவிட ஒருவருக்கொருவர் தன் தவறுகளை உணர்ந்து ஒரு சாரி (Sorry) சொல்லி அன்புடன் இணைந்து வாழ்வதில்தான் ஆனந்தம் இருக்கிறது.

உங்கள் துணையிடம் ஒரு தவறைக் காணும்போது, உங்கள் கோபத்தை உணர்த்துங்கள்! ஆனால், கோபத்தை தீயவார்த்தை களால் வெளிப்படுத்தாதீர்!

உங்கள் துணையிடம் கோபத்தில் நீங்கள் கொட்டித் தீர்க்கும் வார்த்தைகள், உயிருள்ளவரை உங்களையும் அவரையும் உள்ளத்தில் அது ஊசி போல் குத்திக் கொண்டே இருக்கும்.

வாழும் குறுகிய காலத்தில் யாரையும் வெறுக்கவேண்டாம்; அனைவரும் அன்பிற்காகத்தான் ஏங்குகிறார்கள். அன்பில் வெறுப்புகள் அகன்றுவிடுகின்றன. அன்பாய் இருங்கள் அனை வரையும் ஆளலாம்; இது ஆளுமையின் ஓர் அம்சம்.

நபி(ஸல்) அவர்களுக்கு முகம் சிவந்துவிடுவதை வைத்து அவர் களின் கோபத்தை அவர்களின் துணைகளும், தோழர்களும் அறிந்து கொள்வார்கள். தம் துணை ஆயிஷா(ரலி) கோபமாய் இருப்பதை அவர்களின் நடவடிக்கையை வைத்து நபி(ஸல்) அறிந்துவந்தார்கள்.

**ஆயிஷா(ரலி) அறிவித்தார்:**

“எப்போது நீ என்னைக் குறித்து திருப்தியுடன் இருக்கிறாய்; எப்போது நீ என் மீது கோபத்துடன் இருக்கிறாய் என்பதை நான் நன்றாகவே அறிந்து வைத்துள்ளேன்” என என்னிடம் இறைத் தூதர்(ஸல்) கூறினார்கள்.

“எப்படி நீங்கள் அறிந்துகொள்வீர்கள்?’ என நான் கேட்டேன்.

“என்னைக் குறித்து நீ திருப்தியுடன் இருக்கும்போது, ‘முஹம்மதின் இரட்சகன் மீது சத்தியமாக’ எனக் கூறுவாய்! என் மீது கோபமாய் இருந்தால், ‘இப்ராஹீம்(அலை) அவர்களின் இரட்சகன் மீது சத்தியமாக’ எனக் கூறுவாய்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

“அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஆம் (உண்மைதான்,) இறைத் தூதர் அவர்களே! ஆனால், நான் தங்களின் பெயரைத்தான் கோபித்துக் கொள்வேன்; தங்களை அல்ல” என நான் கூறினேன்.

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 5228**

உங்கள் துணையிடம் உங்கள் கோபத்தை இவ்வாறு சமிக்ஞையின் மூலம் வெளிப்படுத்தினால் போதும். வார்த்தைகளைக் கொட்டி வெளிப்படுத்த வேண்டியதில்லை. வார்த்தைகளைக் கொட்டி விடலாம்; ஆனால், அவற்றை அள்ளமுடியாது.

## மகிழ்ச்சி நதி

மகிழ்ச்சி உங்களைத் தேடி வராது. நீங்களும் மகிழ்ச்சியைத் தேடிப் போகவேண்டியதில்லை. அது நதிபோல் உங்கள் வாழ்க்கையில் ஓடிக் கொண்டே இருக்கிறது. உங்களுக்கு வேண்டிய அளவு நீங்கள் தான் அதிலிருந்து அள்ளிக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணைக்கு நீங்கள் ஆறுதல், அமைதி, மகிழ்ச்சி அளிப்ப வராய் இருக்கிறீர்கள்! அவ்வாறே உங்களுக்கு உங்கள் துணையும் இருக்கிறார். இதை நீங்கள் சரியாகப் புரிந்து கொண்டால் போதும். மகிழ்ச்சி நதியில் நீந்தலாம்.

**இறைவன் கூறுகிறான்:**

நீங்கள் ஆறுதல் பெறுவதற்குரிய மனைவியரை உங்களில் இருந்தே உங்களுக்காக இறைவன் படைத்திருப்பதும்; உங்களுக்கிடையே உவப்பையும், அன்பையும் உண்டாக்கி இருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்திக்கும் சமூகத்திற்கு இதில் நிச்சயமாக சான்றுகள் உள்ளன. **திருக்குர்ஆன் 30:21**



நிம்மதியாய் இருக்கும் நிலையில் வாழ்க்கைக் துணையைத் தேடுவதும், வாழ்க்கைத் துணை வந்த பின் நிம்மதியைத் தேடுவதும் வாழ்க்கை அல்ல. வாழ்க்கைத் துணையிடம்தான் நிம்மதியே இருக்கிறது என்கிறது திருக்குர்ஆன்.

வாழ்க்கை நதியில் நீந்திச் செல்லுங்கள்; அது உங்களுக்குப் பயன் தரும். பறக்க நினைக்காதீர்! பயன் தராது. ‘நான், நான்’ எனும் எண்ணத்தைக் கைவிடுங்கள்! அகந்தை அழிவின் அறிகுறியாகும். நிதானமாய் இருங்கள்! நிம்மதி கிடைக்கும்.

‘நான்’ என்ற அகந்தையில் வீரவசனம் பாடிய இப்லீஸின் நிலை என்ன ஆனது என்பதைப் பாருங்கள்! அவனுக்கு ஏற்பட்டது போன்ற கதி உங்களுக்கு வந்துவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்!

**இறைவன் கூறுகிறான்:**

“உனக்கு நான் கட்டளையிட்டபோது, சிரம்பணிவதிலிருந்து உன்னைத் தடுத்தது எது?” என அல்லாஹ் கேட்டான்.

“நான் அவரைவிட மேலானவன். என்னை நீ நெருப்பினால் படைத்தாய், அவரைக் களிமண்ணால் படைத்தாய்” என இப்லீஸ் கூறினான்.

“இதிலிருந்து இறங்கிவிடு! நீ பெருமையடிப்பதற்கு இங்கு இடமில்லை. எனவே, வெளியேறு! நீ சிறுமையடைந்தோரில் ஒருவனாகிவிட்டாய்” என இறைவன் கூறினான்.

“எழுப்பப்படும் நாள் - மறுமை வரை எனக்கு அவகாசம் கொடு!” என அவன் வேண்டினான்.

“அவகாசம் அளிக்கப்பட்டவர்களில் நீயும் இருக்கிறாய்” என இறைவன் கூறினான்.

“நீ என்னை வழிகெடுத்துவிட்டதால், மனிதர்களான அவர்கள், உன் நேரான வழியில் செல்வதிலிருந்து தடுப்பதற்கு நான் அமர்வேன்” என இப்லீஸ் கூறினான்.

“பின்னர் நான் அவர்களுக்கு முன்னும், பின்னும், அவர்களின் வலப்பக்கத்திலும், இடப்பக்கத்திலும் வந்து வழிகெடுத்துக் கொண்டிருப்பேன். இன்னும் அவர்களில் பெரும்பாலோரை நன்றியுள்ளவர்களாக நீ காணமாட்டாய்” என இப்லீஸ் கூறினான்.

“நீ இழிவடைந்தவனாகவும், விரட்டப்பட்டவனாகவும் இங்கிருந்து வெளியேறு! அவர்களில் உன்னைப் பின்பற்றுவோரையும்,

வழிகெடுப்பதில் ஈடுபடும் உங்கள் அனைவரையும் கொண்டு நரகத்தை நிரப்புவேன்" என இறைவன் கூறினான்.

**திருக்குர்ஆன் 7:12-18**

உங்கள் துணையை உங்களுடன் நீங்கள் ஒப்பிடும்போது 'நான்' என்ற சிந்தனையை ஷைத்தான் உங்களுக்குள் உருவாக்கிக் கொண்டே இருக்கிறான். எச்சரிக்கையாய் இருங்கள்! அவனுக்கு நீங்கள் இடம் கொடுத்தால், உங்கள் வாழ்க்கைத் துணை உங்களுக்கு அளித்துள்ள இடத்தை நீங்கள் இழக்கநேரிடும். மட்டுமின்றி மறுமையில் ஷைத்தானுடன் சேர்ந்து நரகத்தை இருப்பிடமாகவும் பெறுவீர்கள்!

இப்லீஸ் இறைவனுக்கு இணைவைக்கவில்லை; இறைவனை வணங்க மறுக்கவுமில்லை. கடவுள் இல்லை என்றும் அவன் கூறவில்லை. பெருமை கொண்டான். அதுதான் அவனை இந்த நிலைக்குத் தள்ளிவிட்டது. அறிந்து கொள்ளுங்கள்! இணைவைப்பு மற்றும் இறைமறுப்பு ஆகிய இரண்டு பெரும் பாவங்களைவிட பெருமை எந்த வகையிலும் குறைந்த பாவமில்லை.

**இறைவன் கூறுகிறான்:**

..கர்வம் மற்றும் வீண்பெருமையுடையோரை அல்லாஹ் நேசிப்பதே இல்லை.

**திருக்குர்ஆன் 4:36**

## நிகழ்கால நிஜத்தில் வாழுங்கள்!

கடந்த காலச் சிந்தனையிலேயே மூழ்கி இருக்காமல், நிகழ் கால நிஜங்களைப் புரிந்து, எதிர் காலத்தை நம்பிக்கையோடு எதிர் கொள்ளுங்கள்! வாழ்க்கையில் நிகழ்ந்த பிரச்னைகளையே நினைத்துக் கொண்டிருக்காமல் இறைவன் உங்களுக்கு விதித்துள்ள முடிவுகளை நோக்கி நகருங்கள்!

அது நடக்காது; இது நடக்காது என எதிர்மறையாக உங்கள் துணையிடம் பேசாதீர்! எதை எப்படி நடத்துவது என இருவரும் சேர்ந்து யோசியுங்கள்! எது எப்படி நடக்க வேண்டும் என்பது இறைவனுக்கு நன்றாகவே தெரியும். நடப்பது நல்லதாகவே நடக்க வேண்டும் என இருவரும் இறைவனிடம் கேளுங்கள்!

இறைவன் கொடுப்பதை யாராலும் தடுக்கமுடியாது; அவன் தடுத்து நிறுத்திவிடுவதை யாராலும் கொடுக்க முடியாது.

**இறைவன் கூறுகிறான்:**



அல்லாஹ், தான் நாடியவருக்கு செல்வத்தை அதிகமாகவும், தான் நாடியவருக்கு அளவோடும் கொடுக்கிறான். அவர்கள் இவ்வுலக வாழ்வில் மகிழ்ச்சியடைகிறார்கள். மறுமையோடு ஒப்பிட்டால் இவ்வுலக வாழ்க்கையோ மிகவும் அற்பமானதே.

**திருக்குர்ஆன் 13:26**

அறிந்து கொள்ளுங்கள்! இறைவன் உங்களுக்கு அள்ளிக் கொடுக்கிறான். கிள்ளிக் கொடுப்பதில்லை. அவன் உங்களுக்கு வழங்கியுள்ள அறிவின்படி நல்ல கருத்தை யார் முந்திச் சொன்னாலும் அதை மற்றவர் ஏற்றுக் கொள்ளுங்கள்!

பிறரின் போற்றுதலுக்காக வாழ்வது அழகல்ல. நீங்கள் நீங்களாக வாழுங்கள்! உங்களைப் படைத்த இறைவனுக்காக வாழுங்கள்! அவர்கள் போல இருக்க வேண்டும்; இவர்கள் போல இருக்க வேண்டும் என பிறரின் வேஷங்களை அணிய முற்படாதீர்!

**இறைவன் கூறுகிறான்:**

"மெய்யாக என் தொழுகையும், என் அர்ப்பணமும், என் வாழ்வும், என் மரணமும் அகிலங்களின் இரட்சகன் அல்லாஹ்வுக்கே! அவனுக்கு இணைஇல்லை; இதன் மூலமே நான் ஏவப்பட்டுள்ளேன். வழிப்பட்டவர்களில் நான் முதன்மையானவன்" எனக் கூறும்!

**திருக்குர்ஆன் 6:162,163**

உங்கள் வாழ்க்கையில் அனைத்துச் செயல்களும் இறைவனுக்காக என்றாகிவிட்டால் பிரச்னைக்கு ஏது இடம்?

## ஒப்பிட்டால் உருப்படாது

பிறருடன் உங்களை ஒப்பிட்டுப் பார்க்காதீர்! உங்களை நீங்களே பிறருடன் ஒப்பிடுவது உங்களை நீங்களே மட்டுப்படுத்துவதாகும். அவர்கள் வேறு நோக்கத்திற்காகப் படைக்கப்பட்டுள்ளார்கள். நீங்கள் வேறு நோக்கத்திற்காகப் படைக்கப்பட்டுள்ளீர்கள். இரண்டு மனிதர்களையும் ஒரே நோக்கத்திற்காக இறைவன் படைக்கவில்லை. ஆம்; நீங்கள் அனைவரும் இறைவழியில் வாழ்ந்து சுவர்க்கம் செல்வதில் மட்டும்தான் இறைவன் உங்களை ஒரே நோக்கத்தில் படைத்துள்ளான்.

உங்களையோ உங்கள் துணையையோ பிறருடன் ஒப்பீடு செய்யாதீர்! **'நான் பெஸ்ட்; நான்தான் நம்பர் ஒன்'** என்பது குடும்ப வாழ்க்கையில் இருக்கவே கூடாது. **'நாமே பெஸ்ட்; நாமே நம்பர் ஒன்'** என வாழ்க்கைத் துணையை உங்களுடன் இழுத்துச்

செல்லுங்கள்! **'நாமே' என்பதும்கூட தன்னம்பிக்கைக்காக இருக்கவேண்டுமே தவிர தலைக்கனத்திற்காக அல்ல.**

அவர் மீசை என்ன? ஆசை என்ன? அழகு என்ன? திறமை என்ன என்பது போல, பிறரின் பெருமையை உங்கள் துணையிடம் பேசாதீர்! விமர்சன வார்த்தைகளால்கூட பிற ஆண்களை உங்கள் துணையின் கண்களுக்கு முன்பாக நிறுத்தாதீர்! பெரும்பாலான நேரங்களில் இது அசிங்கத்தை உண்டாக்கிவிடும்.

அவள் அழகு என்ன? அவள் உடல் அமைப்பு என்ன என பிற பெண்கள் குறித்து அவர்களை உங்கள் கணவர் நேரில் பார்ப்பது போல வருணிக்காதீர்! இது உங்கள் வாழ்க்கைக்கு வேட்டு வைத்துவிடும்.

பொதுவாகவே உங்கள் துணையிடம் யாருடைய பெருமையையும் பேசாதீர்! அதை அவர்களால் ஏற்றுக் கொள்ளமுடியாது.

இறைத்தூதர்(ஸல்) தம் மனைவி கதீஜா(ரலி) குறித்து தம் இன்னொரு மனைவி ஆயிஷா(ரலி) அவர்களிடம் புகழ்ந்து பேசியதை அவர்களால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. அவர்களுக்கு ரோஷம்தான் வந்தது என்றால் பாருங்களேன்.

**ஆயிஷா(ரலி) அறிவித்தார்:**

கதீஜா(ரலி) அவர்களின் மீது நான் ரோஷப்பட்டதைப் போல இறைத்தூதர்(ஸல்) அவர்களின் மற்ற மனைவியர் யார் மீதும் நான் ரோஷப்பட்டதில்லை. ஏனெனில், இறைத்தூதர்(ஸல்) கதீஜாவை அதிகமாக நினைவுகூர்ந்து, அவரை (அடிக்கடி) புகழ்ந்து பேசிவந்தார்கள். கதீஜா அவர்களுக்கென சுவர்க்கத்தில் முத்து மாளிகை ஒன்று கொடுக்கப்படும் என அவருக்கு நற்செய்தி கூறும்படி இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு 'இறைச்செய்தி'கூட அறிவிக்கப்பட்டிருந்தது.

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 5229**

## ஒளிவு மறைவு ஏன்?

சூரிய ஒளியைப் போல வெளிச்சமானது உண்மை; அதை உங்களால் மூடி மறைக்க முடியாது! உங்கள் துணையுடன் பொய்யான, ஒளிவு மறைவான, குழப்பமான, சுயநலமான வாழ்க்கை வாழாதீர்! வெளிப்படையான, உண்மையான, பிரச்னைகளில் தீர்வைத்தேடும்படியான வாழ்க்கை வாழுங்கள்.



பொய்யை விட்டு விரண்டோடுங்கள்; உண்மையிடம் அடைக்கலம் தேடுங்கள்; பலத்தோடும் சுகத்தோடும் இருப்பீர்கள். ஆனால், உள்நோக்கம் கெட்டதாய் இருக்கும் நிலையில் உண்மையை வெளிப்படுத்தாதீர்! அது ஆயிரம் பொய்களைவிட மோசமானது!

உங்கள் துணைக்கு நீங்கள் கண்ணாடியாய் இருங்கள்! உங்கள் துணையை உங்களுக்குக் கண்ணாடியாய் ஆக்கிக் கொள்ளுங்கள்!

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

"இறைநம்பிக்கையாளர் இறைநம்பிக்கையாளருக்கு கண்ணாடி."

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: அபூ தாவூத்**

கண்ணாடியின் உதாரணம் ஏன் தெரியுமா? கண்ணாடி உண்மை மட்டுமே சொல்லும்; அதையும் நேரடியாகவே சொல்லும். தெளிவாகவும் சொல்லும். அச்சமின்றியும் சொல்லும்; அது எதையும் மறைக்காது. நீங்கள் உங்கள் துணைக்குக் கண்ணாடியாய் இருங்கள்! உங்கள் துணையை உங்களுக்குக் கண்ணாடியாய் ஆக்கிக் கொள்ளுங்கள்![6]

## உடல் நலமே மன நலம்!

உடல் நலமாய் இருந்தால்தான் மனமும் நலமாய் இருக்கமுடியும். உங்கள் திட்டங்களையும், கனவுகளையும் நீங்கள் நனவாக்குவதற்கு உங்கள் உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளுங்கள்!

உங்கள் துணையின் உடல் ஆரோக்கியத்திலும் அக்கறை செலுத்துங்கள்! உடல் ஆரோக்கியமாய் இல்லை என்றால் உங்கள் துணைக்கு ஆற்றவேண்டிய கடமை மட்டுமல்ல, இறைவனுக்கு செய்ய வேண்டிய தொழுகை போன்ற வணக்க வழிபாடுகளைகூட உங்களால் சரிவரச் செய்யமுடியாது.

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

"உடல் ஆரோக்கியமுள்ள இறைநம்பிக்கையாளர், உடல் ஆரோக்கியம் குறைந்த நம்பிக்கையாளரைவிட அல்லாஹ்வின் அன்பிற்குரியவர், சிறந்தவர்." **நூல்: முஸ்லிம்**

அறிவுக் கூர்மைக்கு உங்கள் உள்ளத்தில் அமைதியும் திறனும் இருக்கவேண்டும். இதற்கு உடல் நலம் மிகவும் முக்கியமானது.

6. மேல் விபரங்களுக்கு இந்நூலாசிரியரின் 'கண்ணாடியாய் இருங்கள்!' எனும் தலைப்பில் வெளிவந்துள்ள நூலைக் காண்க!

உடல் நலமாய் இருக்கும்போதுதான் தன்னம்பிக்கையும் உண்டாகும். இதற்கு ஆரோக்கியமான உணவும் அதற்கேற்ற உடல் உழைப்பும் முக்கியமானது. உங்களால் முடிந்தளவு சின்ன சின்ன உடற்பயிற்சிகளைச் செய்யலாம். உடற்பயிற்சியின்போது எண்டோர்பின்ஸ் ***(Endorphins)*** சுரக்கிறது. இதனால் மனம் புத்துணர்வு அடைகிறது. கணவன் மனைவிக்கிடையில் பிரச்னைகள் உருவாவதை ஒருவகையில் இதுவும் தடுத்துவிடுகிறது.

உடல் ஆரோக்கியத்திற்கு ஓய்வெடுப்பதும் முக்கியம். ஓய்வில்லா உடல் நோய்களின் கூடாரமாகிவிடும். ஓய்வின்றி உழைக்க முற்படாதீர்! உங்கள் துணை ஓய்வின்றி உழைப்பதில் உடன்படாதீர்!

மன அமைதியும் பக்குவமும் உங்களிடம் இருக்க வேண்டும். **அறிவு அச்சத்தை முறிக்கும் அருமருந்து; உங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்!** இதற்காக உங்கள் பணிச்சுமைகளுக்கு இடையில் சற்று நேரத்தை ஒதுக்கி நாள்தோறும் உங்களுக்குப் பிடித்த புத்தகங்களை வாசியுங்கள்!

நல்ல புத்தகங்கள் உங்களுக்கு நல்ல சொத்தாகும். நல்ல புத்தகங்களை விரைவில் படித்துவிடுங்கள்! ஏனெனில் அவற்றைப் படிக்க உங்களுக்கு வாய்ப்பே இல்லாமலும் போய்விடலாம்!

திருக்குர்ஆனை நீங்கள் அறிந்த மொழியில் படியுங்கள்! அரபு மொழியில் வாசிக்கத் தெரிந்தால் தினமும் வாசியுங்கள்! இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு, ஹதீஸ் தொகுப்பு நூல்கள் படியுங்கள்! வரலாற்றுப் புத்தகங்கள் படியுங்கள்! படித்ததை வைத்து படிப்பினை பெறுங்கள்! நல்ல எழுத்தாளர்களின் அரிய தொகுப்புகளைப் படியுங்கள்!

வீட்டில் இருக்கும் சிறுவர்களுக்குத் தேவையான நல்ல புத்தகங்களைத் தேர்வு செய்து அவர்களுக்கும் படிக்கக் கொடுங்கள்! புத்தகக் கடைகளுக்குச் சென்று நல்ல புத்தகங்களைத் தேர்வு செய்வதற்கு நேரம் ஒதுக்குங்கள்!

நல்ல காரியங்கள் செய்வதை வழமையாக்கிக் கொள்ளுங்கள்! உங்கள் பசுமையான நினைவுகளை அசைபோடுங்கள்! இப்படி உங்கள் வாழ்க்கையை நீங்கள் அமைத்துக் கொண்டால் உங்கள் துணையுடன் துணை நின்று இனிப்பான வாழ்க்கை வாழலாம்.



## உங்கள் துணையுடன் உல்லாசமாய் இருங்கள்!

உங்கள் துணையை வீட்டுக்குள்ளேயே வைத்திருக்காதீர்! மைன்ட் டைவர்ஷன் ***(Mind Diversion)*** அவர்களுக்கு வேண்டும். எனவே, உங்கள் துணையோடு சிலநேரங்களில் சுற்றுலாச் செல்லுங்கள். உங்கள் துணையை மகிழ்விப்பதற்காக உங்களால் இயன்ற பரிசுகளை வாங்கிக் கொடுங்கள்! நீங்கள் வெளியூருக்குச் செல்லும்போது வாய்ப்பு இருந்தால் உங்கள் துணையையும் உடன் அழைத்துச் செல்லுங்கள்!

### ஆயிஷா(ரலி) அறிவித்தார்:

இறைத்தூதர்(ஸல்) பயணம் செய்ய விரும்பினால் தம் மனைவியருக்கு இடையே சீட்டுக் குலுக்கிப் போடுவார்கள். குலுக்கலில் இடம் பெறும் தம் துணையை தம்முடன் அழைத்துக் கொண்டு புறப்படுவார்கள்... **நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 2593**

உங்கள் துணையுடன் நீங்கள் செல்லும் பகுதிகளில் அங்கு மட்டும் கிடைக்கும் அரிய பொருட்கள் ஏதேனும் இருப்பின் நினைவார்த்தமாக அதை உங்கள் துணைக்கு வாங்கிக் கொடுங்கள்! உங்கள் துணையின் உள்ளம் மகிழும். நீங்கள் தனியாக வெளியூர் சென்று வந்தால் உங்கள் துணைக்காக ஏதேனும் வாங்கிக் கொண்டு வாருங்கள். உங்கள் துணையின் மீது நீங்கள் கொண்டுள்ள அன்பு உங்கள் துணைக்குப் புரியும்.

## உறவைக் காத்துக் கொள்ளுங்கள்!

உங்கள் துணைக்கும் உங்களுக்கும் இடையில் விரிசல் ஏற்படுவது பெரும்பாலும் உறவுகள் விஷயத்தில் இருக்கும். மனஉறுத்தலுடன் உறவுகள் இணைவைதைத் தவிர்த்து உள்ளார்ந்த அன்புடன் உள்ளங்களை இணைத்திடுங்கள். உங்கள் இறைவன் காட்டித் தந்த முறைப்படி இரத்தபந்துக்களுடன் நீங்கள் வாழ்ந்தால் இம்மையிலும் மறுமையிலும் வாழ்க்கை இனிக்கும்.

உங்கள் துணையின் மனதில் பல ஆசைகள் உள்ளன. அவற்றில் உங்களால் நிறைவேற்ற முடிந்தவற்றை நிறைவேற்றுங்கள்! தான் பிறந்த வீட்டிற்கு தன் கணவனோடு போகவேண்டும் என்ற ஆசை பெண்களுக்கு இருக்கத்தான் செய்யும்.

“என் மாமனார் இருக்கும் வீட்டுப் பக்கம்கூட நான் போகமட்டேன்” என கௌரவம் பேசாதீர்!

உங்கள் துணை தன் பெற்றோர், உடன் பிறந்தோருடன் உறவாடுவதற்கு நீங்கள் தடையாய் இருக்காதீர்! முடிந்தால் அவர்களுடன் நீங்களும் சென்று வாருங்கள்! எத்தனை உறவுகள் மண்ணில் இருந்தாலும் பெற்றோரின் உறவுக்கு ஈடாகாது; எத்தனை நட்புகள் மண்ணில் இருந்தாலும் கணவன் மனைவி நட்புக்கு ஈடாகாது. நீங்கள் குழந்தைப் பருவத்தில் அமைதியாய் உறங்கியது உங்கள் அன்னையின் மடியில்; இப்போது நீங்கள் அமைதியாய் உறங்குவது உங்கள் துணையின் நெஞ்சுக்குழியில்.

தாய்க்கும் தாரத்திற்கும் இடையில் தராசாய் இருங்கள்!

வேதனையின் மேல் வேதனையில் துடித்து நின்றவர்.

அவ்வேதனையில் தன்னையே மறந்து உங்களை இவ்வுலகில் இறக்கிவிட்டவர்.

கொடிய அவ்வேதனையிலிருந்து விடுபட்டாலும், இன்னும் பல வேதனைகளில் சிக்கியவர்.

உங்களுக்காக பல துன்பங்களை விரும்பி ஏற்றவர்.

பல இரவுகள் தன் தூக்கத்தை இழந்து உங்களைத் தூங்கவைத்தவர்.

எட்டி உதைத்த உங்கள் பாதங்களை முத்தமிட்டவர்.

ஈ எறும்புகூட உங்களை நெருங்காமல் பாதுகாத்து வந்தவர்.

தன் உதிரத்தை அமுதாக்கி, உங்களுக்குப் புகட்டியவர்.

உங்கள் உடல் நலத்திற்காக தன் வாயையும் வயிற்றையும் கட்டுப்படுத்திக் கொண்டவர்.

அப்போதுதான் அவர் சாப்பாட்டைத் தம் வாயில் எடுத்து வைத்தார். ஆனால், நீங்கள் மலஜலம் கழித்துவிட்டீர். விரைந்து வந்து உங்களைச் சுத்தப்படுத்தியவர்.

'வீல்' என்ற உங்கள் குரல் கேட்ட போதெல்லாம் ஓடோடிவந்து உங்களைத் தம் மார்போடு அணைத்துக் கொண்டவர்.

உங்களை அலங்கரித்து அழகு பாத்தவர்.

உங்களுக்கு பேசக் கற்றுக் கொடுத்தவர்.

திக்கித்திக்கிப் பேசிய உங்கள் மழலை மொழியை கேட்டு மகிழ்ந்தவர்.



உங்களை நடக்க வைத்து ரசித்தவர்.

உங்கள் வாழ்கையை அலங்கரித்து அழகு பார்த்தவர்.

உங்களின் ஒவ்வோர் அசைவையும் பார்த்து, ரசித்து, சிரித்து மகிழ்ந்தவர்.

உங்களையே உலகமாக நினைத்து வாழ்ந்தவர்.

யார் அவர் எனக் கேட்கிறீர்களா?

ஆம், உங்களைப் பெற்றெடுத்த தாய். அந்தத் தாயின் அன்பை இழந்துவிடாதீர்! அந்தத் தாயின் வெறுப்பில் வாழாதீர்! அந்த அன்னையின் காலடியில் சுவர்க்கத்தைத் தேடுங்கள்!

உங்கள் தாய் குறித்துச் சொல்வதற்கு இவை மட்டுமா? இன்னும் இருக்கின்றன ஏராளம்! உங்களை உங்கள் தாய் கருவில் சுமந்த போது அவர் பட்ட கஷ்டங்கள் உங்களுக்கு நினைவிருக்காது.

இன்று கருவுற்றிருக்கும் உங்கள் மனைவியைப் பார்த்து அய்யோ பாவம்! அய்யோ பாவம்!! எனத் துடிக்கிறீர். உங்கள் தாய் உங்களை கருவில் சுமந்தபோது இப்படித்தானே சிரமப்பட்டார்.

நீங்கள் கருவில் இருந்தபோது உங்கள் தாயை என்ன பாடுபடுத்தினீர் என்பது உங்களுக்கு நினைவிருக்க வாய்ப்பில்லை.

கருவுற்றிருக்கும் உங்கள் மனைவியைப் பாருங்கள்! பாவம் என்ன பாடுபடுகிறார். நேற்று வரை ஷாப்பிங் ஹோட்டல் என உங்களுடன் சுற்றிக் கொண்டு விரும்பிய உணவுகளை எல்லாம் வாங்கி வயிற்றில் போட்டு நிரப்பி வந்தார். ஆனால், இன்று எதைச் சாப்பிட்டாலும் உவ்வா… வாந்தி, மயக்கம், தலைச் சுற்று நிம்மதியே இல்லாமல் தவிக்கிறார்.

உங்கள் துணையைப் பார்த்துப் பார்த்து வருந்துகிறீர்கள். மருத்துவமனைக்கும் வீட்டிற்குமாய் அலைகிறீர்கள். அப்பப்பா ஒரு குழந்தையைக் கருவில் சுமப்பது இவ்வளவு சிரமமா? ஓர் உடலில் இன்னொரு உயிர் குடியேறியதால் எவ்வளவு பிரச்னைகள்?

அந்தக் குழந்தை முழுமையான மனித உருவம் பெற்று இந்த மண்ணில் குதிக்கும் வரை உங்கள் துணையால் நிம்மதியாய் உறங்கக் கூட முடிவதில்லை. இவற்றையெல்லாம் பார்த்துக் கலங்கிக் கொண்டே இருக்கிறீர்கள்.

இப்படித்தானே உங்கள் தாயும் உங்களைச் சுமந்து கஷ்டப்பட்டு பெற்றெடுத்தார். அதை நினைத்து நீங்கள் கலங்குதில்லையே ஏன்?

**இறைவன் கூறுகிறான்:**

*மனிதனுக்கு அவனுடைய பெற்றோர் குறித்து போதித்தோம். அவனுடைய தாய் பலவீனத்தின் மேல் பலவீனப்பட்டவளாக அவனை (கர்ப்பத்தில்) சுமந்தாள்; அவன் விலகுதலுக்கு (பால்குடி மறக்க) இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. எனவே, நீ எனக்கும் உன் பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக! மீளுதல் என்னிடமே இருக்கிறது.*

*இன்னும், எதைப்பற்றி உனக்கு அறிவில்லையோ அதை எனக்கு இணைவைக்குமாறு உன்னை அவர்கள் இருவரும் வற்புறுத்தினால் அவர்கள் இருவருக்கும் கட்டுப்படாதே! ஆனால், உலக வாழ்க்கையில் அவர்கள் இருவருடனும் நல்ல காரியங்களில் சேர்ந்திரு! என்னை நோக்கி நிற்போரின் வழியைப் பின்பற்று! பின்னர் உங்கள் மீளுதலும் என்னிடமே உள்ளது. நீங்கள் செய்து கொண்டிருந்ததை குறித்து அப்போது உங்களுக்கு அறிவிப்பேன்.*

***திருக்குர்ஆன் 31:14, 15.***

இஸ்லாமிய வாழ்க்கை நெறிக்கு மாற்றமாக வாழும்படி உங்கள் பெற்றோர் உங்களைத் தூண்டினாலோ, ஏவினாலோ அதற்கு மட்டும் உடன்படாதீர்! உலக வாழ்க்கையில், அவர்களுக்குத் தேவையான வசகதிகளை இறைவனுக்கு மாற்றமில்லாத வகையில் செய்துகொடுங்கள்! இது உங்கள் கடமையாகும்.

இப்போது நீங்கள் சிறியதொரு பரிசோதனை செய்து பாருங்கள்! உங்களைக் கருவில் சுமந்து உங்கள் தாய் பட்ட கஷ்டம் கொஞ்சமாவது புரியும்.

ஆம், மூன்று கிலோ எடையுள்ள ஒரு கல்லை எடுத்துக் கொள்ளுங்கள்! அதை உங்கள் அடிவயிற்றில் கட்டிக் கொள்ளுங்கள்! எக்காரணம் கொண்டும் உங்கள் உடலை விட்டு நீங்கள் அதைப் பிரிக்கவே கூடாது.

தூங்கும்போதும், நடக்கும்போதும், என்ன வேலை செய்தாலும் அதைக் கட்டியே வைத்திருக்க வேண்டும். குறைந்தது நான்கு மாதங்களாவது நீங்கள் இப்படியே இருந்தாக வேண்டும்.

செய்து பாருங்களேன்! உங்களால் இப்படி ஒரு வாழ்க்கை வாழமுடியுமா? இதற்கு நீங்கள் சம்மதிப்பீர்களா?

இப்போது யோசியுங்கள்! உங்கள் தாய் உங்களைப் பெற்றெடுப்பதற்காகப் பட்ட கஷ்டம் உங்களுக்குப் புரிந்துவிடும்.



அந்தத் தாயை உங்களால் எப்படி வெறுக்கமுடிகிறது? அந்தத் தாயிடம் தகாத வார்த்தைகள் பேசும் துணிச்சல் உங்களுக்கு எங்கிருந்து வந்தது?

நீங்கள்தாம் நன்றியுள்ளவரோ! நன்றிக்கு உங்கள் அகராதியில் இதுதான் அர்த்தமோ!

இப்படித்தான் அன்று உங்கள் தாயும் உங்களைக் கருவில் சுமந்த போது படாத பாடுபட்டார். அதை ஒரு நிமிடம் நினைத்துப் பாருங்கள்! மனைவிக்காக உருகிய உங்கள் உள்ளம் உங்கள் தாய்க்காக எத்தனை முறை உருகியது? எண்ணிப்பாருங்கள்!

உங்கள் வீட்டில் நீங்கள் வளர்க்கும் செல்லப்பிராணியிடம் காட்டும் அன்பைக் கூட உங்களால் உங்கள் தாயிடம் காட்ட முடியவில்லை என்றால் நீங்கள் நன்றியுள்ளவரா? **நண்பேன்டா... அவனுக்காக நான் உயிரைக்கூட தருவேன்டா...** என டயலாக் பேசுவதில் ஒன்றும் குறைச்சல் இல்லை. உங்கள் உயிருக்கு உயிரான தாய்க்காக நீங்கள் எதைக் கொடுத்தீர்? எதைக் கொடுக்கப்போகிறீர்? அவர் உங்களிடம் எதிர்பார்ப்பது அன்பான வார்த்தைகளும், ஆறுதலான சொற்களும் தானே. அதைக்கூடவா உங்களால் அவருக்கு வழங்க முடியாது.

உங்கள் பெற்றோருக்கு நீங்கள் பட்டிருக்கும் கடனை உங்களால் அடைக்கவே முடியாது. உங்கள் பெற்றோர் தள்ளாத வயதை அடைந்து குழந்தைக் குணம் கொண்டவர்களாய் ***(Childhood)*** இருக்கும்போது, உங்கள் குழந்தைகளை நீங்கள் கவனிப்பது போலவே கவனியுங்கள்! குறை ஏதும் வைத்துவிடாதீர்!

**இறைவன் கூறுகிறான்:**

*அவனைத் தவிர (எவரையும்) வணங்காதீர் என்றும், பெற்றோருக்கு நன்மை செய்வதையும் உம் இரட்சகன் விதித்துள்ளான்.*

*அவ்விருவரில் ஒருவரோ, இருவருமோ முதுமையடைந்துவிட்டால், அவர்களை 'சீ..' என்றும் சொல்லாதீர் அவ்விருவரையும் விரட்டியும் விடாதீர். அவ்விருவரிடமும் கண்ணியமான பேச்சையே பேசும்!"*

*இரக்கம் கொண்டு பணிவு என்னும் சிறகுகளை அவ்விருவருக்காகத் தாழ்த்தவும் செய்வீராக!*

*''என் இரட்சகனே! நான் சிறு பிள்ளையாய் இருந்தபோது, அவர்கள் இருவரும் என்னை (பரிவோடு) வளர்த்ததுபோல்,*

நீயும் அவர்கள் இருவருக்கும் கிருபை செய்வாயாக!" என்றும் பிரார்த்திப்பீராக!

உங்களின் உள்ளங்களில் (இவர்களைக் குறித்து) இருப்பதை உங்கள் இரட்சகன் நன்கறிவான். நீங்கள் நல்லவர்களாய் இருந்தால், நிச்சயமாக மன்னிப்புக் கோருவோரை அவன் அதிகம் மன்னிப்பவன்.

**திருக்குர்ஆன்17:23**

அவர்கள் உங்களை எவ்வளவு வெறுத்தாலும் அவர்களை நீங்கள் வெறுக்காதீர்! அதற்கான உரிமை உங்களுக்கு இல்லை. தகாத வார்த்தைகளால் அவர்களை கொன்றுவிடாதீர்! உங்கள் பெற்றோருக்கு உங்கள் அன்பைத் தவிர வேறு எதுவும் உபகாரமாய் இருக்க முடியாது.

உங்கள் உயிருக்கு உயிரான தாயைவிட நேற்றுவந்த உறவான மனைவி உங்களுக்கு மேலாகிவிட்டாரா? தாயுக்கும் தாரத்திற்கு இடையிலான வெவ்வேறான அன்பைப் பிரித்துப் பாருங்கள்! இரண்டையும் ஒன்றாகப் போட்டுக் கொண்டு இருவரையும் குழப்பாதீர்.

பெற்றோரின் உறவு என்றுமே தடைபடாத உறவாகும். ஆனால், மனைவியின் உறவு அப்படியல்ல; **இன்றைக்கு உங்களுக்குப் பொண்டாட்டி, நாளைக்கு வேறு ஒருவனுக்குப் பொண்டாட்டி** என்னடா இப்படி கொச்சையாய் இருக்கிறது என நினைக்காதீர்!

ஒரு மனிதன் தன் மனைவியைத் தலாக் - விவாகரத்து விடலாம். தாயின் உறவை மாற்றியமைக்க முடியுமா? ஒரு பெண் தன் கணவனை விவாகரத்துச் செய்துவிடலாம். தாய் தன் மகன் உறவை மாற்றியமைக்க முடியுமா? ஒருவன் இறந்த பின்பு அவனுடைய மனைவி மறுமணம் செய்து கொள்ளலாம். அது அவளின் சுய உரிமை. மகன் இறந்த பின்பு ஒரு தாய் வேறு ஒருவனை மகனாகவே ஆக்க முடியுமா?

இதைத்தான் இன்றைக்கு உங்களுக்குப் பொண்டாட்டி நாளை வேறு ஒருவனுக்கு பொண்டாட்டி என நான் குறித்தேன். அதற்காக சந்தேகக் கண்ணாடியை அணிந்து கொண்டு உங்கள் துணையைப் பார்க்க முற்படாதீர்! வாழ்வின் எதார்த்த நிலையைத் தான் நான் குறிக்கிறேன்.

ஆனால், சிலர் தம் பெற்றோருக்கு அளிக்கும் பரிசுகள், கண்ணீரும் கவலையும்தான். வாயைப்பொத்து, மூடு என்ற வசைபாடல்கள்



ஒரு பக்கம். இந்த அளவிற்கு நன்றி கெட்டவனாக ஒரு மனிதன் இருக்கவே கூடாது.

உங்கள் கணவரை நன்றியுள்ளவராக நீங்கள் பார்க்க வேண்டுமா? அல்லது நன்றிகெட்டவராகத்தான் பார்க்க வேண்டுமா என்பதை மகளிரே! நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்! அவ்வாறே உங்கள் கணவர் மீது இறைவனின் அருள் இறங்க வேண்டுமா? அல்லது இறைவனின் கோபம் இறங்க வேண்டுமா என்பதையும் நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்! ஏனெனில், உங்கள் கணவர் தம் பெற்றோருக்கே நன்றிகெட்டு இருக்கையில், உங்களிடம் எப்படி நன்றியுடனும், முழுமையான அன்புடனும் இருக்க முடியும்? யோசியுங்கள்!

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

இறைவனின் மகிழ்ச்சி தந்தையின் மகிழ்ச்சியில் இருக்கிறது; இறைவனின் கோபம் தந்தையின் கோபத்தில் இருக்கிறது.

**அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர்(ரலி), நூல்: திர்மிதீ 1821**

உங்கள் கணவரை உங்கள் மாமனார் மாமியாரிடம் அன்பாக இருக்கச் செய்யுங்கள். இல்லை என்றால் அல்லாஹ்வின் கோபம் அவர் மீது இறங்கிக் கொண்டே இருக்கும். உங்கள் கணவர் மீது அல்லாஹ்வின் கோபம் இறங்கினால் நீங்கள் எப்படி அவருடன் ஆனந்தமான வாழ்க்கை வாழமுடியும்? யோசியுங்கள்! இறைவனின் கோபத்தில் உங்களுக்கும் பங்கிருக்கத்தான் செய்யும்.

**அனஸ்(ரலி) அறிவித்தார்.**

இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் பெரும் பாவங்கள் குறித்துக் கேட்கப்பட்டது.

"அல்லாஹ்வுக்கு இணை வைத்தல், பெற்றோரைத் துன்புறுத்துதல், தற்கொலை செய்துகொள்ளுதல், பொய்சாட்சி அளித்தல்" எனக் கூறினார்கள். **நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 2653**

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

"அன்னையரைத் துன்புறுத்துதல், (பிறர் உரிமையை) கொடுக்க மறுத்தல், (பிறரின் உரிமைத் தனக்காக) வேண்டுதல், பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்தல் ஆகியவற்றை அல்லாஹ் தடைசெய்துள்ளான்..."

**அறிவித்தவர்: முஙீரா இப்னு ஷுஅபா(ரலி),**
**நூல்: நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 5975**

பெற்றோரைத் துன்புறுத்தி உங்கள் கணவர் பெரும் பாவியாக மாறுவதை நீங்கள் விரும்புகிறீர்களா? மறுமையில் உங்கள் கணவர் இறைவனின் தண்டனைக்குள்ளாவதைப் பார்த்து ரசிக்கப் போகிறீர்களா? அது எப்படி முடியும் என நீங்கள் நினைத்தால், உங்களுக்கு என்ன உரிமைகள் உங்கள் கணவரிடம் இருக்கிறதோ அவற்றை மட்டும் எதிர்பாருங்கள்! தேவையில்லாமல் உங்கள் கணவரை நீங்களே வழிகெடுத்து நரகத்தில் தள்ளிவிடாதீர்!

உங்கள் மனைவி உங்கள் அன்பைப் பெறுவதில், உங்கள் தாயுடன் போட்டி போட்டால், அதை அனுமதிக்காதீர். ஏனெனில், தாயைவிடச் சிறந்தவர் உலகில் யாருமே இல்லை என தன் மகனுக்குப் போதிக்கும் ஒரு பெண், தன் கணவனுக்கும் அதைப் போதிக்க மறக்கலாமா? இது ஒரு தலைப்பட்சம் இல்லையா?

உங்கள் பெற்றோர், உடன் பிறந்தோரை உங்கள் துணை துண்டிக்கச் செய்தால், அதை அனுமதிக்காதீர்! உங்கள் தாய் உங்களைத் தன் வயிற்றில் பத்து மாதங்கள் சுமந்து, வேதனையின் மீது வேதனையில் உங்களைப் பெற்றெடுத்து, தன் உதிரத்தை அமுதாக்கி உங்களுக்கு ஊட்டி வளர்த்து, உங்களை இந்த உலகில் மனிதனாய் ஆக்கியதை மறந்துவிடாதீர்!

உங்கள் பெற்றோரை கஷ்டப்படுத்தாதீர்! உங்கள் தாய் உங்களைப் பெற்றெடுத்தபோது வேதனையால் அழுதார்; அது அவருக்கு இன்பமான வேதனை. ஆனால், இன்று உங்களைப் பெற்றதற்காக இதயத்தில் வலியோடு இன்று அழுகிறார். அது கொடிய வேதனை. இரண்டு அழுகைக்கும் உள்ள வித்தியாசத்தை உணருங்கள்!

உங்கள் தந்தை உங்களுக்காகப்பட்ட கஷ்டங்களை உங்களால் நினைத்துப் பார்க்க முடிகிறதா?

உங்களை ஒரு முழுமையான மனிதனாக, அறிவாளியாக, படித்த மேதையாக, தொழில் அதிபராக உருவாக்கியதை என்றாவது நினைத்துப் பார்த்தீரா?

உங்களுக்குப் பிடித்த உணவு வகைகளை நீங்கள் ருசிப்பதற்காக அவரிடம் கேட்டு அடம்பிடித்தது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?

விலை உயர்ந்த சில ஆடைகளை நீங்கள் விரும்பித் தேர்வு செய்து, இதுதான் வேண்டும் என அடம்பிடித்தீர்களே, அது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?



என்ன கஷ்டப்பட்டாலும் நீங்கள் விரும்பிக்கேட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு உங்கள் தந்தை வாங்கிக் கொடுத்து ரசித்துவந்தாரே, அது உங்களுக்கு நினைவிருக்கிறதா?

உங்களை நல்ல பள்ளியில் சேர்ப்பதற்காக பல மணி நேரம் உங்கள் தந்தை காத்துக்கிடந்து கால்கள் வீங்கிய நிலையில் வீட்டிற்குத் திரும்பியது உங்களுக்கு நினைவிருக்கிறதா?

நீங்கள் படிப்பதற்கு இலட்சம் இலட்சமாக கல்லூரியில் பணம் செலுத்தினார். உங்களின் தகாத செயலால் கல்லூரி நிர்வாகம் உங்கள் தந்தையை நிற்கவைத்துக் கேள்விகள் கேட்டபோது, கைளைக் கட்டிக் கொண்டு, எல்லாவற்றையும் சகித்து, உங்களுக் காகவே வாழ்ந்தாரே, அது நினைவிருக்கிறதா?

இரவு பகல் பாராது, அயராது வேலை செய்துவந்தார். அவர் சரியாகத் தூங்கியதில்லை. நாளை வீட்டுச் செலவிற்கு என்ன செய்யலாம் என்ற கவலையிலேயே பல நாள்களைக் கழித்தார். செய்த வேலைக்குக் கூலி வாங்குவதற்காக தன் முதலாளியின் வீட்டு வாசலில் காத்துக்கிடந்த காலங்கள் எத்தனை? அது உங்களுக்குத் தெரியுமா?

தான் விற்பனை செய்த பொருட்களுக்கு பணம் வாங்க அலைந்து அலைந்து நொந்துபோன காலங்கள் எத்தனை? அது உங்களுக்குத் தெரியுமா?

வாழ்க்கையே போராட்டம். இவற்றையெல்லாம் அவர் யாருக்காகச் செய்தார்? உங்கள் அன்னைக்காகவும், உங்களுக்காகவும் தானே?

வளர்ந்து வரும் உங்கள் மகனுக்காக எவ்வாறெல்லாம் சிரமங்களை நீங்கள் எதிர்கொள்கிறீர்கள் என்பதை இப்போது நீங்கள் அறிந்தப் பின்புமா உங்கள் தந்தை உங்களுக்காகப்பட்ட கஷ்டங்களை உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை?

உங்களை வாழவைப்பதற்காகவே உங்கள் தந்தை தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துவிட்டார். இன்று அவர் தள்ளாத வயதை அடைந்துவிட்டார். சோர்ந்து காணப்படுகிறார். முன்பு போல் இப்போது அவரால் இயங்க முடியவில்லை. அவர் இயங்கி இயங்கி உங்களை இயக்கிவிட்டார். இன்று நீங்கள் இயங்கிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், அவருக்காக இயங்க இன்று யாருமே இல்லையா? என்ன கொடுமை இது!

என் வாழ்க்கையில் நடந்தேறிய சில நிகழ்வுகள் இது போன்ற தருணங்களில் சொல்லப்பட வேண்டும் என நான் கருதுகிறேன்.

எனக்கு நான்கு தம்பிகள், கடைசியாக ஒரு தங்கை. நாங்கள் மொத்தம் ஆறு பேர். இப்போது எல்லோருக்கும் திருமணம் ஆகி குழந்தை குட்டிகள் என மகிழ்ச்சியாக வாழ்கிறோம். இன்று நாங்கள் ஒரு சிறு கிராமம். இந்தக் கிராமத்தை உருவாக்க எம் பெற்றோர் பட்ட கஷ்டங்களை எம்மால் மறக்க முடியவில்லை. அப்படி மறந்தால் நாங்கள் நன்றி கெட்டவர்கள். அந்தக் காலத்தில் இஸ்லாமிய அறிவு என்பது எங்கள் குடும்பத்தைப் பொறுத்த வரையில் ஒரு தானிய அளவுகூட இல்லை. எம் பெற்றோருக்கு தமிழில் கொஞ்சமாக எழுதப்படிக்க மட்டுமே தெரியும். கல்வியிலும் பொருளாதாரத்திலும் பெரும் பூஜ்யம்.

அப்போது எனக்கு வயது சுமார் 7 இருக்கும். எங்கள் குடும்பத்தின் பொருளாதார நிலை இன்று போல் அன்றில்லை. பல நாட்களில் மூன்று நேரமும் வயிறு நிரம்ப நாங்கள் சாப்பிட்டதில்லை. வறுமை யிலும் வறுமை, ஒரு சோற்றுப் பருக்கைக்காக அதை யார் எடுத்து சாப்பிடுவது என்பதில் நானும் எனக்கடுத்த என் தம்பியும் சண்டை போட்டு உருண்டிருக்கிறோம்.

ஒரு நாள் இரவு நாங்கள் அனைவரும் பட்டினி! எங்களால் பசியைத் தாங்க முடியவில்லை. சமைத்துச் சாப்பிட வீட்டில் எதுவுமே இல்லை. அரிசி வியாபாரம் செய்யும் எம் தந்தையின் நண்பர் ஒருவர் எங்கள் வீட்டைக் கடந்து சென்றார். நானும் எம் தந்தையும் வீட்டிற்கு வெளியில் சோகமாக அமர்ந்திருந்ததைப் பார்த்தார். விசயத்தை அறிந்த அவர், அன்று இரவு 12 மணிக்கு தன்னுடன் ரைஸ் மில்லிற்கு தம்முடன் எங்களை அழைத்து சென்று ஒரு பை நிரம்ப அரிசியை அள்ளிக் கொடுத்தார். அதை நாங்கள் வீட்டிற்குக் கொண்டு வந்தோம். என் தாய் அதை கஞ்சியாக சமைத்துக் கொடுத்தார். நாங்கள் பசியாறிப் படுத்துறங்கினோம்.

இப்படி சில நிகழ்வுகள் இன்னும் என் நினைவைவிட்டு அகன்று போகவில்லை. என்னால் அவற்றை எப்படி மறக்கமுடியும்? இன்று நான் எவ்வளவுதான் வசதியாகச் சாப்பிட்டாலும், பலநேரங்களில் சாப்பிட உட்காரும் போதெல்லாம் இந்த நிகழ்வுகள் என் மனதில் நிழலாடுகின்றன. சில இரவுகளில் எம் பெற்றொருடன் நான் தனித்திருந்தால், கடந்த காலங்களில் காயப்பட்ட நிகழ்வுகள் குறித்து பேசுவதுண்டு. பொதுவாகவே அந்தக் காலகட்டத்தில் அதிகமான குடும்பங்கள் வறுமையில் வாடின.



எம் பெற்றோருக்கு இறைவன் அளித்த அருளால் அதற்குப் பிறகு நிலைமை சற்று மாறியது. சம்பாதித்தார்கள். சொத்துக்கள் வாங்கினார்கள். பின்னர் சில காரணங்களால் சொத்துக்கள் கைவிட்டுப் போனது என நிலைமை மாறிமாறி வந்து சென்றது. எப்படியோ, அந்த வறுமையிலும் எம் பெற்றோர் எங்களை வளர்த்து இன்று ஒரு கிராமம் போல் ஆக்கிவிட்டார்கள். இதுதான் எம் பெற்றோர் எமக்கு அளித்த வெற்றி. இந்த வெற்றியைத்தான் நாங்கள் கொண்டாடுகிறோம். கொண்டாட்டம் என்பது எம் பெற்றொரைக் நாங்கள் கவனிப்பதாகும். நாங்கள் இறைவனுக்கும் பெற்றோருக்கும் நன்றி செலுத்துகிறோம்.

இன்று வயதான உங்கள் தந்தையைப் பார்த்தால் உங்களுக்கு இளக்காரமாய் இருக்கலாம். ஒரு காலத்தில் அவரைப் பார்த்தாலே பயத்தில் நடுங்கிய நீங்கள் இன்று, **"அந்த பெருசு கிடக்குது; அதுக்கு வேற வேலையில்லை. பேசாம கொடுக்கிறத தின்னுட்டுப் படுத்துத் தூங்கச் சொல்லு!"** என்றெல்லாம் டயலாக் பேசிவிடுகிறீர்கள்.

உங்களில் சிலர் தம் பெற்றொருக்கு மருத்துவம்கூட பார்ப்பதில்லையாம். "இந்தக் கிழவன் செத்துத் தொலையமாட்டானா?" என்று கூட பேசிவிடுகிறீர்களாம். இப்படி ஒரு செய்தி எம் செவிக்கு எட்டினாலே இதயத்தில் வலி ஏற்படுகிறது.

உங்களைப் பிரிந்து உங்கள் பெற்றோர் பசியிலும், மருத்துவம்கூட பார்க்க இயலாத நிலையிலும், வாடிவதங்கிக் கொண்டிருக்கும் போது, உங்கள் துணையுடன் உல்லாசமாக உங்களால் எப்படி வாழமுடிகிறதோ?

கொஞ்சம் நிதானமாக யோசியுங்கள்! நீங்கள் இப்படி இருந்தால், உண்மையிலேயே நீங்கள் நன்றியுள்ளவரா?

இல்லை; இல்லை. என் பெற்றோர் துயரப்படவே கூடாது. அதை என்னால் ஒருபோதும் தாங்கிக்கொள்ள முடியாது. நான் சிறுவனாக இருந்தபோது, அவர்கள் எனக்காக எப்படியெல்லாம் கஷ்டப்பட்டார்கள். என்னை எப்படியெல்லாம் வளர்த்தார்கள்! ஆம், அவர்கள் எனக்காகவே வாழ்ந்தார்கள். அவர்கள் என்னை எப்படியெல்லாம் தாலாட்டி, பரிவோடு, சீராக வளர்த்தார்கள்.

இன்று அவர்களை குழந்தைகளாகவே நான் பார்க்கிறேன். அவர்களைத் துன்புறுத்தாமல் என்னால் இயன்றளவுக்கு நன்றியுடன் சேவை செய்கிறேன் என்ற மனநிலைக்கும், செயல்பாட்டிற்கும்

வாருங்கள்! அப்படிச் செய்யுங்கால் மட்டுமே இறைவன் உங்களுக்கு இம்மையிலும், மறுமையிலும் வெற்றியைத் தருவான்.

**இறைவன் கூறுகிறான்:**

...நன்றி செலுத்துபவன் தனக்காகவே நன்றி செலுத்துகிறான்....

**திருக்குர்ஆன் 31:12**

இறைவனுக்கு நீங்கள் நன்றி செலுத்தினாலும், உங்கள் பெற்றோருக்கு நன்றி செலுத்தினாலும், அது உங்களுக்கே நீங்கள் நன்றி செலுத்துகிறீர்கள் என்பதை உணருங்கள்! உங்கள் பெற்றோர் உயிருடன் வாழும்போதே அவர்களின் இதயத்தில் இடம்பிடித்துக் கொள்ளுங்கள்! எச்சரிக்கை! தக்க தருணத்தில் இதை உணராமல் போவோர்க்கு இம்மை மறுமை வாழ்க்கை உதவாமல்போகும்.

எந்த உறவையும் நீங்கள் துண்டிக்காமல் இருங்கள்! உறவுகளைத் துண்டிப்பது இறைவனைத் துண்டிப்பதாகும்.

**இறைவன் கூறுகிறான்:**

...நீங்கள் முன்னிறுத்தி ஒருவருக்கொருவர் உரிமைகளை கேட்டுக் கொள்ளும் அந்த அல்லாஹ்வையும், இரத்த பந்துக்களின் உறவை முறிப்பதையும் அஞ்சுங்கள்! நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாய் இருக்கிறான். **திருக்குர்ஆன் 4:1**

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“அல்லாஹ் படைப்புகளைப் படைத்து முடித்தபோது, உறவு எழுந்து அன்பாளன் அல்லாஹ்வுடைய அரியணையின் கால்களில் ஒன்றைப் பற்றிப்பிடித்தது.

“என்ன?” என அல்லாஹ் கேட்டான்.

“உறவுகளைத் துண்டிப்பதிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோரி நிற்கிறேன்” என உறவு கூறியது.

“உன்னைப் பேணி நல்ல முறையில் நடந்துகொள்பவருடன் நானும் நல்லமுறையில் நடந்துகொள்வேன் என்பதும், உன்னைத் துண்டித்து விடுகிறவரை நானும் துண்டித்துவிடுவேன் என்பதும் உனக்குத் திருப்தி அளிக்கவில்லையா?” என அல்லாஹ் கேட்டான்.

“ஆம் என் இறைவா!” என உறவு கூறியது.

‘இது (அவ்வாறே) நடக்கும்” என அல்லாஹ் கூறினான்.

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 4830**



உறவுகளை துண்டிப்பதில் உங்கள் துணையை நிர்ப்பந்திக்காதீர்! உங்கள் உறவுகளையோ, உங்கள் துணையின் உறவுகளையோ நீங்களும் துண்டிக்காதீர்!

வானவில் ஏழு வர்ணங்களைக் கொண்டது. அது வானத்திற்கு அழகு சேர்க்கிறது. உங்கள் வாழ்க்கையில் நெருக்கமான ஏழு உறவுகள் உள்ளன.

1. தாயின் உறவு
2. தந்தையின் உறவு
3. தாய் வழி உறவுகள்
4. தந்தை வழி உறவுகள்
5. சகோதர சகோதரி உறவு
6. மனைவியின் உறவு
7. நீங்கள் பெற்ற பிள்ளைகளின் உறவு

ஆகிய ஏழு உறவுகள் உள்ளன. இவை பிரிக்க முடியாதவை. இந்த ஏழு உறவுகளைப் பேணி நீங்கள் உங்கள் வாழ்க்கைக்கு அழகு சேருங்கள்!

உங்கள் துணையின் பெற்றோர் வீட்டுக்கு சில நேரங்களில் சென்று வாருங்கள்! உண்மையிலேயே உங்களால் நேரம் ஒதுக்கிப் போக முடியவில்லை என்றால் குறைந்த பட்சம் தொலைபேசியின் மூலமாவது நலம் விசாரியுங்கள்!

இப்பண்பு உங்களுக்கும் அவர்களுக்கும் இடையில் அன்பை வளர்க்கும். உங்கள் உறவுக்காரர் உங்களை வெறுத்தாலும் நீங்கள் அவர்களை வெறுக்காதீர்! திருமணப் பந்தத்தால் வந்த உறவுதானே என ஏளனமாகப் பார்க்காதீர்!

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

‘‘செழிப்பான உணவும், நீண்ட ஆயுளும் வேண்டும் என விரும்புவோர், தம் உறவினர்களுடன் சேர்ந்து வாழட்டும்.”

**அறிவித்தவர்: அனஸ்(ரலி), நூல்: அபூ தாவூத் 1693**

உங்கள் ஆயுள் நீடிப்பதை நீங்கள் வெறுப்பீர்களா?

விரும்புகிறீர்கள் தானே!

உங்கள் துணையின் ஆயுளும் நீட்டிக்கப்படவேண்டும் என விரும்புகிறீர்கள் தானே! நீங்கள் இருவரும் உங்கள் இரு தரப்பு உறவுளையும் பேணுங்கள்! நீடித்து வாழ்வீர்கள்!

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“நானே ரஹ்மான் - அளவற்ற அருளாளன்; இது ரஹிம் - இரத்த பந்தம் ஆகும். என் பெயரிலிருந்தே சொந்த, பந்தத்தை குறிக்க ரஹிம் என்ற வார்த்தையை உருவாக்கினேன். எனவே, சொந்த பந்துக்களுடன் சேர்ந்து வாழ்கிறவருடன் நான் சேர்ந்திருப்பேன். உறவைத் துண்டித்து கொள்பவரை நானும் துண்டித்துவிடுவேன்' என அல்லாஹ் கூறுகிறான்.”

**அறிவித்தவர்: அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப்(ரலி), நூல்: அபூ தாவூத் 1694**

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“சொந்த பந்த உறவைத் துண்டிப்பவர் சுவனத்திற்குள் நுழைய மாட்டார்.”

**அறிவித்தவர்: ஜுபைர் இப்னு முத்யிம்(ரலி), நூல்: அபூ தாவூத் 1696**

நீங்கள் உங்கள் துணையின் மீது மிகவும் அன்பு வைத்துள்ளீர்கள். “கண்ணே! கணியே! முத்தே! அமுதே! அருகே வா” என்றெல்லாம் உங்கள் துணையை நீங்கள் கொஞ்சுகிறீர்கள். உங்கள் துணைக்கு ஒன்று என்றால் துடித்துவிடுகிறீர்கள். உங்கள் துணை உறவுகளை முறித்தமைக்காக நாளை நரகநெருப்பில் அவரை இறைவன் போட்டுவிடுவானே அதை எப்படித் தாங்கிக் கொள்வீர்கள்? சற்று யோசித்துச் செயல்படுங்கள்!

நாளை மறுமையில் நீங்களும் உங்கள் துணையும் சுவர்க்கத்திற்கு கண் இமைக்கும் நேரத்திற்குள் மின்னல் வேகத்தில் போகவேண்டும். இதற்காக நீங்கள் செய்யவேண்டியது இரத்தபந்துக்களுடன் இணக்கமாக வாழ்வது. இதை ஏன் சரியாகவும் முறையாகவும் நீங்கள் செய்யக் கூடாது? யோசியுங்கள்!

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“...நரகத்தின் மீதுள்ள பாலத்தை நம்பிக்கையாளர்கள் கடந்து செல்லும்போது, அதன் இரண்டு ஓரங்களிலும் வலமும் இடமுமாக நம்பகத்தன்மையும், இரத்தபந்த உறவும் நின்றுகொள்ளும். அப்போது உங்களில் முதல் அணியினர் மின்னலைப் போல அதைக் கடந்துசெல்வார்கள்...”

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: ஸஹீஹ் முஸ்லிம் 329**

பதிலுக்குப் பதில் உறவாடாதீர்! உறவாடுவதில் நீங்கள் முந்திச் செல்லுங்கள். உங்கள் உறவினர் உறவுகளைத் துண்டித்தபோதிலும் நீங்கள் அவர்களுடன் உறவாடுங்கள்!



**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“பதிலுக்கு பதில் உறவாடுகிறவர் உறவைப் பேணுகிறவர் அல்லர்; மாறாக உறவு முறிந்தாலும் அந்த உறவுடன் இணைகிறவரே உறவைப் பேணுபவர்.”

**அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர்(ரலி)**
**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 5991, அபூ தாவூத் 1697**

எனக்கு நீ ஏதாவது நல்லது செய்தால் மட்டுமே நானும் உனக்கு நல்லது செய்வேன் என்ற மனநிலையில் உறவுகளை அணுகாதீர்! நல்லதை நீங்கள் முந்திச் செய்யுங்கள்!

இந்த உலகமே உங்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால், நீங்கள் நன்மை செய்யும்போது இந்த உலகம் உங்களை கவனிக்காது; நீங்கள் தீமை செய்தால் மட்டுமே இந்த உலகம் உங்களை விமர்சிக்கும்.

உங்கள் உறவுக்காரர்களை மதிப்பதும் அவர்களுடன் அன்பாக உறவாடுவதும் இறைவனின் கட்டளை என்பதை உங்கள் துணைக்கு உணர்த்துங்கள்! ‘‘மனைவி சொல்லே மந்திரம்’’ என நீங்கள் இருக்காதீர்! உங்கள் துணை வெறுப்பவர்களை நீங்களும் வெறுப்பவர்களாய் இருக்காதீர்! உங்கள் துணை பிரியத்துடன் இருக்கும் உறவினர்களிடம் மட்டும்தான் நீங்களும் பிரியத்துடன் இருக்க வேண்டும் என நினைக்காதீர்! உண்மையில் இது நடிப்புதானே? வாழ்க்கையில் நீங்கள் ஏன் நடிக்க வேண்டும்? நீங்கள் உண்மையாக வாழுங்கள்! உங்களை உங்கள் துணை இதுபோன்ற விஷயங்களில் வயப்படுத்தினால் உடன்படாதீர்! இது தவறு என உங்கள் துணைக்கு எடுத்துரையுங்கள்! கண்ணாடி வளையலைப் பொன்னாகக் கருதி பெண்ணாசையால் மண்ணாக வேண்டாம்.

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“...அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் தம் இரத்தபந்த உறவுகளைப் பேணி வாழட்டும்...”

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 6138**

நீங்களும் உங்கள் துணையும் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்புகிறீர்களா என்பதை சீர்தூக்கிப் பார்த்துக் கொள்ளுங்கள்!

## துணையின் திருப்திக்காக

இறைவனின் திருப்தியில் வாழுங்கள்! இதற்கு மாற்றமாக உங்கள் துணையின் திருப்திக்காக வாழாதீர்! இறைவனின் திருப்திக்காக வாழும்போதுதான் உங்களால் நியாயமாகவும், உண்மையாகவும் வாழமுடியும்.

உங்கள் துணைக்காக இறைச்சட்டங்களில் மாறுசெய்யாதீர்! உங்கள் துணை உங்களை நிர்ப்பந்தித்தாலும் அதற்கு உடன்படாதீர்! நீங்கள் நீதிமானாக இருந்தால்தான் உங்கள் துணையின் உரிமைகளைக்கூட உங்களால் முழுமையாக வழங்கமுடியும்.

**ஆயிஷா(ரலி) அறிவித்தார்:**

"தம் மனைவி ஸைனப் பின்த் ஜஹ்ஷ்(ரலி) அவர்களிடம் தேன் சாப்பிட்டுவிட்டு, அங்கு சற்று அதிகநேரம் தங்கும் வழக்கம் இறைத்தூதர்(ஸல்) அவர்களுக்கு இருந்தது. அவர்களின் மனைவியரான எனக்கும் ஹஃப்ஸாவுக்கும் இது பிடிக்கவில்லை. எனவே, இறைத்தூதர்(ஸல்) தேன் சாப்பிட்ட பின், நம்மில் யாரிடம் முதலில் வந்தாலும் இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் "கருவேலம் பிசின் சாப்பிட்டீர்களா? உங்களிடமிருந்து, பிசினின் கெட்டவாடை வருகிறதே" எனக் கூற வேண்டும் என நாங்கள் கூடிப் பேசிக் கொண்டோம்.

வழக்கம் போல் ஸைனபின் வீட்டிலிருந்து தேன் சாப்பிட்டு விட்டு, இறைத்தூதர்(ஸல்) வந்தபோது நாங்கள் பேசிக் கொண்டபடியே கூறினோம்.

'இல்லை; ஸைனப் பின்த் ஜஹ்ஷிடம் நான் தேன் குடித்துவிட்டுத்தான் வந்தேன். இனி எப்போதும் நான் தேன் குடிக்கமாட்டேன்; நான் சத்தியமும் செய்துவிட்டேன்' என்றும், 'இது குறித்து யாரிடமும் தெரிவிக்காதே!' என்றும் இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

'எங்களின் இச்செயலைக் கண்டித்துத்தான் திருக்குர்ஆனில், **'தூதரே! உம் மனைவியரின் திருப்தியை நாடியவராக, அல்லாஹ் உமக்கு அனுமதித்துள்ளதை ஏன் விலக்கிக் கொண்டீர்? மேலும், அல்லாஹ் மிக்கமன்னிப்பவன்; நிகரற்ற அன்பாளன்'** என்னும் 66:1 வது வசனம் அருளப்பட்டது."

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 4912**

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**



"பெண்களைத் திருப்தியுறச் செய்வதற்காக எதையும் செய்யத் துணிகிற ஆண்களுக்கு, பெண்களைவிட அதிகமாய் இடரளிக்கும் வேறு எந்தச் சோதனையையும் எனக்குப் பிறகு நான் விட்டுச் செல்லவில்லை."

**அறிவித்தவர்: உஸாமா இப்னு ஸைத்(ரலி), நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 5096**

உங்கள் துணையின் திருப்திக்காக உங்கள் உறவுக்காரர்களில் ஒருவரை வெறுக்கவோ விரும்பவோ செய்யாதீர்! இறைவனின் திருப்திக்காக மட்டுமே ஒருவரை நேசியுங்கள்! இறைவனின் பொருத்தத்திற்காகவே ஒருவரை வெறுங்கள்!

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

"1. அல்லாஹ்வையும் அவன் தூதரையும் ஒருவர் மற்ற அனைத்தையும் விட அதிகமாக நேசித்தல்,
2. ஒருவர் மற்றவரை அல்லாஹ்வுக்காகவே நேசித்தல்,
3. நெருப்பில் வீசப்படுவதை வெறுப்பதுபோல இறைமறுப்புக்குத் திரும்பிச் செல்வதை வெறுத்தல்,

ஆகிய இம்மூன்று பண்புகளைப் பெற்றவர் இறைநம்பிக்கையின் சுவையை அடைந்தவராவார்."

**அறிவித்தவர்: அனஸ்(ரலி) நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 16**

காரணமே இல்லாமல் ஒருவரை வெறுப்பதும், காரணமே இல்லாமல் ஒருவரை அளவுகடந்து நேசிப்பதும் இறைநம்பிக்கையாளரின் பண்பு அல்ல.

## பிறந்த வீட்டு உபதேசம்

**"உன் புருஷன உன் கைக்குள் போட்டுக்கோ! முறுக்கா இரு! மிடுக்காத் திரி"** போன்ற பிறந்த வீட்டின் உபதேசங்களை புகுந்த வீட்டிற்குள் கொண்டு செல்லாதீர்! அதைத் தூக்கித் தூரமாக எறிந்துவிடுங்கள்! நச்சுப் பொருட்களை விதைத்தால் நஞ்சுதான் வளரும். உங்கள் காதில் விதைத்த அந்த விஷ விதை வேர்விட்டு மரமாகி விஷத்தைக் கக்கிக் கொண்டே இருக்கும். உங்கள் புகுந்த வீட்டை மட்டுமல்ல, உங்களையும் சேர்த்தே இந்த விஷம் தாக்கும். இது தற்கொலையினும் கொடியது.

உங்களால் எல்லாக் காலங்களிலும் உங்கள் துணையிடம் நடித்துக் கொண்டே இருக்கமுடியாது. நீங்கள் இப்படியே இருந்தால் உங்கள் துணையிடம் உங்கள் மீது காலமெல்லாம் காதல் வாழாது. ஒரு கட்டத்தில் நீங்கள் உங்கள் துணையையே இழக்கவும் நேரிடலாம்.

நீங்கள் பிறருக்குக் குழிதோண்டினால், அது உங்களுக்கும்தான் என்பதை மறக்காதீர்! நீங்கள் நல்லவராய் இருங்கள்! அதை நிரூபிக்க முயலாதீர்! அது முட்டாள்தனமாகும். உங்களை நல்லவராகக் காட்டிக் கொள்ள பிறரைக் கெட்டவராக சித்தரிக் காதீர்! உங்களின் இந்த வேடம் நீண்ட நாள் நீடிக்காது. நீங்கள் நல்லவர் என்பதை தூய எண்ணத்துடன் கூடிய உங்கள் நற் செயல்களே நிரூபிக்க வேண்டும்.

உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு இலவசமாக கிடைப்பது ஆலோசனைகள் மட்டுமே. ஆலோசகரையும், ஆலோசனையையும் சரிவர அறியாமல் அதில் வீழ்ந்துவிடாதீர்!

பிறந்த வீட்டின் தவறான வழிகாட்டுதல்களை ஏற்று வாழ்க்கையைத் தொலைத்த பெண்கள் ஏராளம். உங்களுக்காக உங்கள் துணை வாழும்போது நீங்கள் உங்கள் துணைக்காக வாழாமல் உங்கள் பிறந்த வீட்டிற்காக ஏன் வாழ்கிறீர் என்பதை ஒரு நிமிடம் நன்றாக யோசியுங்கள்!

நீங்கள் பிறந்த வீட்டை வெறுத்துவிடுங்கள் என்பதல்ல இதன் பொருள். அவர்கள் உங்களைத் தவறாக வழிநடத்தினால் அதில் மட்டும் உடன்படாதீர்! அது தவறு என்பதை அவர்களுக்கு உணர்த்துங்கள்! அதையும் மீறி அவர்கள் உங்கள் காதில் சூளுரைத்தால் அதைக் கண்டு கொள்ளாதீர்!

உங்கள் துணைக்கு நீங்கள் எப்படி முக்கியமோ, அதை விட அதிகமாக அவருக்கு அவரின் பெற்றோர் மிகமிக முக்கியம். மனைவிக்கு கணவன் தான் மிகமிக முக்கியம். அதற்குப் பின்புதான் தன் பெற்றோர்.

“அன்னைக்கே உதவாதவன் அன்மைக்கு எப்படி உதவுவான்?” என்பர். உங்கள் துணை தன் பெற்றோரையே சரியாகக் கவனிக்க வில்லை என்றால் உங்களை எப்படி நன்றாகக் கவனிப்பார்? யோசியுங்கள். அதற்கும் மேல் உங்களை நன்றாகக் கவனிப்பதாக இருந்தால் அதில் ஏதோ உள்நோக்கம் என்பதை அறியுங்கள்.

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“ஒரு மனிதரை இன்னொரு மனிதருக்கு ஸஜ்தா செய்வதற்கு நான் கட்டளையிடுவதாய் இருந்தால் மனைவி தன் கணவனுக்கு ஸஜ்தா செய்யுமாறு கட்டளையிட்டிருப்பேன்.”

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: திர்மிதீ**



“மனைவி தன் கணவனுக்கு சாஷ்டாங்கம் செய்யக் கட்டளை யிட்டிருப்பேன்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள் என்றால், இந்த உலகில் மற்ற அனைவரையும்விட ஒரு பெண்ணுக்கு கணவனே முக்கியம் என்பதை உணர்த்த வேறு வார்த்தை தேவையே இல்லை. இதைச் சரியாகப் புரிந்து வாழுங்கள்!

“ஆண் உயர்ந்தவன் பெண் அதற்கடுத்துத்தான்” என்ற சிந்தனைக்கு போகாதீர்! உங்கள் கணவன் தன் வாழ்க்கை முழுவதையும் உங்களுக்காக அர்ப்பணிப்பதைப் போல உங்கள் பிறந்தவீட்டில் யாரும் அர்ப்பணிக்க முடியாது. இதன் நன்றிக் கடன்தான் அது. என்பதை விளங்கிக் கொள்ளுங்கள்!

உங்கள் கணவர் தம் பெற்றோருக்கு முதலிடம் கொடுப்பதை விரும்பாத நீங்கள், உங்கள் மகன் தன் துணையை விட்டுவிட்டு உங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்பதை மட்டும் எதிர்பார்க்கிறீர்கள். இது எந்த வகையில் நியாயம்?

## மனித நேயம் வேண்டும்

உங்கள் கணவனின் பெற்றோரை மதித்து வாழுங்கள்! தேவையான காலங்களில் அவர்களுக்கு பணிவிடை செய்யுங்கள்! **“அவங்கள பாக்றதும் பராமரிக்றதும் என் கடமை இல்ல; இதுக்கெல்லாம் குர்ஆன் ஹதீஸ்ல ஆதாரம் இருக்கா?”** எனக் கேட்காதீர்! உண்மையில் இது முறையான கேள்வியே அல்ல.

அறிமுகம் இல்லாத ஒருவர் முடியாமல் கிடந்தால் கூட “அய்யோ பாவம்” என மனம் இலகும் நீங்கள் உங்கள் கணவரின் பெற்றோர் முடியாமல் இருக்கும்போது அவர்களுக்காக மனம் இலக வேண்டுமா; வேண்டாமா?

பொதுவாகவே நோய்வாய்ப்பட்ட காலங்களில் ஒருவருக்கு கொருவர் உதவுவது மனிதநேயம். இதை நீங்கள் இழக்கலாமா?

உங்கள் கணவரின் பெற்றோருக்கு நீங்கள் பணிவிடை செய்தால் உங்களுக்கு என்ன குறைவு ஏற்பட்டுவிடும்?

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் ஐந்து. அவை, ஸலாமுக்கு பதிலுரைத்தல், நோயாளியை நலம் விசாரித்தல், ஜனாஸாவைப் பின்தொடர்ந்து செல்லுதல்,

விருந்துக்கு அழைத்தால் அதை ஏற்றுக் கொள்ளுதல். தும்மிய வருக்கு மறுமொழி கூறுதல்."

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 1240**

உங்கள் உறவுக்கு அப்பாற்பட்டநோயாளிகளைச் சந்தித்து வருவதையே இஸ்லாம் வலியுறுத்துகிறது என்றால், உங்கள் கணவரைப் பெற்று வளர்த்து உங்களுக்காக அவரை அர்ப்பணித் துள்ள உங்கள் மாமனார் மாமியாருக்கு நீங்கள் ஏன் பணிவிடை செய்யக்கூடாது? நிதானமாக யோசியுங்கள்!

### இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:

"ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமிற்குச் சகோதரன்; அவன் அவனுக்கு அநீதி இழைக்கவும் மாட்டான்; அவனைக் கைவிடவும் மாட்டான். தன் சகோதரனின் தேவையை நிறைவேற்றுபவரின் தேவையை, அல்லாஹ் நிறைவேற்றுகிறான். ஒரு முஸ்லிமிற்கு உலகில் ஏற்படும் துன்பத்தை நீக்கியவருக்கு, மறுமை நாளின் துன்பங்களில் ஒரு துன்பத்தை அல்லாஹ் நீக்கி விடுகிறான். ஒரு முஸ்லிமின் குறைகளை மறைப்பவருக்கு மறுமை நாளில் அல்லாஹ் அவரின் குறைகளை மறைத்துவிடுகிறான்."

**அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி)**
**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 2442**

முஸ்லிம் என்ற ஒரே காரணத்திற்காக உங்கள் உறவுக்கு அப்பாற் பட்ட ஒருவருக்கே நீங்கள் இவ்வாறெல்லாம் கடமைப்பட்டிருக்கும் போது, உங்களை உங்கள் வாழ்நாள் முழுவதும் பேணிக்காத்து, உங்களுக்கு வேண்டியதை எல்லாம் செய்து கொடுத்து, உங்களுக் காகவே வாழ்கிறார் உங்கள் கணவர். அவரைப் பெற்றெடுத்து உங்களிடம் கொடுத்துள்ள உங்கள் மாமனார் மாமியாருக்கு நீங்கள் கடமைப்பட்டவர் இல்லையா? நியாயமாகச் சிந்தியுங்கள்!

## உங்கள் அன்பிற்கு உரியவர்கள்

பொதுவாகவே நீங்கள் உங்கள் துணையை அதிகம் நேசிக்கிறீர்கள். "உன்னவிட இந்த உலகத்தில் உசந்தது ஒன்னுமில்ல" போன்ற கவிதை வரிகள் உங்கள் உள்ளத்தை ஈர்க்கின்றன. ஆனால், குறிப்பிட்ட காலம் வரைதான் இந்த ஈர்ப்பு நீடிக்கிறது. காலம் செல்லச் செல்ல உங்கள் காதலும் கரைந்தோடுகிறது. திருமணம் முடித்தபோது நீங்கள் உங்கள் துணையைக் காதலித்தது போல காலமெல்லாம் காதலிப்பதில்லை.



அழகு, குடும்பப் பாரம்பரியம், பொருளாதாரம் ஆகியவற்றிற்காக மட்டும் நீங்கள் உங்கள் துணையைக் காதலிக்காதீர்! நல்ல சிந்தனை கொண்ட உங்கள் துணையின் மனதைக் காதலியுங்கள்! நல்ல சிந்தனை என்பது இறைவழிகாட்டுதலின்படி வாழ்வது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்! இதுதான் தடுமாற்றங்களைத் தகர்க்கும். காலமெல்லாம் காதலுடன் வாழச்செய்யும்.

### இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:

"ஒரு பெண்ணை அவளின் அழகு, செல்வம், குலப் பெருமை, மார்க்கப் பற்று ஆகிய காரணங்களுக்காகத் திருமணம் செய்கிறார்கள். நீங்கள் அவளின் மார்க்கப் பற்றையே தேர்ந்தெடுங்கள்!"

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி)**
**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 5090, ஸஹீஹ் முஸ்லிம்**

நீங்கள் இறைநம்பிக்கையாளர் என்பதை எந்தச் சூழலிலும் மறந்துவிடாதீர்! உங்களிடம் ஒரு மாற்றம் வேண்டும். முதன்முதலில் நீங்கள் இறைவனை அதிகமாக நேசிப்பவராய் இருக்க வேண்டும். இறைவனுக்கு நிகராய் இந்த உலகத்தில் ஒன்றுமே இல்லை! நீங்கள் இதை நன்றாகப் புரிந்து கொண்டால் உங்கள் வாழ்க்கையில் பிரச்னைகளுக்கு இடமே இல்லை.

### இறைவன் கூறுகிறான்:

இறைவன் அல்லாதவற்றை அவனுக்கு இணையாக்கி, இறைவனை நேசிப்பது போலவே அவற்றை நேசிப்போரும் மனிதர்களில் இருக்கிறார்கள். ஆனால், நம்பிக்கையாளர்கள் இறைவனையே உறுதியாக நேசிக்கிறார்கள்... **திருக்குர்ஆன் 2:165**

இரண்டாவதாக இறைத்தூதர்(ஸல்) அவர்களை நீங்கள் அதிகம் நேசிப்பவராய் இருக்க வேண்டும்.

### இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

"என் உயிரைத் தன் கையில் வைத்திருப்பவன் மீது ஆணை; உங்களில் ஒருவர் தன் பெற்றோரையும், தன் பிள்ளைகளையும், மக்கள் அனைவரையும்விட என்னை அதிகம் நேசிக்காத வரை ஈமான் - இறைநம்பிக்கை உள்ளவராய் ஆகமாட்டார்."

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 13**

மூன்றாவதாக நீங்கள் உங்கள் தாயை அதிகம் நேசிப்பவராய் இருக்க வேண்டும்.

**அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்:**

இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து, "இறைத்தூதர் அவர்களே! நான் அழகிய முறையில் உறவாடுவதற்கு மிகவும் அருகதையானவர் யார்?" எனக் கேட்டார்.

"உன் தாய்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

"பிறகு யார்?" என அவர் கேட்டார்.

"உன் தாய்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

"பிறகு யார்?" என அவர் கேட்டார்.

"'உன் தாய்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

"பிறகு யார்?" என அவர் கேட்டார்.

"உன் தந்தை" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 5971**

நான்காவதாக உங்கள் தந்தையை அதிகம் நேசிப்பவராய் இருக்க வேண்டும். இவர்களுக்குப் பின்னர்தான் நீங்கள் உங்கள் மனைவியை, பிள்ளைகளை, உறவுக்காரர்களை, நண்பர்களை, மக்களை நேசிப்பவராய் இருக்க வேண்டும்.

உங்களின் நேசத்திற்கு ஒரு வரிசை இருக்கிறது. அந்த வரிசைப்படியே நீங்கள் உங்களின் நேசத்தைச் செலுத்த வேண்டும். இதில் வரிசையை மாற்றினால் உங்களின் நிலையும் மாறிவிடும். இந்த அடிப்படையை மனதில் வைத்து நீங்கள் உங்கள் மனைவியை நேசியுங்கள்!

இறைவனை நேசிப்பது போல பெண்களை நேசித்த ஒருவர் ஒரு வார இதழின் தொடரில் எழுதினார்: **"பெண்; பெண்ணே இறைவன்! யோனி; யோனியே இறைவன்!"** என்று. அவர் தன்னை முஸ்லிம் என்றும் அறிமுகம் செய்து கொண்டார். தற்கால முஸ்லிம் பதிப்பாளர்கள்கூட, உண்மைக்குப் புறம்பான புகழாரம் சூட்டினர். இந்த இழிநிலை உங்களுக்கு வரவேண்டாம்.

நேசத்தில் மனைவிக்குக் கொடுக்கும் இடத்தை மாற்றிவிடாதீர்! இறைவனுக்காக உங்கள் மனைவியை நேசியுங்கள்! உங்கள் மனைவிக்காக இறைவனை நேசிக்காதீர்!

## அன்பிற்கு ஏது விலை?

நீங்கள் நேசிப்பதில் ஐந்தாம் இடம்தான் உங்கள் துணைக்கு என்பதால் உங்கள் துணையைச் சாதாரனமாகக் கருதிவிடாதீர்! **"மனைவி ஒரு மாணிக்கம்" என்பர். மாணிக்கம் விலை உயர்ந்தது தான். ஆனால், அதன் விலையை நிர்ணயித்துவிடலாம். மனைவி மாணிக்கத்தைவிட மேலானவள்; விலை மதிக்க முடியாதவள். மாணிக்கத்தை நீங்கள் விலைகொடுத்து வாங்கிவிடலாம். ஆனால், உங்கள் துணையை அன்பைத் தவிர வேறு எந்த விலை கொடுத்தும் உங்களால் வாங்கமுடியாது.** நீங்கள் ஏழையாக இருந்தாலும், உங்கள் துணையிடம் அன்பில் சீமானாக இருங்கள். பணம் நிறைந்திருந்தாலும் மனநிறைவற்றவன் சீமான் அல்ல.



உங்கள் துணையைப் பார்த்து ஒரு புன்னகை, அன்பாக ஒரு முத்தம், உங்களால் நினைத்ததைச் சாதிக்க முடியும். அன்பிற்கு யாராலும் பூட்டுப்போட முடியாது; அன்பிற்கு விலையே கிடையாது.

நீங்கள் தேடிப்பெற்ற அற்புதங்களில் உங்கள் துணையும் ஒன்று. உங்களின் கருவூலத்தைக் காப்பதைவிட அதிகமாக நீங்கள் உங்கள் துணையைக் காக்க வேண்டும்; கண்காணிக்கவும் வேண்டும். நீங்கள் உங்கள் வாழ்க்கையில் எதையுமே கண்டுகொள்ளாமல் அமைதியாய் இருப்பதால் பிரச்னைகளே இல்லை என்று பொருள் அல்ல. அது உங்களின் பலவீனத்தையே காட்டுகிறது. உங்கள் செல்வங்களிலேயே சிறந்தது நல்ல மனைவியே!

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

"உங்கள் உலகச் செல்வங்களில் சிறந்த செல்வம் உங்களின் நல்ல மனைவியே ஆவாள்" **நூல்: முஸ்லிம்**

## வாழ்க்கையின் அடித்தளம்

அன்பும், நம்பிக்கையும் குடும்ப வாழ்க்கையின் இரண்டு அடித் தளங்கள். இவை இரண்டும் ஒன்றோடு ஒன்றாகப் பின்னிப் பிணைந்துள்ளன. இவற்றில் ஒன்றின் நூலிழை அறுந்தாலும் மற்றொன்று தானாகவே அறுந்துவிடும்.

உங்கள் வாழ்க்கைத் துணையிடம் இரண்டு முகத்துடன் வாழாதீர்! நம்பிக்கையிலும், அன்பிலும் நேர்மையாக ஒரே முகத்துடன் இருங்கள்! வாழ்க்கை ஆரோக்கியமாய் இருக்கும்.

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

"இவர்களிடம் ஒரு முகத்துடனும் அவர்களிடம் இன்னொரு முகத்துடனும் வரக்கூடிய இரண்டு முகமுடையவர் மக்களிலேயே மிகத் தீயவர்."

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரழி) நூல்: அபூ தாவூத் 4872, திர்மிதீ 2111**

**இறைத்தூதர்(ஸல்) எச்சரித்தார்கள்:**

*“இவ்வுலகில் இரண்டு முகங்களை வைத்திருப்பவருக்கு மறுமை நாளில் நெருப்பினாலான இரண்டு நாவுகள் இருக்கும்.”*

**அறிவித்தவர்: அம்மார்(ரலி), நூல்: அபூ தாவூத் 4873**

உங்கள் துணைக்கு உங்கள் கையால் ஒரு கவளம் சோறு ஊட்டுங்கள்! உங்கள் துணை உங்களுக்கு ஊட்டும்போது அதைப் பெற்று மகிழுங்கள்! இதை மிகுந்த அன்போடு செய்யுங்கள்! வேண்டா வெறுப்பாகச் செய்யாதீர்!

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

*“அல்லாஹ்வின் திருப்தியை மட்டுமே நாடி நீர் எதைச் செலவு செய்தாலும் அதற்காக கூலி வழங்கப்படுவீர். உம் மனைவியின் வாயில் (அன்புடன்) நீர் ஊட்டும் ஒரு கவளம் உணவு உட்பட.”*

**அறிவித்தவர்: ஸஅது இப்னு அபீ வக்காஸ்(ரலி), நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 56**

உங்கள் துணையுடன் சேர்ந்து குளியுங்கள்! இதை அற்பமாகக் கருதாதீர்! நீங்கள் இருவரும் சேர்ந்து குளிக்கும்போது உங்களுக் கிடையில் தனிப்பட்ட அன்பு பிறக்கிறது.

**நபி(ஸல்) அவர்களின் மனைவி ஆயிஷா(ரலி) அறிவித்தார்:**

*“ஃபரக்’ என்னும் ஒரு பாத்திரத்திலிருந்து நானும் இறைத்தூதர் (ஸல்) அவர்களும் சேர்ந்து குளித்தோம்”.*

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 250, 299**

உங்கள் துணை வீட்டுக்குள் வரும்போது மகிழ்ந்த முகத்துடன் வரவேற்கக் கற்றுக் கொள்ளுங்கள்! உங்கள் முகத்தை சோகமாக வைத்திருந்தால் வெளியிலிருந்து உள்ளே வரும் உங்கள் துணைக்கு எரிச்சல் வராமல் என்ன செய்யும்?

உங்களுக்கும் சில பிரச்னைகள் இருக்கலாம். உங்கள் துணை வீட்டிற்குள் நுழையும்போதே அதை உங்கள் முகத்தில் காட்டாதீர்! உங்கள் துணை வீட்டினுள் நுழைந்து அமைதியான சூழல் ஏற்பட்ட பிறகு, நளினமாக விஷயத்தைச் சொல்லுங்கள்.

உங்கள் மனைவியை சோகமாகக் காணும் சூழலில், “ஏண்டி சும்மா மூஞ்ச தூக்கி வச்சுக்கிட்டே இருக்க” என்பது போல பேசுவதைத் தவிருங்கள்! உங்கள் துணையின் சோகத்திற்கான காரணத்தை அமைதியாகக் கேளுங்கள்! உங்கள் துணை சொல்வதை பொறுமை யாகக் கேட்டு அன்பான வார்த்தைகளால் ஆறுதல் கூறுங்கள்!



உங்கள் துணையிடமிருந்து தவறான கருத்துக்கள் வெளிப்பட்டால் கொதித்துவிடாதீர்! பக்குவமாக பிரச்னைக்கு முற்றுப் புள்ளி இடுங்கள்! “பொறுமையற்றவர்களால் எருமையைக் கூட மேய்க்க முடியாதாம்.” மன்னிக்கவும்! உங்களைப் பற்றி நீங்களே அறிவீர். ஞாம் அறியோம்!

உங்கள் துணை வெளியில் செல்லும்போது எரிச்சலூட்டும் காரியம் எதையும் செய்துவிடாதீர்! பேசினால் கூட கவனமாக நல்ல வார்த்தை களைப் பயன்படுத்துங்கள். வெளியில் செல்லும் உங்கள் துணை வீடு திரும்பும் வரை உங்கள் நினைவில்தான் இருக்க வேண்டும். உங்கள் நடவடிக்கைதான் இதை முடிவு செய்யும்.

## அன்பிற்குமுண்டோ அடைக்குந் தாழ்

உங்கள் துணையுடன் எப்போதும் அன்பாய் இருங்கள்! உங்கள் துணை உடல் நலக்குறைவாய் இருக்கும் போதும், மாதவிடாய்க் காலங்களிலும் அவளுக்கு உங்கள் அன்பு தேவைப்படுகிறது! தேவையான நேரங்களில் உங்கள் துணைக்கு அன்பைக் கொடுக்கத் தவறாதீர்! உங்கள் துணைக்கு அன்பு ஒரு நிழல்போல் கிடைத்தாலே போதும்; உங்கள் வாழ்க்கை இன்பமாகிவிடும்.

மாதவிடாய்க் காலங்களில் உங்கள் துணைக்கு உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் சில பிரச்னைகள் இருப்பது எதார்த்தம். அப்போது உங்கள் துணைக்கு உங்களின் ஆறுதல் தேவைப்படுகிறது!

மாதவிடாய்க் காலங்களில் பாலுறவு கொள்வதை மட்டும்தான் இறைவன் உங்கள் இருவருக்கும் இடையில் தடுத்துள்ளான். அன்போடு உறவாடுவதையோ, ஒன்றாக அமர்ந்து உண்பதையோ, ஒரே படுக்கையில் படுப்பதையோ இறைவன் தடுக்கவில்லை.

‘வீட்டைவிட்டுத் தூரமானவள்’ என்ற சிந்தனையில் அந்த நாள்களில் உங்கள் துணையை ஒதுக்கித் தள்ளாதீர்! அப்படி ஒதுக்கி வைப்பதை சிலர் பெருமையாகக் கருதுவர்! உங்களுக்கு உங்கள் இறைவன் அப்படி ஏதும் கட்டளையிடவில்லை என்பதைப் புரிந்து வாழுங்கள்!

**இறைத்தூதரின் மனைவி ஆயிஷா(ரழி) அறிவித்தார்:**

*“எனக்கு மாதவிடாய் ஏற்பட்டிருக்கும் நிலையில் எலும்பிலுள்ள இறைச்சியை நான் சாப்பிட்டுவிட்டு அதை இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் கொடுப்பேன். நான் வாய் வைத்த இடத்திலேயே அவர்கள் தம் வாயை வைத்துக் கடித்துச் சாப்பிடுவார்கள்.*

பாத்திரத்தில் நான் தண்ணீர் குடித்துவிட்டு, அதை அவர்களிடம் கொடுப்பேன். நான் வாய் வைத்துக் குடித்த இடத்திலேயே அவர்கள் தம் வாயை வைத்துக் குடிப்பார்கள்.

**நூல்: அபூ தாவூத் 259**

**இறைத்தூதரின் மனைவி ஆயிஷா(ரழி) அறிவித்தார்:**

“நான் மாதவிடாயுடன் இருக்கும் நிலையில் இறைத்தூதர்(ஸல்) அவர்களின் தலை முடியை நான் சீவிவிடுவேன்.”

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 295**

**இறைத்தூதரின் மனைவி ஆயிஷா(ரழி) அறிவித்தார்:**

“எனக்கு மாதவிடாய் ஏற்பட்டிருக்கும்போது இறைத்தூதர்(ஸல்) என் மடியில் சாய்ந்து கொண்டு குர்ஆனை ஓதும் வழக்கம் உடையவர்களாய் இருந்தார்கள்”. **நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 297**

**இறைத்தூதரின் மனைவி உம்மு ஸலமா(ரலி) அறிவித்தார்:**

“நான் இறைத்தூதர்(ஸல்) அவர்களுடன் ஒரு போர்வைக்குள் படுத்திருந்தபோது எனக்கு மாதவிடாய் ஏற்பட்டது. மாதவிடாய்க் காலத்தில் அணியும் துணியை எடுப்பதற்காக இறைத்தூதர்(ஸல்) அவர்களுக்குத் தெரியாதவாறு அந்த இடத்தை விட்டு நகர்ந்தேன்.

“உனக்கு மாதவிடாய் ஏற்பட்டுவிட்டதா?” என இறைத்தூதர்(ஸல்) கேட்டார்கள்.

நான், “ஆம்’ என்றேன். ஆயினும், அவர்கள் என்னை அருகில் வருமாறு கூறினார்கள். நான் அவர்களோடு போர்வைக்குள் படுத்துக் கொண்டேன்.” **நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 298**

இறைத்தூதர்(ஸல்) தம் மனைவியரை அழுகையும் கண்ணீருமாய் வைத்திருக்கவில்லை. உங்கள் துணைக்காக உங்கள் கண்கள் கலங்கலாம்; உங்களை நேசிக்கும் உங்கள் துணையின் கண்கள் ஒருபோதும் கலங்கக் கூடாது!

பூத்த மலரை, அதில் வாசம் உள்ளவரை நீங்கள் நேசிப்பது போல, உங்கள் மனதில் பூத்த உங்கள் துணையை உயிருள்ள வரை நேசியுங்கள்!

உங்கள் துணை உங்களைப் பிரிந்துவிட ஒரு நொடி நினைத்தாலும், அடுத்த நொடியே உங்களைத் தேடவேண்டும்; இதுதான் நீங்கள் உங்கள் துணையிடம் காட்டும் அன்பிற்கு அடையாளம்.



“என் துணையின் மனம் கல்” என நீங்கள் நினைத்தாலும், உங்கள் அன்பு என்னும் முத்திரையை அதில் பதித்துவிடுங்கள்! அது என்றும் நிலைத்திருக்கும். அதை அழிக்கவே முடியாது. உங்கள் துணை எங்கு சென்றாலும், உங்கள் அன்பையும் சுமந்து கொண்டுதான் செல்ல வேண்டும்.

**இறைவன் கூறுகிறான்:**

...உங்களின் இதயங்கள் இறுகிவிட்டன. அவை கற்பாறைகளைப் போலாகிவிட்டன; அல்லது அதையும்விடக் கடினமாகிவிட்டன. ஏனெனில், சில கற்பாறைகளிலிருந்து நதிகள் உதித்தோடுகின்றன. இன்னும் சில பிளவுற்று அவற்றிலிருந்து தண்ணீர் வெளிப்படுகிறது. அல்லாஹ்வின் அச்சத்தால் பெயர்ந்து விழும் பாறைகளும் அவற்றில் உள்ளன... **திருக்குர்ஆன் 2:74**

உங்கள் துணையும் நீங்களும், வெவ்வேறு கோணத்தில் இருந்தாலும், இதயத்தால் ஒன்றுபடுங்கள்; அதுதான் அன்பு.

இறைத்தூதர்(ஸல்) தம் மனைவியர் மீது விலை மதிக்கமுடியாத அளவிற்கு அன்பு கொண்டிருந்ததை அவர்களின் துணைவியர் எவ்வளவு மகிழ்ச்சியாகத் தெரிவிக்கின்றனர். இது போன்ற ஒரு வாழ்க்கைக்கு நீங்கள் ஏன் திட்டமிடக்கூடாது?

சூழல் சாதகமாய் இருப்பின் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து குளியுங்கள்! ஒன்றாக அமர்ந்து சாப்பிடுங்கள்! ஒரே தட்டில் சாப்பிடுங்கள்! ஒருவருக்கொருவர் ஊட்டிவிடுங்கள்! ஒரு போர்வைக்குள் படுத்து உறவாடுங்கள்; உறங்குங்கள்!

## வீண்பேச்சு வேண்டாம்

உங்கள் துணையிடம் தேவையற்ற வார்த்தைகள் பேசி பிரச்னைகளை உருவாக்கிக் கொள்ளாதீர்! நீங்கள் பேசும்போது உங்களுக்கு நீங்களே கட்டுப்பாட்டைப் போட்டுக் கொள்ளுங்கள்.

புதிதாகத் திருமணமான கணவனும் மனைவியும் பந்தியில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். மனைவி கணவனிடம்: “என் தம்பி என் மீது உயிராய் இருப்பான்; அவனைப்போல என் மேல யாரும் உயிரா இருக்க முடியாது. என்னை யாராவது அடிச்சா பொறுத்துக்க மாட்டான். இப்ப நீங்கள் என்னை சும்மா அடிச்சுப் பாருங்களேன். அவனால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது.”

கணவன் மனைவியிடம்: அப்படியா சரி பார்ப்போமே!

அவர் தன் மனைவியை ஓர் அடி அடித்தார். உடனே அதைப் பார்த்து மைத்துனர் ஓடி வந்து மச்சானை அடிக்க, மச்சான் திருப்பி மைத்துனரை அடிக்க, இதைப் பார்த்த மாமனார் உறவுக்காரர்கள் அனைவரும் சேர்ந்து அப்பெண்ணின் கணவரை அடிக்க, அங்கு கலவரமே மூண்டுவிட்டது. அனைவரும் மாப்பிள்ளையை விரட்டியடித்துவிட்டார்கள்.

இது விளையாட்டாக நடந்ததுதான் என அப்பெண் தன் பிறந்த வீட்டாரிடம் எவ்வளவோ சொல்லியும் சமாதானம் ஆகவில்லை. இது தேவைதானா?

கடைசியில் என்னதான் நடந்திருக்கும் யோசியுங்கள்.

ஒரு வேளை அவர்கள் சேர்ந்தே வாழ்ந்தாலும், அப்பெண் மீது அவளின் துணைக்கு முன்பு கொண்டிருந்தது போல அன்பு இனி ஏற்படுமா? “ஒரு வார்த்தை வெல்லும்; ஒரு வார்த்தை கொல்லும்” என்பர். உண்மையிலேயே இங்கு ஒரு பெண் ஒரு வார்த்தையால் தன் வாழ்க்கையைத் தானே கொன்றுவிட்டாள்!

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“...அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் நல்லதைப் பேசட்டும். அல்லது வாய் மூடி இருக்கட்டும்.”
**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 6018**

யாரிடம் பேசினாலும் நல்லதையே பேசுங்கள்! இதுதான் பாதுகாப்பு; உறுதியில்லாத, சந்தேகமான விஷயங்களைக்கூட யாரிடமும் போசாதீர்! பிரச்னைகளின்போது உங்களுக்குஅமைதி நல்ல மருந்து.

## தகாத வார்த்தைக்குத் தாழிடுங்கள்!

பிரச்னைகள் நடக்கும் நேரங்களில் **“நீ செத்து தொல! நான் செத்துடுறேன், என் முகத்துல முழிக்காதே! நான் உன் முகத்துல முழிக்க மாட்டேன், நீ நாசமா போ! நீ பாவி” போன்ற வார்த்தைகளைச் சிந்திவிடாதீர்! சபித்தும் விடாதீர்!** இது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்திவிடும். இறைவனிடம் இது பெரும் பாவமாகவும் இருக்கிறது.

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“ஒருவர் மற்றவரை ‘பாவி’ என்றோ, ‘இறைமறுப்பாளர்’ என்றோ கூற, அவர் அவ்வாறு இல்லாதிருப்பின், சொன்ன சொல் சொன்ன



வரை நோக்கியே திரும்பிவிடும்.”
**அறிவித்தவர்: அபூ தர்(ரலி), நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 6045**

கெட்ட வார்த்தைகள் பேசுபவராகவோ, சாபமிடுபவராகவோ, ஏசுபவராகவோ இறைத்தூதர்(ஸல்) இருக்கவில்லை. கண்டிக்கும் போது கூட, “அவருக்கென்ன நேர்ந்தது? அவரின் நெற்றி மண்ணில் படட்டும்” என்றே கூறிவந்தார்கள்.
**அறிவித்தவர்: அனஸ் இப்னு மாலிக்(ரலி), நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 6046**

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“...இறைநம்பிக்கையாளரைச் சபிப்பது அவரைக் கொலை செய்வதைப் போலாகும். இறைநம்பிக்கையாளரை ‘இறைமறுப்பாளர்’ என அவதூறு கூறுவதும் அவரைக் கொலை செய்வதைப் போலாகும்.”
**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 6105**

பொதுவாகவே இவ்வாறெல்லாம் யாரையும் பேசக்கூடாது, ஏசக்கூடாது என்றால், உங்கள் துணை விஷயத்தில் நீங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்!

உங்கள் துணை காலமெல்லாம் உங்களுக்காக வாழ்ந்து, உழைத்துப் போடும்போது உங்களுக்குத் தேவையான ஒன்றை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டாலோ, இயலாமல் போய்விட்டாலோ அதை பொறுத்துக் கொள்ளும் பக்குவத்தில் இருங்கள்!

உங்களுக்குப் பிடிக்காத ஒன்றை உங்கள் துணையிடம் நீங்கள் கண்டால், அது எனக்குப் பிடிக்கவில்லை என்று மட்டும் கூறுங்கள்! நன்றிகெட்டதனமாக, **“உங்கிட்ட இருந்து என்ன சுகத்தக் கண்டேன்”** எனக் கூறிவிடாதீர்!

**இப்னு அப்பாஸ்(ரலி) அறிவித்தார்:**

“எனக்கு நரகம் காட்டப்பட்டது. அதில் பெண்கள் அதிகம் காணப் பட்டனர். ஏனெனில், அவர்கள் நிராகரிப்பவர்களாய் இருந்தனர்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

“இறைவனையா அவர்கள் நிராகரிக்கிறார்கள்?” எனக் கேட்கப் பட்டது.

“கணவனை நிராகரிக்கிறார்கள்; உதவிகளை நிராகரிக்கிறார்கள். அவர்களில் ஒருத்திக்குக் காலம் முழுவதும் நீ நன்மைகளைச் செய்து கொண்டே இருந்து, பின்னர் அவளுக்குப் பிடிக்காத ஏதேனும் ஒன்றை உன்னிடம் கண்டு விட்டால் ‘**உன்னிடமிருந்து**

**ஒருபோதும் நான் ஒரு சுகத்தையும் கண்டதில்லை**" எனப் பேசிவிடுகிறாள்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 29**

நீங்கள் உங்கள் துணையிடம் தகாத வார்த்தைகள் பேசினால் அதற்குக் கூலி நரகமாம்! இது உங்களுக்குத் தேவைதானா? நன்றி மறப்பது நன்றன்றே.

## கொடிது கொடிது சந்தேகம் கொடிது

உங்கள் துணையின் மீது பிறர் கூறும் குற்றச்சாட்டுகளைப் புறந் தள்ளுங்கள்! சந்தேகம் ஏற்பட்டால் எதையும் நேரடியாகக் கேட்டு விடுங்கள்! ஆனால், கோபப்படாமல் பொறுமையாகவும், பக்குவமாகவும் கேளுங்கள். எதையும் மனதில் போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்!

நியாயமாய் இருக்கும் பட்சத்தில், உங்கள் துணையை எந்த இடத்திலும் விட்டுக் கொடுத்துப் பேசாதீர்! உங்கள் துணை குறித்து பிறரிடம் குறை கூறாதீர்! அதே நேரத்தில் உங்கள் துணை செய்யும் தவறைக் கண்டு கொள்ளாது இருந்தும் விடாதீர்!

உங்கள் துணையை நீங்களே சந்தேகப்படுவது நியாயமா என்பதைச் சற்று யோசியுங்கள்! **சந்தேகம் தீயினும் கொடியது.** அது உங்கள் வாழ்க்கையை கொஞ்சம் கொஞ்சமாக அழித்துவிடும். உங்களை மனநோயாளியாக மாற்றிவிடும். உங்கள் நிம்மதியைக் கெடுத்துவிடும்.

உங்கள் துணையை மட்டுமல்ல யாரையுமே சந்தேகப்படாதீர்! உங்கள் சந்தேகம் பொய்யாய் இருந்தும், அதை நீங்கள் உண்மை என நம்பவும் வாய்ப்பிருக்கிறது.

**இறைவன் கூறுகிறான்:**

"நம்பிக்கையாளர்களே! சந்தேகங்களிலிருந்து அதிகமாக விலகிக் கொள்ளுங்கள்! ஏனெனில், நிச்சயமாக சந்தேகங்களில் சில பாவங்களாய் அமைகின்றன. துருவித்துருவி ஆராயாதீர்!..."

**திருக்குர்ஆன் 49:12**

...சந்தேகம் கொள்பவர்களில் நீரும் ஆகிவிடாதீர்!

**திருக்குர்ஆன் 10:94**

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் பிறரைச் சந்தேகப்படும்போது அவர் செய்வதை எல்லாம் நீங்கள் துருவ முற்படுவீர்கள். அப்படித் துருவும்போது அவர் செய்யும் ஒவ்வொன்றும் குற்றமாகவே உங்களுக்குத் தோணும். நீங்கள் பிறரின் குற்றங்களைத் துருவ முனைந்தால் உங்களால் யாருடனும் அன்பாய் இருக்க முடியாது.



சந்தேகத்திற்கு இடமில்லை என்றால் பிரச்னைக்கும் இடமில்லை. குடும்ப வாழ்க்கைக்கு சந்தேகம் மிகப்பெரிய ஆபத்து.

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

"சந்தேகிப்பது குறித்து உங்களை எச்சரிக்கிறேன். ஏனெனில், சந்தேகம் கொள்வது பெரும் பொய்யாகும்..."

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி)**
**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 6064, 6066**

## சந்தேகத்திற்கு வழிவகுக்காதீர்!

சந்தேகத்திற்கு உங்கள் வாழ்க்கையில் யாருக்கும் இடமளிக்காதீர்! சந்தேகம் குற்றம் என்பதில் மாற்றுக் கருத்து இல்லாவிட்டாலும், நீங்கள் உங்கள் வாழ்க்கையில் சந்தேகத்திற்கு இடம் அளிக்கலாமோ?

உங்கள் துணையின் உள்ளத்தில் சந்தேகத்தை உண்டாக்காதீர்! சந்தேகம் உண்டாகும் அளவிற்கு உங்கள் நடத்தை இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்! **தீ காட்டையே அழித்துவிடுவது போல சந்தேகத் தீ உங்கள் வாழ்க்கையை அழித்துவிடும்.**

ஒருவர் தம் மீது சந்தேகம் கொள்ளும் அளவுக்கு நபி(ஸல்) வாழ வில்லை. அவர்கள் வெளிச்சத்தைப் போல வெளிப்படையாக வாழ்ந்து காட்டினார்கள். நீங்கள் யாருடன் பேசுகிறீர்கள் என்ன பேசுகிறீர்கள் என்பதை தேவைப்பட்டால் உங்கள் துணைக்குத் தெளிவுபடுத்திவிடுங்கள்.

"என் இஷ்டம் நான் யாரிடம் பேசினால் உனக்கென்ன?" என்ற கேள்வியை எழுப்பி குழப்பத்திற்கு இடமளிக்காதீர்! குழப்பமான சூழலில்தான் சந்தேகம் எழும். சந்தேகம் எழுந்தால், கோபம், வஞ்சகம், குரோதம் மனதில் குடிகொள்ளும். இது பெரும் ஆபத்தில் கூட முடியலாம்.

தகவல் தொடர்பின் உச்சத்தில் நீங்கள் வாழ்கிறீர்கள். அலைப்பேசி, மின்னஞ்சல், ஃபேஸ்புக், வாட்ஸ்அப் என பல உபகரணங்களின் தொடர்பில் இருக்கிறீர்கள். ஆனால், இந்தத் தொடர்புகள் உங்கள் துணைக்கு சந்தேகத்தை ஏற்படுத்திவிடக் கூடாது.

ஆணோ, பெண்ணோ தகவல் தொடர்பின் மூலம் தகாத உறவுகளைத் தவிருங்கள். உங்கள் துணையுடன் இவற்றில் நீங்கள் வெளிப்படையாய் இருங்கள். தேவைப்பட்டால் உங்கள் தொடர்பு யாருடன் இருக்கிறது என்பதை உங்கள் துணைக்கு வெளிப் படையாகத் தெரிவித்துவிடுங்கள்.

குற்றச் செயல்களில் இரகசியம் காப்பது முடியாத செயல். "பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்" என்பது நிதர்சனம். எனவே, உங்கள் துணையுடன் வெளிச்சத்தைப் போல வெளிப்படையாய் இருங்கள்! வாழ்க்கை ஒளிரும்.

**ஸஃபிய்யா பின்த்து ஹுயை(ரலி) அறிவித்தார்:**

இறைத்தூதர்(ஸல்) இறைஇல்லத்தில் தங்கி - இஃதிகாஃப் இருந்தார்கள். ஓர் இரவில் அவர்களைச் சந்திப்பதற்காக அவர்களிடம் நான் சென்றேன். நான் அவர்களுடன் பேசிவிட்டு திரும்பிச் செல்ல எழுந்தேன். என்னைத் திருப்பியனுப்புவதற்காக இறைத்தூதர்(ஸல்) அவர்கள் என்னுடன் வந்தார்கள். அப்போது அன்ஸாரிகளில் இருவர் அவ்வழியாகச் சென்றார்கள். அவர்கள் இறைத்தூதர்(ஸல்) அவர்களைக் கண்டவுடன் விரைந்து நடந்தார்கள். இதைக் கண்டதும்,

"நிதானமாகச் செல்லுங்கள்! இவர் என் மனைவி ஸஃபிய்யா பின்த் ஹுயைதான்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள். இதைக் கேட்ட அவ்விருவரும்,

"அல்லாஹ் தூயவன் இறைத்தூதர் அவர்களே! தங்களையா நாங்கள் சந்தேகிப்போம்?" எனக் கூறினார்கள்.

"மனிதனின் இரத்த நாளங்கள் ஓடும் இடங்களில் நிச்சயமாக ஷைத்தான் ஓடுகிறான். உங்கள் உள்ளங்களில் அவன் தீய எண்ணம் எதையேனும் ஏற்படுத்திவிடுவான். அல்லது உங்கள் உள்ளங்களில் எதேனும் சந்தேகத்தை அவன் உண்டாக்கிவிடுவான் என நான் அஞ்சுகிறேன்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 3281**

மக்கள் மனதில் சந்தேகம் தோன்றிவிடுமோ என இறைத்தூதர் (ஸல்) அவர்களே அஞ்சினார்கள் என்றால் உங்கள் துணையின் மனதில் சந்தேகம் ஏற்பட்டுவிடுமோ என நீங்கள் ஏன் அஞ்சி நடக்கக் கூடாது?



## துணை குறித்து பிறரிடம்...

பிறரிடம் பேசும்போது உங்கள் துணை குறித்த நல்ல விஷயங்களை மட்டுமே பேசுங்கள்! ஆனால், உங்கள் துணையைப் படம்பிடித்து காட்டுவது போன்று பேசிவிடாதீர்! உங்கள் துணையின் குறைகளை உங்களுக்குள் புதைத்துக் கொள்ளுங்கள்! உங்கள் துணையிடம் உங்கள் மரியாதை உயரும்.

உங்கள் துணை குறித்த இரகசியங்களை யாரிடமும் வெளிக்காட்டா தீர்! அது கண்டிப்பாக மறைத்து வைக்க வேண்டியவை.

அதற்காக உங்கள் துணையை குற்றவாளியாகவோ, குறையுள்ள வராகவோ நிலைத்திருக்கச் செய்யுங்கள் என்பது பொருளல்ல. குற்றங்களையும் குறைகளையும் வெளிக்காட்டாமல் மறைத்து, உங்கள் துணையை நீங்கள் திருத்திவாருங்கள். தனிமையில் தன்மையாகப் பேசித் திருத்துங்கள். உங்கள் துணையின் கண்ணியத்தைக் காத்துவாருங்கள்! நீங்கள் கண்ணியம் காப்பதை உங்கள் துணைக்கு உணர்த்துங்கள்!

உங்கள் துணையுடன் மேற்கொள்ளும் அந்தரங்க உறவுகளை இரகசியமாகவே வையுங்கள். அதை யாரிடமும் தெரிவிக்காதீர்! பிறர் உங்களிடம் தன் குடும்ப இரகசியத்தைப் பகிர்ந்தாலும் அதை ஏற்காதீர்! அது தவறு என்பதை அவருக்கும் உணர்த்துங்கள்.

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

"தன் மனைவியுடன் உறவு கொண்டு, பின்னர் அவளின் இரகசியத்தை வெளிப்படுத்துகிறவன்தான் மறுமைநாளில் அல்லாஹ்விடம் மக்களில் மோசமானவனாய் இருப்பான்."

**அறிவித்தவர்: அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி), நூல்: ஸஹீஹ் முஸ்லிம்**

## உங்களுக்குத் தேவை ஒரு மாற்றம்

உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டால் நீங்கள் ஒருவர் என்ற நிலை கிடையாது. உங்கள் துணைக்கு நீங்கள் துணையாய் இருவர் என்ற நிலையில் இருக்கிறீர்கள்.

புகுந்த வீட்டில் யார் யார் என்னென்ன உறவு? அவர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்கிற வீட்டுப் பாடத்தை நன்றாகப் படியுங்கள்! குடும்ப வாழ்க்கை நன்றாய் இருக்கும்.

நீங்கள் நீண்ட காலமாக பின்பற்றி வந்த பழக்கவழக்கங்களை மாற்றிக் கொள்ள வேண்டிய நிலை இப்போது உங்களுக்கு ஏற்படலாம்.

சூழல் கருதி அந்த மாற்றத்தை உள்வாங்குங்கள். அதெல்லாம் முடியாது என முரண்டு பிடிக்காமல் குறைந்தபட்சமாக அந்தப் பழக்க வழக்கங்களை தள்ளியாவது வையுங்கள். காலச் சூழல் கருதி பின்னர் அவை உங்கள் துணைக்கு உடன்பட்டால் பார்த்துக் கொள்ளலாம்.

**உயிர் தோழன், உயிர் தோழி என்பது உங்களுக்குத்தான்; உங்கள் துணைக்கு அல்ல.** எனவே, நேற்றுவரை பிறருக்கு கொடுத்த முக்கியத்துவத்தையும், நேரத்தையும் திருமணத்திற்குப் பின்பும் கொடுக்க நினைக்காதீர்! தேவை மற்றும் காலச் சூழல் கருதி அவற்றைஅமைத்துக் கொள்ளுங்கள்!

திருமணத்திற்குப் பின்பு உங்களுக்குள் ஒரு மாற்றம் வேண்டும். அது கட்டாயம் ஏற்பட வேண்டிய மாற்றம். அந்த மாற்றம் இறைவனுக்கும் உங்கள் துணைக்கும் உகந்ததாய் இருக்க வேண்டும்.

இந்த மாற்றத்தால் நீங்கள் அடிமையாகிவிட்டதாகக் கருதி விடாதீர்! மனிதம் என்பதற்கான சுதந்திரத்தை உங்களிடமிருந்து யாராலும் பறிக்கமுடியாது! சில இடங்களில் சில கட்டுப்பாடுகள் அவசியமாகிறது.

நீங்கள் நீதிமன்றத்திற்குள் செல்கிறீர்கள். அங்கு பலமான கட்டுப் பாடுகளைக் காண்கிறீர்கள். அந்தக் கட்டுப்பாடுகள் ஏன் எதற்கு என உங்களால் கேள்வி எழுப்ப முடியுமா? அல்லது அதை அர்த்த மற்றது என்றுதான் வாதிடமுடியுமா? அது போலதான் குடும்ப வாழ்க்கையில் சில விதிமுறைகளும் கட்டுப்பாடுகளும் இருக்கத்தான் வேண்டும். அவற்றை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

இதைக் கட்டுப்பாடு எனப் புரிந்துணர்ந்தால் போதும். பொதுவாகவே **புரிதல் இல்லாததால்தான் விண்ணை மண்ணாகவும் மண்ணை விண்ணாகவும் கற்பனை செய்து பிரச்னைகள் எழுகின்றன.**

நபித் தோழர்களும் நபித்தோழியர்களும் ஓர் இறைக்கொள்கையை ஏற்ற நாளிலிருந்து வாழ்க்கையில் ஒரு புதிய திசைக்கே திருப்பப் பட்டார்கள். அதை அவர்கள் உனடியாக உள்வாங்கினார்கள். அது எப்படி சாத்தியமாயிற்றோ அவ்வாறே நீங்கள் திருமணத்திற்குப் பின்பு ஒரு புதிய திசைக்கு மாறுவது சாத்தியம்தான். இது சாத்தியமா என்ற கேள்வி வளையத்திற்குள் சிக்கிவிடாதீர்!

அன்றைய மக்களின் காட்டுமிரண்டித் தனமான வாழ்க்கையையே திருக்குர்ஆன் மாற்றியமைத்தது. அதே திருக்குர்ஆன் இன்று



உங்கள் கைகளில் உள்ளது. அது ஏன் உங்கள் வாழ்க்கையில் அர்த்தமுள்ள ஒரு நல்ல மாற்றத்தைக் கொண்டுவரக் கூடாது என்பதை யோசியுங்கள்.

மாற்றங்கள் இன்றி உலகம் இல்லை; மாற்றமே நிலையானது; என்னை நான் மாற்றிக் கொள்வேன் என்ற நிலைக்கு வாருங்கள். உலகத்தையே மாற்ற வேண்டும் என நீங்கள் நினைப்பதைவிட உங்களைத்தான் நீங்கள் சரியான பாதைக்கு மாற்றவேண்டும்.

சரியான பாதைக்கு நீங்கள் மாறும்போது உலகமே உங்களைப் பின்தொடர்ந்துவரத் தயாராகும்.

## ஈர்ப்பும் இயல்புதான்

உங்கள் துணைக்கு பிறர் மீது ஈர்ப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்! அது உங்கள் கையில்தான் உள்ளது. ஒருவர் மீது ஒருவருக்கு ஈர்ப்பு வருதல் மனிதர்கள் என்ற அடிப்படையில் எதார்த்தமாய் இருக்கலாம். ஆனால், அந்த ஈர்ப்பு குற்றம் புரியத் தூண்டிவிடக் கூடாது என்பதைப் புரிந்து கெள்ளுங்கள்! உங்கள் துணைக்குப் புரியவையுங்கள்!

உங்கள் துணைக்கு பிறர் மீது ஈர்ப்பு ஏற்பட்டுவிட்டால், அது தவறு என்பதைப் பக்குவமாகப் புரியவையுங்கள்! தடாலடியாகச் சந்தேகத்தில் சண்டைபோட்டால் வெடித்துச் சிதறிவிடும். சிதறியதை ஒன்றுசேர்ப்பது கடினம். சில நேரங்களில் அது கடுமையான இழப்புகளையும் ஏற்படுத்திவிடலாம்.

உங்களுக்கும் சில நேரங்களில் பிறர் மீது ஈர்ப்பு வருவது யாதார்த்தம் என்பதைப் புரிந்து இதை அணுகுங்கள்!

உங்கள் துணைக்கு பிறர் மீது ஈர்ப்பு ஏற்படுத்தும் வழிகளைத் அடைத்துவிடுங்கள்! ஈர்ப்பு ஏற்படுவதற்கான வாசல்களை நீங்களே திறந்துவிடாதீர்!

**இறைவன் கூறுகிறான்:**

‘இறைநம்பிக்கையுள்ள ஆண்களிடம் கூறும்! அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளட்டும். தங்களின் கற்பைப் பேணட்டும். அது அவர்களுக்கு மிகத் தூயதாகும். அவர்கள் செய்பவற்றை அல்லாஹ் மிக அறிந்தவன்.” **திருக்குர்ஆன் 24:30**

கற்பு பெண்களுக்கு மட்டுமல்ல; ஆண்களுக்கும் இருக்கிறது. அவர்களும் அதைக் காத்துக் கொள்ள வேண்டும் என்றே குர்ஆன்

கூறுகிறது. பிற பெண்கள் உங்கள் இருப்பிடம் தேடி வந்தால் அவர்களின் அழகு அலங்காரம் உங்கள் துணையை ஈர்க்கலாம். எனவே, இது போன்ற நேரங்களில் உங்கள் துணைக்கு தவறான எண்ணத்தை அவர்கள் தூண்டிவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்!

ஒரு பெண்ணை உங்கள் துணை கற்பனையில் பார்க்கும் அளவிற்கு விமர்சிக்காதீர்! புகழாதீர்! பிற பெண்களின் அழகு அலங்காரம் குறித்து உங்கள் துணையிடம் பேசாதீர்!

பிற பெண்களைக் காணும்போது உங்கள் பார்வையைத் தாழ்த்திக் கொள்ளுங்கள்! அல்லாஹ்வுக்கு அஞ்சி செயல்படுங்கள்! பார்வையைத் தாழ்த்துங்கள் என்பது "உங்கள் தவறான எண்ணங் களையும் தாழ்த்திக் கொள்ளுங்கள்!" என்று பொருள்.

ஒரு பெண்ணை நீங்கள் கண்டால் அவளின் மறைவான இடங்கள் குறித்து கற்பனை செய்யாதீர்! உங்கள் துணையை ஓர் ஆண் இப்படி கற்பனையில் காண்பதை நீங்கள் ஏற்கமாட்டீர்கள் அல்லவா! நமக்கு ஒரு நியாயம் பிறருக்கு ஒரு நியாயம்! இது சரியா? யோசியுங்கள்.

**இறைவன் கூறுகிறான்:**

இறைநம்பிக்கையுள்ள பெண்களிடமும் கூறும்!

அவர்களும் தங்களின் பார்வையினைத் தாழ்த்திக் கொள்ளட்டும்! தங்களின் கற்பைப் பேணட்டும்! தங்களின் அழகு அலங் காரத்தை அதிலிருந்து வெளிப்படக் கூடியதைத் தவிர வேறு எதையும் வெளிக்காட்ட வேண்டாம்! அவர்கள் தங்களின் முந்தானைகளால் தங்களின் மார்புகளையும் மறைத்துக் கொள்ளட்டும்!

1. தம் கணவன்
2. தம் தந்தையர்
3. தம் கணவர்களின் தந்தை (மாமனார்கள்)
4. தம் புதல்வர்கள்
5. தம் கணவரின் புதல்வர்கள் (கணவரின் இன்னொரு மனைவிக்குப் பிறந்தவர்கள்)
6. தம் சகோதரர்கள்
7. தம் சதோதரர்களின் புதல்வர்கள்
8. தம் சகோதரிகளின் புதல்வர்கள்
9. தங்களின் பெண்கள் (நன்கு அறிமுகமான நல்ல பெண்கள்)
10. தம் வலக்கைகள் சொந்த மாக்கியவர்கள் (அடிமைகள்)



11. ஆண்களில் தம்மை அண்டி (பாலுறவில் ஈடுபட முடியாத வயதில்) வாழ்பவர்கள்
12. பெண்களின் மறைவான அங்கங்கள் குறித்து அறியாத சிறுவர்கள்

ஆகிய இவர்களைத் தவிர, (வேறு ஆண்களுக்கு) தங்களின் அழகு அலங்காரத்தை வெளிப்படுத்தக் கூடாது.

தாங்கள் மறைத்து வைக்க வேண்டிய அழகு அலங்காரத்திலிருந்து வெளிப்படுமாறு தங்களின் கால்களை (தரையில்) தட்டி நடக்க வேண்டாம்.

இறைநம்பிக்கையாளர்களே! (இதில் தவறு நிகழ்ந்திருப்பின்), நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு பாவமீட்பு வேண்டுங்கள்! அனைவரும் அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள்!

**திருக்குர்ஆன் 24:31**

மேலே இறைவன் குறிப்பிட்டுள்ள ஆண்கள் தவிர மற்றவரிடம் உங்கள் அழகையோ அலங்காரத்தையோ எக்காரணம் கொண்டும் வெளிப்படுத்தாதீர்! உங்கள் வீட்டுக்கு வரும் பால்காரர், மளிகைக் கடைக்காரர், பூ கொண்டு வருபவர், உங்கள் வீட்டு வேலைக்காரர் என பலரிடமும் நீங்கள் உங்கள் அழகையும் அலங்காரத்தையும் வெளிக்காட்டுகிறீர்கள். இது பெரும் குற்றம் என்பதை உணருங்கள்!

இவர்கள் உங்கள் வீட்டுக்கு வரக்கூடாது என்றோ, இவர்கள் முன்னால் நீங்கள் செல்லக்கூடாது என்றோ தடைவிதிக்கப்பட வில்லை. ஹிஜாப் என்னும் தகுந்த ஆடையின்றி செல்லாதீர் என்றுதான் கூறப்படுகிறது.

உங்களுடைய அழகையும் அலங்காரத்தையும் இவர்களிடம் வெளிக்காட்ட வேண்டாம் என்றுதான் கூறப்படுகிறது. இவர்களிடம் அழகு மற்றும் அலங்காரத்தை வெளிப்படுத்தியதால் காதல் வயப்பட்டு தங்கள் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் ஏராளம்.

கூட்டுக் குடும்பமாய் இருந்தால், உங்கள் கணவரின் சகோதரர் முன்னிலையிலும் நீங்கள் ஹிஜாப் முறையைப் பேணவேண்டும் என்பதை மனதில் கொள்ளுங்கள்! மேற்குறிப்பிட்டுள்ள வசனத்தில் பதினோறு வகையான ஆண்கள் முன்பாக மட்டும்தான் நீங்கள் ஹிஜாப் இல்லாதிருக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தவிர வேறு யாரிடமும் உங்கள் அழகையும் அலங்காரத்தையும் வெளிக் காட்டவே கூடாது என்பதை மனதில் நிறுத்துங்கள்!

**உக்பா இப்னு ஆமிர்(ரலி) அறிவித்தார்:**

“பெண்கள் இருக்குமிடத்திற்குச் செல்ல வேண்டாம் என உங்களை எச்சரிக்கிறேன்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

“இறைத்தூதர் அவர்களே! கணவரின் சகோதரர் குறித்து தாங்கள் கூறுவது என்ன?” என ஒருவர் கேட்டார்.

**“கணவரின் சகோதரர் மரணத்திற்கு நிகர்”** என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள். **நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 5232**

“அண்ணன் பொண்டாட்டி அரைப் பொண்டாட்டி; தம்பி பொண்டாட்டி, தான் பொண்டாட்டி” போன்ற அநாகரிகச் சொல்லிற்கு இஸ்லாமில் இடமில்லை. உண்மையில் இது மிகவும் கேவலமான சொல், செயல், அங்கீகாரம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் துணை தவிர்த்து யாருடனும் கேலி கிண்டல் பேசாதீர்! பிறர் உங்களிடம் கேலி கிண்டல் பேசினால் உடனடியாகக் கண்டித்துவிடுங்கள்! இதில் யாருடைய முகத்தாட்சனையையும் பார்க்காதீர்! கடமை, கண்ணியம், கட்டுப்பாடுதான் உங்களுக்கு முக்கியமே தவிர, பிறர் நம்மைக் குறித்து என்ன நினைப்பார்கள் என்ற எண்ணத்திற்குப் போகாதீர்!

யாருடன் பேசினாலும் கண்ணியமான வார்த்தைகளில் பேசுங்கள்! பேச்சில் நளினம் காட்டாதீர்! **பிற ஆண்களை ஈர்க்கும் வகையில் பேசாதீர்! சிரித்து சிரித்துப் பேசாதீர்! “வெட்டு ஒன்னு துண்டு இரண்டு” என்ற ரீதியில் பேசுங்கள்!** நீங்கள் இப்படி இருந்தால் எந்த ஆண் மீதும் உங்களுக்கு ஈர்ப்பு வராது; பிறரும் உங்கள் மீது மோகம் கொள்ளமாட்டார்கள்.

“எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதோ” என்பர்; யார் மனதில் என்ன இருக்கிறது என்பதை யார் அறிவார்.

## முழுமையடைதல்

பெண்களுக்கென சில கட்டுப்பாடுகள் உள்ளன. ஆண்களுக்கும் சில கட்டுப்பாடுகள் உள்ளன. ஆனால், ஆண்களைவிட பெண்களுக்கு கட்டுப்பாடுகள் சற்று அதிகமாகவே உள்ளன. பெண் புத்தி முன் புத்தியாகவும், சில நேரங்களில் பின் புத்தியாகவும் அமைந்துவிடுவது எதார்த்தம்; அதிகமான பெண்களுக்கு நிதானம் இருப்பதில்லை.



இப்படிப்பட்டவர்கள் ஆண்களிலும் இருக்கிறார்கள். ஆனால் அது மிகவும் குறைவுதான்.

காண்பவரை எல்லாம் நம்புவதும், யாரையுமே நம்பாமல் இருப்பதும் அபாயகரமானது. ஒன்றில் தோற்றாலும் நம்பிக்கை இழக்காதீர்! யாரையும் நம்பித் தோற்றுவிடாதீர்! அது மரணத்திலும் கொடியது. பெண்களில் பலரும் எளிதில் ஏமாறக்கூடியவர்களாய் இருக்கிறார் கள். பெண்களை ஏமாற்றுவதில் ஆண்கள் வல்லவர்கள். எனவே தான், பெண்களுக்குக் கட்டுப்பாடு அதிகமாகவே இருக்கிறது.

பெண் சுதந்திரம் இல்லாத வீடு, வீடல்ல; நாடு நாடல்ல. ஆனால், எது சுதந்திரம் என்பதுதான் முக்கியம். காற்றில் அசைந்தாடிக் கொண்டிருக்கும் நாணலைப் போன்றவள்தான் பெண். அவளுக்கு பலமான ஓர் அரண் தேவை.

உடல் ரீதியாய் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வித்தியாசம் இருப்பதை மறுக்கமுடியாது. அதேபோல மன ரீதியாகவும் சில வித்தியாசங்கள் இருப்பதும் உண்மை. மூளையின் எடைகூட ஆண்களைவிட பெண்களுக்குக் குறைவுதான் என மருத்துவ விஞ்ஞானம் கூறுகிறது. இருப்பினும் பெண்களுக்கென்று சில தனித்துவமும் ஆண்களுக்கென்று சில தனித்துவம் கொடுக்கப் பட்டுள்ளது. எனவே, தனித்துவம் தனித்துவம்தான்.

பொதுவாக ஆண்கள் அயராது உழைப்பவர்கள்; பெண்கள் அவ்வாறு இல்லை. பெண்கள் மாதவிடாய்க் காலங்களிலும், கர்ப்ப காலங்களிலும், குழந்தை பெற்ற பின்னர் சில காலங்களும் சோர்வாகவும் மன அழுத்தத்துடன் இருப்பார்கள். ஆண்களுக்கு இதுபோன்ற நிலை ஏற்படுவதில்லை. இப்படி பல காரணங்கள் இருப்பதால்தான் இறைவன் பெண்களை இறைத்தூதர்களாக அனுப்பவே இல்லை. இவ்வுலகில் புரட்சிக்கு வித்திட்டவர்களாக பெண்கள் இடம்பெறவில்லை.

இது படைப்பின் இயல்பு என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்! **பெண்களைத் தாழ்வாகக் கருதிவிடாதீர்! ஆண்கள் முதல் தரம் பெண்கள் இரண்டாம் தரம் என நினைக்காதீர்!** மறுமையில் சுவர்க்கத்தில் உயர்ந்த இடத்தில் ஆண்களும் பெண்களும் இருப்பார்கள் என்பதுதான் இஸ்லாமிய நிலைப்பாடு. பெண்கள் உயர்ந்த இடத்தை அடையவே முடியாது. ஆண்கள் மட்டும்தான் உயர்ந்த இடத்தை அடைவார்கள் என்ற நிலை கிடையாது.

ஆண்களும் பெண்களும் அவர்களின் செயலுக்குத் தக்கவாறு நரகத்தில் இருப்பார்கள் என இஸ்லாம் கூறுகிறது. பெண்கள் மட்டும்தான் நரகத்தில் இருப்பார்கள் என்ற நிலை கிடையாது.

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

"ஆண்களில் பலர் முழுமையடைந்திருக்கிறார்கள். பெண்களில் ஃபிர்அவ்னின் மனைவி ஆஸியாவையும் இம்ரானின் மகள் மர்யமையும் தவிர வேறெவரும் முழுமையடையவில்லை..."

**அறிவித்தவர்: அபூ மூஸா(ரலி), நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 3411**

பெண்களில் இரண்டு பேரைத் தவிர மற்ற பெண்கள் முழுமை அடையவில்லை என்பது மனோதத்துவ ரீதியாக கூறப்பட்டுள்ளது. இதை இன்றைய மருத்துவ உலகம் மிகத் தெளிவாக விளக்கி இருக்கிறது. அதாவது ஆண்களின் மன வலிமை வேறு; பெண்களின் மன வலிமை வேறு. இதை நீங்கள் அன்றாட வாழ்க்கையிலும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறீர்கள்!

**இறைவன் கூறுகிறான்:**

"இறைத்தூதரின் பெண்களே! நீங்கள் பெண்களில் பிறரைப் போலல்ல. நீங்கள் இறையச்சத்தோடு இருந்தால், பேச்சில் நளினம் காட்டாதீர்! ஏனெனில், உள்ளத்தில் நோயுடையவன் ஆசை கொள்வான். இன்னும், நல்ல பேச்சே பேசுங்கள்!

அறியாமைக் காலத்தில் அழகை வெளிப்படுத்தித் திரிந்தது போல் திரியாதீர்! உங்களின் வீடுகளிலேயே தங்கியிருங்கள்! தொழுகையை நிலைநிறுத்தி, ஜகாத்தும் கொடுத்துவாருங்கள்! அல்லாஹ்வுக்கும், அவன் தூதருக்கும் கட்டுப்படுங்கள்!

குடும்பத்தை உடையோரே! உங்களை விட்டும் அசுத்தங்களை நீக்கி, முற்றிலும் தூய்மையாக்கிடவே அல்லாஹ் விரும்புகிறான்.

மேலும், உங்களின் வீடுகளில் படிக்கப்படுகிற இறைவசனங் களையும், ஞானத்தையும் நினைவுகூருங்கள்!

நிச்சயமாக அல்லாஹ் நுணுக்கமாகத் தெரிந்தவனும் நன்கு அறிந்தவனுமாய் இருக்கிறான்.

நிச்சயமாக முஸ்லிம்களான ஆண்களும் பெண்களும், நன்னம்பிக்கை கொண்ட ஆண்களும் பெண்களும், இறைவழிபாடுள்ள ஆண்களும் பெண்களும், உண்மையே பேசும் ஆண்களும் பெண்களும், பொறுமையுள்ள ஆண்களும், பெண்களும்,



(இறைவனிடம்) உள்ளச்சத்துடன் இருக்கும் ஆண்களும் பெண்களும், தர்மம் செய்யும் ஆண்களும் பெண்களும், நோன்பு நோற்கும் ஆண்களும் பெண்களும், தங்களின் கற்பை காத்துக் கொள்ளும் ஆண்களும் பெண்களும், அல்லாஹ்வை அதிகமதிகம் துதிக்கும் ஆண்களும், பெண்களுமாகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான நற்கூலியையும் ஆயத்தப்படுத்தியுள்ளான்.

அல்லாஹ்வும் அவன் தூதரும் ஒரு காரியத்தைத் தீர்மானித்தால், அவர்களின் அக்காரியத்தில் மாற்றுக் கருத்துக் கொள்வதற்கு இறைநம்பிக்கையுள்ள எந்த ஆணுக்கும், பெண்ணுக்கும் உரிமை இல்லை. அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் மாறுசெய்வோர் தெளிவான வழிகேட்டிலேயே இருக்கிறார்கள்."

**திருக்குர்ஆன் 33:32-36**

மேற்கண்ட வசனங்களுக்கு விளக்கம் தேவை இல்லை. உங்களால் இவற்றை நன்றாகவே புரிந்து கொள்ளமுடியும். ஒழுக்கம் தொடர்பான இச்சட்டத்தில் மாற்றுக் கருத்துக் கொள்வதற்கே இடமில்லை.

"சிரிக்கும் பெண்ணையும் அழும் ஆணையும் நம்பாதீர்" என்பார்கள். அதிகமாக சிரிக்கும் பெண் அடிக்கடி அழும் ஆண் என்பது இதன் பொருளாம். "பொம்பள சிரிச்சா போச்சு" என்பார்கள். பெண்கள் சபை அறியாமல் சிரித்தால் சறுக்கிவிடுவார்கள் என்பது இதன் பொருளாம்.

உங்கள் துணைக்கு நீங்கள் முழுச்சுதந்திரம் கொடுப்பதாக எண்ணி, உங்கள் துணையின் கண்ணியத்தை இழக்க வழிவகுத்துவிடாதீர்! அந்நிய ஆண்களிடம் கொஞ்சிக் குலாவி பேச அனுமதிக்காதீர்! தேவைக்கு அதிகமாக பிற ஆண்களிடம் பேச அனுமதிக்காதீர்! இஸ்லாம் விதித்துள்ள வரம்புக்கு உட்பட்டே பேச அனுமதியுங்கள்!

வரம்புகளை மீறினால் வாழ்க்கையில் வழுக்கி விழவேண்டிய நிலை ஏற்படும். நேரடியாகவோ, அலைப்பேசித் தொடர்பின் மூலமோ, ஃபேஸ்புக் போன்ற இணையதள தொடர்புகளின் மூலமோ ஷைத்தான் தன் மாயவலையை விரித்துக் கொண்டு காத்திருக்கிறான்.

"அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்பர். இவற்றை நீங்கள் கண்டு கொள்ளாது விட்டுவிட்டால், சிறுகச் சிறுகக் கொஞ்சல்கள் பெறுகி குற்றமிழைக்க வழிவகுத்துவிடும்.

## எது சுதந்திரம்? எது நாகரிகம்?

பெண் தன் கணவருக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என இஸ்லாம் கட்டளையிடுகிறது. ஒரு பெண் தன் வீட்டு வேலைகளையும் செய்து, தன் கணவருக்கும், பிள்ளைகளுக்கும் சமைத்துப் போட்டால் அதற்காக இம்மையிலும் மறுமையிலும் நன்மைகள் உள்ளன; கணவனை சிரித்த முகத்துடன் பார்த்தாலும் நன்மைகள் உள்ளன; கணவனுக்கு ஒரு வாய் ஊட்டிவிட்டாலும், கணவனால் ஒரு வாய் ஊட்டப் பெற்றாலும் நன்மைகள் உள்ளன என இஸ்லாம் கூறுகிறது. ஆனால், தற்காலப் பெண்களாகிய நீங்கள் சுதந்திரம் மற்றும் நாகரிகம் பேசுகிறீர்கள். எது சுதந்திரம் எது நாகரிகம் என்பதுதான் உங்களுக்குத் தெரிவதில்லை.

பெண்ணியம், பெண்ணுரிமை, பெண் சுதந்திரம், நாகரிகம் எனக் கூக்குரலிடும் பலர், ஆடு நனைகிறதே என அழும் ஓநாய்கள். உங்களை உங்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றி, தெருவுக்குக் கொண்டு வந்து, கவர்ச்சிப் பொருளாகவும், காட்சிப் பொருளாகவும் ஆக்குவதற்கே இவர்கள் துடிக்கிறார்கள். இந்த ஓநாய்களுக்கு இரையாகிவிடாதீர்!

இந்த ஓநாய்களின் உபதேசத்தில் பெண்சுதந்திரம் பேசும் நீங்கள், உங்கள் வீட்டில் கணவனுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் சமைத்துப்போட்டு உபசரிப்பதை ஏளனமாக நினைக்கிறீர்கள். ஆனால், விமானத்தில் பணிப்பெண்களாக ***(Airhostess)*** இருந்து முகம் தெரியாத அந்நிய ஆண்களை விழுந்து விழுந்து உபசரிப்பதை நாகரிகம் எனப் பெருமை பேசுகிறீர்கள். இதுதான் சுதந்திரமா? இதுதான் நாகரிகமா? யோசித்துப் பாருங்கள்!

உங்கள் வீட்டில் உங்கள் பெற்றோர், உங்களின் உடன் பிறந்த சகோதர சகோதரிகள், உங்கள் கணவன், உங்கள் பிள்ளைகளுக்காக அடுப்பு எரிப்பதையும், உணவு பரிமாறுவதையும் தாழ்வாகக் கருதும் நீங்கள், நட்சத்திர ஹோட்டல்களில் இரவு பகல் பாராமல் சமையல் வேலை செய்வதையும், கவர்ச்சி யூட்டும் ஆடைகளுடன் நுகர்வோரை வரவேற்று, உபசரிப்பதையும் சுதந்திரம், நாகரிகம் என பெருமை கொள்கிறீர்கள். இப்போது சொல்லுங்கள். இதுதான் சுதந்திரமா? இதுதான் நாகரிகமா?

பெண்ணிய ஓநாய்களின் உபதேசத்தில் ஊறிப்போன நீங்கள், உங்கள் கணவருக்கு பணிவிடை செய்வதையே அடிமைத்தனம் என நினைக்கும் அதே வேளையில், ஓர் அந்நிய ஆணுக்கு தனிச் செயலர் (Personal Secretary) ஆகவும், உதவியாளர் (PA- Personal Assistent) ஆகவும் பணியாற்றுவதை உரிமை, சுதந்திரம் என கருதுகிறீர்கள். இது என்ன சுதந்திரமோ, எந்த நாகரிகமோ?



நீங்கள் வசதி படைத்தவராய் இருந்தால் பணியாட்களை நியமித்து உங்களின் பணிச்சுமைகளைக் குறைத்துக் கொள்ளலாம். ஆனால், நீங்களும் வீட்டில் சில பணிகளைச் செய்து உடல் நலத்தைக் காத்துக் கொள்வதுடன், உங்கள் துணையின் உள்ளார்ந்த அன்பைப் பெறுங்கள். வீட்டிற்கு உழைப்பதை பழமைவாதம் என வாதிடாதீர்! சோம்பேறிகளாய் இருந்து, பிராய்லர் கோழிகளைப் போல உடல் எடையை அதிகரித்து, நோய்களை வரவழைத்துக் கொள்ளாதீர்! உண்மையில் இது சுதந்திரமும் அல்ல; நாகரிகமும் அல்ல. முதலில் இதை உணருங்கள்!

## அந்நியருடன் தனித்து

உங்கள் துணையை மட்டுமல்ல; உங்கள் வீட்டுப் பெண்களில் யாரையும் அந்நிய ஆணுடன் தனித்திருக்க அனுமதிக்காதீர்! அவ்வாறே, உங்கள் வீட்டு ஆண்களையும் பிற பெண்களுடன் தனித்திருக்க அனுமதிக்காதீர்! இவ்வாறு செய்யாவிட்டால், அது பல தீய விளைவுகளை உண்டாக்கிவிடும். பெண்ணுக்கு கற்பு இருப்பது போல ஆணுக்கும் கற்பு இருப்பதை உணருங்கள்!

பெண்களே உங்கள் அழகு நீங்கள் வெளியில் தோன்றுவதில் இல்லை. உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்வதில்தான் இருக்கிறது. பெண்கள் கண்ணியத்துடன் நடத்தப்படும் இடமே ஒழுக்கத்தின் இருப்பிடம். நீங்கள் ஒழுக்கத்தின் உச்சத்தில் இருந்தால் மட்டுமே குடும்பத்தில் முழுமையான இன்பங்களை அடைவீர்கள்.

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“ஓர் ஆண் ஓர் அந்நியப் பெண்ணுடன் தனித்திருக்க வேண்டாம். திருமண பந்தம் தடை செய்யப்பட்ட உறவினர்-மஹ்ரம் ஒருவரின் துணையின்றி ஒரு பெண் பயணம் செல்ல வேண்டாம்.”

அப்போது ஒருவர் எழுந்து, ‘இறைத்தூதர் அவர்களே! இன்ன புனிதப் போரில் கலந்து கொள்ள நான் என் பெயரைப் பதிவு செய்துள்ளேன். என் மனைவியோ ஹஜ்ஜுக்குப் புறப்பட்டு விட்டாள்’ எனக் கூறினார்.

“முதலில் நீ சென்று உன் மனைவியுடன் ஹஜ் செய்!” என இறைத் தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: இப்னு அப்பாஸ்(ரலி), நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 3006**

ஹஜ் பயணம்கூட ஒரு பெண் தனித்துப் போகக் கூடாது என்றால், மற்ற விஷயங்களுக்காக இஸ்லாம் அனுமதித்துள்ள துணையின்றி வீட்டைவிட்டு வெளியேறுதல் இறைநம்பிக்கையுள்ள எந்த ஒரு பெண்ணுக்கும் ஆகுமானது அல்ல.

## புகுந்த வீட்டு உறவுகள்

புகுந்த வீட்டில் பிறந்த வீட்டுப் பெருமையையே பேசிக் கொண்டு இருக்காமல் பிறரிடம் உங்கள் மாமனார் மாமியார் நாத்தனார் பற்றி நல்லவிதமாகப் பேசுங்கள்! அது உங்களுக்கு பாராட்டுகளைப் பெற்றுத் தரும். உங்கள் மீது அவர்களின் அன்பு பெருகும்.

அவர்கள் குறித்து நீங்கள் கற்பனையாய் எதையும் பேசவேண்டாம்; வீண் புகழாரமும் வேண்டாம். அவர்கள் செய்யும் சிறு சிறு தவறுகளை மறைத்துக் கொண்டு நல்ல விஷயங்களை மட்டும் பேசுங்கள்; அதுவே போதும். சிறியதொரு தவறுக்காக ஒருவரை விட்டு விலகிவிடாதீர்! நாளை அதுவே பெரும் தவறாகிவிடலாம்.

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

“...உலகில் ஒரு முஸ்லிமிற்கு ஏற்படும் துன்பத்தை அகற்றுகிறவருக்கு மறுமை நாளின் துன்பத்தை அல்லாஹ் அகற்றிவிடுவான். ஒரு முஸ்லிமின் குறையை மறைத்தவரின் குறையை மறுமை நாளில் அல்லாஹ் மறைப்பான்.”

**அறிவித்தவர்: இப்னு உமர்(ரலி),**
**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 2442, அபூ தாவூத் 4893, திர்மிதீ 1463**

புகுந்த வீட்டில் உள்ளவர்களின் உணவுப் பழக்க வழக்கங்களைத் தெரிந்து கொண்டு அவர்களுக்காக அதைப் பின்பற்றுங்கள்! உங்கள் மீது தனிப்பட்ட பிரியம் உண்டாகும். **நீங்கள் சாதனைகள் பல படைப்பதைவிட யாரையும் வேதனைக்குள்ளாக்காது வாழ்வதே சிறந்த வாழ்க்கை.**

உரிமை இல்லாத உறவுகளிடம் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளாதீர்! ஏனெனில், இறுதியில் எஞ்சுவது ஏமாற்றமாகக் கூட இருக்கலாம். பிறரின் நியாயமான எதிர்பார்ப்புகளை நிறை வேற்றும் நபராக நீங்கள் இருங்கள்!



கூட்டுக் குடும்பமாய் இருந்தால் வெளியில் செல்லும்போது எங்கு போகிறீர்கள் என்பதை வீட்டில் மூத்தவர்களிடம் தெரிவித்து விட்டுச் செல்லுங்கள்! நீங்கள் பொறுப்புள்ளவர் என்பதை அவர்கள் உணர்வார்கள்.

**“என் இஷ்டம்; நான் எங்கேயும் போவேன்; எப்படியும் இருப்பேன்; அதைக் கேட்கும் ரைட்ஸ் யாருக்கும் கிடையாது”** என டயலாக் பேசாதீர்!

சுற்றுலா சென்றால் கணவருடன் தனியாகத்தான் செல்ல வேண்டும் என்பதில் குறியாய் இருக்காதீர்! காலச் சூழல் கருதி அதை அமைத்துக் கொள்ளுங்கள். பொதுவாக வீட்டிலுள்ள மற்றவர் களையும் அழைத்துச் செல்வதை விரும்புங்கள்! சில நேரங்களில் சில விஷயங்களை விட்டுக்கொடுத்துத்தான் ஆகவேண்டும்.

புகுந்த வீட்டில் நாத்தனார் இருந்தால் **“எனக்கு இவதாண்டி வில்லி”** என நெகடிவாக சிந்திப்பதைத் தவிருங்கள். என் வயதுக்கு ஏற்ற தோழி என் ரசனைகளையும் ஆசைகளையும் அவளுடன் பகிர்ந்து கொள்ளமுடியும் என பாஸிடிவ் ஆகச் சிந்தியுங்கள்!

பள்ளி அல்லது கல்லூரி செல்லும் வயதில் நாத்தனார் இருந்தாலோ, பணிக்குச் செல்பவளாய் இருந்தாலோ அவளுக்கான ஆடைத் தேர்வு, உணவு பழக்கவழக்கம், அழகு குறிப்பு பற்றி அவளுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்! உங்களின் இந்த நடவடிக்கையால் அவள் தன் தோழிகள் மற்றும் உறவுக்காரர்களிடம் எங்கள் அண்ணி ஓஹோ... என்பாள்.

இதைவிட பெரிய பாராட்டு உங்களுக்கு வேறென்ன வேண்டும்! குடும்பத்தில் அன்பு நிறைந்த வாழ்க்கைதான் அழகிய மற்றும் பிறருக்கு முன்மாதிரியான வாழ்க்கை.

## மலர்ந்த முகத்துடன்...

உங்கள் அறையிலிருந்து வெளியில் வரும்போதும், தூங்கி எழுந்ததும், தூங்கச் செல்லும்போதும் வீட்டில் இருப்பவர்களுக்கு மலர்ந்த முகத்துடன் ஸலாம் கூறுங்கள்! வீட்டிலிருக்கும் சிறுவர்களுக்கும் ஸலாம் கூறுங்கள்! பெரியவர்களுக்கு சிறுவர்கள் ஸலாமை முந்திக் கூறவேண்டும் என்பதை அறிவுறுத்தி வாருங்கள்!

சிறு பிரச்னையால் மனவருத்தம் ஏற்பட்டு ஒருவருடன் ஒருவர் பேசாமல் இருக்கும் சூழல் ஏற்பட்டால் நீங்கள் முந்திக் கொண்டு

ஸலாம் கூறிவாருங்கள்! அதிவிரைவில் சுமூக நிலை ஏற்பட்டு விடும். உங்களின் நல்ல பண்புகள் உங்களுக்குப் பாராட்டுகளையே பெற்றுத்தரும்; நன்னடத்தையோ வெற்றியைப் பெற்றுத் தரும். நல்லவற்றை நடைமுறைப்படுத்திக் காட்டுங்கள். இதற்கு எதிர் மறையாக "நான் நலமாகத்தான் உள்ளேன்; என் மனசுதான் இறந்து கிடக்கிறதே!" என்றெல்லாம் பேசிவிடாதீர்!

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

"மனவருத்தத்தால் ஒருவர் தம் சகோதரரிடம் மூன்று நாள்களுக்கு மேல் பேசாமல் இருப்பது கூடாது. அவ்விருவரும் சந்தித்தால் முகம் திருப்பிக் கொள்கின்றனர். இவர்களில் ஸலாமை முதலில் தொடங்கிப் பேசுபவரே சிறந்தவர்."

**அறிவித்தவர்: அபூ அய்யூப் அல்அன்சாரி(ரலி)**
**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 6077**

மனவருத்தத்தால் சக தோழர், தோழியருடன் பேசாமல் இருப்பதே கூடாது என்றால் உங்கள் துணையின் பெற்றோர், உடன் பிறந்தவர்கள், நெருங்கிய உறவுக்காரர்களிடம் நீங்கள் பிடிவாதமாய் இருப்பது சரிதானா? சற்று யோசியுங்கள்!

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

"மக்களே! ஸலாமைப் பரப்புங்கள்! உறவினரோடு சேர்ந்து வாழுங்கள்! உணவளியுங்கள்! மேலும் இரவில் மக்கள் தூங்கும் போது நீங்கள் தொழுங்கள். அப்போது நீங்கள் சுவர்க்கத்தில் அமைதியுடன் நுழையலாம்."

**அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு ஸலாம்(ரலி), நூல்: திர்மிதீ**

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

"...ஒன்றை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா? அதை நீங்கள் செயல்படுத்தினால் ஒருவரை ஒருவர் நேசம் கொள்ளலாம். உங்களிடையே ஸலாமைப் பரப்புங்கள்."

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: ஸஹீஹ் முஸ்லிம் 93**

உறவுகளுக்கிடையே அன்பைப் பிணைக்கும் சங்கிலியாக ஸலாம் இருக்கிறது. நீங்கள் உங்கள் வீட்டுக்குள் ஸலாமைப் பரப்பிக் கொண்டே இருங்கள்! அன்பு வளர்ந்து கொண்டே இருக்கும். நீங்கள் அனைவரும் அன்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு விட்டால் பிரச்னைக்கு ஏது இடம்?



## பகிர்ந்து வாழுங்கள்

குடும்பத்தின் செலவினங்களைப் பட்டியலிடுங்கள். உங்கள் துணையின் வருவாய்க்கு ஏற்ற வகையில் செலவிடுங்கள். உங்கள் துணையின் பொறுப்பில் உள்ளவர்களுக்கு அவர் செலவிடுவதில் குறுக்கிடாதீர்!

கற்ற அறிவையும், பெற்ற செல்வத்தையும் இறுதிக் காலம் வரை பிறருக்காவும் செலவிடுங்கள்; உங்களுக்கு மட்டுமாய் அவற்றை பூட்டி வைத்துக் கொள்ளாதீர்!

உங்கள் வருமானம் தனியாய் இருந்தால் அதை உங்கள் கணவருக்குக் கொடுப்பதும் கொடுக்காமல் இருப்பதும் உங்கள் விருப்பம். ஆனால், பிறருக்குக் கொடுப்பதைவிட உங்கள் கணவருக்குக் கொடுத்து நீங்கள் உதவுவதுதான் சிறந்தது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்!

நீங்கள் உங்களையே உங்கள் கணவருக்காகக் கொடுத்து விட்டீர்கள். உங்கள் பொருளைக் கொடுப்பதில் என்ன பிரச்னை என்பதை யோசியுங்கள்!

**அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரலி) அறிவித்தார்:**

..."என் கணவருக்கும் என் பராமரிப்பில் இருக்கும் அனாதைகளுக்கும் நான் செலவிடுவது தர்மமாகுமா" என என் மனைவி இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்டார்.

"'ஆம்! ஸைனபுக்கு இரண்டு நன்மைகள் உள்ளன. ஒன்று நெருங்கிய உறவினரை அவர் அரவணைத்ததற்கு; மற்றொன்று தர்மத்திற்கு" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 1466**

உங்கள் கணவர் பொருளாதாரப் பிரச்னையில் இருக்குபோது உங்களிடம் பொருளாதாரம் இருந்தால் நீங்கள் உங்கள் கணவருக்குத் தாரளமாய்க் கொடுங்கள்! அது மறுமையில் உங்களுக்கு இரட்டிப்பாக வழங்கப்படும்.

உங்கள் துணைக்கு நீங்கள் செலவிட்டதை ஒருபோதும் சொல்லிக் காட்டாதீர்! நன்மையை இழந்துவிடுவீர்கள்! உங்கள் துணையின் மனதிலும் அது வடுவாகப் பதிந்துவிடும்.

**இறைவன் கூறுகிறான்:**

"இறைவழியில் தங்களின் செல்வத்தைச் செலவிட்ட பின்னர், அதைச் சொல்லிக் காண்பிக்காமலும், (எவ்வகையிலும்) நோவினைச் செய்யாமலும் இருப்போருக்குரிய நற்கூலி அவர்களின் இரட்சகனிடம் இருக்கிறது. அவர்களுக்கு எத்தகைய அச்சமுமில்லை; துக்கப்படவும் மாட்டார்கள்." **திருக்குர்ஆன் 2:262**

முடிந்தளவு வீட்டில் உண்டியல் வைத்து சிறு சேமிப்பைத் தொடங்குங்கள். "சிறுதுளி பெருவெள்ளம்" என்பர். அவ்வப்போது ஒரு ரூபாயும், இரண்டு ரூபாயுமாக நீங்கள் சேமித்து வைப்பது ஒரு கட்டத்தில் அது பெருந்தொகையாக வந்து நிற்கும். அவசரத்திற்கும் அது உதவும்.

நீங்கள் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்றவராய் இருந்தால் உங்கள் உறவுக்காரர்கள், அண்டை அயலாருக்கு உதவுவதற்குக் கூட அது பயன்படும். உங்களால் உங்கள் பொருளாதாரத்தை பெரிதாகப் பகிர முடியவில்லை என்றாலும் இதுபோன்ற பகிர்ந்து வாழ்தல் உங்கள் வாழ்க்கையில் அபிவிருத்தியை ஏற்படுத்தும். இதுபோன்ற சின்ன சின்ன நல்ல காரியங்கள் உங்கள் துணையிடமும் அன்பை அதிகரிக்கும்.

## இறைவன் விதித்தது விதித்ததுதான்

உங்கள் நாத்தனாருக்குப் பிடித்த நகைகள், ஆடைகள் உங்களிடம் இருந்தால் ''ஒரு முறை போட்டுப் பாரேன்'' என அன்பாக அவளுக்குக் கொடுங்கள்! அவள் மீது நீங்கள் கொண்டிருக்கும் அக்கறையை அவள் புரிந்து கொள்வாள்.

விடுமுறை நாள்களில் உங்கள் நாத்தனாரோ, மச்சான் கொழுந்தனோ தன் பிள்ளைகளுடன் உங்கள் வீட்டிற்கு வந்தால் முறைத்துக் கொண்டும், மூஞ்சியை தூக்கி வைத்துக் கொண்டும் திரியாதீர்! மனதில் கசப்பில்லாமல் நன்றாய் உபசரித்து அனுப்புங்கள்! அவர்களுடன் கண்ணியமாக நடந்து கொள்ளுங்கள்!

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

"அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் தம் விருந்தினரைக் கண்ணியப்படுத்தட்டும்."

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 6135**



உங்கள் நாத்தனாரை விருந்தினர் என நீங்கள் நினைப்பதைவிட அவள் உங்கள் வீட்டுப் பெண் என்பதாகப் பாருங்கள். **"அவங்க வந்து இவ்ளோ நாளாச்சு; அவ்ளோ நாளாச்சு"** என கணக்குப் போடாதீர்!

**"இறைக்கும் கிணறு வற்றாது"** என்பார்கள். நீங்கள் நல்வழியில் செலவிட்டு வந்தால் உங்கள் பொருளாதாரம் குறைந்துவிடாது. அதிலும், நீங்கள் உறவுக்காரர்களுக்கு செலவிடுவதில் தாராளமாய் இருங்கள்! இறைவன் உங்களுக்குத் தாராளமாகக் கொடுப்பான்.

**இறைவன் கூறுகிறான்:**

"இறைவழியில் தங்களின் செல்வத்தைச் செலவிடுபவர்களின் உவமை ஒவ்வொரு கதிரிலும் நூறு தானிய மணிகளைக் கொண்ட ஏழு கதிர்களை முளைப்பிக்கும் ஒரு வித்தைப் போன்றது. அல்லாஹ், தான் நாடியோருக்கு இன்னும் இரட்டிப்பாக ஆக்குகிறான். அல்லாஹ் விசாலத்தன்மை உடையவன்; நன்கறிந்தவன்."

**திருக்குர்ஆன் 2:261**

உங்களுக்கு வாழ்வாதாரத்தை அதிகமாகக் கொடுப்பதும் குறைத்துக் கொடுப்பதும் இறைவனின் கையில் மட்டுமே உள்ளது. அது வேறு யார் கையிலும் கிடையாது. கொடுப்பதால் குறைந்துவிடும் என்பது ஷைத்தானின் சிந்தனை.

**இறைவன் கூறுகிறான்:**

அல்லாஹ், தான் நாடியவருக்கு செல்வத்தை அதிகமாகவும், தான் நாடியவருக்கு அளவோடும் கொடுக்கிறான். அவர்கள் இவ்வுலக வாழ்வில் மகிழ்ச்சியடைகிறார்கள். மறுமையோடு ஒப்பிட்டால் இவ்வுலக வாழ்க்கையோ மிகவும் அற்பமானதே.

**திருக்குர்ஆன் 13:26**

(இறைவழியில் செலவிடுவதால்) வறுமை உண்டாகும் என உங்களை ஷைத்தான் அச்சுறுத்தி, ஒழுக்கமற்ற செயல்கள் செய்யுமாறும் உங்களை ஏவுகிறான். அல்லாஹ்வோ தன்னிடமிருந்து மன்னிப்பையும் அருளையும் வாக்களிக்கிறான்.

**திருக்குர்ஆன் 2:268**

இன்னாருக்கு இந்த உணவு என்பதை இறைவன் அவர்களைப் படைத்தபோதே விதித்துவிட்டான். அதை உங்களால் மட்டுமல்ல யாராலும் தடுக்கவே முடியாது என்பதை மறந்து செயல்படாதீர்!

முட்டைக்குள் இருக்கும் குண்டூசியின் கொண்டை அளவிலான உயிரணுவுக்கு முட்டையின் மஞ்சள் மற்றும் வெள்ளைக் கருக்களை அல்லாஹ் அதன் உணவாக வைத்திருக்கும்போது, எந்த உணவு யாருக்கு என்பதை அவன்தானே தீர்மானிப்பான். உங்கள் கையில் என்ன இருந்தாலும் அது எப்போது யாருக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதைத் தீர்மானிப்பவன் அல்லாஹ்தான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

ஒருவர் தமிழ்நாட்டிலிருந்து ஹஜ் செய்வதற்காக மக்கா புறப்பட்டார். ஃபிளைட் ஏறுவதற்கு முன்னர் இங்கு நன்றாகச் சாப்பிட்டார். சாப்பிடும்போது புரையேறியது. சோறு மூக்கில் ஏறி சரியான இருமல். அவர் புறப்பட்டு மக்கா சென்றுவிட்டார். மக்காவைச் சென்றடைந்த அவருக்கு தும்மல் வந்தது. அவர் தும்மியதும் மூக்கிலிருந்து ஒருசோறு வெளியில் வந்து விழுந்தது. அதை அங்கிருந்த பறவை ஒன்று கொத்திக் கொண்டு போனது.

இதைக் கண்ட அவருக்கு ஆச்சரியம்; இந்த உணவு இன்னாருக்குத் தான்; இந்த உயிரினத்திற்குத்தான் என்பதை முடிவு செய்வது இறைவன் கையில் இருப்பதை அன்று அவர் இன்னும் நன்றாகவே புரிந்து கொண்டார்.

## பொருட்படுத்தாதீர்!

உங்களைப் போலவே எல்லோரும் இருக்கவேண்டும் என எதிர் பார்க்காதீர்! நம் கையில் விரல்கள் ஐந்தும் சமமாய் இருப்பதில்லை. ஏற்ற இறக்கமாகத்தான் அவை உள்ளன. சில நேரங்களில் சில விஷயங்களை நீங்கள் கண்டு கொள்ளாமல் இருப்பதே நல்லது. அற்ப விஷயங்களைப் பெருட்படுத்தாதீர்! இது இறைவனுக்கு எதிரான விஷயங்களில் அல்ல என்பதில் தெளிவாய் இருங்கள்!

உங்கள் நாத்தனாரோ, உங்கள் துணையின் மற்ற உறவுக்காரர்களோ தன் குடும்பத்தைப் பற்றி வறட்டுக் கௌரவம் பேசினால்கூட எரிச்சல் படாதீர்! விமர்சனமும் செய்யாதீர்! வறட்டுக் கௌரவம் வாழ்க்கைக்கு ஆகாது. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு ஆகாது.

இப்படி அவர்கள் பேசும் போதெல்லாம் நீங்கள் பதிலளிக்காமல் இருந்துவிட்டாலே போதும். தாம் பேசுவது தேவையற்றது என்பதை காலப்போக்கில் அவர்களாகவே புரிந்து கொள்வார்கள். வறட்டுக் கௌரவம் பேசுபவர்களைத் திருத்துவதற்கு இது ஒரு யுக்தி.



## பக்குவம் பயன் தரும்

நீங்கள் புகும் வீட்டில் குட்டிக் கொழுந்தனார் இருந்தால் அவன் எல்லோருக்கும் செல்லப்பிள்ளையாகத்தான் இருப்பான். அவனுக்கு அளவுக்கு அதிகமான சலுகைகள் காட்டினால் அதை உடனடியாகக் கண்டிக்காதீர்! **"என்னடா இது வந்ததும் வராததுமா மேடம் ரூல்ஸ் போடுராங்களேன்னு"** உங்கள் மீது அவனுக்கு எரிச்சல்தான் வரும்.

**இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:**

"நம் சிறார்கள் மீது இரக்கம் காட்டாதவரும், நம் பெரியோருக்கு மரியாதை கொடுக்காதவரும் நம்மைச் சார்ந்தவர் அல்லர்."

**அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர்(ரலி)**
**நூல்: அபூ தாவூத் 4943, திர்மிதீ 2002**

புரிந்து கொள்ளும் வயதில் இருக்கும் உங்கள் கொழுந்தன், ஏதேனும் தவறு செய்வதை நீங்கள் கண்டால், பக்குவமாக அது தவறு என்பதைப் புரியவையுங்கள்! கட்டுப்படாத நிலையில் உங்கள் கணவரிடம் பக்குவமாக எடுத்துக் கூறுங்கள்!

மச்சான் மற்றும் கொழுந்தனார் மனைவியருடன் அன்போடு பழகுங்கள்! அவர்களுடன் கலந்தோசித்து முடிவு எடுக்க வேண்டிய தருணங்களில் அவர்களுடன் ஆலோசனை செய்யுங்கள்! **"என்னப் போல அவளும் இந்த வீட்டுக்கு வாழ வந்தவதான? இதுல மரியாதை என்னத்த கெடக்குதாம்"** என்பது போல டயலாக் பேசிவிடாதீர்!

யாரையும் மட்டம் தட்டிப் பேசாதீர்! அவர்கள் அப்படி பேசினால்கூட நீங்கள் சற்றுப் பொறுமையாய் இருந்துவிடுங்கள். "பொறுத்தார் பூமியாண்டார்; பொங்கியார் போய் மாண்டார்" என்பர். நீங்கள் பொறுமை காப்பதால் வெற்றிதான் கிடைக்குமே தவிர தோல்வி ஏற்படாது.

நீங்கள் புகுந்த வீட்டில் பணிவாய் இருங்கள்; வெறுப்பாய் இருக் காதீர்! நம்பிக்கையோடு இருங்கள்; பேராசை கொள்ளாதீர்! குற்றம் காண்பதில் குறியாய் இருக்காதீர்! பொறாமைப்படாதீர்! பிறருக்குக் கிடைத்துவிட்டதே என மனிதன் பொறாமைப்படாத ஒன்று மரணமே. வதந்திகளை நம்பாதீர்! உங்களைப் பற்றி புறம்பேசுவோர் குறித்துக் கவலைப்படாதீர்!

*உங்களை உங்கள் முதுகிற்குப் பின்னால் பேசுகிறவர்கள் குறித்து நீங்கள் கவலையே படாதீர்; நீங்கள் இரண்டடி அவர்களுக்கு முன்னால் இருக்கிறீர்கள் என்பதையும், அவர்கள் மனித மாமிசம் சாப்பிடுகிறார்கள்; நீங்கள் மனித மாமிசம் சாப்பிடுவதில்லை என்பதையும் நினைத்து சந்தோஷப்படுங்கள்.*

**இறைவன் கூறுகிறான்:**

*...உங்களில் சிலர் சிலர் குறித்துப் புறம் பேசாதீர். உங்களில் ஒருவர் இறந்த தம் சகோதரனின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவாரா? (இல்லையே!) அதை வெறுப்பீர்கள்! இன்னும், ஏக இறைவனை அஞ்சுங்கள்! நிச்சயமாக பாவத்திலிருந்து மீள்வதை ஏக இறைவன் ஏற்பவன்; நிகரற்ற அன்பாளன்.* **திருக்குர்ஆன் 49:12.**

*தேவைக்கு அதிகமாகப் பேசாதீர்! துரோகம் செய்யாதீர்! உதவியாய் இருங்கள்! சோம்பேறியாய் இருக்காதீர்! உழைப்பாளியாய் இருங்கள்! நல்ல வாய்ப்புகளை நழுவவிடாதீர்; நட்பை இழக்காதீர்! யாருக்கும் நன்றி மறக்காமல் வாழுங்கள். தோல்வியில் சோகம், வெற்றியில் வேடம், பிறரின் வளர்ச்சியில் பொறாமை இப்படியே நீங்கள் இருந்தால் உங்களுக்கு நீங்கள்தான் எதிரி.*

## ஊதினால் உப்பிவிடும்

*சிறு பிரச்னை என்றால் அதை ஊதிப் பெரிதாக்கி புயலைக் கிளப்பி விடாதீர்! சற்று மௌனமாய் இருங்கள்! சுமூகமான முடிவை நோக்கித்தான் நீங்கள் நகரவேண்டும். எனவே, பிரச்னைக்கான காரணத்தை ஆராயுங்கள்!*

*இதுபோன்ற சூழல்களில் தனியாக அமர்ந்து உங்களை நீங்களே விமர்சித்துப் பாருங்கள்! அமைதியான சூழல் ஏற்பட்டப் பின்பு பிரச்னைக்கான காரணத்தை இருவரும் சேர்ந்து பொறுமையாகப் பேசுங்கள்! யார் மீது தவறு என்பது புரிந்துவிடும். உங்கள் மீது தவறு இருக்குமானால் திருத்திக் கொளுங்கள்! தவறுக்கு வருத்தம் தெரிவியுங்கள்!*

*எதிலும் பிடிவாதமாய் இருக்காதீர்! பிடிவாதத்திற்கு மருந்தே கிடையாது. தவறுகளை விட்டும் உங்களை நீங்களே திருத்திக் கொண்டால் தவிர உங்களை யாராலும் திருத்த முடியாது. உங்கள் தவறுகளைச் சரிசெய்வது உங்கள் கடமை எனப் புரிந்து செயல்படுங்கள்.*



*நீங்கள் அறியாமல் செய்த பாவத்தை அறிந்ததும் தொலைத்து விடுவீர்கள். ஆனால், நீங்கள் அறிந்தறிந்து செய்கிற பாவத்தை அழுதழுதுதான் தொலைக்கவேண்டும்.*

*“உன்னால்தான் பிரச்னை என்னால்தான் பிரச்னை” என ஒருவரை யொருவர் பழி சுமத்தாமல் இருங்கள்! நீங்கள் இருவரும் இப்படி இருந்தால் உங்களில் தவறு செய்தவர் தானாகவே உணர்ந்து வருந்தி திருத்திக் கொள்ளும் நிலை ஏற்படும்.*

*நீங்கள் உங்கள் துணையிடம் மட்டுமல்ல யாருடன் பேசினாலும் அதை இறைவனும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறான் என்ற உணர்வுடன் பேசுங்கள்!*

**இறைவன் கூறுகிறான்:**

*“மனிதனை நாமே படைத்தோம். அவன் மனம் அவனிடம் பேசுவதையும் அறிகிறோம். அவனுடைய பிடரி நரம்பை - தொண்டைக் குழியைவிடவும் அவனுக்கு நாம் நெருக்கமாய் இருக்கிறோம்.*

*வலப்புறத்திலும், இடப்புறத்திலும் அமர்ந்து எடுத்தெழுதும் இரு வானவர்கள் எழுதும்போது, கண்காணித்து எழுதுபவர் தன்னிடம் இல்லாமல் எந்தச் சொல்லையும் மனிதன் மொழிவதில்லை.”*

**திருக்குர்ஆன் 50:16-18**

*ஒவ்வொரு மனிதனுக்கும் பறக்க[7] (சுழல) கூடியதை அவனுடைய கழுத்தில் பொருத்தியுள்ளோம். மறுமை நாளன்று அவனுக்கு அதை ஓர் ஏடாக வெளிப்படுத்துவோம். அதனை விரிக்கப்பட்ட நிலையில் காண்பான்.*

7. இவ்வசனத்தில் طَائِرَهُ ‘தாயிர்’ என்னும் அரபுச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு சரியான பொருள் பறக்கக்கூடியது என்பதாகும். மனிதனின் சிறிய கழுத்தில் அவனுடைய வாழ்நாள் முழுவதும் நடக்கும் ஒவ்வொன்றும் பதிவு செய்யப்படுகிறது என்றால் அது எப்படி என நமக்கு வியப்பாய் இருக்கலாம். சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு இது குறித்து நம்மால் சரியாகப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் இருந்தது. ஆனால், இன்று CD, DVD, Hard Disc, Chip என தகவல்களைப் பதிவுசெய்யும் பொருட்கள் ஓர் இன்சு அளவிலும் சிறியதாய் எத்தனையோ வந்துவிட்டன. உலக வரலாறுகள் அனைத்தையும் இவற்றில் பதிந்தும் பரிமாறியும் வருவதை இன்று நாம் கண்கூடாகக் கண்டும் வருகிறோம். இறைவனால் படைக்கப்பட்ட மனிதனால் இவ்வாறு செய்ய முடியும் என்றால் மனிதனைப் படைத்த இறைவன் நம் உடலின் ஓர் அணுவிலிருந்து நம் அனைத்துச் செயல்களையும் கொண்டு வந்துவிடுவான் என்பதில் என்ன வியப்பு இருக்க முடியும்?

“உன் புத்தகத்தைப் படி! இன்று உன்னைக் குறித்துக் கணக்குப் பார்க்க நீயே போதுமானவன்” (எனக் கூறுவோம்).

நேர்வழியில் சென்றவர் தனக்காகவே நேர் வழியில் செல்கிறார். வழிகேட்டில் சென்றவர் தனக்கே கேடுசெய்கிறார். ஒருவரின் (பாவ) சுமையை மற்றொருவர் சுமக்கவே மாட்டார். தூதரை அனுப்பாத வரையில் நாம் (எவரையும்) தண்டிப்போராய் இல்லை.

**திருக்குர்ஆன் 17:13-15**

## இழப்பிற்கு உள்ளாகும்போது...

மரணத்தை நோக்கி நகர்ந்து செல்லும் வாழ்க்கையில், இன்னும் கொஞ்சம் வாழவேண்டும் என உங்கள் துணையின் அன்பு உங்களை வற்புறுத்துகிறது. உங்கள் அன்பும் உங்கள் துணையை வற்புறுத்துகிறது. ஒருவருக்கொருவர் அன்பைப் பெற்று அளித்தல் என்பது இதுதான். இருந்தாலும், பிரியா நட்பு உலகில் கிடையாது; உங்கள் நட்பு எப்படி இருந்தாலும் ஒரு நாள் மரணம் உங்களைப் பிரித்தே தீரும். அதைச் சகித்துத்தான்ஆகவேண்டும்.

என் கணவரே இறந்துவிட்டார். இனி உலகில் எனக்கென யாருமே இல்லை என நீங்கள் நினைத்தாலும், பிறருக்கு உலகமாக நீங்கள் இருங்கள். மக்களுக்கு நேர்வழியைக் காட்டுங்கள்! உங்கள் மூலம் பலர் பயன் பெறுவர்.

### இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:

...அல்லாஹ்வின் மீது ஆணையாக! உங்கள் மூலமாக அல்லாஹ் ஒரேயொரு மனிதருக்கு நேர்வழியை அளிப்பது (அரபுகளின் அருஞ்செல்வமாகக் கருதப்படும்) சிவப்பு ஒட்டகங்களை (தர்மம் செய்வதை)விட உங்களுக்குச் சிறந்ததாகும்.”

**அறிவித்தவர்: ஸஹ்ல் இப்னு ஸஅத்(ரலி), நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 3701.**

கருவறையில் இருந்து இறங்கிய நீங்கள், மண்ணறை வரை நடந்து செல்லும் தூரம்தான் உங்கள் வாழ்க்கை என்பதை உணருங்கள். இந்த உலகம் யாருக்கும் நிரந்தரமல்ல.

மரணத்திலிருந்து யாரும் தப்பமுடியாது. உலகிலுள்ள ஒவ்வொரு பொருளும் அழிந்தே தீரும். நிலையான வாழ்க்கை என்பது மரணத்திற்குப் பின்புள்ள வாழ்க்கை மட்டும்தான். உங்களை ஒரு நாள் மரணம் பிடிக்கும்; உங்கள் துணையையும் ஒரு நாள் மரணம் பிடிக்கும். ஏன் உங்கள் கைக்குழந்தையைக்கூட மரணம் பிடிக்கலாம். மரணத்தை எதிர்பார்த்தே வாழுங்கள்! மரணம் நம் அனைவருக்கும் பொதுவானது. ஒருவருக்கு மட்டும் உடமையானது அல்ல.



உங்கள் துணைக்கு மரணம் வந்துவிட்டால் அத்தோடு உங்கள் வாழ்க்கை முடிந்துவிட்டதாக எண்ணாதீர்! அதற்குப் பின்பும் வாழ்க்கையை எதிர் கொள்வதே இறைநம்பிக்கையாளர்களின் பண்பாகும்.

உங்களுக்கு முன் உங்கள் துணையை மரணம் பிடித்துக் கொண்டால் உங்களுக்குத் தேவை ஏற்படும்போது நீங்கள் இன்னொரு திருமணம் செய்து கொள்வதே உங்களுக்கு நல்லது.

### இறைவன் கூறுகிறான்:

“ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுவைப்பதாகவே இருக்கிறது. பரீட்சைக்காக தீமையையும், நன்மையையும் கொண்டு உங்களைச் சோதிக்கிறோம். நம்மிடமே மீட்கவும் படுவீர்கள்!”

**திருக்குர்ஆன் 21:35**

உங்களில் செயல்களால் மிகச் சிறந்தவர் யாரென்பதைச் சோதிப்பதற்காக அவன், மரணத்தையும் வாழ்வையும் படைத்தான். மேலும், அவன் மிகைத்தவன்; மிக்க மன்னிப்பவன். **திருக்குர்ஆன் 67:2**

## மரணமும் ஒரு சோதனைதான்

சோதனையான காலங்களில்தான் உங்களின் சரியான நிலை தெரியவரும். வெற்றியின்போது அல்ல. உலகின் பல்வேறு சோதனைகளில் மரணமும் ஒரு சோதனையே. இது சோதனையோடு நின்றுவிடுவதல்ல. மறுமை வாழ்க்கையின் நுழைவாயில். மனிதனுக்கு மரணம் நிகழ்ந்தால் மட்டுமே அவனால் சுவர்க்கம் அல்லது நரகம் என அவனுக்கு விதிக்கப்பட்டதில் அவன் நுழைய முடியும். எனவேதான் இது உலகின் இறுதிக்கட்டச் சோதனையாய் இருக்கிறது.

### இறைவன் கூறுகிறான்:

சிறிதளவு அச்சத்தாலும், பசியாலும், உடைமைகள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்பினாலும் உங்களைச் சோதிப்போம்; பொறுமையாளர்களுக்கு (தூதரே) நற்செய்தி கூறும்! தங்களுக்குத் துன்பம் ஏதேனும் ஏற்படும்போது, “நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள். மேலும், நாம் அவனிடமே திரும்பிச்செல்வோம்”

*என அவர்கள் கூறுவார்கள். அவர்களின் இரட்சகனிடமிருந்து அவர்களுக்கு நல் வாழ்த்துகளும், நற் கிருபையும் உண்டாகின்றன. நேர்வழி பெற்றவர்களும் அவர்களே.* **திருக்குர்ஆன் 2:155-157**

*அதன் (பூமியின்) மேலுள்ள ஒவ்வொன்றும் அழியக் கூடியதே!*

*வல்லமையும், கண்ணியமும் மிக்க உம் இரட்சகனின் முகமே நிலைத்து இருக்கும்.*

*எனவே, நீங்கள் இரு சாராரும் உங்கள் இரட்சகனின் அருட் கொடைகளில் எதைப் பொய்யாக்குவீர்கள்?*

**திருக்குர்ஆன்55:26-28**

*உங்கள் துணை மரணித்துவிட்டால் அதே நினைவாக காலமெல்லாம் துக்கத்திலும் சோகத்திலும் இருக்காதீர்! பொறுமையை மேற்கொள்ளுங்கள்! நல்ல வழியைக் காட்டுமாறு இறைவனைப் பிரார்த்தியுங்கள்!*

**اِنَّا لِلّٰهِ وَاِنَّـا اِلَيْـهِ رَجِعُـوْنَ اَللّٰهُـمَّ احْتَسَـبْتُ مُصِـيْبَتِيْ**

**فَاَجِرْنِيْ فِيْهَا وَاَبْـدِلنِيْ مِنْهَـا خَيْـرًا**

***நாம் இறைவனுக்காகவே இருக்கிறோம்; இன்னும் நாம் இறைவன் பக்கமே திரும்ப இருக்கிறோம்; இறைவா எனக்கு ஏற்பட்டிருக்கும் சோதனைகளை எல்லாம் உன்னிடமே விட்டு விடுகிறேன்; என்னை அதிலிருந்து காப்பாற்றுவாயாக! இன்னும், நான் இழந்ததைவிடச் சிறந்த ஒன்றை எனக்கு மாற்றித் தருவாயாக!***

*என்னும் பிரார்த்தனையை அபூ ஸலமா(ரலி) அவர்களுக்கு நபி(ஸல்) கற்றுக் கொடுத்தார்கள். இப்பிரார்த் தனையை தாம் செய்வதுடன் தம் குடும்பத்தாருக்கும் அபூ ஸலமா (ரலி) கற்றுக் கொடுத்தார்.*

*அபூ ஸலமா(ரலி) இறக்க நேர்ந்தது, அவர் இறந்தப் பின்பு, அவர்களின் மனைவி உம்மு ஸலமா(ரலி) இப்பிரார்த்தனையைச் செய்தார்கள். இருந்தாலும் அபூ ஸலமாவைவிட நல்லவர் யார் இருக்க முடியும் என்றும் கூறிக் கொண்டார்.*

*உம்மு ஸலமா(ரலி) அவர்களின் இத்தா காலம் முடிந்தது. அபூ பக்ர் (ரலி) திருமணத்திற்கான தூதை உம்மு ஸலமா(ரலி) அவர்களுக்கு அனுப்பினார். ஆனால், உம்மு ஸலமா(ரலி) அதை மறுத்துவிட்டார்.*



*பின்னர், உமர்(ரலி) திருமணத்திற்கான தூதை உம்மு ஸலமா(ரலி) அவர்களுக்கு அனுப்பினார். ஆனால், உம்மு ஸலமா(ரலி) அதையும் மறுத்துவிட்டார்.*

*இறுதியாக, இறைத்தூதர்(ஸல்) திருமணத்திற்கான தூதை உம்மு ஸலமா(ரலி) அவர்களுக்கு அனுப்பினார்கள். நபி(ஸல்) அவர்களை விட இந்த உலகில் சிறந்தவர் யார் இருக்க முடியும்? உம்மு ஸலமா(ரலி) அதை மிகமிக மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்.*

***நூல்: முஸ்னத் அஹ்மத் 2608***

*தமக்கு ஏற்பட்டு பெரும் சோதனையில் உம்மு ஸலமா(ரலி) பொறுமையாய் இருந்து, தாம் இழந்துள்ள இந்த இழபபிற்கு ஈடாக இதைவிட சிறந்த ஒன்று வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்தால் இறைவன் கொடுத்த பரிசைப் பார்த்தீர்களா?*

*உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு இப்படி இழப்புகள் ஏற்படும் போது பொறுமையாய் இருந்து, இறைவனை நம்பிக்கையுடன் பிரார்த்தித்து வந்தால், நீங்கள் இழந்ததைவிடச் சிறந்த ஒன்றை இறைவன் நிச்சயமாக உங்களுக்கு அளிப்பான்.*

## *கணவருக்காக துக்கம்; எச்சரிக்கை!*

### *அபூ புர்தா இப்னு அபீ மூஸா(ரஹ்) அறிவித்தார்:*

*அபூ மூஸா தம் கடுமையான மரண வேதனையால் மயக்கம் அடைந்தார். அவரின் தலை அவரின் மனைவி மடியில் இருந்தது. தம் மனைவியின் எந்தப் பேச்சுக்கும் அவரால் பதில் சொல்ல முடியவில்லை. பின்பு மயக்கம் தெளிந்தபோது,*

*“துன்பத்தின்போது அதிகச் சப்தமிட்டு அழும் பெண்ணை விட்டும், மொட்டையடித்துக் கொள்ளும் பெண்ணைவிட்டும், ஆடைகளைக் கிழித்துக் கொள்ளும் பெண்ணைவிட்டும் நிச்சயமாக இறைத் தூதர்(ஸல்) தம்மை விலக்கிக் கொண்டார்கள். இறைத்தூதர்(ஸல்) தம்மை விலக்கிக் கொண்டவரிடமிருந்து நானும் விலகிக்கொள் கிறேன்” எனக் கூறினார்.* ***நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 1296***

*உங்கள் துணை இறந்துவிட்டால் அதற்காக துக்கப்படுங்கள்! கண்ணீர் வடியுங்கள்! ஆனால், ஒப்பாரி வைத்தோ, கதறியோ அழாதீர்! மார்பில் அடித்துக் கொண்டோ, தலையில் அடித்துக் கொண்டோ அழாதீர்! இது இஸ்லாமிற்கு எதிரான செயல். இது அறிவார்ந்த செயலும் அல்ல.*

“இறந்தவர்களுக்காக மூன்று நாள்களுக்கு மேல் துக்கத்தை வெளிப்படுத்துவதற்கு தடுக்கப்பட்டுள்ளோம். ஆனால், கணவர் இறந்த பின்னர் அவரின் மனைவி நான்கு மாதம் பத்து நாள்கள் (இத்தா) துக்கத்தை வெளிப்படுத்த வேண்டும்.

இந்த நாள்களில் நாங்கள் சுர்மா இடவோ, வாசனைப் பொருட் களைப் பூசவோ, சாயமிடப்பட்ட ஆடைகளை அணியவோ கூடாது. ஆனால் நெய்வதற்கு முன் நூலில் சாயமிடப்பட்டு தயாரிக்கப்பட்ட ஆடைகளை அணியலாம்.

எங்களில் ஒருத்தி மாதவிடாயிலிருந்து நீங்கக் குளிக்கும்போது வாசனைப் பொருளைப் பயன்படுத்துவது அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் ஜனாஸாவைப் பின்தொடர்ந்து செல்வதைவிட்டும் தடுக்கப்பட்டுள்ளோம்” என உம்மு அதிய்யா(ரலி) கூறினார்.

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 313**

இறப்பு எல்லோருக்கும் உரியதுதான்; உங்கள் வீட்டில் யார் இறந்தாலும் பொறுமையை மேற்கொள்ளுங்கள். பெற்றோர், பிள்ளைகள், உடன் பிறந்தோர், தோழன், தோழி என யார் இறந்தாலும் பொறுமைதான் தீர்வு. சகித்துக் கொள்வதற்கு உரிய கூலி உறுதியாக வழங்கப்படும்.

### இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:

“ஒரு முஸ்லிமின் மூன்று குழந்தைகள் இறந்துவிட்டால் நரகத்தை ஒவ்வொவரும் கடந்தாக வேண்டும் என்ற ரீதியில் தவிர அவர் நரகத்தின் பக்கம் செல்லமாட்டார்.”

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 1251**

### அபூ ஸயீத்(ரலி) அறிவித்தார்:

“எங்களுக்கும் ஒரு நாள் (அறிவுரைக்காக) ஒதுக்குங்களேன் என இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் பெண்கள் கேட்டார்கள்.

ஒருநாள் பெண்களுக்கு இறைத்தூதர்(ஸல்) உபதேசம் செய்தபோது, “ஒரு பெண்ணுக்கு மூன்று குழந்தைகள் இறந்துவிட்டதால் அவர்கள் அப்பெண்ணை நரகத்திலிருந்து காக்கும் திரையாய் இருப்பார்கள்” எனக் கூறினார்கள்.

“இரண்டு குழந்தைகள் இறந்தால்?” என ஒரு பெண் கேட்டார்.

“இரண்டு குழந்தை இறந்தாலும்தான்” எனக் கூறினார்கள்.

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 1249**



### அனஸ் இப்னு மாலிக்(ரலி) அறிவித்தார்:

அபூ தல்ஹா(ரலி) அவர்களின் மகன் நோயுற்றிருந்தார். ஒரு நாள் அபூ தல்ஹா(ரலி) வெளியே சென்றிருந்தபோது குழந்தை இறந்து விட்டது. இதைக் கண்ட அபூ தல்ஹா(ரலி) அவர்களின் மனைவி உடனே கொஞ்சம் உணவைத் தயாரித்தார். பிறகு மய்யித்தை வீட்டின் ஒரு மூலையில் வைத்தார்.

வெளியே சென்றிருந்த அபூ தல்ஹா(ரலி) வீடு திரும்பினார். மகன் எவ்வாறுள்ளான் எனக் கேட்டார்.

“அமைதியாகிவிட்டான்; நிம்மதியடைந்திருப்பான் என்று எதிர்பார்க்கிறேன்” என அவரின் மனைவி பதிலளித்தார்.

தம் மனைவி கூறியதை உண்மை என எண்ணிய அபூ தல்ஹா(ரலி) தம் மனைவியோடு (இன்பமாய்) இரவைக் கழித்தார். அதிகாலையை அடைந்த அவர், குளித்துவிட்டு (ஃபஜ்ர் தொழ) வெளியேற விரும்பினார். தம் மகன் இறந்துபோன செய்தியை அவரின் மனைவி அப்போதுதான் கூறினார்.

இறைத்தூதர்(ஸல்) அவர்களோடு தொழுதுவிட்டு தம் வீட்டில் நடந்த நிகழ்வை இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் அபூ தல்ஹா(ரலி) கூறினார்.

“இந்த இரவில் நடந்தவற்றில் உங்கள் இருவருக்கும் அல்லாஹ் அபிவிருத்தி அளிக்கக்கூடும்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

குறிப்பு: “அவ்விருவருக்கும் ஒன்பது குழந்தைகள் இருந்ததை நான் பார்த்தேன். அவர்களில் எல்லோருமே குர்ஆனை ஓதுபவர்களாய் இருந்தனர்” என மதீனாவைச் சேர்ந்த அன்சாரிகளில் ஒருவரான சுஃப்யான்(ரஹ்) கூறினார். **நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 1301**

இவ்வுலகில் மரணத்தைவிட பெரும் சோதனை ஒன்றும் இருக்க முடியாது. அதில், பொறுமையாக நடந்து நமக்கு படிப்பினையைத் தந்துவிட்டார் இந்த நபித்தோழி.

துக்கம், மகிழ்ச்சி எதுவாய் இருந்தாலும் அதில் நடுநிலையை மேற் கொள்ளுங்கள்! வரம்பு மீறிவிடாதீர்! வரம்புக்கு உட்பட்டு வாழுங்கள்; உங்கள் வாழ்க்கை வசந்தமாய் இருக்கும். இம்மையிலும் மறுமையிலும் உங்கள் வாழ்க்கை வெற்றியுள்ளதாய் அமையும். இதற்காக நான் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

*******

## குறிப்பு